# தித்திப்பாய் சில பொய்கள்...



இன்பா அலோசியஸ்


தித்திப்பாய்
சில பொய்கள்...
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# தித்திப்பாய் சில பொய்கள்...

# Thiththippaay Sila Poigal...


Author:

இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**



For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels



**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்


பகுதி – 1.

பகுதி – 2.

பகுதி – 3.

பகுதி – 4.

பகுதி – 5.

பகுதி – 6.

பகுதி – 7.

பகுதி – 8.

பகுதி – 9.

பகுதி – 10.

பகுதி – 11.

பகுதி – 12.

பகுதி – 13.

பகுதி – 14.

பகுதி – 15.

பகுதி – 16.

பகுதி – 17.

பகுதி – 18.

பகுதி – 19.

பகுதி – 20.

பகுதி – 21.

பகுதி – 22.

பகுதி – 23.

பகுதி – 24.

பகுதி – 25.

பகுதி – 26.

பகுதி – 27.

# பகுதி – 1.

அந்த பரபரப்பான காலைப் பொழுதில், மிகவும் அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தான் அன்புச்செல்வன். சீப்பால் தலையை வாரிக் கொள்கிறானா, இல்லை கலைக்கிறானா என தெரியாத விதத்தில் வேகமாக செயல்பட்டவன், அந்த ஒளி இழந்த கண்ணாடியில் தன் உருவத்தை சரிபார்த்துக் கொண்டான்.

“ஹையோ.., லேட் ஆகிடுச்சே..” வாய் அதன் போக்கில் புலம்ப, வேகமாக சட்டை பட்டனை போட்டவன், தன் சேம்சங் ஸ்டார்ட்டிங் மாடல் போன் எங்கே எனத் தேட, அவனுக்கு சிரமம் வைக்காமல், இசைத்து அதன் இருப்பிடத்தை காட்டிக் கொடுத்தது.

அறையின் ஜன்னலில் இருந்து அதை எடுத்தவன், அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்துவிட்டு, அவசரமாக அதற்கு செவிமடுத்தான்.

கண்கள் தாமாக சுவரில் இருந்த கடிகாரத்துக்குச் செல்ல, நேரம் எட்டு முப்பது என அவனுக்கு அறிவித்தது.

“அண்ணே.., இதோ.., வந்துட்டே இருக்கேன்..” அவருக்கு பதில் கொடுத்தவாறே, ஆணியில் இருந்து பூட்டை எடுத்துக் கொண்டான். தன் அறைக் கதவை இழுத்து சாத்திவிட்டு, அதில் பூட்டை நுழைத்து சாவியால் லாக் செய்தவன், கீயை தன் கால்ச்சட்டையில் பத்திரப் படுத்தினான்.

“அன்பு.., சீக்கிரம் வாப்பா.., ரெண்டு மூணு வீட்டில் இருந்து கால் பண்ணிட்டாங்க. நீ வந்தால் தான் தண்ணி கேன் போட முடியும். வேற யாரையும் அங்கே எல்லாம் அனுப்ப முடியாது..” அவன்மேல் இருக்கும் அபிமானம் அந்த வார்த்தைகளில் பளிச்சிட்டது.

“அண்ணே.., வீட்ல இருந்து கிளம்பிட்டேண்ணே.., பத்தே நிமிஷத்தில் அங்கே இருப்பேன்..” மாடிப் படிகளில் அவன்

இறங்கி ஓடுவது அவன் செருப்பின் ஓசையிலேயே அவர் உணர்ந்து கொண்டார்.

“பாத்துப்பா.., நிதானமாகவே வா..” அவனது குணம் புரிந்தவராக அக்கறையாக குரல் கொடுத்தார்.

“சரிண்ணே..” அலைபேசியை முடக்கி சட்டைப் பையில் போட்டவன், தன் ஸ்ப்ளெண்டர் பைக்கை நோக்கி விரைந்தான்.

அவன் நடையை விரைவுபடுத்த, அவனை எதிர்கொண்ட அன்னம்மா அக்கா, “என்னப்பா அன்பு.., வேலைக்கு கிளம்பிட்டியா..?” அக்கறையாக வினவ,

“ஆமாக்கா.., இப்போ தாத்தாவுக்கு பரவாயில்லையா..?”.

“சரியாயிடுச்சுப்பா.., அதான் நீ மருந்து வாங்கிட்டு வந்து குடுத்தியே..” அவரது பதிலுக்கோ.., தன் கேள்விக்கோ கூட அவனது நடை நிற்கவில்லை.

“நைட் வந்து பாக்கறேன்க்கா..” சற்று உரக்க குரல் கொடுத்தவாறே அந்த சந்தை(சிறிய, குறுகலான பாதையை) கடந்து கொண்டிருந்தான்.

அவன் வேகத்தை சற்று குறைப்பதுபோல், சட்டென அவனை இடித்துவிடும் வேகத்தில், குறுக்காக அவள் பாய, பட்டென ஒரு நொடி நின்றவன், சற்று முறைப்பாகவே தன்னை மறித்தவளை முறைத்தான்.

“பூஜா.., என்ன விளையாட்டு இது..?” தன் முறைப்பை குறைக்காமலேயே, வேகமாக சுற்றிலும் பார்த்தவன், நொடியும் தாமதிக்காமல் அங்கிருந்து கிளம்பினான்.

“அதான் வழக்கம்போல் இன்னைக்கும் தப்பிச்சுட்டியே.., போ..,போ.., எத்தனை நாள்ன்னு பாக்கலாம்..” அவளது குறும்புக் குரல் அவனைத் தொடர, அவளிடம் ‘இப்படி

செய்யக் கூடாது’ என பேச மனம் முரண்டினாலும், வேலை அவனை அழைக்க நடையை விரைவுபடுத்தினான்.

சரியாக அவன் தனது வண்டியை அடைய எடுத்துக் கொண்ட இரண்டு நிமிடங்களுக்குள் அனைத்தும் நடந்து முடிந்திருக்க, வண்டியின் சீட்டை ஒரு வேக துடை துடைத்தவன், அதில் ஏறி அமர, சரியாக அதே நேரம்..,

“அன்பு.., தண்ணி லாரி வருதுப்பா..” கருணாஸ் அண்ணா உரைத்துவிட்டு, தன் வீட்டுக்குச் சென்று குடங்களை எடுத்துவர ஓட, ஒரு நொடியில் என்ன செய்வது எனத் தெரியாமல் குழம்பிப் போனான்.

அன்புச்செல்வன் இருப்பது சிட்டிக்கு சற்று ஒதுக்குப் புறத்தில், குடியிருப்புக்கள் அதிகம் இருக்கும் ஏரியா. கோடை காலமோ, குளிர் காலமோ, மழைக் காலமோ.., எப்பொழுதும் அந்த ஏரியாவில் தண்ணீர் பஞ்சம் நிலவும்.

அதைக் குறைக்க, போர் போட்டு, டேன்க் வைத்திருக்கிறார்கள். ஆனால், அது ஒரு வரமாக ரிப்பேர் ஆகிவிட, குடி தண்ணீருக்கே சற்று சிரமம்தான். ஒரு வாரமாக அவன் எப்படியோ சம்மாளித்திருக்க, இன்றைக்கு காலையில் சமைக்க கூட அவனிடம் தண்ணீர் இல்லை.

அப்படி இருக்கையில்..,இப்பொழுது தண்ணீர் எடுக்காமல் போனால், அவன் நிலை அவனுக்கே பரிதாபமாக இருந்தது. அவன் சிந்திக்க எடுத்த அந்த ஒரு நொடிக்குள்ளாகவே, தண்ணீர் லாரி வருவதற்குள், தெருமுனையில் துவங்கி, அவன் நின்ற இடம் வரைக்கும் வரிசை வந்துவிட்டது.

‘இப்போ போய், குடத்தை எடுத்து வந்து, வரிசையில் நின்றால் கூட, அரைமணி நேரமாவது ஆகிடுமே..’ அவன் சிந்தை இவ்வாறாக ஓட,

“அன்பு.., நீ இன்னுமா கிளம்பல, நீ கிளம்புப்பா.., உன் நாலு குடத்தையும் நான் நிரப்பி வச்சுடுறேன்..” அன்னமாக்கா

அவன் துணைக்கு வந்தார்.

அவனை நன்றிப் பெருக்கில் பார்த்தவன், “அக்கா.., நீங்க குடத்தை நிரப்பி, உங்க வீட்டுகிட்டேயே வைங்க, நான் நைட் வந்து எடுத்துக்கறேன்..” அவனது நிலை, ஒரு பேச்சுக்காக கூட மறுக்க முடியவில்லை.

“அட போப்பா.., ஒரு நாலு குடம் தூக்க மாட்டனா..? அந்த பூஜா கழுத எதுக்கு இருக்கு.., எல்லாம் நாங்க பாத்துக்கறோம் நீ கிளம்பு..” அவனை துரிதப் படுத்தினார்.

‘பூஜா..’ மனதுக்குள் சிறிதாக ஜெர்க் ஆனாலும், அதை அவரிடம் காட்டாமல் சாமர்த்தியமாக மறைத்தவன், ஒரு தலையசைப்போடு விடை பெற்றான்.

அவன் வண்டி சாலையில் விரைய, அவனைப் பற்றி.., அன்புச்செல்வன் இருபத்தைந்து வயது நிறைவடையப் போகும் இளைஞன். சோழநாடு சோறுடைத்து என்பதற்கு பெயர்போன, தஞ்சை மாநகரை ஒட்டிய, சிறிய கிராமத்தை தன் பூர்வீகமாகக் கொண்டவன்.

அவன் சென்னை வந்த காரணத்தை நாம் பிறகு பார்க்கலாம். கிட்டத்தட்ட ஆறடி உயரம். சென்னை இளைஞர்களில் இருந்து முற்றிலும் மாறுபடுத்திக் காட்டும் முக வாகு. நாட்டுப்புற நிறம்.., சற்று முறுக்கேறிய தேகம்.

இந்தக் கால இளைஞர்கள் சிக்ஸ் பேக் வைக்க ஜிம்மை தேடிச் செல்ல, அவனுக்கோ.., உழைப்பால் முறுக்கேறிய தேகம். ஒரு மூட்டை அரிசியைக் கூட அலேக்காக தூக்கி தோளில் வைத்துக் கொள்ளும் ஆற்றலும், தேக வலிமையையும் கொண்டவன்.

அடங்க மறுக்கும் சிகை, அளவான மீசை, அழுத்தமான உதடுகள்.., அவன் கண்களைப் பார்க்கும் யாருக்கும், நொடியில் அவனை நம்பிவிடத் தூண்டும். அவன் கண்களில் ஒரு வசியம் இருக்கிறது என்பதே, அவனை முதலில் பார்க்கும் யாரின் எண்ணமாகவும் இருக்கும்.

மாடன் யுவதிகளுக்கு அவனைப் பார்த்தால் ஒரு ஈர்ப்பு தோன்றினாலும், அவன் வாயைத்திறந்து பேசினாலே.., ‘அய்யே.., பட்டிக்காடு…’ என எண்ணமிட்டு, நாலடி தள்ளியே நிற்பர். கூடவே.., அவனது உடை.., மானம் மறைக்கவே உடை என்ற அளவிலேயே அவனது உடை இருக்கும்.

ஆனால்.., உடுத்தும் ஆடை மிகவும் தூய்மையாக, கண்ணியமாகவே அணிந்திருப்பான். ஆனால்.., இன்றைய கால கட்டத்தில், திரிபோர்த் பேன்ட், மாடன் டிஷர்ட், அதில் கம்பெனி லோகோ.., ப்ராண்ட் ஜீன்ஸ்.., என பார்த்து பழகிய மங்கையருக்கு, அவன் சற்று எட்டிக் காய்தான்.

ஆனால்.., பழகியவருக்காக உயிரையும் கொடுப்பான். பாசம் என்றால் என்னவென்று அவனைப் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவரின் முகம் பார்த்தே, அவர்களது மனதை துல்லியமாக அறிந்துகொள்ளும் வல்லமை படைத்தவன்.

அந்த வல்லமையை அத்தியாவசியம் தவிர, எதற்காகவும் யாரிடமும் காட்டிக்கொள்ள மாட்டான். ஆனால்.., அவர்கள் மனநிலை அறிந்து அவன் நடந்து கொள்வதை வைத்தே, அதன் பிறகு அவனிடம் நெருக்கமாகி விடுவார்கள்.

தன் இடம் வரவே, வண்டியை அந்த கடைக்குப் பக்கத்தில் நிறுத்தி, பூட்டியவன், “அண்ணே.., எங்கே போகணும்..? எத்தனை கேன்.., சைக்கிளா, இல்ல ஆட்டோவா..?” கடைக்குள் நுழையும்பொழுதே வேலையில் கவனமானான்.

“வா அன்பு.., அஞ்சு கேன் போடணும்.., நீ சைக்கிளையே எடுத்துட்டு போ.., அந்த கணேஷ் பய ஆட்டோவை எடுத்துட்டுப் போனவன், இன்னும் எடுத்துட்டு வரல..” தன் ஆதங்கத்தை கொட்டியவர், அவனோடு கூட, கடைக்குப் பின்னால் நடந்தார்.

“வந்துடுவாண்ணே.., நாலு தெரு போகணுமா இல்லையா..?” உடன் பணியாளனுக்கு வக்காலத்து வாங்கினான்.

“நீ சொன்ன பாத்தியா நாலு தெருன்னு.., அதுக்கு போயிட்டு வர நாலு மணி நேரமா..? இன்னைக்கு அவன் வரட்டும்.., கடையில் வேற கஸ்ட்டமர் நிறைய வராங்க.., அவனும் இருந்தால் தானே பொருளைக் கொடுக்க வசதியா இருக்கும்..” அவர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே.., தண்ணீர் கொண்டு போகும் சைக்கிளை கொண்டுவந்து நிறுத்தியவன், அதில் கேன்களை நிரப்பினான்.

“சீக்கிரம் போ அன்பு.., சமைக்கவே தண்ணீ இல்லன்னு அந்த அம்மா போன் பண்ணாங்க. நம்ம பக்கத்து தெருவில் இருக்கும் தொண்ணூத்தி ஆறாவது அப்பாட்மென்ட் வீடு.., அங்கேதான்..” அவர் விலாசம் உரைத்து, அவனை அவசரப் படுத்தினார்.

“அண்ணே..., இம்புட்டு அவசரம்னா கிருஷ்ணாவை முதலில் போகச் சொல்லியிருக்கலாமே..” சைக்கிளில் ஏறி அமர்ந்தவன், அதை மெதுவாக நகர்த்தியவாறு கேட்டான்.

“அந்த கொடுமையை ஏன் கேக்க.., அந்த அம்மா போனைப் போடும்போதே, அன்னைக்கு அனுப்பின பையனை அனுப்பாதீங்கன்னு கோபமா சொன்னாங்க. பாவிப்பய.., அங்க போய் என்ன வம்பு பண்ணான்னே தெரியலை..” அவன் அப்படி செய்பவன் இல்லையே என்ற யோசனையும் அவருக்குள் ஓடியது.

“ஓ.., நான் வந்து பேசுறேண்ணே..” புருவ மத்தியில் சிறு முடிச்சோடு சைக்கிளை மிதித்தான்.

அங்கே இருக்கும் அனைத்து வீட்டு எண்களும் விலாசமும் அவனுக்கு தெரியுமாதலால், இரண்டே நிமிடத்தில் அங்கே போய் நின்றவன், தோளில் ஒன்றும் கையில் ஒன்றுமாக இரண்டு கேனை தூக்கிக் கொண்டு படிகளில் ஏறி, முதல் தளத்தை அடைந்து, அழைப்புமணியை அழுத்தி விட்டு, “வாட்டர் கேன்..” குரல் கொடுத்துவிட்டு காத்திருந்தான்.

அடுத்த நிமிடம் வாசல் கதவு திறக்கப்பட, “அப்படி ஓரமா வை. கேட்டு ஒரு மணி நேரம் கழிச்சு, நிதானமா கொண்டு

வர.., அடுத்த தெருவில் இருந்து கொண்டு வர இம்புட்டு நேரமா..?" சிடுசிடுத்தவாறே, முகத்துக்கு நேராக கதவை அறைந்து சாற்றிவிட்டுச் செல்ல, அவரைக் கண்டுகொள்ளாமல், மீதிக் கேன்களை எடுக்கச் சென்றான்.

மீதி கேன்களையும் கொண்டு வந்து போட்டவன், 'இவங்க காசு கொடுப்பாங்களா, இல்ல நாம போய்டணுமா..' ஒரு நொடி யோசித்தவன், மீண்டுமாக அழைப்பு மணியை அழுத்தினான்.

பட்டென கதவு திறக்க, "என்ன..?" வெடுக்கென கேட்டாள்.

"அக்கா..,கேன் போட்டுட்டேன்.." அவன் சற்று தேங்கி.., "நீங்க அக்கவுண்ட்ல வாங்குவீங்களா, இல்ல.., காசு கொடுப்பீங்களான்னு தெரியலை, அதான்.., பரவாயில்லை, நான் அண்ணாகிட்டே சொல்லிடுறேன்.." அவளை நேராகப் பார்த்து உரைத்தவன், கிளம்ப முயன்றான்.

"இந்தாப்பா தம்பி.., இரு.." குரல் கொடுத்தவள், உள்ளே போய், தண்ணீருக்கான பணத்தை கொடுக்க, பெற்றுக் கொண்டவன் கிளம்பிவிட்டான்.

மேலும் செல்ல வேண்டிய வீடுகளுக்குச் சென்று கேனை போட்டவன், கடைக்குப் போய் சேர, அங்கே, முகத்தை தூக்கி வைத்துக்கொண்டு நின்றிருந்தான் கிருஷ்ணா.

அவனைப் பார்த்து மெல்லியதாக சிரித்துவிட்டு, "அண்ணே.., தண்ணீ காசு.." அன்பு பணத்தை அவரிடம் கொடுக்க, "என்ன அன்பு, அந்த பொண்ணு நேரா என்கிட்டே தானே கொடுக்கும்..." இழுத்தவர், "பாருடா.., இவனும் உன்னை மாதிரி தானே.., போனான்னா காசோட வரான். நீ கடன் சொல்லிட்டுதான் நிப்ப.." அவனிடம் சிடுசிடுக்க, வாய்க்குள்ளாக முனகியவன், முகத்தை திருப்பிக் கொண்டான்.

அதைப் பார்த்த அவர், "எலேய்.., சொல்றத கொஞ்சம் சத்தமா சொல்லு.." சிறிது குரல் உயர்த்த,

“அவனுக்கு வாய்க்குது.., எனக்கு எல்லாம் சைடு வாங்குது நான் என்ன செய்யட்டும்..” விவேக்கின் மாடுலேஷனில் அவன் உரைக்க, அன்பு பக்கென சிரித்து விட்டான்.

“அன்பு.., என் கஷ்ட்டம் உனக்கு சிரிப்பா இருக்குல்ல.., நீ போனியே ஒரு வீடு, அந்த வீட்டுக்கு நான் போனேன்னா போதும்.., என்னவோ திருடனைப் பாத்தாப்புல அந்தக்கா கதவ பட்டுட்டு சாத்தி வச்சுக்கும். அன்னைக்கு எதார்த்தமா, நான் என்ன உங்க சொத்தையா கொள்ளையடிக்க வந்திருக்கேன்னு கேட்டுட்டேன்..., அதுக்கு என்னவோ..” அவன் சொல்லி முடிக்கும் முன்பே,

“எலேய்.., கஸ்டமர்ட்ட இப்படித்தான் பேசுவியா..?” அதிர்ச்சியாக வினவினார் அண்ணாச்சி.

“ஆமா.., பொல்லாத கஸ்ட்டமர்.., நாங்களும் மனுஷங்க தான.., என்னவோ பேயப் பாத்தாப்புல மிரண்டு விரட்டுனா..” அவன் முறுக்கிக் கொள்ள,

“எலேய்.., முதல்ல இந்த மண்ட மேல இருக்க தீயை அணை.., மூஞ்சியில இருக்க முடியெல்லாம் எடுத்துட்டு, முதல்ல மனுஷனா மாறு.., உன்ன கிட்டத்துல பாத்தா எனக்கே பயமா இருக்குலே.., அவகளை என்ன குத்தம் சொல்லுறது..?”.

“அண்ணாச்சி.., எத்தப்பத்தி வேண்ணா பேசுங்க.., இந்த முடியைப் பத்தி மட்டும் பேசாதீங்க.., இது ஸ்டையில்.., காலேஜ் பயலுக எல்லாம் இதத்தான் வச்சுகிட்டு திரியிரானுவ.., நானும் வச்சுகிட்டு கொஞ்சம் ஸ்டையில் காட்டலாம்னா...” அவன் அங்கலாய்க்க..,

“ஸ்டையில் காட்டத்தான் இங்க வந்திருக்கியா..? ஒழுங்கு மரியாதையா தொழில் கத்துகிட்டமா.., தனியா போனமான்னு இல்லாம.., உன்னையெல்லாம் சேத்து வச்சிருக்கேன் பாரு.., என்னைய சொல்லணும்” வாழ்க்கையை விளையாட்டாக எடுத்துக் கொள்கிறானே என்ற கவலை அவர் குரலில் எட்டிப் பார்த்தது.

“அண்ணே.., விடுங்கண்ணே சின்னப் பையன் தானே.., சீக்கிரமே கத்துப்பான். நீ போய் வேலையைப் பார்..” அவரிடமிருந்து அவனைக் காப்பாற்றி அனுப்பி வைத்தான்.

அவன் செல்லவே.., “இது எப்படிப்பா நடந்துது..?” அவன் தன் கையில் கொடுத்த பணத்தை காட்டிக் கேட்க,

“அண்ணே.., அவங்க புதுசா கல்யாணம் ஆகி வந்திருப்பாங்க போல, ஊர்ல இருக்குறவங்க ரொம்ப பத்திரம் சொல்லி அனுப்பி இருப்பாங்க.., அதான் கொஞ்சம் கவனமா இருக்காங்க. நான் எல்லார்கிட்டேயும் பேசுற மாதிரிதான் பேசினேன்.., பெருசா எதுவும் இல்லை..” உரைத்தவன், கடைக்குள் செல்ல, அவன் முதுகையே வெறித்திருந்தார்.

“அண்ணே.., நான் பத்து மணிக்கு கிளம்பிடுவேன்..” அவன் குரல் இவரை எட்ட, அவரது சிந்தையோ.., ‘இந்த பய எதுக்கு இங்கே வந்து இப்படி கஷ்டப்படணும்.., ரோஷக்காரன் தான்..’ எண்ணியவர், தன் யோசனையை விடுத்து வேலையைப் பார்க்கச் சென்றார்.

***படுக்கையில் படுத்து புரண்டு கொண்டிருந்தாள் கீர்த்தி. அவளுக்கு உறக்கமெல்லாம் எதுவும் இல்லை. ஆனால், படுக்கையை விட்டு எழுந்து கொள்ளவும் மனமில்லை. பார்வையை சற்று திருப்ப, அவள் படுக்கைக்கு அருகில் இருந்த டைம்பீஸ் நேரம் எட்டு முப்பது என அறிவுறுத்த, அப்பொழுதும் எழுந்துகொள்ள வேண்டும் என்று தோன்றவில்லை.

ஆனாலும்.., எவ்வளவு நேரம்தான் படுக்கையில் புரள முடியும்? மனமே இல்லாமல் எழுந்தவள், காலைக் கடன்களை முடித்துவிட்டு தன் அறையை ஒட்டியிருந்த பால்க்கனியில் சென்று அமர்ந்துகொண்டாள்.

வயிறு மெல்லியதாக ஒலியெழுப்பி தன் இருப்பை உணர்த்த, ‘இப்பொழுது கீழே இறங்கிச் செல்ல வேண்டுமா..?’ அவளுக்கு அலுப்பாக இருந்தது. ஏனோ

எதுவும் பிடிக்கவில்லை. பிகாம் முடித்து, எம்பிஏ தொலைதூரக் கல்வியில் சேர்ந்து ஒரு வருடம் ஓடிவிட்டது.

நேரடியாகவே கல்லூரியில் சேர்ந்து பயில அவளுக்கு மதிப்பெண்ணும், வசதியும் இருக்கிறதுதான். ஆனால்.., நேரடியாக கல்லூரிக்குச் செல்ல மனமில்லை.

பிகாம் முடிப்பதற்குள்ளாகவே அவள் பெற்ற அனுபவங்கள், அவளை மனதளவில் சற்று ஒடுங்கச் செய்திருந்தது. அதற்குக் காரணம்...

அவள் சிந்தையைக் கலைத்தது, அவள் தோளில் விழுந்த கரம். “அக்கா..., தூங்கி முளிச்சுட்டியா..” அவளுக்கு முன்னால் நின்று, சற்று குரல் உயர்த்தி கத்திக் கேட்க, அவள் முகம் அனிச்சம் மலராய் சுண்டிப் போனது.

அவள் முகத்திலேயே கவனமாக இருந்த அவளது தம்பி, வாசன், “என்னக்கா.., என்ன ஆச்சு...” இப்பொழுதும் தன் குரலை சற்றும் இறக்கிக் கொள்ளாமல் கத்த, “நீ போ..” அவன் தோளைத் தொட்டு தள்ளி விட்டாள்.

வாசன்.., கீர்த்தியின் தம்பி.., இப்பொழுதுதான் பத்தாம் வகுப்பில் அடியெடுத்து வைத்திருக்கிறான். முழு யூனிபாமில், பள்ளி செல்ல தயாராகி நின்று கொண்டிருந்தான்.

அவள் தள்ளி விட்டதை பொருட்படுத்தாமல், “அக்கா.., கீழே வா.., அப்பா கூப்பிட்டாங்க..” உரக்கச் சொல்லியவன், அவள் கரம் பிடித்து எழுப்பினான்.

அவன்மேல் கிளர்ந்த கட்டுக்கடங்காத கோபத்தை மனதுக்குள் மென்று முழுங்கியவள், “உன்னை ‘போ’ன்னு சொன்னேன்..” மெல்லிய குரலில், பொறுமையாகவே உரைத்தாள்.

“ம்ச்.., என்னக்கா நீ.., நீ இன்னும் காபி கூட குடிக்கலன்னு அம்மாவும், அப்பாவும் கவலைப் பட்டுட்டு இருக்காங்க. நீ

என்னன்னா.., இங்கே உக்காந்துட்டு இருக்க.., வா..” அவன் குரல் இப்பொழுதும் உயர்ந்தே இருந்தது. அவள் வந்தால்தான் அந்த இடத்தை விட்டு நகர்வேன் என பிடிவாதமாக நின்றான்.

“உனக்கு ஒரு முறை சொன்னால் புரியாதா?” இப்பொழுது அவளது பொறுமை கரை கடந்துவிடும் நிலையில் இருக்க,

“நீதான்க்கா எங்க யாரையுமே புரிஞ்சுக்காமல் இருக்க..” அவனது உரத்த குரல் இப்பொழுது சற்று தேய, அவன்மேல் கோபம் இருந்தாலும், அவன் கலங்குவது பொறுக்காமல், தன் இருக்கையில் இருந்து மெதுவாக எழுந்து கொண்டாள்.

அவள் எழுந்து கொள்ளவே, அவன் முகம் புன்னகையில் விகசிக்க, “எஸ்..” தன் கரத்தை முறுக்கி, இடையை வெட்டி தன் மகிழ்ச்சியை சன்னமாக வெளிப்படுத்த, இப்பொழுது அவன் சொன்னது அவளுக்கு கேட்கவில்லை என்றாலும், அவனது ஆக்ஷன் புரிய, அவனைப் பார்த்தாள்.

அவள் பார்ப்பதை உணர்ந்தவன், “வாக்கா.., வா.., வா..” அவள் கை பிடித்து அழைத்தவன், அங்கே மோடாவின்மேல் இருந்த அந்த ஹியரிங் மெஷினை எடுத்து அவளுக்கு தானே அணிவித்தான்.

‘இதுதான்.., இதுதான்..’ அவள் மனம் ஓலமிட, கூடவே.., அவள் வலக்கரத்தை தன் தோளில் போட்டுக் கொண்டு, அவளை அழைத்துச் செல்ல முயல,

“வாசன்.., என்னால் நடக்க முடியும்..” கண்டிக்கும் குரலில் உரைக்க, சட்டென விலகிக் கொண்டான்.

“இல்லக்கா.., சீக்கிரம் போய்டலாமேன்னு..” அவன் இழுக்க, பட்டென அவன் கரத்தை விலக்கியவள்,

“உனக்கு அவ்வளவு அவசரம்னா உன்னை யார் இங்கே வரச் சொன்னா? நீ போ.., எனக்கு வரத் தெரியும்...” அவள் அழுத்தமாக நின்றுகொள்ள,

“அக்கா..” தயங்கி அழைத்தவன், அவள் முகத்தில் இருந்த பிடிவாதம் உணர்ந்து, இதற்குமேல் அவள் வர மாட்டாள் எனப் புரிந்தவன், துயரத்தோடு விலகிச் சென்றான்.

*****

# பகுதி – 2.

தன் தம்பி சென்ற பிறகும், சில நிமிடங்கள் தன்னை நிலைபடுத்திக் கொள்ள அவள் எடுக்க, முயன்று தன்னை சீராக்கியவள், மெதுவாக தன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

மாடி வராண்டாவில் இருந்து கீழே எட்டிப் பார்க்க, ஹாலில் இருந்த சோபாவில், அவளுக்காக அவளது தந்தை மாணிக்கம் இருப்பதைப் பார்த்தவள், கீழே செல்லும் படிகளில் இறங்கினாள்.

இடக்காலை மட்டும் சற்று அழுத்தமாக ஊன்றி, வலது காலுக்கு அதிக அழுத்தம் கொடுக்காமல் அவள் இறங்க,

அவள் வரவை உணர்ந்த வாசன், “அப்பா.., அக்கா..” தந்தையிடம் மெல்லியதாக குரல் கொடுத்தவன், பார்வையால் சுட்டினான்.

“ம்.., சரி.., நீ ஸ்கூல்க்கு கிளம்பு.., நான் பாத்துக்கறேன்..” அவர் உரைக்க, டைனிங் டேபிள் மேல் இருந்த தன் லஞ்ச் பேகை எடுத்துக் கொண்டவன், கிச்சன் வாசலில் இருந்த தாயிடம், “நான் போயிட்டு வர்றேம்மா.., இன்னைக்காவது அக்கா கிட்டே தைரியமா பேசுங்க..” சிறு கட்டளையாகவே உரைத்துச் சென்றான்.

அதற்குள்ளாக கீர்த்தி கீழே வந்திருக்க, “பாய்’க்கா..” கூச்சலிட்டவன் ஒரே பாய்ச்சலில் தன் சைக்கிளில் ஏறிப் பறந்தான்.

மாணிக்கத்தின் வசதிக்கு அவனை தினமும் காரில் பள்ளிக்கு அனுப்பி வைக்க முடியும். ஆனால்.., தான் இருந்த இடமும், வந்த விதமும் அவனுக்குத் தெரிய வேண்டும் என்பதால், அதற்கு அனுமதிக்கவில்லை.

மாணிக்கம்.., திருமணத்துக்கு முன்பு வரை, கொத்தனாராக இருந்தவர், கீர்த்தி பிறந்த பிறகு, சிறிய அளவில் காண்டிராக்ட் பணியில் வேலை துவங்க, அவள் பிறந்த நேரமோ, இல்லை அவரது அயராத உழைப்போ.., எதுவோ.., அவரது வளர்ச்சி அபாரமாகவே இருந்தது.

கீர்த்தியின் ஐந்தாம் வயதில், அவர்கள் இப்பொழுது இருக்கும் இடத்தை வாங்கியவர், அந்த இரண்டு கிரவுண்ட் இடத்தில், சுற்றிலும் சிறு தோட்டம் அமைக்க இடைவெளி விட்டு, இரண்டடுக்கு வீட்டை கட்டி குடியேறினர்.

அப்பொழுதெல்லாம் மகிழ்ச்சி மட்டுமே அவர்கள் வாழ்வில் கொட்டிக் கிடந்தது. பணம் சில நேரம் மனிதர்களை மிருகங்களாக்கிவிடும் என்பதற்கு இணங்க, முதலில் நியாயமான லாபத்தில் அனைத்தையும் செய்து வந்தவர், அதன் பிறகு பணத்துக்காக, தரமற்ற விதங்களில் செயல்பட, பணம் இரண்டாக, நான்காக.., நூறாக பெருகவே செய்தது.

அற்பனுக்கு வாழ்வு வந்தால், அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்பதற்கு இணங்க, குடி, ஆடம்பரம், இப்படியாக அவர் சற்று தடம் மாற, அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பது அவர் வாழ்க்கையில் பொய்யாகி, அவரது மகளை பலமாக தண்டித்து விட்டது.

அவளது பத்தாவது வயதில், காரில் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்க, பிரேக் பிடிக்காத கழிவுநீர் ஊர்தி ஒன்று, அவர்கள் காரை நோக்கிப் பாய, டிரைவர் சுதாரித்து, காரை வலப்பக்கம் ஒடித்து திருப்ப, அது சற்று தாமதமாகி, அவர் பக்கம் மோதவிருந்த வண்டி, நேராக அவருக்கு நேர் பின் சீட்டில் அமர்ந்திருந்த கீர்த்தியின் பக்கம் பலமாக மோதியது.

கீர்த்தியின் பக்கம் கார் அப்பளமாக நொறுங்க, பின்னால் வேடிக்கை பார்க்கவென்று சீட்டில் ஏறி நின்றிருந்ததால், அவளது இடப்பக்கம் மொத்தமாக சிதைந்துதான் போனது.

கத்தக் கூட அவகாசமின்றி மயக்கத்துக்குச் சென்றிருந்தாள் கீர்த்தி. அடுத்த அரைமணி நேரத்தில், மருத்துவ மனையில் அவள் உயிருக்குப் போராட, மொத்தமாக நொறுங்கிப் போனார் மாணிக்கம்.

கூடவே.., அவர் காதுபடவே.., பண்ணிய பாவம் சும்மா விடுமா..' என்ற ஏச்சுக்கள், அவரை உள்ளுக்குள் ஒடுங்கச் செய்தது. இருபத்துநான்கு மணி நேரங்கள் செல்லாமல் எதையும் சொல்ல முடியாது என்ற மருத்துவரின் பதில், பதினைந்து மணி நேரங்களில், அவளுக்கு வந்த ஃபிக்ஸ்.., அனைத்தும் சேர, மாணிக்கம் மகளுக்காக தன் உயிரையே கொடுக்கும் நிலைக்குச் சென்றார்.

அவரது மனைவி சாந்திக்கு அப்பொழுதுதான் வாசன் பிறந்து ஆறு மாதங்கள் ஆகியிருக்க, அவரையும் சொந்த ஊருக்கு அனுப்பி இருக்கவே, ஆறுதலுக்கு கூட ஆள் இன்றி தவித்துப் போனார்.

அதைவிட, தன் செய்கைகளில் எப்பொழுதுமே சாந்திக்கு உடன்பாடு இருந்ததில்லை என்பதால், மனைவியிடம், மகளின் நிலையை சொல்லக் கூட அவருக்கு தைரியம் இருக்கவில்லை.

மகள் உயிருக்குப் போராட, மருத்துவமனையில் இருந்த விநாயகரிடம் தஞ்சம் புகுந்தார். “என் சொத்து பணம் எதுவும் எனக்கு வேண்டாம்.., எனக்கு என் பொண்ணை மட்டும் கொடுத்துடு. இனிமேல்.., என் மனசாட்சிக்கு விரோதமா எதையும் செய்ய மாட்டேன். எனக்காக என் மகளை தண்டித்து விடாதே…” சில வருடங்களாக தெய்வம் என்ற ஒன்றையே மறந்திருந்தவர், விநாயகரின் காலடியிலேயே விழுந்து கிடந்தார்.

அடுத்த அரைமணி நேரம் போராடி கீர்த்தியின் உயிரை தக்க வைத்த மருத்துவர்கள், மேலும் இருபத்துநான்கு மணிநேரம் கெடு வைக்க, குற்றுயிராகிப் போனார்.

மகள் என்றால் அவருக்கு அவ்வளவு பிடிக்கும்.., இப்பொழுது கூட, மகன் பிறந்திருக்கும் இந்த நேரத்திலும், மகள் கேட்டாள் என்ற ஒரே காரணத்துக்காகத்தான், அவளை மனைவியிடம் விடாமல், தன்னோடு வைத்துக் கொண்டு இருக்கிறார்.

அவ்வளவு உயிரான மகளுக்கு ஒன்று என்றால் அவரால் அதை எப்படி தாங்க முடியும்? உணவு உறக்கம் இன்றி அடுத்த நாளும் நரகமாய் கடக்க, ஒரு வழியாக கண் விழித்தாள் கீர்த்தி.

அவள் கண் விழித்த பிறகே சாந்தியை அழைத்து விஷயத்தை உரைக்க, மனைவி கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மௌனமாக இருப்பதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

அடுத்து வந்த மாதங்களில், சிதைந்த முகம், இடது காலுக்கு ஆப்பரேஷன்.., முகம் சீராக பிளாஸ்டிக் சேர்ஜரி என அவளை இரண்டு மூன்று மாதங்கள் மருத்துவமனையில் வைத்திருந்த பிறகு, டிச்சார்ஜ் செய்யும் முன்னர் அந்த அணுகுண்டை மருத்துவர்கள் போட்டார்கள்.

அது என்னவென்றால்.., கீர்த்திக்கு கேட்கும் திறன் இடது காதுக்கு சுத்தமாக இல்லை எனவும், வலது காதும் நாற்பது சதவீதமே கேட்கும் எனவும் உரைக்க, தரைமட்டமாகிப் போனார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அத்தோடு.., வலது காலில் ஏதோ ஒரு நரம்பு பிசகியிருக்க, அந்த காலும் இனிமேல் இயல்பாக செயல்படாது என உரைக்க, இதுவரை அழுகையே கண்டிராத அவர் விழிகளில் நிற்காமல் கண்ணீர் வழிந்தது.

சாந்தியோ வாய்விட்டே கதற, யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்றே தெரியாத நிலை. தேறவும் முடியாமல், வாழவும் முடியாமல், மகளுக்காக சிரித்து, உண்டு, உறவாடி.., நரகமாக கழிந்தன நாட்கள்.

கீர்த்திக்கோ.., சட்டென உலகமே ஒரு நிசப்த்தத்துக்கு உள்ளான மர்மம், “அம்மா.., அம்மா..., நான் பேசுறது எனக்கே கேக்கலம்மா..” அவ்வளவு நாட்களாக தலையில் இருந்த, மற்றும் முகத்தை மூடியிருந்த கட்டுக்களால்தான் தன்னால் கேட்க முடியவில்லை என எண்ணியிருந்தவளுக்கு, அப்படி இல்லையோ.., என்ற பயம் விளைவித்த பரிதவிப்பு, பயம்.., கதறித் தீர்த்துவிட்டாள்.

“அம்மாடி.., கீர்த்தி.., ஒண்ணும் இல்லடா..” தந்தையின் சமாதானமோ.., தாயின் அரவணைப்போ கொடுக்க முடியாத, தீண்ட முடியாத இதம்.., தனக்கு காது கேட்கவில்லை என்ற உண்மையை ஏற்க முடியாத தவிப்பு,

“அப்பா.., எனக்கு காது கேக்கலையாப்பா..., இனிமேல் கேக்காதா..? ஏன் என்னால் இந்த காலை ஒழுங்கா வைக்க முடியலை? நான் நொண்டி ஆயிட்டேனா?” ஒரே நாளில் அவள் உலகம் முடக்கப்பட்ட உணர்வு.

அந்த வலியை எதிரில் இருந்து பார்க்கும் யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ஓடியாட முடியாது, பேசியதை கேட்க முடியாது.., நிசப்தமும், நகர முடியாத நிலையும், மொத்தமாக அடித்து வீழ்த்துகையில்.., ஒரு குழந்தையால் என்ன செய்ய முடியும்?

உனக்கு வலிக்கிறதா? என்னிடம் கொஞ்ச நேரம் கொடுத்துவிடு நான் தாங்கிக் கொள்கிறேன் என சொல்லும் விஷயமா? இல்லையென்றால் முடியுமா? மெல்லக் கொல்லும் விஷத்தை தானே அருந்துவதாக உணர்ந்தார் மாணிக்கம்.

தன் குற்றவுணர்வு இல்லாமல் போயிருந்தால், மகள் மன அழுத்தத்திலும், தாழ்வு மனப்பான்மையிலும் விழாமல் இருப்பதை தடுத்திருப்பார். ஆனால்.., அவளது நிலைக்கு தானே காரணம் என வெதும்புகையில், மகளின் முன்னால் செல்லக் கூட அவரால் முடியாமல் போக, தனது

குறையாலே அவர் தன்னை விலக்குகிறார் என அந்த பிஞ்சு நெஞ்சம் எண்ணிக் கொண்டதை யார் அறிய?

தாயோ.., எப்பொழுதும் தந்தையிடம் காய்வதும், தன்னிடம் வந்தால் அழுவதுமாக இருக்க, தந்தை விலகிச் செல்ல, தன்னை இந்த குறையோடு யாருக்கும் பிடிக்கவில்லை என தனக்குள் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டாள்.

அதுவே.., முன்கோபத்தையும் முரட்டுத் தனத்தையும் உருவாக்க.., கோபப்படும் மகளை கண்டிக்கும் விதம் தெரியாமல், கையாளும் வகை அறியாது பரிதவித்துப் போனார்கள் அந்த பெற்றவர்கள்.

உடலால் செயல்பட முடியாத குழந்தைக்கு நம்பிக்கை அவர்கள் வீட்டில் இருந்து விதைக்கப்படவில்லை என்றால்.., அவர்கள் எங்கே சென்று அதைப் பெறுவார்கள்?

பள்ளியில் வகுப்புத் தோழிகளின் கேலி, கிண்டல்.., அனுதாபப் பார்வை.., அவளுக்கு காது கேட்காது என காதுக்குள் கூச்சல் போடுவது, கொல்லென சிரிப்பது.., பள்ளிப் பிள்ளைகளுக்கு அது ஒரு விளையாட்டு.., ஆனால்.., அதை அனுபவிப்பவளுக்கு வேதனை ஆயிற்றே.

பெற்றவர்களிடம் அதைச் சொல்லவும் முடியாமல், அதைக் கையாளும் விதமும் தெரியாமல்.., அந்த நாட்களில் அவள் அடைந்தது வேதனை மட்டுமே.

வருடங்கள் செல்லச் செல்ல, மகளிடம் ஒன்ற முயன்றாலும், ஒரு வட்டத்துக்குமேல் பெற்றவர்களை அவள் வர விடவே இல்லை. அதுவே பெரும் இடைவெளிகளை ஏற்படுத்த, அதை சரி செய்யும் வழியும் அவர்களுக்குத் தெரியவில்லை.

கல்லூரிக்குச் சென்ற பிறகோ.., அவளது அதீத அமைதி., சட்டென வரும் கோபம், என தோழிகளை அது ஏற்படுத்தவே விடவில்லை. பேச முடியாத தனிமை, ஒருவித வெறுமை,

அதை எப்படி விரட்டவென்று அவளுக்கும் தெரியவில்லை, அவர்களுக்கும் தெரியவில்லை.

சில விஷயங்கள் அவளுக்கு சுத்தமாக பிடிக்காது.., அது.., அவளுக்கு எதிரில் சத்தமாக பேசுவது. சத்தமாக பேசினால்தான் அவளுக்கு கொஞ்சமாவது கேட்கும் என்றாலும், அதை அவள் அடியோடு வெறுத்தாள்.

மற்றவர்கள் அறியாத ஒரு விஷயம் என்னவென்றால்.., தன் எதிரில் பேசுபவர்களின் இதழ் அசைவை வைத்தே.., அவர்கள் என்ன பேசுகிறார்கள் என அவளால் வெகு இயல்பாக உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனால்.., இன்றுவரை அதை, அவளது வீட்டில் இருந்தவர்களே உணரவில்லை, தெரிந்து கொள்ளவில்லை என்பதுதான் வேதனையான உண்மை.

ஆனால்.., அவள் கண்ணால் ஒரு விஷயம் வேண்டும் என்றால் கூட, அதை தலையால் செய்ய காத்துக் கிடந்தனர் அவளது பெற்றவர்கள். குழந்தையாக இருந்தபொழுது தமக்கை மேல் கோபம் கொண்டிருந்த வாசனைக் கூட, தமக்கையின் நிலை சொல்லி மாற்றியவர்கள் அவர்கள்.

ஆனால்.., அதே அரவணைப்பும், பாதுகாப்பும், நம்பிக்கையும் தாங்கள் அவளுக்கு கொடுத்திருக்க வேண்டும் என்பதை ஏனோ மறந்து விட்டார்கள்.

இப்பொழுது பெற்றவர்களுக்கு இருக்கும் மிகப்பெரும் கவலை எதுவென்றால்.., மகளை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதே.

வீட்டோடு மாப்பிள்ளையாக என கூட வரங்கள் தேடி விட்டார்கள். ஆனால்.., மகளது கண்களில் தெரியும் மறுப்பு.., அவளை கட்டாயப்படுத்தி ஒரு விஷயத்தை செய்ய அவர்களுக்கு மனமில்லை.

அவர்கள் கொடுக்கும் பணம், தொழிலில் பங்கு.., அவற்றுக்காக வந்தால் கூட, பேச்சுவார்த்தையிலேயே அவற்றை உணரும் கீர்த்தி, அவர்கள் எதிரிலேயே மறுத்துவிட, அனைத்தும் கை நழுவித்தான் போனது.

மகள் அறைக்குள்ளேயே முடங்குவதைக் கண்டு பெற்றவர்கள் மனம் வெதும்ப, தங்கள் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று அவளை தொழிலை கவனிக்கச் சொல்லி ஐடியா கொடுத்தவன் வாசன் தான்.

முதலில் இரண்டு மூன்று நாள் ஆர்வமாகச் சென்றவள், பிறகு வராமல் போகவே, ஏன் என்று தெரியாமல் குழம்பிப் போனார்கள். அதைப் பற்றி பேசத்தான் இன்று அவளை எதிர்பார்த்ததே. மகள் படிகளில் நிதானமாக இறங்க, அமைதியாகவே பார்த்திருந்தார்.

அவளது பிடிவாதத்துக்காகவே மாடி அறையை அவளுக்கு கொடுத்திருந்தார்கள். இதிலேயே அவளது பிடிவாதத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

“வாம்மா..., உக்கார்.., சாந்தி.., குழந்தைக்கு காபி கொண்டு வா..” மகளை அருகே அமர்த்தியவர், மனைவிக்கு குரல் கொடுத்தார்.

அவரது கண்கள் மகளை ஆசையாய் வருடியது. அவளுக்கு இருக்கும் குறையை தவிர்த்துப் பார்த்தால், நிச்சயம் அழகிதான். இடக் காதுக்கு அருகில் சிறிய தழும்பத் தவிர, பார்வைக்கு வேறு குறையே கிடையாது.

தாய் கொடுத்த காபியை கைகளில் பெற்றுக் கொண்டவள், “என்னப்பா பேசணும்? அதைச் சொல்லுங்க..” நேரடியாக விஷயத்துக்கே வந்தாள்.

மாணிக்கம் மனைவியைப் பார்க்க, சட்டென மகளுக்கு அருகில் அமர்ந்தவர், “கீர்த்தி.., ஏம்மா இப்படி ரூமுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்க? கொஞ்சம் ரிலாக்ஸா

வெளியே போயிட்டு வரலாமே..” மகளிடம் எடுத்தவுடன் எதையும் பேசிவிட அவரால் முடியவில்லை.

“மச்...” ஒற்றை வார்த்தையில் அதை புறம் தள்ள, பெற்றவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“அம்மாடி.., அப்பாகூட ஆபீஸ் வரலாமே.., உனக்கும் கொஞ்சம் மாறுதலா இருக்கும்..” இப்பொழுது மாணிக்கம் இடையிட, சுள்ளென அவளுக்குள் ஒரு கோபம் பொங்கியது.

‘ஏன் என்னை என்போக்கில் விட மாட்டேன் என்கிறார்கள்? நான் வீட்டில் இருப்பது இவர்களுக்கு தொல்லையாக இருக்கிறதா? இல்லையென்றால் வேதனையாகவா..?’ புசுபுசுவென கோபம் கிளர்ந்து மேலெழ, பட்டென தன் ஹியரிங் மெஷினை கழட்டி டீபாவின்மேல் வைக்க, பெற்றவர்களின் பேச்சு பட்டென நின்று போனது.

அவளது பார்வையோ அவர்களை வெறிக்க, அவள் செய்கையைப் பார்த்தவர்கள், இதற்குமேல் என்ன பேச என்பதுபோல் அமைதியானார்கள்.

அவளோ.., “சொல்லுங்கப்பா.., என்னவோ சொல்லிட்டு இருந்தீங்களே.., இப்போ சொல்லுங்க..” ஒருவித ஆத்திரத்தில் வெடிக்க,

“அம்மாடி..” அவர் பார்வையோ.., அவள் கழட்டி வைத்த இயந்திரத்தில் பதிந்து மீண்டது.

அவரது அந்த செய்கை அவளை உள்ளுக்குள் துடிக்க வைக்க, “ஏன்.., நான் வீட்டில் இருப்பது உங்களுக்கு பிடிக்கலையா? இப்போ என்ன.., நான் இங்கே இருக்கக் கூடாது அவ்வளவு தானே..” கேட்டவள்.., விருட்டென எழுந்து அறைக்குச் சென்றவள், அதே வேகத்தில் தன் கைப்பையோடு வெளியேற, செயலற்ற தன்மையில் அவளை வெறித்திருந்தார்கள் பெற்றவர்கள்.

அவள் பின்னால் ஓடி, தடுத்து.., என எதையும் செய்ய அவர்கள் முயலவில்லை. ஒருமுறை அதற்கும் முயன்று, 'இப்போ என்னை விடவில்லை என்றால் போய்விட்டு திரும்பி வரவே மாட்டேன்.., பரவாயில்லையா..?' அவள் கேட்ட பிறகு, அவளைத் தடுக்கும் தைரியம் அவர்களுக்கு வந்ததில்லை.

அவள் கோபமாக வீட்டை விட்டு வெளியேற, இது சில வேளைகளில் நடக்கும் நிகழ்வாகையால் ஓய்ந்து போய் அப்படியே அமர்ந்து விட்டார்கள்.

"சாந்தி.., என்ன இவ.., நம்மளை புரிஞ்சுக்கவே மாட்டாளா..? இப்போ நாம என்ன சொல்லிட்டோம்.." வேதனையாக அவர் முனக, சாந்திக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

தொட்டால் சுருங்கியாக இருக்கும் மகளுக்காக பார்க்கவா..? ஐம்பது வயதைக் கூட எட்டாத நிலையிலும், அறுபதுவயதுக்குமேல் காட்டி, தளர்ந்துபோய் இருக்கும் கணவனைப் பார்க்கவா? தெய்வத்திடம் முறையிடுவதைத் தவிர அவருக்கு வேறு ஒன்றும் தெரியவில்லை.

"சாந்தி.., நம்ம பொண்ணு இப்படியே இருந்துடுவாளா..? அவளுக்கு.." அதற்குமேல் கேட்க முடியாமல், தொண்டை அடைக்க, தன் வார்த்தைகளை அவர் நிறுத்திக்கொள்ள, சட்டென அவர் கரத்தை பற்றிக் கொண்டார்.

"என்னங்க நீங்க.., அவளுக்குன்னு ஒருத்தன் இனிமேலா பொறக்கப் போறான்? எங்கேயாவது பொறந்து அவளுக்காக காத்துட்டு இருப்பான். நான் கும்பிடுற தெய்வம் என்னை கை விடாது. நடுவில் புகுந்து நீங்க நாட்டாமை பண்ணாமல் இருந்தால் போதும்.." கணவனுக்கு ஆறுதல் சொன்ன அந்த நேரத்திலும், வழக்கமான அவர் குத்தல் பேச்சு தன்னை மீறி எட்டிப் பார்த்தது.

மனைவியை வேதனையாக நிமிர்ந்து பார்த்தவர், "நீ இன்னும் என்னை நம்பலையா சாந்தி.." அவரது வலி வார்த்தையிலும் தெறிக்க,

“அப்பாவும் பொண்ணும் இதுல மட்டும் ஒத்துமையா இருங்க.., ஒரு வார்த்தை சொல்ல முன்னாடி, மூவாயிரம் அர்த்தம் எடுத்துக்கத் தெரியும். முதல்ல எந்திரிச்சு வேலையைப் பாக்கப் போங்க. எல்லாம் விதிப்படிதான் நடக்கும்..” முந்தானையை உதறிவிட்டு எழுந்து சென்றுவிட்டார்.

அனைவரும் வீட்டில் முடங்கிப் போனால் வாழ்க்கை நரகமாகிப் போகுமே.., எதார்த்தத்தை எதிர்கொள்ளப் பழகிவிட்டார் சாந்தி.

டீபாவின்மேல் இருந்த ஆறிப்போன காபியும், ஹியரிங் மெஷினும் அவருக்குள் ஒரு பெருமூச்சை கிளப்ப, எழுந்து தன் அறைக்குச் சென்றார்.

வீட்டை விட்டு வெளியே வந்த கீர்த்திக்கோ.., மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ‘அதென்ன.., அந்த மெஷின் இல்லன்னா எனக்கு எதுவுமே புரியாதா? சொல்ல வந்ததை சொன்னால் என்ன..? அவங்களுக்கே நான் செவிடுன்னு இளைப்பும்..’ ஆத்திரம்.., ஆத்திரம்.., அது மட்டுமே அவளிடம்.

மனதின் கொதிப்பு நடையில் தெறிக்க, கால்களோ.., அவளையும் மீறி வேக நடையில் பயணித்தது. கீர்த்திக்கு படிகளில் ஏற இறங்க மட்டுமே சற்று சிரமம்.., நேர் பாதையில் நடக்கையில், சிறு வித்தியாசம் அவள் நடையில் தெரியுமே தவிர பெரிதாக எந்த மாறுதலும் இருக்காது.

ஆனால்.., சட்டென யாராவது தெரியாமல் மோதிவிட்டால், அவளால் சரியாக பேலன்ஸ் செய்ய முடியாது என்பது அவளுக்கு இருக்கும் மிகப்பெரும் குறையே.

மனதின் கொதிப்பினாலோ என்னவோ.., நடை பாதையைத் தாண்டி, வாகனம் பயணிக்கும் இடத்தில் தான் நடக்கிறோம் என்பதும், அவளை கடந்து செல்லும் வாகனங்கள், பேரோசை எழுப்பி அவளைக் கடந்து செல்கின்றன என்பதையும் அவள் உணரவே இல்லை.

அவள் நிற்காமல் கால்போன போக்கில் நடக்க, சட்டென அவளுக்கு முன்னால், குறுக்காக வண்டியை நிறுத்திய ஒருவன், அவள் முகம் நோக்கி, “கால்தான் டேமேஜ்ன்னா, காதும் டமாரமா.., எவ்வளவு நேரமா ஹாரன் அடிக்கிறது.., செவிட்டு முண்டம்..” உரைத்துவிட்டுச் செல்ல, இருக்கும் நிலையை அது இன்னுமே மோசமாக்கியது.

அவன் கத்தவில்லை என்றாலும், அவன் இதழசைவை வைத்தே அவன் உரைத்ததை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. தன் கோபத்தை எப்படி வெளிக்காட்ட எனத் தெரியாமல் அவள் அழுத்தமாக நின்ற இடத்திலேயே நிற்க,

“எக்ஸ்க்யூஸ்மீ.., இந்த அட்ரஸ் எங்கே இருக்குன்னு தெரியுமா..?” தன் முன்னால் நீட்டப்பட்டிருந்த பேப்பரில் இருந்த விலாசத்தை வைத்தே, வந்திருப்பவன் தன்னிடம் அட்ரஸ் கேட்கிறான் என்பதை உணர்ந்து கொண்டவள், என்ன செய்கிறோம்.., ஏது செய்கிறோம் எனத் தெரியாமலே, அதை வெடுக்கென பிடுங்கி, ரோட்டில் வீசியிருந்தாள்.

அடுத்த நொடி, அந்த பேப்பரை கைப்பற்ற, வாகனங்கள் விரைந்த சாலையில், குறுக்கே பாய்ந்திருந்தான் அவன்.., அன்பு...

*****

# பகுதி – 3.

தன் மனதுக்குள் எரிந்துகொண்டிருக்கும் நெருப்புப் பிழம்பை அணைக்கும் வழி தெரியாமல் கீர்த்தி குமுறிக் கொண்டிருக்க, அவள் மனநிலை புரியாமல், அவளிடம் அன்பு விலாசம் கேட்க, சட்டென ரியாக்ட் செய்திருந்தாள் கீர்த்தி.

அவளது செய்கை விளைவித்த அதிர்ச்சியை விட, அந்த விலாசம் பறிபோய்விடக் கூடாதே என்ற எண்ணத்தில், சட்டென அதைத் தாவிப் பிடிக்கப் பாய்ந்திருந்தான் அன்பு.

“ஏய்.., என்ன பண்ற..?” ஒரு நொடி பதறியவள், அவனை பிடிக்க முயல, அதற்கு முன்பாகவே அவன் செயல்பட்டிருந்தான்.

அவனது நல்ல நேரமோ.., இல்லை அவளது நல்ல நேரமோ.., எதுவோ ஒன்று.., அப்பொழுது வந்த கார் சடன் பிரேக்கில் நின்றுவிட, பேப்பரை எடுத்தவன், ஒரு சிறு மன்னிப்பு வேண்டலோடு நகர்ந்திருந்தான்.

காரில் இருந்தவன் எதையோ சொல்லப் போக, அவனது கெஞ்சலான பார்வையில், கையை உயர்த்தி.., ‘ஒகேயா..’ எனக் கேட்டவாறு காரை கிளப்பிச் சென்றார்.

அவன் ஓரத்துக்கு வரவே.., அவ்வளவு நேரமாக ஸ்தம்பித்த நிலையில் நின்றவள், அவன் தன் எதிரில் வந்த பிறகே உயிர்வரப் பெற்றாள்.

“ஏய்.., லூசா நீ.., ஒரு பேப்பருக்கு வேண்டி..” அவ்வளவு நேரமாக இழுத்து வைத்திருந்த மூச்சை அவள் வேகமாக வெளியேற்ற, பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு சற்று பரிதாபமாகத்தான் போயிற்று.

“மன்னிச்சுக்கோங்க.., இந்த ஏரியா எனக்கு புதுசு.., பக்கத்தில் வேற யாரும் இல்லையா.., அதான் உங்ககிட்டே

விலாசம் கேக்க வேண்டியதா போச்சு.., மத்தபடி.., தப்பா எல்லாம் எதுவும் இல்லை..” தன்னை புரிய வைத்துவிடும் நோக்கில், தன்மையாகவே உரைத்தான். தன் கோபத்துக்கான அவனது எதிர்வினை அவளை சற்று குறுகச் செய்தது.

ஆனாலும்.., அந்த நிமிட படபடப்பு அடங்காமல், “அதுக்கு.., இப்படித்தான் செய்வாங்களா? ஒரு நாலு வரி அட்ரஸ் உன் மனசில் நிக்காதா? ஏதாவது ஆகித் தொலைச்சால்..?” நடக்கவிருந்த விபரீதம் அவள் கண்முன் நிழலாடியது.

“அட விடுங்க.., என்ன செத்தா போய்டுவேன்..” தன் கையில் இருந்த மண்ணை தட்டி விட்டவன், வண்டியில் ஏற முயல,

“செத்துப் போனால் கூட பரவாயில்லை.., ஆனா.., ஏன் உயிரோட இருக்கோம்னு நினைக்கிற அளவுக்கு ஆனா..?” அவள் நிலை கண்முன் நிழலாட பொங்கியிருந்தாள்.

வண்டியில் ஏறப் போனவன், சட்டென ஒரு நொடி தாமதித்து அவள் முகம் நோக்க, தான் உளறிவிட்டதை அப்பொழுதுதான் உணர்ந்தவளாக, “உனக்கு அட்ரஸ் கேக்க வேற ஆளே கிடைக்கலையா? என்னைப் பார்த்தால் உனக்கு கூகிள் மேப் மாதிரி தெரியுதா? ரோட்ல ஒரு பொண்ணு நின்னுடக் கூடாது உடனே..” அவனது அசையாத பார்வையில் சட்டென பேச்சை நிறுத்தியவள், அதே வேகத்தில் அவனுக்கு முதுகு காட்டி திரும்பியிருந்தாள்.

அவள் நடையைத் தொடர, மனமோ.., ‘ஹையோ.., எதுக்கு நான் இப்படி ரியாக்ட் செய்யறேன்..’ நடக்கவிருந்த விபரீதத்தால் அவள் தேகம் நடுங்கிக் கொண்டிருந்ததால், அவளால் நிலையாக நடக்க முடியவில்லை.

அவள் நடையில் தெரிந்த வித்தியாசம்.., வார்த்தைகளில் தெரிந்த வலி, அவனை ஒரு மாதிரி ஆட்கொள்ள, அவளது தள்ளாட்டம் நிஜமாய் அவனை பதறச் செய்தது.

அவள் கோபத்தையும் பொருட்படுத்தாமல், தன் வண்டியைக் கிளப்பி, அவளுக்கு முன்பாகச் சென்றவன், “என்னங்க.., ஒரு நிமிஷம் நின்னுட்டு போங்க. தண்ணி குடிக்கறீங்களா? நான் உங்களை தொந்தரவு பண்றேன்னு தெரியுது.., ஆனாலும்..” தன்மையாகவே உரைத்து தண்ணீர் பாட்டிலை நீட்டினான்.

“போடா..” வெடுக்கென அவள் உரைத்துச் செல்ல, இப்பொழுது திடுக்கிட்டான். அவ்வளவு நேரத்தில், முதல் முறையாக அவன் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியில், தன் வார்த்தைகளின் கனத்தில் ஸ்தம்பித்துதான் போனாள்.

அவள் கால்கள் அங்கிருந்து அகல, ‘ஐயோ.., அவன் பின்னால் வந்து ஏதாவது சொன்னால் என்ன செய்வது..?’ சட்டென ஒரு பயம் முளைவிட்டாலும், ஒரு மனமோ.., அவன் அப்படிச் செய்ய மாட்டான் என உரைக்க, சற்று தூரம் சென்றவள் மெதுவாக திரும்பிப் பார்த்தாள்.

அவனோ.., ‘அம்மாடியோ.., காந்தாரி...’ அவன் மனம் முதல் முறையாக ஒரு பெண்ணைப் பற்றி கமெண்ட் அடிக்க, அதற்குமேல் அவள் பின்னால் செல்ல மனமின்றி கிளம்பிவிட்டான்.

கீர்த்தி திரும்பிப் பார்க்கையில் கண்டது அவனது முதுகையே. அவ்வளவு நேரம் இருந்த மனநிலை சட்டென மாறியிருக்க, ஒரு மாதிரி மனம் இலகுவாகி இருந்தது.

அது எதனால் என அவளுக்குப் புரியவில்லை. முதல் முறையாக தன்னை நேருக்கு நேராக பார்க்கும் ஒருவனின் கண்களில், இரக்கம் இல்லாததாலா? இல்லை, தன்னையும் அவன் சக மனுஷியாக உணர்ந்து இயல்பாக உரையாடியதாலா? இல்லையென்றால் அவனது உரத்த குரலை தான் உணராததாலா என அவளால் பிரித்தறிய முடியவில்லை.

ஆனால்.., நடையில் ஒருவித நிதானம் வந்திருக்க, மனநிலையும் அவ்வாறே இருந்தது. உடனடியாக வீட்டுக்குச்

சென்று அறையில் முடங்க மனமின்றி, அருகில் இருந்த பார்க்குக்கு சென்றாள்.

அங்கே காலியாக கிடந்த பெஞ்சில் அமர, அங்கிருந்த ஊஞ்சலில் சிறு குழந்தைகள் விளையாடுவதைக் காணவே, தன்னை மறந்து அவர்களையே பார்த்திருந்தாள்.

சற்று நேரம் அதில் லயித்திருக்க, திடுமென அவள் தோளில் ஒரு கரம் விழ, யார் என ஏறிட்டாள். பொதுவாக அவளைத் தெரிந்தவர்கள் அவளை அழைப்பதே அவள் தோளில் கரம் வைத்துதான் என்பதால், அவள் திடுக்கிடவெல்லாம் இல்லை.

“கீர்த்தி.., நீ.. கீர்த்தி தானே..” நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு உற்சாக முகத்தை எதிர்கொண்டாள்.

“ஆமா..., நீங்க..?” அந்த முகம் எங்கேயோ பார்த்து மறந்த முகமாக இருக்கவே தயக்கமாகவே உரைத்தாள்.

“என்னைத் தெரியல..? அக்ஷயா.., உன்னோடவே ப்ளஸ்டூ வரை படித்தேனே.., ரியல்லி.., உன்னை நேர்ல பாக்கும்போது மன்னிப்பு கேக்கணும்னு நினைச்சுட்டு இருந்தேன்..” அவள் கரத்தை மென்மையாக பற்றிக்கொள்ள, இந்த சந்திப்பில் நேர்ந்த பூரண மகிழ்ச்சியை அவளால் உணர முடிந்தது.

‘அக்ஷயா..’ கீர்த்தியின் ஞாபக அடுக்குகள் பள்ளிக்காலத்தில் நுழைய, தன் காதுக்கருகில் ‘ஊ..’ என ஓலமிட்டுச் செல்லும் அக்ஷயாவை அவள் அடையாளம் கண்டு கொண்டாள்.

அவள் முகத்தில் இருந்தே, தன்னை அடையாளம் கண்டுகொண்டாள் என்பதை உணர்ந்தவள், ஒரு நொடி மௌனமானாள்.

“கீர்த்தி.., சின்னப் பிள்ளையில் ஏதோ விளையாட்டா செய்தது.., கொஞ்சம் விவரம் வந்தப்போ, அது தப்புன்னு

திருத்திக்க நினைத்தேன். ஆனா..” அவளிடம் ஒரு பெருமூச்சு எழுந்தது.

தோழி தன் பேச்சை கவனிக்கிறாளா? தான் பேசுவது அவளுக்கு புரிகிறதா என அவளை ஏறிட, கீர்த்தியின் முகத்தில் இருந்த ஒருவித அழுத்தம், அவளுக்கு தான் பேசுவது புரிகிறது என்பதை உணர்த்த, அவள் கரத்தை மேலும் அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

சில நொடி மௌனத்தில் கழிய, “அம்மா.., இந்த அக்கா யாரும்மா..?” ஒரு குட்டி தேவதையின் வருகை அவர்களை கலைத்தது.

“நீயே கேளேன்...” அக்ஷயா மகளிடம் உரைக்க..,

“நீ யாரு..?” கீர்த்தியிடம் அவள் நேரடியாக வினவ, “நான் கீர்த்தி.., நீங்க..?” கேட்டவள் குழந்தையை கைகளில் அள்ளிக் கொண்டாள்.

“நான்.., பவி.., பவி பாப்பா..” கை கொட்டி கிளுக்கிச் சிரித்தாள்.

“நீ அழகா இருக்க..” இமைகளை கொட்டி, ஒருவித ஆசையாக அவள் முகம் நோக்கிய குழந்தை, மென்மையாக அவள் கன்னம் வருடி அவளை உணர்ந்து கொள்ள முயன்றது.

அதை ஒரு புன்னகையில் கடந்தவள், “என்ன படிக்கறீங்க..?” குழந்தையிடம் அவள் ஒன்ற, “எல்கேஜி.., டி செக்ஷன்.., நீ..?” கேட்டவள், அவள் இடக்காதின் அருகில் இருந்த அடையாளத்தைப் பார்த்து.., உனக்கும் அடி பட்டுடுச்சா..? எனக்கும்...” உரைத்தவள், அவள் கையில் இருந்து இறங்கி.., வேகமாக தன் காலை ஆராய்ந்தவள்,

“இதோ.., எனக்கும் அடி பட்டுடுச்சு..” அவள் குனிந்து உரைத்ததால் அவளது வார்த்தைகள் புரியவில்லை

என்றாலும், அவளது செய்கை அவள் சொல்ல வந்ததை உணர்த்த,

“அச்சோ.., பவி பாப்பாவுக்கும் அடி பட்டுடுச்சா..? எப்படி பட்டுச்சு..?” குழந்தையாக மாறி அவள் வினவ,

வேகமாக அவள் கரத்தை அழுத்திய அக்ஷயா, “ஐயோ.., அதை மட்டும் கேக்காதே.., இன்னைக்கு முழுக்க கதை சொல்லுவா.., உன்னை விடவே மாட்டா..” அவள் இடைபுகுந்தாள்.

“அம்மா.., நீ போம்மா.., நான் சொல்றேன் நீ கேளு..” கீர்த்தியின் முகம் பற்றி திருப்பியவள், தாயை முறைத்தவாறே அவளிடம் உரைக்க, சில வருடங்களுக்குப் பிறகு, மனம் விட்டு சிரித்தாள் கீர்த்தி.

பொதுவாக குழந்தைகளிடம் ஒரு குணம் உண்டு.., அவர்கள் ஒருவரிடம் ஒன்றைச் சொல்ல விரும்பினால், அவர்கள் தங்கள் முகம் பார்த்தால்தான் சொல்ல வந்ததை உரைப்பார்கள்.., இல்லையா.., அவர்கள் பார்க்கும் வரைக்கும் விடவே மாட்டார்கள்.

கேட்பதற்கு காது மட்டும் இருந்தால் போதும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தன்னிடம் முழுதாக ஒன்ற வேண்டும் என்பதே முக்கியமாக இருக்கும்.

கீர்த்தியின் பேச்சும், சிரிப்பும், குழந்தையின் கேள்விக்கு அவள் பதில் கொடுத்த விதமும், இவ்வளவு சின்ன வயதில், தன் குழந்தைக்கு இருக்கும் புரிதல் கூட தனக்கு அப்பொழுது இல்லையே என வெட்கினாள் அக்ஷயா.

இப்பொழுது கீர்த்தி காதில் ஹியரிங் மெஷின் வைத்திருந்தால் மட்டுமே அவள் வித்தியாசமாக பார்த்திருப்பாள் என்பது அப்பொழுது அவளுக்குப் புரியவில்லை.

“விடு அக்ஷயா.., அவ சொல்லட்டும்..” அவளிடம் பதில் உரைத்தாலும், பார்வை பவியிடமே நிலைத்திருந்தது.

அவள் கண்களைக் காணுகையில், சம்பந்தமே இல்லாமல், சற்று நேரத்துக்கு முன்னர் பார்த்தவனின் கண்கள் நினைவிற்கு வர, ‘இப்படித்தானே அவனும் பார்த்தான்..’ எண்ணம் செல்லும் திக்கில் திடுக்கிட்டாள்.

அதை அக்ஷயா கண்டுகொள்ளவில்லை.., மாறாக.., “இல்ல கீர்த்தி.., இன்னும் இவ டிபன் கூட சாப்பிடலை.., எழுந்த உடனே இங்கே வந்தால் தான் ஆச்சுன்னு ஒரே அடம்.., அதான் கூட்டி வந்தேன். அது மட்டும் இல்லை, அம்மா வேற காணோம்னு தேடிட்டே இருப்பாங்க..” நிலைமையை விளக்கினாள்.

“ஓ..” அவ்வளவு நேரம் இருந்த இதம் தொலைய, அசைக்ஷயாவே சங்கடமாக உணர்ந்தாள்.

அவளை வீட்டுக்கு அழைக்க ஆசைதான்.., ஆனால்.., அவ்வளவாக நெருங்கிப் பழகாத கீர்த்தியை சட்டென எப்படி அழைப்பது என்ற தயக்கம். அழைத்தால் வருவாளா என்ற தடுமாற்றம்..,

அவளது தடுமாற்றம் பவியிடம் இருக்கவில்லை. “அக்கா.., நீங்க எங்க வீட்டுக்கு வாங்க.., நான் எப்படி அடி பட்டதுன்னு சொல்றேன். வாங்க..” அவள் கரத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

“கீர்த்தி.., வீட்டுக்கு வாயேன்.., அங்கே அம்மா மட்டும்தான்..” முடிவை அவளே எடுக்கட்டும் என மென்மையாகவே அழைத்தாள்.

“இல்ல.., இன்னொரு நாள் வர்றேன்..” அவள் மறுக்க, பவியோ.., “அதெல்லாம் முடியாது.., நீ வா.., வீட்ல எனக்கு போர் அடிக்கும்..” அவளை விடுவதாக இல்லை.

“இல்லடா செல்லம்.., அக்கா இன்னொரு நாள் வர்றேன்..” இத்தனை வருடங்களில் அவள் சொந்தங்களின் வீட்டுக்கு கூட சென்றதில்லை, அப்படி இருக்கையில்.., பல வருடங்கள் கழித்து, அதுவும் பள்ளியில் தன்னை கேலி செய்த தோழியின் வீட்டுக்கு செல்வது என்றால்.., அது அவளால் இயலாத காரியமாகவே பட்டது.

“அப்போ நான் உன் வீட்டுக்கு வர்றேன்..” பவி தன் பிடிவாதத்தை வேறு விதத்தில் அரங்கேற்ற, என்ன செய்வது எனத் தெரியாமல் திண்டாடிப் போனாள்.

“அது வந்து..” அவள் மறுக்கத் துவங்கவே..,

“முடியாது.., நீ வா..” குரல் உயர்த்தி அழுகைக்கு தயாரானாள்.

“கீர்த்தி.., ஜஸ்ட்.., வீட்டுக்குள்ள இல்லன்னாலும்.., வீடு வரைக்குமாவது வாயேன்.., இங்கே.., கிட்டதான்.., நாலு தெரு தள்ளிதான் வீடு..” இப்பொழுது அக்ஷயா சிறிதாக கெஞ்சினாள்.

“இல்ல.., நான்..” இப்பொழுதும் அவள் பெரிதாக தயங்க,

“எனக்குத் தெரியும்.., நீ ஏன் தயங்கறன்னு.., நான் அந்த பழைய அக்ஷயா இல்லை.., ப்ளீஸ்..” தன் தவறை சரி செய்துவிடும் வேகம் அவளிடம் அதிகம் இருந்தது.

“வா.., வா..” பவியின் பிடிவாதம், ஒரு வாறாக அவளை இளகச் செய்தது.

“சரி வர்றேன்..” அவள் உரைக்க.., “ஏ.., ஜாலி.., ஜாலி..” குதித்து கும்மாளமிட்டாள் குழந்தை.

பார்க்கை விட்டு வெளியே வந்தவர்கள் மெதுவாக நடக்க, கீர்த்தியின் நடையில் தெரிந்த வித்தியாசத்தில், “உனக்கு கால்லயும் அடி பட்டுடுச்சா?” பவியின் கேள்விக்கு, மென்மையாக தலை அசைத்தாள்.

“எங்கே.., நான் வேண்ணா ஊதவா? எனக்கு அடிபட்டா அம்மா அப்படித்தான் செய்வாங்க..” உரைத்தவள், அவள் காலுக்கு அருகில் குனியப் போக,

“வேண்டாம்..” அவள் பதறி விலகும் முன்பு, “ஏய் வாயாடி.., சும்மா இருக்க மாட்ட..” குழந்தையை கைகளில் ஏந்திக் கொண்டாள் அக்ஷயா.

“சாரி.., அவளுக்கு..” அக்ஷயா சங்கடமாக உரைக்கத் துவங்கவே, “குழந்தை தானே..” அவளைத் தாங்கி உரைத்தவள், அவளோடு நடக்கத் துவங்கினாள்.

‘தன்னோடு படித்தவள், அவளுக்கு மூன்று வயதில் குழந்தை என்றால்.., மேலே படிக்கவில்லையா..?’ கேள்வி ஒரு பக்கம் குடைந்தாலும் தானாக அவளிடம் எதையும் கேட்கவில்லை.

குழந்தை அவள் கைகளில் இருந்து இறங்கி முன்னால் நடக்க, கீர்த்தி.., அமைதியாக வரவே.., “எங்க அப்பாவுக்கு ஹார்ட் பிராப்ளம் இருந்தது. அவர் கடைசியா ஆசைப் பட்டது என்னோட மேரேஜ்.., சோ.., காலேஜ் முதல் வருஷம் சேர்ந்த உடனேயே கல்யாணம்.., என் மேரேஜ் முடிந்த ஒரே மாசத்தில்.., எல்லாம் முடிஞ்சுடுச்சு. இப்போ அம்மா தனியாதான் இருக்காங்க.

“இப்போ நான் ரெண்டு மாசம், அதான்.., அம்மா வீட்டில் கொஞ்ச நாள் இருந்துட்டு போகலாம்னு வந்திருக்கேன். என் ஹஸ்பன்ட் வீடு பூந்தமல்லி..” தன்னைப் பற்றிய விளக்கத்தோடு அவளை வீட்டுக்கு அழைத்து வந்திருந்தாள்.

அனைத்தையும் அமைதியாக கேட்டுக் கொண்டவள், தன்னைப்பற்றி எதையும் விளக்க முனையவில்லை.

“வந்துட்டோம்..” பவி ஓடி வந்து அவள் கரத்தை பற்றிக்கொள்ள, மெல்லிய புன்னகையோடு அவளது இழுப்புக்கு உடன்பட்டாள்.

ஏனோ புதிய மனிதர்களை சந்திப்பது பெரும் ஆறுதலையும், மாறுதலையும் அவளுக்கு அளித்தது. அதுவும் இன்று காலை முதல், அதிலும் அவனைக் கண்ட பிறகு.., என எண்ணுகையிலேயே, தன் பிரம்மையோ என தலையை உதறிக் கொண்டாள்.

“என்ன ஆச்சு.., டயடா இருக்கியா..?” அவள் தோளை உலுக்கி, அக்ஷயா வினவ, “இல்ல.., ஏதோ ஞாபகம்.., சரி.., நான் கிளம்பறேன்..” காம்பவுண்ட் கேட்டின் அருகே அவள் விடைபெற முயன்றாள்.

“கீர்த்தி.., உள்ளே வந்து ஒரு காபி குடிச்சுட்டு போலாமே.., பழசெல்லாம் மறந்துட்டு.., புதுசா.., லெட்’ஸ் பீ ப்ரண்ட்ஸ்..” சிறு ஏக்கமும், எதிர்பார்ப்பும் இழையோட கேட்டாள்.

“பாட்டி.., புது அக்கா வந்திருக்காங்க வா..” வீட்டுக்குள் சென்றிருந்த பவி, அக்ஷயாவின் தாயை கையோடு அழைத்து வந்திருந்தாள்.

“பவி.., பாட்டியே வர்றேன்..” தன் வயதை மீறி அவளுக்கு இணையாக வந்து கொண்டிருந்தார்.

இவர்களை காம்பவுண்ட் கேட் அருகே பார்க்கவே.., “உள்ளே வாம்மா.., ஏன் வெளியே இருந்தே பேசறீங்க..” அவரது அழைப்பு கேட்கவில்லை என்றாலும், அவரது வரவேற்பான தலையசைப்பு புரிய, சிறு சங்கடமாக உணர்ந்தாள்.

“கீர்த்தி.., ப்ளீஸ்..” அக்ஷயாவின் கெஞ்சல் இப்பொழுது வெளிப்படையாக வெளிப்பட, எதார்த்தமாக, உள்ளார்ந்த அன்போடு அழைக்கும் அவர்களது அழைப்பை அவளால் மறுக்க முடியவில்லை.

“அக்கா.. வா..” பவி ஓடிவந்து அவளை கை பிடித்து இழுத்துச் செல்ல,

“பவி.., அவங்களே வருவாங்க விடு..” எங்கே மகள் அவளை கீழே தள்ளி விடுவாளோ என சட்டென ஒரு பயம் அவளை

தொற்றிக் கொண்டது.

எதிர்பாராமல் பவி இழுத்ததில் சற்று தடுமாறினாலும், தன்னை சுதாரித்தவள் அவளோடு கூட நடந்தாள்.

“வாம்மா..” பவியின் பாட்டி வரவேற்பாக அழைத்துவிட்டு உள்ளே செல்ல, அவர் பின்னால் தானும் நுழைந்தாள்.

“உக்காரும்மா.., அம்மாவும் பொண்ணும் எப்போ போனாங்க. இப்போ வராங்க. பொண்ணுக்கு பசிக்கும்னு பொறுப்பு வேண்டாம்..” அவர் உரைத்தவாறே கிச்சனுக்குச் செல்ல, அவர் திரும்பி நடந்தவாறே உரைத்ததால் அவளால் அவர் பேசியதை புரிந்துகொள்ள முடியவில்லை.

“என் பொம்மை பாக்கறியா…? என்கிட்டே நிறைய இருக்கு. டேடி வாங்கிக் கொடுத்தாங்க..” அவளைக் கலைத்து, தங்கள் அறைக்கு அழைத்துச் செல்ல முயன்றாள் பவி.

“பவி.., நான் இங்கேயே இருக்கறேன். நீ போய் எடுத்துட்டு வா..” குழந்தை உள்ளே ஓட, வரவேற்பறையில் அவள் நிற்க, “கீர்த்தி.., வா.., வந்து உட்கார்..” அங்கிருந்த சோபாவை காட்ட, சற்று தயக்கமாக அதில் சென்று அமர்ந்து கொண்டாள்.

“ஒரு நிமிஷம்..” அவள் உள்ளே செல்ல முயல, “எனக்கு எதுவும் வேண்டாம்..” கீர்த்தியின் வேகக் குரல் அவளை தடுத்தது.

“ஜஸ்ட் காபி தான்..” உரைத்தவள் உள்ளே சென்று மறைந்தாள்.

அதே நேரம்.., வெளியே அழைப்புமணியின் ஓசை கேட்க, “நான் பாக்கறேன்..” பவி அறைக்குள் இருந்து குரல் கொடுத்தவாறு வாசலுக்கு விரைய, பெரியவர்கள் உள்ளே இருக்கையில், இவள் எங்கே வெளியே ஓடுகிறாள் என குழந்தையின் பின்னால் விரைந்தாள்.

பவி வேகமாக கதவைத் திறக்க, “இப்போ எதுக்கு டோரை ஓப்பன் பண்ற?” கேட்டவள், அவளைத் தடுக்க முயன்றாள். அவளுக்கு அழைப்பு மணியின் ஓசையோ, இல்லை, குழந்தையின் பேச்சோ கேட்டிருக்க வில்லையே.

“வெயிட்..” அவளுக்கு முன்பாக கையை நீட்டிய குழந்தை வேகமாக கதவை அகலமாகத் திறந்தாள்.

எதிரில் நின்றவனுக்கோ., குழந்தை தெரியாமல், அந்தப் பக்கம் நின்ற கீர்த்தி மட்டுமே தெரிய, “ஐயோ காந்தாரி..” இதழசைவில் அவன் முனக, அதை சரியாக மொழி பெயர்த்தவளோ, சிறு முறைப்போடு அவனை எதிர்கொண்டாள்.

*****

# பகுதி – 4.

கீர்த்தியைப் பார்த்து அன்பு தயங்கியது ஒரு நிமிடம் தான். அதற்குள்ளாகவே, “உங்களுக்கு யார் வேணும்?” பவி அவனிடம் குரல் கொடுக்க, அப்பொழுதுதான் அவளைக் கவனித்தான்.

“பாப்பா.., திருமூர்த்தி இருக்காங்களா..?” அவன் குழந்தையிடம் வினவியவன், மறந்தும் கீர்த்தியை பார்க்கவில்லை.

‘காந்தாரினா..?’ அவளுக்குள் அந்த பெயருக்கான அர்த்தம் என்னவென்று புரியாத குழப்பம்.

‘அய்யய்யோ.., நாம முனகுனது அவங்களுக்கு கேட்டிருக்குமோ..? முறைக்கறாங்க..’ அவளைப் பாராமலே விழியை அருகில் இருந்த சுவரில் நிலைக்கவிட்டு அவன் இதழசைவில் முனக, அதையும் அவள் சரியாகவே படித்தாள்.

ஏனோ மெல்லியதாக சிரிப்பு வரும்போல் இருந்தது. அதைவிட, தன்னைப் பார்த்து அவன் முறைக்காமல், கோபம் கொள்ளாமல், இதுதான் உன் வீடா..? என்ற பார்வை ஓடாமல் இருந்தது ஒருவித கவனத்தை அவன்மேல் விதைக்கச் செய்தது.

“அம்மா.., இங்கே வாங்க..” குழந்தை குரல் கொடுக்க, “வர்றேன்..” அக்ஷயா வெளியே வந்தவள், “யார்ங்க..?” அவனிடம் வினவினாள்.

“ஒரு கொரியர் வந்திருக்கு மேம்.., சைன் போட்டு வாங்கிக்கங்க..” அவளிடம் ஒரு கவரைக் கொடுத்தான்.

‘இவன் இவ அட்ரசை தான் என்கிட்டே கேட்டானா..?’ கீர்த்திக்குள் யோசனை ஓடியது.

அக்ஷயா கையெழுத்து போட்டு கொடுக்கவே, அதை பெற்றுக் கொண்டவன், தன் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பிப் போயே விட்டான்.

மறந்தும் கீர்த்தியின் பக்கம் அவன் பார்வையை இறுதி வரை செலுத்தவே இல்லை. அது அவளுக்குள் இனம் புரியாத ஒரு வெற்றிடத்தை உருவாக்க, ஒரு மாதிரி உணர்ந்தாள்.

அன்புக்கோ அப்படியெல்லாம் எதுவும் இருக்கவில்லை. மாறாக, அவள் பேச்சின் சாராம்சம் ஒரு மூலையில் ஓடியது. அவள் காலை தாங்கி வைத்து நடந்ததைப் பார்த்தவன் தானே.., 'ஒரு வேளை, அவங்களுக்கு விபத்தில் தான் இப்படி ஆகி இருக்குமோ..?' வண்டியில் விரைந்தாலும் அவனது எண்ணம் அதுவாகத்தான் இருந்தது.

கீர்த்திக்கோ.., அந்த நாள் ஒரு மாதிரி அழகாகிப் போன உணர்வு. அக்ஷயாவின் அம்மா அவளிடம் இயல்பாக உரையாடியதில் இருந்தே, தன் குறையை அவள் தாயிடம் சொல்லவில்லை என்பது புரிய, தானும் ஒரு சாதாரண, குறையற்ற மனுஷியாகிப்போன உணர்வு.

அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தாலும், 'இவனைப் பார்த்த பிறகுதான் தன் வாழ்வில் ஒரு மாற்றம் என அவள் மனம் அழுத்தமாக அவள் அடிமனதில் பதிந்து வைத்தது. அதை அவளே உணரவில்லை என்பதுதான் சுவாரசியமே.

மேலும் அரைமணி நேரம் அவர்களோடு கழித்தவள், அவர்களிடமிருந்து விடைபெற, வாசல் வரை வந்து வழியனுப்பியவள், "ப்ரண்ட்ஸ்.." தன் கையை அவள் பக்கம் நீட்ட, மகிழ்ச்சியாகவே அவள் கையை பற்றிக் கொண்டாள்.

அலைபேசி எண்ணையும் இருவரும் பரிமாறிக் கொண்டார்கள். புதிய மனிதர்கள், நட்பு, தன்னை உயிர்ப்புடன் உலவ வைக்கும் என ஒரு எண்ணம் வலுப்பட, சற்று இலகுவாக உணர்ந்தாள்.

“அக்கா.., நாளைக்கு மால் போலாமா..?” பவியின் வேண்டுகோள் அவளை சற்று உற்சாகப்படுத்தவே செய்தது எனலாம்.

“நாளைக்கு வேண்டாம்.., இன்னொரு நாள் போகலாம்..” அதே மனநிலையில், உன் நட்பை நான் ஏற்கிறேன் என அக்ஷயாவுக்கும் உணர்த்திவிட்டே அங்கிருந்து சென்றாள்.

அன்புவோ.., தன் கொரியர் வேலையை முடித்தவன், தனக்கான அடுத்தடுத்த வேலைகளில் பிஸியாக, இடையில் சந்தித்த கீர்த்தியை சுத்தமாக மறந்தே போனான்.

இரவு பதினொன்று மணிக்கு தன் வீட்டுக்கு வந்தவன், ஒரு அவசர குளியல் போட்டுவிட்டு, கையோடு வாங்கி வந்திருந்த ப்ரெட்டை வேகமாக உண்டவன், அருகில் இருந்த ஸ்டவ்வில், ப்ளாக்டீ போட்டுக் குடித்துவிட்டு, சுவற்றில் சாய்த்து வைத்திருந்த பாயை எடுத்தவன், அறைக்கு வெளியே, அந்த மொட்டை மாடியில் விரித்து படுத்துக் கொண்டான்.

அதென்னவோ அந்த ஒற்றை அறைக்குள், ஃபேன் காற்றில் படுப்பது எப்பொழுதுமே அவனுக்கு பிடித்தம் இருந்ததில்லை. ஊரில் இயற்கை காற்றில், குளுமையை அனுபவித்து பழகியவன் அவன். அப்படி இருக்கையில், சென்னை வெயிலே அவனுக்கு சற்று கொடுமையானதுதான்.

தலையணையில் தலை வைத்து படுத்தவன், கைகள் இரண்டையும் தலைக்கு அணைவாக கொடுத்துவிட்டு, வெட்டவெளியை வெறித்தான். வானத்தில் மின்னிய நட்சத்திரங்களை பார்க்கையில், மனம் கடந்த காலத்துக்குள் நழுவத் துடித்தது.

“அம்மா..” வாய் விட்டே முனகியவன், எதையும் யோசிக்கப் பிடிக்காமல் இமைகளை மூடிக் கொண்டான். ஆனாலும்.., மனம் அவனை மீறி, கடந்த காலத்துக்கு இழுத்துச் செல்ல,

பட்டென விழி திறந்தவன், “அம்மா.., கண்டிப்பா உங்க ஆசையை நிறைவேத்துவேம்மா.., எனக்கு துணையா நீங்க இருக்கணும்..” மானசீகமாக வேண்டியவன், அலுப்பில் சட்டென உறங்கிப் போனான்.

கீர்த்திக்கோ.., அன்றைய நாள் மட்டுமே நினைவில் பசுமையாக மனதில் நிழலாடியது. அவள் வாழ்க்கை சாதாரணமாக இருந்திருந்தால் இவையெல்லாம் ஒரு விஷயமே கிடையாது.

ஆனால்.., எப்பொழுதும் ஒருவித அழுத்தத்தில், அறைக்குள் முடங்கிக் கொள்பவளுக்கு அது ஒரு திரு நாள் தான். பல வருடங்களுக்குப் பிறகு, நிம்மதியான உறக்கம் அவளைத் தழுவியது.

கனவில் கூட அன்பு வந்து விலாசம் கேட்க, பட்டென கண் விழித்து அமர்ந்து விட்டாள். கனவுகள் என்பது அவளுக்கு நின்றுபோய் எத்தனையோ வருடங்கள் கடந்து விட்டன. அப்படி இருக்கையில், இப்படி ஒரு கனவு, அதுவும் இத்தனை வருடம் கழித்து வந்தால் அவளும் என்னதான் செய்ய?

“கனவில் கூட அட்ரஸ் கேட்டு மொக்கை வாங்கறானே..” வாய்விட்டே புலம்பியவள், அந்த நள்ளிரவில் வாய்விட்டே சிரித்துவிட்டாள். அருகில் இருந்த வாட்டர் பாட்டிலில் இருந்து தண்ணீர் குடித்துவிட்டு படுத்துக் கொண்டாள்.

மறு நாள் முதல், கீர்த்தியின் நடத்தையில் சிறு மாற்றம். எதற்கெடுத்தாலும் எரிந்து விழும் தன்மை இல்லை. அடிக்கடி வெளியே செல்வது, தன் பாட புத்தகங்களைக் கூட எடுத்துச் சென்று பார்க்கில் அமர்ந்து படிக்கத் துவங்கி இருந்தாள்.

கூடவே.., அக்ஷயாவுடனான அவளது நட்பு சற்று இறுகியது. அவளோடு அருகில் இருக்கும் சூப்பர் மார்க்கெட்டுக்கு செல்லும் அளவுக்கு முன்னேறி இருந்தாள். பார்க்குக்கு செல்வதாக இருந்தால், அவளது அலைபேசியில்

குறுஞ்செய்தி அனுப்புபவள், பவியோடு இணைந்து அங்கே கொட்டம் அடிப்பாள்.

ஆனாலும்.., சில வேளைகளில் சாலையில் நடக்கையில் கண்கள் எதையோ தேடும், கடைக்குச் சென்றால்.., அங்கும் பார்வைகள் துழாவும். யாரைத் தேடுகிறோம், எதற்காகத் தேடுகிறோம்? எதுவும் தெரியாது. ஆனால்.., ஒரு எதிர்பார்ப்போடு கூடிய தேடல்.., அது அவளுக்கு பிடித்திருந்தது.

வீட்டில் கூட, பெற்றவர்களுக்கு அவ்வளவு நிம்மதி.., அவள் சற்று இலகுவாக இருப்பதே அவர்களுக்கு சந்தோசம் கொடுக்குமென்றால், அவளது வீட்டுக்கு வெளியேயான வேலைகள், வீட்டுக்கு வருகையில் அதில் தெரியும் சந்தோசம்.., நிம்மதி.., அவள் மாறுதலுக்கான காரணம் அவர்களுக்குத் தெரியவில்லை.

சொல்லப்போனால் அதை தெரிந்து கொள்ளக் கூட அவர்கள் விரும்பவில்லை. அவளது சந்தோசம் மட்டுமே அவர்களுக்கு முக்கியம். அது எந்த விதத்தில் வந்தால் என்ன? அதைவிட சில நாட்கள், அருகில் இருந்த பார்க்கில், அவள் பவியோடு விளையாடுவதை மாணிக்கமே கண்டிருந்தார்.

கூடவே வாசனும் அவள் செல்லும் இடம், அவளது தோழியின் வீடு என, தான் டியூஷன் போகும் இடத்துக்கு அருகில் பார்த்ததை உரைக்க, அந்த நட்பை அவர்களும் மறைமுகமாக ஆதரித்தார்கள்.

இப்படியே மூன்று மாதங்கள் கடந்திருக்க, பூந்தமல்லியில், புதிதாக தான் கட்டிய கமர்ஷியல் பில்டிங்கின் பூஜை வேலையை ஒருங்கிணைப்பதில் பிஸியாக இருந்தார் மாணிக்கம்.

பொதுவாக தான் கட்டும் பில்டிங் அனைத்தையும் சேல்ஸ் செய்வதுதான் அவரது பிரதான வேலை. ஆனால்.., முதல்

முறையாக, அந்த பில்டிங்கை தானே வாடகைக்கு விட்டால் என்ன என்ற முடிவிற்கு வந்திருந்தார்.

அதற்கு காரணம் கூட கீர்த்திதான். அன்று சாப்பாட்டு மேஜையில், எதார்த்தமாக அந்த பில்டிங் வேலை முடிந்துவிட்டதை அறிவித்து, விற்பனைக்கு அறிவிக்கப் போவதாக உரைக்கவே, அக்ஷயா, அந்த ஏரியா வளர்ந்து வருவதாக உரைத்திருந்ததை நினைவு கூர்ந்தாள்.

கூடவே.., ஒரு கடை வாடகைக்கு விட்டாலே நாம உக்காந்து சாப்பிடலாம் என உரைத்ததும் நினைவிற்கு வர, அதை தாங்களே வைத்திருந்து, வாடகைக்கு மட்டும் விட்டால் என்னவென்று அவரிடம் யோசனை கேட்டாள்.

அவள் மனதில் ஓடும் எண்ணத்துக்கே உருவம் கொடுக்க முனைபவர், அவள் வாய்விட்டு கேட்டாலா ஒத்துக் கொள்ளாமல் போவார்? அந்த கடையையே மகளது பெயருக்கு மாற்றியவர், அதன் வருமானமும் அவளுக்கு நிரந்தரமாக செல்லும் விதத்திலும் மாற்றினார்.

கடையை வாடகைக்கு எடுப்பவர்கள் பூஜை போடுவார்கள் என்றாலும், கடையின் உரிமையாளராக சிறிய அளவில் அதை நடத்த விரும்பினார். அதையும் மகளது கையால் திறக்கச் செய்ய பேராவல் கொண்டிருந்தார்.

பெரிய விஐபி என யாரையும் அழைக்கவில்லை, மாறாக, தன்னிடம் வேலை செய்பவர்கள், அந்த கட்டிடத்தை கட்ட உதவியாக இருந்த அனைவருக்கும் ஒரு வேளை உணவு கொடுப்பதாக ஏற்பாடு.

அங்கே செல்வதில் கீர்த்திக்கு விருப்பமில்லை என்றாலும், “சும்மா ரிப்பன் கட் பண்ணிட்டு நீ வீட்டுக்கு வந்துடும்மா..” தந்தை கெஞ்சுகையில் அவளால் மறுக்க முடியவில்லை.

முன்பாக இருந்திருந்தால் நிச்சயம் மறுத்திருப்பாள்.., ஆனால்.., இப்பொழுது இருப்பவள் புது கீர்த்தி ஆயிற்றே.

கூடவே.., ‘ஒரு வேளை அவனை பார்க்க முடிந்தால்?’ அவளை மீறி யோசனை ஓட சம்மதித்திருந்தாள்.

அன்று காலையிலேயே அனைத்தும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்க, காலை பத்து மணிக்கு அங்கே சென்றாள் கீர்த்தி. அவள் கையால் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கு ஏற்றி என அடுத்த நிகழ்வுகள் அரங்கேற, சற்று ஒதுங்கிக் கொண்டாள்.

சற்று நேரம் பொறுத்தவள், கடையை சுற்றிப் பார்க்கவென கிளம்ப, வாசனும் அவளுடனே சென்றான். இது தந்தையின் ஏற்பாடாகத்தான் இருக்கும் என்பதால், அவள் எதுவும் சொல்லவில்லை.

“அக்கா.., கடை ரொம்ப நல்லா இருக்குல்ல..” வழக்கமான அவனது பாணியில் கத்தி கேட்க, அங்கே இருந்த பலர் அவர்களைத் திரும்பிப் பார்த்தார்கள்.

சட்டென குறுகிப் போனாள். மற்றவர் பார்வைக்கு தான் காட்சிப் பொருளாகும் உணர்வு. ஏற்கனவே அங்கே இருந்த அனேகம் பேருக்கு தெரியும் போல.., அவளையே குறுகுறுவென பார்ப்பதிலேயே அது புரிந்திருக்க, நாசூக்காக நகர்ந்திருந்தாள். ஆனால் இது...

ஏனோ அந்த இடமே தனக்கு அந்நியமாகிப்போன உணர்வு. ‘என்னை இரக்கத்தோடு பாக்காதீங்களேன்.., இயல்பாக, உங்களோடு ஒருத்தியாக இணைத்துக் கொள்ளுங்களேன்..’ வாய்விட்டு கத்த வேண்டும்போல் இருந்தது.

அத்தனை பேருக்கு முன்னால், கண்கள் கலங்கி, அதுவேறு இம்சிக்கக் கூடாதே.., இமைகளை படபடவென கொட்டி, தன்னை நிலைப்படுத்த போராடினாள்.

வாசனை பிடித்து கன்னம் கன்னமாக அறைந்துவிடும் வேகம்.., எப்படி கட்டுப்படுத்தினாள் என்றே தெரியவில்லை.

“என்னக்கா.., நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலை...” விருட்டென அங்கிருந்து அவள் நகர்ந்து பின்னால் செல்ல, அவளுக்கு பின்னால் ஓடியவன், கேட்டவாறே விரைந்தான். குரல் இன்னும் இறங்கியிருக்கவில்லை.

“நீ போ வாசன்.., நான் பின்னாடி போய் பாத்துட்டு வர்றேன்..” சட்டமாக நின்று, அழுத்தி சின்னக் குரலில் உரைக்க, அவள் முகத்தில் தெரிந்த பாவனையில் திடுக்கிட்டு போனான்.

“அக்கா.., அழறியா...?” ஏனோ இதை மட்டும் குரல் தாழ்த்திக் கேட்டவன், பதட்டமாக சுற்றிலும் நோக்கினான்.

அந்த நேரத்திலும் ஒரு ஆறுதல்.., ‘இதையாவது மெதுவா கேட்டானே..’.

“நான் பாத்துக்கறேன்.., நீ வந்தவங்களை கவனி..” நீ போய்தான் ஆக வேண்டும் என்ற கட்டளை அதில் ஒளிந்திருக்க, சட்டென திரும்பிவிட்டான். ஆனாலும்.., பரிதாபமாக அவன் திரும்பித் திரும்பி பார்த்துச் செல்ல, ஏனோ அழுகை முட்டியது.

இத்தனை நாள் இருந்த இதம் அனைத்தும் தொலைந்து போயிருக்க, தனிமை வேண்டும்.., மனம் வெகுவாய் காயப்பட்டுப் போனது.

பின்னால் இருந்த சிறிய கதவு சாத்தப் பட்டிருக்க, வேகமாகச் சென்றவள், அதைத் திறந்து, தன் முதுகின் பின்னால் சாத்தியவள், மனதின் பாரம் தாளாமல் பொத்தென அந்த படிகளிலேயே அமர்ந்துவிட்டாள்.

ஒரு மாதிரி நெஞ்சு விம்மித் தணிய, அழுதுவிடக் கூடாது என தன்னை அவள் அடக்கப் போராடினாள். இமைகளை கொட்டி, வேகமாக மூச்சிழுத்து, ஒருவாறாக தன்னை அடக்கப் போராடியவளது பார்வை, தன் எதிரே நிறுத்தியிருந்த ஆட்டோவில் பாய, அதன் கண்ணாடியில் தெரிந்தது அவன் முகம்.

கடந்த சில மாதங்களாக எதைத் தேடுகிறோம் எனத் தெரியாமலே தேடிய முகம், அதுவும் கொஞ்சம் கூட அழியாமல் மனத்திரையில் மின்னி மறையும் முகம்.., தன் உணர்வுகள் மீறி அவனைப் பார்த்தாள்.

கண்ணாடியில் தெரியும் பிம்பத்தை விடுத்து, அவன் எங்கே என கண்கள் தேட, கடையின் காம்பவுண்ட் சுவருக்கு அருகே, அவன் மற்றவனோடு எதையோ உரையாடுவது தெரிந்தது.

நேரில் பார்ப்பதை விட, கண்ணாடியில் பிம்பம் இன்னும் தெளிவாகத் தெரிய, அவர்கள் பேச்சை தன்னை மீறி மொழி பெயர்த்தாள்.

“அண்ணே.., அண்ணே.., சாப்பாடு போடுறாங்கண்ணே.., நம்மளை மாதிரி ஆட்கள் தான் சாப்பிடுறாங்க.., வாங்கண்ணே நாமளும் சாப்பட்டு போய்டலாம்..” மற்றவனது பார்வை ஆசையும் ஏக்கமுமாக, அவனுக்குப் பின்னால் படிந்து மீண்டது.

“டேய் கிருஷ்ணா.., என்கிட்டே அடிதான் வாங்கப் போற.., வந்தமா.., கேனை போட்டமான்னு போயிட்டே இருக்கணும். தேவையில்லாத இடத்தில் எல்லாம் மூக்கை நுழைக்கக் கூடாது..” கண்டிக்கும் முகபாவம் அவனிடம்.

“போண்ணே.., அவங்கதான் சாப்பிட்டு போங்கன்னு சொன்னாங்களே..” முறுக்கிக் கொண்டான். இது சாப்பாட்டுக்கான தேடல் என்பதை விட, நீண்டநாள் வீட்டை பிரிந்து, ஏதோ பசிக்கு உண்டு, கிடைத்த இடத்தில் முடங்கிக் கிடப்பவர்களுக்கு மட்டுமே புரியும் உணர்வு.

அது அன்புவுக்கும் புரியத்தான் செய்கிறது.., அதற்காக, பார்த்த இடத்தில் அழைத்து உணவு கொடுப்பதை அவ்வளவு எதார்த்தமாக அவனால் ஏற்றுகொள்ள முடியவில்லை.

பிச்சை என்பதற்கும் அதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்பதே அவனது எண்ணம். இதுவே.., அன்னதானம் போடுகிறோம் என்றால் முதல் ஆளாக அவனும் நின்றிருப்பான்.., ஆனால் இது..

“கிருஷ்ணா.., உனக்கு சாப்பாடு தானே வேணும்.., நான் வாங்கித் தர்றேன்.., முதல்ல இங்கே இருந்து கிளம்பு. அண்ணாச்சி வேற தேடிட்டு இருப்பார்..” உரைத்தவன் ஆட்டோவை நோக்கி விரைய, ஏனோ அவனது அந்த தன்மானம் அவளுக்குப் பிடித்தது.

அவன் உரைக்காத வார்த்தைகளைக் கூட அவளால் எப்படி மொழிபெயர்க்க முடிகிறது என்பது அவளுக்கே புரியாத ஒன்று.

“அண்ணே.., ஹோட்டல்ல சாப்பிடுறதும் இதுவும் ஒண்ணா..?” அவன் அங்கிருந்து நகரவே இல்லை.

அவன் அருகில் சென்றவன், அவன் தோளில் கை போட்டு, “ரெண்டும் ஒண்ணு இல்லன்னு எனக்கும் தெரியும்டா. முதல்ல ஒரு விஷயத்தை நீ புரிஞ்சுக்கணும், நம்மளோட இடம் என்ன.., தகுதி என்ன, குறை என்ன எல்லாத்தையும் நாம ஏத்துகிட்டாதான்.., மத்தவங்க முன்னாடி சரியா இருக்க முடியும்.

“ஐயோ.., இப்படி இருக்குறோமே என யோசிக்கிறதை விட, இதை எப்படி சரி பண்ணலாம்னு தான் யோசிக்கணும். அண்ணாச்சி கூட அதைத்தான் சொல்றார். இன்னைக்கு உன்னை கூப்பிடுறவங்க.., நேத்தைக்கு கடைக்கு வந்து தண்ணி கேன் வேணும்னு கேட்டப்போ.., ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே..” அவனிடம் உரைத்துவிட்டு நடந்துவிட்டான்.

அவன் சொன்ன சில வார்த்தைகள், அவளுக்கே சொல்லப் பட்டதாக, மனதுக்கு இதமாக இருந்தது.

வேகமாக ஆட்டோவை நோக்கி வந்தவன், அப்பொழுதுதான் அவளைப் பார்த்தான்.

‘இவங்களை எங்கேயோ பாத்திருக்கோமே..’ அவன் புருவம் சற்று நெரிய, அவன் முகத்திலேயே கவனமாக இருந்தவளது மனம் நொடியில் வாடியது.

‘இவனுக்கு என்னை அடையாளமே தெரியலையா..?’ அவள் கேள்வியோடு அவனை ஏறிட, அவளது உடையும், அலங்காரமும், அந்த இடத்தில் இருந்த கூட்டத்திலேயே அவள் தனித்து தெரிந்த விதமும், அவளுக்கும் அந்த கட்டிடத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது என்பதை நொடியில் உணர்ந்து கொண்டான்.

கூடவே.., அவள் படியில் இருந்து எழ சற்று தடுமாற, அந்த நொடி அவளை இனம் கண்டு கொண்டான். ‘அட.., நம்ம காந்தாரி..’ மனதுக்குள் எண்ணியவன், இதழசைவில் அதை முனகியிருந்தான்.

அதை உணர்ந்தவளுக்கு அப்படி ஒரு ஆனந்தம்.., சின்னப் பிள்ளையில், எனக்கு மட்டும் ஏன் செல்லப் பெயர் இல்லை.., என ஏங்கியிருக்கிறாள். அந்த ஏக்கம் அவனது அழைப்பில் ஈடுசெய்யப் படுவதாக அவளுக்குத் தோன்றியது.

அந்த காந்தாரியை அவன் எந்த அர்த்தத்தில் உரைக்கிறான் எனத் தெரிந்திருந்தால் எப்படி ரியாக்ட் செய்வாளோ.., அது வேறு விஷயம்.

‘ஆண்டவா.., இவ்வளவு நேரம் அங்கே பேசியதை வைத்து என்ன நினைச்சாங்கன்னு தெரியலையே..’ வேகமாக எண்ணமிட்டவன், அவள் அருகில் சென்றான்.

அவள் எழுந்து நிற்க, “கேன் போடத்தான் வந்தோம்.., போட்டுட்டோம்..., மத்தபடி எதுவும் இல்லங்க..” அவள் பார்வையில் சிறு கோபத்தை உணர்ந்தவன்,

“என்னங்க.., சத்தியமா உங்களை ஃபாலோ எல்லாம் பண்ணல.., நீங்க வேண்ணா இவன் கிட்டே கேட்டுப் பாருங்க..” அப்பொழுது தன் அருகில் வந்த கிருஷ்ணாவை காட்டினான்.

“அண்ணே.., இது யாருண்ணே.., உங்க ப்ரண்டா..?” ஒருவேளை இருக்கும் என்பதே அவன் குரலில் வெளிப்பட்டது. அவன் குரலை உணரவில்லை என்றாலும், அவன் முகத்தில் இருந்த பாவனை அவன் உணர்வை அவளுக்கு உணர்த்தியது.

“எரும.., கடையோட ஓனர்டா..” அப்பொழுதுதான் அவன் அதிகம் குடைய மாட்டான் என்பதால், அடிக்குரலில் சாடினான்.

“ஓனர் எல்லாம் ப்ரண்டு புடிச்சு வச்சிருக்கீங்க..” அவன் அதற்கும் பேச,

“நாயே.., இன்னொரு வார்த்த பேசுன..” அவன் காதுக்கருகில் சென்று அழுத்தி உரைக்க, கப்பென வாயை மூடிக் கொண்டான்.

அவர்கள் பேசியதில் இருந்து மற்றவனது பெயர் கிருஷ்ணா என்பது அவளுக்குப் புரிந்தது. இவன் பெயர் என்னவாக இருக்கும்..? உள்ளுக்குள் ஒரு குறுகுறுப்பு, அதைவிட, ‘சத்தியமா உங்களை ஃபாலோ பண்ணலைங்க..’ என்ற அவனது கெஞ்சல், சிறு சிரிப்பை விதைத்தது.

அதை மறைத்தவள், “உன் பேரென்ன..?” அவனிடமே நேரடியாக கேட்டாள்.

“என்னண்ணே.., ப்ரண்டுன்னு சொன்னீங்க.., உங்க பேரே அவங்களுக்குத் தெரியலை..” அவன் கட்டளையை மீறி வாய் திறந்தவன், அவன் கண்களில் தெரிந்த கனலில் இரண்டடி பின் வாங்கினான்.

‘நான் எப்போடா அப்படிச் சொன்னேன்..?’ மனதுக்குள் புலம்பியவன், ‘இதுக்கு என்ன சொல்லப் போறாங்களோ..?’ வேகமாக அவள் முகம் பார்த்தான்.

இன்னும் அவள் தன் பதிலுக்காக காத்திருப்பது புரிய, “அண்ணா பேரு லவ்வுங்க..” கிருஷ்ணா இடையிட, “ஹாங்..” அவள் திகைத்து நோக்க,

“ஐயோ இல்லங்க.., அன்பு.., அன்புச்செல்வன். ஏண்டா நாயே.., பேர் கேட்டால் இப்படித்தான் சொல்வாங்களா..?” அவனை அடிக்கப் பாய.., அவனோ ஒரே ஓட்டமாக ஓடிப் போயிருந்தான்.

இப்பொழுது திகைப்பை நிறுத்தி, ‘அன்பு..’ ஒரு முறை மனதுக்குள் சொல்லிப் பார்த்தவளுக்கு, அந்த பெயர் அவனுக்கு பொருத்தமாகவே பட்டது.

“நீங்க தமிழ்ல்ல சொன்னீங்க.., நான் இங்கிலீஷ்ல சொன்னேன்.., ரெண்டும் ஒண்ணு தானே..” அவன் ஓடியவாறே சொன்னது அவளுக்கு கேக்கவில்லை. மாறாக.., “உன் இங்கிலீஷை பிடிச்சு கொளுத்துறேன் இரு..” இவனது கமெண்ட் மட்டும் புரிய, அவன் என்ன சொல்லியிருப்பான் என்பதை யூகித்தவள், வாய்விட்டே சிரித்தாள்.

அவள் முகத்தில் சிரிப்பை பார்த்த பிறகுதான் சற்று ரிலாக்ஸ் ஆனான். அதே நேரம், “கீர்த்தி.., கீர்த்தி..” என்ற குரலும், வாசனின் “அக்கா..” என்ற கூக்குரலும் அவனை எட்ட, ‘இவங்களையா தேடுகிறார்கள்..?’ யோசனையோடு அவளைப் பார்த்திருந்தான்.

கூடவே.., ‘அவங்க கூப்பிடுறது இவங்களுக்கு கேக்கலையா.., இல்ல, கேக்காத மாதிரி இருக்காங்களா?’ முதல் நாள் கூட, தான் அழைத்த குரலுக்கு அவள் தன்னைப் பாராததும், வண்டியின் ஹாரன் ஒலிக்கு கூட அசையாததும் நினைவிற்கு வர, ‘ஒரு வேளை..’ தன் யோசனையே பிடிக்காமல் பாதியில் நிறுத்தியிருந்தான்.

“உங்க பேர் கீர்த்தியா..?” அவன் கேட்க, ஆச்சரியத்தில் அவள் விழி விரிக்க, தான் யோசிக்கவே பிடிக்காத உண்மையை உணர்ந்துகொண்டான் அன்பு. அப்பொழுது அருகில் ஏதோ மரம் விழும் ஓசை கேட்க, அவன் சட்டென அந்த திக்கில் பார்க்க, சலனமே இல்லாமல் இருந்த கீர்த்தியின் முகம் அதை உறுதிபடுத்தியது.

*****

# பகுதி – 5.

தன் பெயர் சொல்லி அவன் கேட்க, ‘உனக்கு எப்படித் தெரியும்..?’ என்ற யோசனையும், சிறு சந்தேகமுமாக அவனை ஏறிட, ‘இப்பொழுது அங்கே மற்றவர்கள் அழைப்பதை சொல்லவா? வேண்டாமா?’ என்பதுபோல் பார்த்திருந்தான்.

அதே நேரம்.., “அக்கா.., நீ இங்கேயா இருக்க? உன்னை எவ்வளவு நேரமா தேடறோம்? சொல்லிட்டு வர மாட்டியா?” வேகமாக ஓடி அவள் அருகில் வந்த வாசன், சிறு தவிப்பும், அவளைப் பார்த்த நிம்மதியும் ஒருங்கே பெற்றவனாய் அவள் அருகில் நெருங்கினான்.

கூடவே.., “அப்பா..” அவன் அழைக்கப் போக, வேகமாக அவன் வாயை அடைத்தவள், “ம்ச்.., நானே வர்றேன்.., சத்தம் போட்டு ஊரைக் கூட்டாதே..” சிறு எரிச்சலாக மொழிந்தாள்.

“என்னக்கா நீ.., அங்கே..” உரக்கவே பேசியவன் மேலே என்ன சொல்லியிருப்பானோ? கசங்கிய அவள் முகம் அன்பு இருந்த திக்கைப் பார்க்க, தன் பார்வையை அப்பொழுதுதான் அருகே செலுத்தினான்.

அவ்வளவு நேரமாக அவளைத் தேடியதால், அவளைக் கண்டவுடன் வேறு எதுவும் அவன் கண்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இப்பொழுது கீர்த்தியின் பார்வை சென்ற இடத்தைப் பார்த்தவன், “ஹலோ.., நீங்க யார்? இங்கே என்ன பண்றீங்க..?” ஒரு ஆண்மகனாக அக்காவின் பாதுகாப்பு முதன்மையாகப் பட, அன்புவை விசாரித்தான்.

அன்புவோ.., நொடிகளுக்குள் கீர்த்தயின் முகத்தில் வந்துபோன மாறுதல்களைப் படித்தவன், சாதாரணமாகக் கூட அவளை ஏறிடவில்லை.

“தண்ணி கேன் போட வந்தோம்.., இதோ கிளம்பிட்டோம்..” ஏற்கனவே கிருஷ்ணா வண்டியில் ஏறியிருக்க,

விடைபெறும் நோக்கில் கூட அவள் முகம் நோக்கவில்லை.

வாசனுக்கு அது நிம்மதியை அளிக்க, கீர்த்திக்கோ.., அவனது பாராமுகம் ஒரு பக்கம் வதைத்தது. ‘எனக்கு இப்படின்னு அவனுக்கும் தெரிந்து விட்டதோ? அதனால் தான் இப்படிப் போகிறானா?’ கண்கள் கலங்கும்போல் இருந்தது.

‘நான் இங்கே வந்திருக்கவே கூடாது..’ மனதுக்குள் அவள் எண்ணமிட, “அம்மாவும் அப்பாவும் உன்னை காணோம்னு தவிச்சு போய் நிக்கறாங்க, வாக்கா..” அவளை அழைத்தவன், அவள் பின்னால் இருந்த கதவைப் பார்த்துவிட்டு, அவள் வந்த வழியை யூகித்தவனாய், அதன் வழியாகவே அவளை அழைத்துச் சென்றான்.

பெற்றவர்களின் அருகில் சென்றவள், “நான் வீட்டுக்கு கிளம்பறேன்..” அதற்குமேல் எதையும் அவர்கள் கேட்கவில்லை.

சாந்தியும் அவள் உடன் செல்ல விரும்ப, டிரைவரை அழைத்து அவர்களை அனுப்பி வைத்தார். காருக்குள் சிறு அமைதி நிலவ, காலையில் மகள் இருந்த மன நிலைக்கும், இப்பொழுது அவள் இருக்கும் மனநிலைக்கும் இருக்கும் வித்தியாசம் உணர்ந்தவராக, மகளிடம் என்னவென்று கேட்க முயன்றார்.

மகள் தனது மெஷினை எடுத்து வராதது அவருக்குப் புரிய, உரக்கப் பேசும் மனமின்றி, அதுவும் டிரைவர் இருக்கையில் அது சுத்தமாக முடியாது எனப் புரிய அமைதியாகவே அமர்ந்து கொண்டார்.

அதைவிட, மகளிடம் உரக்கப் பேசுவது அவளுக்கு பிடிக்காது என்பது அவருக்குத் தெரியுமே. ஆனாலும், அவளை அப்படியே விட மனமின்றி, அவள் கரத்தை மெதுவாக பற்ற, சில வருடங்களுக்குப் பிறகு, தாயின் மடி தேடினாள் பாவை.

அதுவே, ஏதோ பெரிதாக மகள் காயப்பட்டிருக்கிறாள் என்பதை உணர்த்த, அவளை தன் வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

கீர்த்திக்கோ.., அழுகை கட்டுக்கடங்காமல் பெருகியது. முதல் சந்திப்பில் தன்னை சக மனுஷியாக எண்ணி உரையாடியவன், ஏற்றுக் கொண்டவன், அடுத்த சந்திப்பில், 'காந்தாரி..' என பெயர் வைத்தவன், இப்பொழுதும் இயல்பாகவே அடையாளம் கண்டு கொண்டவன், தன் நிலையை அறிந்த விதம்..

அதைவிட, ஒரு பார்வைக்கு கூட பஞ்சமாக, அவன் விலகிய செய்கை, ஏற்க மனம் முரண்டியது. அந்த நேரம் அவன் அதைச் செய்திருந்தால், வாசன் என்ன நினைத்திருப்பான் என்பது எல்லாம் அவளுக்குத் தோன்றவே இல்லை.

ஆனால்.., அது அன்புவுக்குத் தெரிந்ததாலேயே, தான் ஒரு வேலைக்காக அங்கே வந்தேன்.., முடித்துவிட்டேன்.., செல்கிறேன்.., வேறு எதுவும் இல்லை என முழுதாக ஒதுங்கிப் போனான். அவன் பக்கம் இருந்து பார்த்தால் அதுதான் சரி, நியாயம். இதை யார் அவளுக்குச் சொல்வது.

அவனுக்குத் தெரியாத ஒன்று என்னவென்றால், அந்த நேரம் கீர்த்தி, 'இவர் அன்பு.., எனக்குத் தெரிந்தவர்..' என வாசனிடம் உரைத்திருந்தால், எப்படி? யார்? என்ற எந்த கேள்வியும் கேட்காமல் அவன் ஏற்றுக் கொண்டிருப்பான்.

ஏனென்றால், அவனுக்கு அப்படித்தான் பழக்கப் பட்டிருந்தது. அக்காவுக்குப் பிறகுதான் நீ.., அவளுக்கு என்ன செய்யவும், பேசவும் இங்கே முழு அதிகாரம் உண்டு. அதை நீ கேள்வி கேட்க கூடாது என்பது அவன் குழந்தையாக இருந்த பொழுதே அவனுக்கு புகட்டப்பட்ட பாடம்.

அது கீர்த்திக்குத் தெரியும்.., அன்புக்கு எப்படித் தெரியும். எனவேதான் அவன் ஒதுங்கிச் சென்றான் என்பது அவளுக்கு எப்படி, யார் சொல்லி புரிய வைக்க?

தன் அழுகையை முயன்று கட்டுப் படுத்தியவள், அசைவே இல்லாமல் படுத்துக் கொண்டாள். வீட்டுக்குச் சென்றவுடன், தன் அறையில் முடங்கிக் கொள்ள, அவளுக்கான உணவை எடுத்துக் கொண்டு மாடியேரினார் சாந்தி.

கீர்த்தியோ.., உடையைக் கூட மாற்றாமல் படுக்கையில் குப்புற விழுந்து கிடக்க, தட்டை அங்கே இருந்த டீபாயில் வைத்தவர், அவளது ஹியரிங் மெஷினை அவள் காதில் பொருத்தினார்.

“கீர்த்தி.., என்ன ஆச்சு? அங்கே யாராவது ஏதாவது சொன்னாங்களா? அம்மாகிட்டே சொல்லும்மா.., ஏன் இப்படி கஷ்டப்படுற? இந்த அம்மாவால் இதையெல்லாம் தாங்க சக்தி இப்போ இல்ல. கொஞ்ச நாளா நல்லா ஆயிட்டு வரன்னு சந்தோஷப் பட்டேனே.., இப்போ மறுபடியும்..” அவர் குரல் கலங்க, வேகமாக படுக்கையில் எழுந்து அமர்ந்தாள்.

“எனக்கு மட்டும் ஏம்மா இப்படி..?” நீண்ட காலங்களுக்குப் பிறகான அவளது அதே கேள்வி அவரை பலமாகத் தாக்க, என்னவென்று சொல்வார்?

‘இத்தனை காலங்கள் கடந்து இப்பொழுது மட்டும் ஏன்..?’ வாயிலிருந்து உதிரத் துடித்த கேள்வியை தனக்குள்ளாக சட்டென புதைத்தார்.

“என் ராஜாத்திக்கு என்ன குறை..? எதையும் மனசுக்குள் போட்டு குழப்பிக்காதே கீர்த்திம்மா.., உனக்கு நாங்க இருக்கோம்..” மகளை தோள் சாய்த்துக் கொண்டார்.

அவளைத் தாங்கும் இந்த செய்கை.., ஏனோ ஏற்க முடியாமல் தவித்துப் போனாள்.

‘எனக்கு ஸ்பெஷல் கேர் வேண்டாம்.., சாதாரணமாக நடத்துங்களேன்..’ எண்ணுகையிலேயே அன்புவின் முகம் தெரிய, ‘ஐயோ.., எனக்குள் என்ன நடக்கிறது..?’ பரிதவித்தாள்.

ஊமை கண்ட கனவு போல்.., எவனோ ஒருவன் செய்த செய்கைக்காக.., அது தனக்கு நிரந்தரமில்லை எனத் தெரிந்தும், அதுதான் வேண்டும் என மனம் அடம் பிடிப்பதை அவள் என்ன செய்ய?

தாயிடம் கூட உரைக்க முடியாத விஷயம்.., அதைவிட, தன் மன அழுத்தங்களை, எண்ணங்களை.., இதுவரைக்கும் தானே சுமந்தவளுக்கு, முதல் முறையாக இறக்கி வைக்க ஒரு தோள் வேண்டும்போல், ஆதரவாக சாய ஒரு இளைப்பாறுதல் வேண்டும்போல்.., இதை எப்படி இவர்களுக்கு வெளிப்படுத்த?

மனம் முழுவதும் பரிதவிப்பு மட்டுமே. அவள் மனதின் தவிப்புக்கு ஏற்ப, தாயை இறுக கட்டிக் கொண்டாள். அவளது செய்கையில், இன்னும் தவித்துப் போனார் சாந்தி.

‘அவள் மனதில் இருப்பதை கொட்ட முடியாத அளவுக்கு என்னவாக இருக்கும்?’ அவள் முதுகை வருடியவாறு அசையாமல் அமர்ந்திருந்தார்.

எவ்வளவு நேரமோ தெரியாது.., அவள் தன் தோளிலேயே துவண்டு விட்டது புரிய, அவளை படுக்கையில் விட்டவர், அவள் அலைபேசியை எங்கே எனத் தேடி எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

அதிகமான மன அழுத்தத்துக்கு ஆளானால், சட்டென உறங்கி விடுவது கீர்த்தியின் வழக்கம். எனவே எப்படியும் ஒரு மணி நேரத்துக்கு எழும்ப மாட்டாள் என்பதால் அங்கிருந்து வெளியேறினார்.

‘இதில் ஏதாவது இருக்குமா..?’ எண்ணமிட்டவர் அதைத் துழாவ, வீட்டில் இருப்பவர்களின் எண்ணைத் தவிர, டாக்டர் சந்திரன், பவி இருவரது எண் மட்டுமே இருக்க சோர்ந்து போனார்.

சட்டென யோசனை மின்ன, வேகமாக டாக்டர் சந்திரனுக்கு அழைக்க, அவர் அழைப்பை ஏற்பாரா இல்லையா என்பது

அப்பொழுதுதான் யோசனையாக இருந்தது.

அவளது அழைப்பை கட் செய்தவர், “சொல்லும்மா..” ஒரு குறுந்தகவல் வந்து விழ, அதை அப்படியே விட்டவர், வேகமாக கீழிறங்கி தன் அலைபேசியில் இருந்து அவருக்கு அழைத்தார்.

அடுத்த இரண்டுமணி நேரங்களில் அவர் அங்கே இருக்க, வீட்டில் இருந்த அனைவரின் முகங்களிலும் அப்பிக் கிடந்த கவலையைப் பார்த்தவர், “உங்களுக்கெல்லாம் எவ்வளவு சொன்னாலும் தெரியாதா? நீங்க இயல்பா இருந்தால் தான், அவ அப்படி இருப்பா.

“உங்ககிட்டே எல்லாம் சொல்லி சொல்லி அலுத்து போயிட்டேன். டேய்.., நீயும் ஏண்டா இப்படி இருக்க? இவங்கதான் ஒரு ஜெனரேஷன் முன்னாடி உள்ளவங்க, நீ இந்த காலத்து பையன் தானே.., உனக்கு கூடவா தெரியாது..” வந்த வேகத்தில் அவர்களைச் சாடியவர், அவர்களிடம் மேலே எதையும் பேசாமல், கீர்த்தியின் அறைக்கு விரைந்தார்.

ஏற்கனவே அவளது அலைபேசியில், நான் உன் வீட்டுக்கு வருகிறேன் என அவர் செய்து அனுப்பி, அவள் சரி என பதில் அனுப்பியதால், அவள் தனக்காக தயாராக காத்திருப்பாள் என்பதால், திறந்திருந்த கதவின் வழியே உள்ளே நுழைந்தார்.

வழக்கமாக அவள் அமரும் பால்க்கனியிலேயே அவள் தெரிய, அவளுக்கு முன்பாக நின்றவர், “என்ன குட்டிப் பொண்ணே.., எல்லோரையும் பயம் காட்டுறதை இன்னும் நீ நிறுத்தலையா..?” கேட்டவர் அவள் எதிரில் அமர்ந்தார்.

“அங்கிள்.., நீங்க இந்த குட்டிப் பொண்ணை விடவே மாட்டீங்களா? நான் இப்போ வளந்துட்டேன்..” மெல்லியதாக சிணுங்க,

“எனக்கு அப்படித் தெரியலையே..” சொன்னவர் அவளையே ஆராயும் பார்வை பார்த்திருந்தார்.

“என்ன.., எங்க அம்மாவோட வேலையா..? ஐ’ம் ஆல்ரைட் அங்கிள்.., நீங்க போயிட்டு வாங்க..” ஏனோ இந்த வார்த்தைகள் இலகுவாக வெளிவந்திருந்தால் அவர் நம்பியிருப்பார். இறுக்கமாக வெளிவருகையில் அவர் எப்படி நம்புவதாம்?

“ஆல்ரைட்ன்னு உதடுதான் சொல்லுது.., ஆனா..” தான் ஒரு மருத்துவர் என்பதை நிரூபித்தார்.

டாக்டர் சந்திரன்.., குழந்தை முதல் அவளை பார்த்து வருபவர், அதிலும் விபத்துக்குப் பிறகு, அவளுக்கான பெஸ்ட் கைட் என்றால் அது அவர்தான்.

அவரும் எவ்வளவோ அவளது தாழ்வு மனப்பான்மையில் இருந்து மீண்டு வர போராடி விட்டார். ஆனால், மருத்துவரிடமும் உண்மையைச் சொன்னால் தானே அவரால் முழுதாக சிகிச்சை அளிக்க முடியும்.

ஒரு அளவுக்கு மேல் அவராலும் எதுவும் செய்ய முடியாமல்தான் போயிற்று.

அவர் அவளையே ஆராய, “அங்கிள்.., எதுக்கு இப்படி என்னையவே பாத்துட்டு இருக்கீங்க?” சற்று கோபமாகவே இரைந்தாள்.

அவள் கோபத்தைப் பார்த்தவர், “உன்னோட இந்த கோபத்துக்கு மத்தவங்க வேண்ணா பயப்படலாம், நான் இல்லை..” அவர் உரைக்க, அவரது அந்த நிதானம் கூட அன்புவைத்தான் நினைவு படுத்தியது.

தன் கோபத்திலும், நிதானமாக அவன் பேசிய விதம், மன்னிப்பு கேட்டது, தண்ணீர் கொடுக்க முன் வந்தது.., ஒவ்வொன்றாக கண்முன் விரிய, அவள் முகம் சற்று இளகித்தான் போயிற்று.

“யார்ம்மா அது..?” திடுமென அவர் கேட்க, முழுதாக திடுக்கிட்டவள், “எ..எ..எது..?” அது அவள் வார்த்தையிலும் தெரிந்தது.

அவரோ வெகு நிதானமாக.., “அதான்.., இப்போ உனக்கு ஒரு குட்டி ப்ரண்ட் இருக்கான்னு உன் அப்பா சொன்னார். அவளோட பார்க்கில் எல்லாம் விளையாடுறியாம்.., இப்போ கொஞ்சம் வெளியே எல்லாம் போறன்னு வேற கேள்விப்பட்டேன்..” தன் கண்ணாடியை நிதானமாக கழட்டி, அதைத் திருப்பி வைத்து, கண்ணாடியில் வாயைக் குவித்து ஊதியவர், தன் கைக்குட்டையால் நிதானமாகத் துடைத்துவிட்டு அணிந்து கொண்டார்.

அவள் முகத்தில் அப்பொழுதுதான் பெரிதாக ஒரு விடுதலை உணர்வு தோன்ற, பவியைப் பற்றி அவள் விவரிக்க, அவள் முகத்தைப் பார்த்து அகத்தைப் படித்தவராக, எதுவும் அறியாதவர்போல் காட்டிக் கொண்டார்.

“பவியை எப்படிம்மா பாத்த.., அதாவது எங்கே வச்சு பாத்த..? அவங்களை எப்படித் தெரியும்..?” விஷயத்தை அவர் போட்டு வாங்கத் துவங்க, சட்டென சுதாரித்தாள்.

“அதான்.., அன்னைக்கு கோபமா வீட்டை விட்டு கிளம்பி போனப்போ..” நடுவில் நடந்த விஷயங்களை உரைக்காமல், “பார்க்ல பார்த்தேன்..” மெல்லியதாக அவள் முடிக்கையில், வரிகளுக்குள் வழிந்த இடைவெளியை நிரப்ப முயன்றார் சந்திரன்.

‘அப்போ.., ரோட்டுக்கும்.., பார்க்குக்கும் நடுவில் ஏதோ நடந்திருக்கு..’ தன் சிந்தையை மறந்தும் முகத்தில் அவர் வெளிப்படுத்தவில்லை. அப்படி வெளிப்படுத்தினால் அவர் மருத்துவர் இல்லையே.

“சரி விடு.., இன்னைக்கு கடையில் வைத்து யார் என்ன சொன்னாங்க? திடீர்ன்னு ஏன் மூட்ஆப்..” அவர் விஷயத்தை

அப்படியே விட்டுவிட்டு, இன்றைய நிகழ்ச்சிக்குத் தாவ நிம்மதியாக உணர்ந்தாள்.

அவள் வார்த்தைகளைக் கோர்ப்பதில் அதிக கவனம் செலுத்துவதை உணர்ந்ததாலேயே அவ்வாறு செய்தார் என அவள் அறியவில்லை.

“என்னை யார் என்ன சொல்லப் போறாங்க..? எல்லாரும் பேம்பர் பண்ணியே ஒரு வழி ஆக்கறாங்களே..” படபடவென பொரிந்தவள், சட்டென அமைதியானாள்.

‘இவ வீட்டு ஆட்கள் தான்னா.., அது வழக்கமா இருக்குறது தானே. புதுசா..?’ அவரால் அதை இட்டு நிரப்பவே முடியவில்லை.

“அட.., அவங்களைப் பத்தி உனக்கு தெரியாததா? இன்னைக்கு மட்டும் என்ன என்பதுதான் என் கேள்வியே..” அவர் பார்வை அவளைத் துளைத்து அடி மனதை, அறிய முயல, வேகமாக தன் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

“அ..து.., என்னவோ.., அங்கே எல்லோரும் என்னையே பாக்குற மாதிரி ஒரு பீல்.., அதான்..” ஒரு மாதிரி திணறி உரைக்க, நிச்சயம் அவள் பொய் சொல்கிறாள் என்பதை வெகு சுலபமாக யூகித்தார்.

சற்று நேர அமைதிக்குப் பின், “என்கிட்டே கூட உண்மையை சொல்லக் கூடாதா கீர்த்தி..” அவர் கருணை பொங்க உரைக்க, சட்டென இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள்.

தன் ஹியரிங் மெஷினை கழட்டி வைக்க, அவளுக்கு முன்பாக வந்து நின்றவர், “உண்மையை எவ்வளவு நாள் மறைப்பாய் கீர்த்தி? உன் மனதிடம் கேள்.., உண்மை எப்பொழுதும் ஊமையாகி விடாது.. நான் பிறகு வந்து உன்னைப் பாக்கறேன்..” மென்மையாகவே உரைத்துச் சென்றார்.

அவர் வாசல் வரைக்கும் செல்ல, “அங்கிள்..” அவளது அழைப்பு அவரை திரும்பிப் பார்க்கச் செய்தது.

“அப்பாகிட்டே எதுவும் சொல்லாதீங்க..” அவள் தலையை குனிந்துகொண்டு உரைக்க,

அவள் தாடையைப் பிடித்து நிமிர்த்தியவர், “நீ என்கிட்டே என்ன சொன்ன..? நான் அவர்கிட்டே சொல்ல?” அவர் கேள்விக்கு அவளிடம் அசாத்திய அமைதி.

“சில விஷயங்களை காரணமே இல்லாமல் நாம நம்பணும் கீர்த்தி. அந்த நம்பிக்கை இல்லைன்னா.., ஒவ்வொரு நாளும் நமக்கு சுமைதான். பவி கூட விளையாடு.., பேசு.., இயல்பா இரு.., புரியுதா. உன் விருப்பத்துக்கு எதிரா இங்கே யாரும் கிடையாது” அவள் தலையை மென்மையாக வருடியவர் விரைந்தார்.

‘என் விருப்பமா..?’ அவளுக்கு விரக்தியாக இருந்தது.

தன்னை ஏறிட்டும் பார்க்காமல் விலகிச் சென்ற அன்பு கண்ணுக்குள் தெரிய, மனதுக்குள் ஒரு வலி. ‘இது ஏன் இப்படி..? என் மனம் அவ்வளவு பலகீனமாகவா இருக்கிறது? இல்லையென்றால், ஒரு சாதாரண பேச்சுக்கும் பார்வைக்கும் அவ்வளவு ஏங்கிப் போயா நான் இருக்கிறேன்?

‘அப்படிப் பார்த்தால்.., அக்ஷயா இப்பொழுது என்னிடம் உயிராகப் பழகுகிறாளே.., அவளிடம் தானே நான் உயிராக இருந்திருக்க வேண்டும். கூடவே பவி..’ ‘ஹோ..’வென இருந்தது.

‘அவன் கெட்டவனாகக் கூட இருக்கலாம்..’ ஒரு மனம் எடுத்துரைக்க,

‘இல்லை.., அன்பு அப்படி இல்லை. அவன் கண் பொய் பேசவில்லை..’ அவளது மனம் அடித்துப் பேச, இது என்ன உணர்வு என திண்டாடிப் போனாள்.

அதைவிட, மிகப்பெரும் பயம் அவளை ஆட்டிப் படைத்தது என்றால்.., அது.., என்னிடம் இயல்பாகப் பேசும் எந்த ஒரு ஆண்மகனையும் இப்படித்தான் எண்ணிவிடுவேனா.., என பயம் கிளர்ந்து மேலெழ, கால்கள் தள்ளாட, படுக்கையில் தொப்பென அமர்ந்தாள் கீர்த்தி.

*****

# பகுதி – 6.

தீர்த்திக்கு தன் எண்ணத்தை, பயத்தை உடனே தீர்த்துக் கொள்ளும் வேகம். இதுவரை, பள்ளியிலோ, கல்லூரியிலோ.., எந்த ஆண்மகனையும் அவள் நெருங்கியதும் இல்லை, நெருங்க விட்டதும் இல்லை.

கல்லூரியில் கூட, அவள் அழகை ரசித்த எந்த ஆண்மகனும், அவள் குறை உணர்ந்தோ என்னவோ.., அவளிடம் பொய்யாகக் கூட காதலை உரைத்தது இல்லை. அதைவிட, அனைவர் கண்களிலும், ஒரு பரிதாபம், கருணை, இவற்றையே கண்டிருக்கிறாள்.

‘இதற்கு ஒரு முடிவு தெரிந்தே ஆக வேண்டும்..’ இல்லையென்றால் அவள் தலையே வெடித்துவிடும்போல் இருந்தது.

அன்று ஒரு நாள் மட்டுமே பொறுமையாக இருந்தவள், அடுத்த நாள், அருகே இருந்த சூப்பர் மார்க்கெட் செல்ல, அங்கே இருந்த சேல்ஸ் மேன், அவளுக்கு என்ன வேண்டும், தேவை.., என கூடவே இருந்து கவனிக்க, அவன் தன்னை இயல்பாக நடத்துவது புரிய, மகிழ்ச்சியாக இருந்ததே தவிர, பெரிய மாற்றம் எதுவும் இல்லை.

தன் இயல்பை மீறி, ரோட்டு ஓரத்தில் இருந்த பானி பூரி கடையில் பானி பூரி வாங்கி சாப்பிட்டாள். டீ நகர், ரங்கநாதன் தெரு.., என கூட்டம் மிகுதியான இடங்கள், தன்னை யாரென்றே தெரியாத, இடங்களில் எல்லாம் சுற்றினாள்.

நடையில் வெகு நிதானம் இருக்கவே, அவளது குறை அங்கே யாருக்கும் தெரியவில்லை. ஹியரிங் மெஷின் அணியாததால்.., அவளால் கேட்க முடியாது என்ற உண்மையும் அங்கே யாருக்கும் தெரியாது.

அவள் அழகைக் கண்டு சில கல்லூரி மாணவர்கள் கூட பின்னால் சுற்றினார்கள், பேச முயன்றார்கள்.., அவர்களில் ஒருத்தியாக அவள் உணர்ந்த தருணங்கள் அவை.

ஆனால்.., அன்புவின் கண்களில் தெரிந்த உண்மை, அவன் பேச்சில் தெரிந்த கண்ணியம்.., அங்கே யாரிடமும் அவள் உணரவில்லை. அவள் அழகு பல விட்டில் பூச்சிகளை தன் பக்கம் இழுப்பதை உணர்ந்தவளுக்கு, சற்று அருவருப்பாக இருந்ததே தவிர, இளக்கமாக எதுவும் இல்லை.

மாபெரும் கடைகளில் அவள் சுற்றித் திரிகையில், “ஹாய்.., ஐ’ம் சோ அண்ட் சோ..” என வெகு சாதாரணமாக உரையாடத் துடித்த மேல்தட்டு வாலிபர்களிடம் கூட, அவளுக்கு சிறு ஈர்ப்போ சலனமோ ஏற்படவில்லை.

அவர்களது நவ நாகரீக உடையோ, வெண்ணெய் தேகமோ.., கோதுமை நிறமோ.., நுனி நாக்கு ஆங்கிலமோ.., எதுவும்.., எதுவும் அவளை, அவள் மனதை சிறிது கூட அசைக்கவில்லை.

தன் மனதை மீறி.., உரையாடிப் பார்ப்போமா என்கையில் கூட, தான் நடிக்கிறோம் என அவளுக்கே புரிந்து போனது.

பிளாட்ஃபாம் துவங்கி.., நாகரீக மால், கடை.., என அனைத்திலும் தன்னைப் பற்றிய சோதனையை அவள் முடித்திருந்தாள். இது.., அவளுக்கே, அவள் வைத்துக் கொண்ட பரீட்சை. அவள் மனதுக்கு வைத்துக் கொண்ட சோதனை.

சோதனையின் முடிவுகள் அனைத்திலும்.., தான் சந்தித்த ஒவ்வொரு ஆண்மகனிடமும், அதாவது தான் விரும்பியோ, விரும்பாமலோ, சாதாரணமாகவோ, வலுக்கட்டாயமாகவோ.., ஏதோ ஒரு விதத்தில், தான் சந்தித்த ஒவ்வொருவரிடமும் அன்புவை மட்டுமே தேடியிருக்கிறோம் என்ற முடிவுக்கே அவளால் வர முடிந்தது.

அந்த முடிவு அவளுக்கு பயத்தைக் கொடுத்தது என்று சொன்னால் மிகையில்லை. ஆறு மாதங்களுக்கு முன்பு வரைக்கும், உன் மனதை ஒருவன் தீண்டுவான் என யாராவது ஜோதிடம் சொல்லியிருந்தால் கூட நம்பியிருக்க மாட்டாள்.

ஆனால் இன்று.., அவனை இதுவரை மூன்று இடங்களில் பார்த்து விட்டாள். கொரியர் பையனாக.., தண்ணி கேன் போடுபவனாக, நான்கு நாட்களுக்கு முன்னர், அவள் அப்பாவண்டிக்கு பெட்ரோல் போடுகையில், அங்கே பெட்ரோல் போட்டவன் அவன்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவனைக் கண்டாள். அவனிடம் பேச வேண்டும் என்ற ஆர்வத்தை விட, அவனை கண்களுக்குள் சேமிக்கும் வேட்கை அதிகமிருந்தது.

“வணக்கம்..” சொன்ன அவனது விதம்.., கார் கண்ணாடியை கிளீன் செய்யவா? என்ற அவனது கோரிக்கை.., ஜீரோ பாத்துக்கோங்க என்ற அவனது வேண்டுதல்.., அனைத்தையும் இமைக்க மறந்து பார்த்திருந்தாள்.

‘இவன் என்ன வேலைதான் பாக்கறான்..? எல்லா இடத்திலும் இருக்கிறான்..’ அதுவும் அது ஓர் நள்ளிரவைக் கடக்கும் நேரம். அந்த நேரத்திலும் சுறுசுறுப்பாக அவன் செயல்பட்ட விதம்.., ஒரு நொடி.., காரில் இருந்து இறங்கி, அவனை இறுக்கிக் கொள்வோமா..?’ என்ற தன் வேட்கையை எண்ணி வெலவெலத்துப் போனாள்.

தன் அடிமனம் அவனை வெறித்தனமாக விரும்புவதை அப்பட்டமாக அவள் உணர்ந்த தருணம் அதுதான். தன் மனதின் விருப்பம் அவனை எட்டுமா என்பது கூட அவளுக்குத் தெரியாது. ஆனால்.., இந்த உலகத்தில், தான் உயிராய் நேசிக்கும் ஒரு ஜீவன்.

தனக்கும், மனதுக்குள் ரகசியமாக எண்ணி ரசித்துக் கொள்ள, மெல்லிய வலியையும், அதன் இதத்தையும்

அனுபவிக்க ஒரு நேசம்.., அந்த கொல்லும் உணர்வு அவளுக்குப் பிடித்தது.

அவன் யாராக வேண்டுமென்றாலும் இருக்கட்டும், என்ன வேலையும் செய்யட்டும், கையேந்தாமல், கொள்ளையடிக்காமல், மற்றவரைச் சுரண்டாமல், கௌரவமாக அவனது உழைப்பில் அவன் இருப்பது பிடித்தது.

‘அன்பு.., அன்பு..’ நொடிக்கொருமுறை அவன் பெயரை மனதுக்குள் உச்சரிப்பது கூட அடி நெஞ்சில் தித்தித்தது.

அவளது இந்த உணர்வுகளால் அவள் முற்றிலும் ஊமையாகிப் போனாலும், அவள் முகத்தில் கவிழ்ந்திருக்கும் நிம்மதியில் பெற்றவர்கள் அமைதியடைந்தார்கள்.

ஆனாலும்.., இது எத்தனை நாளோ.., என எண்ணுகையில் பயமாகவும் இருந்தது. சில நாளாக டிரைவரை கூட்டிக் கொண்டு, மகள் சென்னையில் இருக்கும் கடைகளை எல்லாம் சுற்றிப் பார்க்கிறாள் என அறிந்த பொழுது, ஒரு பக்கம் பயமாக இருந்தாலும், அவள் வெளியே போய் வரட்டும் என எண்ணிக் கொண்டார்கள்.

டிரைவரை அவள்மேல் எப்பொழுதும் ஒரு கண் வைத்திருக்கச் சொன்னதால், சற்று நிம்மதியாகவே இருந்தார்கள்.

ஒரு வழியாக தன் சோதனையை நிறுத்தியவளுக்கு, அன்புவைக் காண வேண்டும்போல் ஒரு வேட்கை. அவனை எங்கே, எப்படிப் பார்க்கவென்று அவளுக்குத் தெரியவில்லை.

இதுவரை நேர்ந்த சந்திப்புகள் அனைத்துமே தற்செயலாக நேர்ந்தவையே. அப்படி இருக்கையில், அவனை எங்கே சென்று அவள் தேடுவாள்? நடுவில் சில மாதங்கள் அக்ஷயா

கணவனது வீட்டுக்குச் சென்றிருக்க, அவளது சோதனைகள் அனைத்தும் அப்பொழுதுதான் நடந்தது.

அன்றைக்கு வீட்டில் சோம்பலாக அமர்ந்திருக்க, அவள் கையில் இருந்த அலைபேசி அதிரவே, அதில் வந்த குறுஞ்செய்தியைப் படிக்க, அவளுக்குள் சிறு உற்சாகம் தொற்றிக் கொண்டது.

அக்ஷயா தாய் வீட்டுக்கு வந்திருக்க, பவி வெளியே போக வேண்டும் என அடம் பிடிக்கவே, தியேட்டர் போகலாமா என அக்ஷயா கேட்டிருந்தாள்.

அடுத்த இரண்டுமணி நேரங்களில் கிளம்பி, அவர்கள் தியேட்டர் போய்ச் சேர, அப்பொழுது புதிதாக வந்த படத்துக்கு இரண்டு டிக்கெட் எடுத்துக் கொண்டு லிப்டில் பயணித்தார்கள்.

அவர்களது தியேட்டர் மூன்றாம் தளத்தில் இருக்கவே, இரண்டாம் தளத்தில் அனைவரையும் இறக்கிய லிப்ட் ஆப்பரேட்டர், லெப்ட்ல போய் எஸ்க்கலேட்டர்ல போங்க. மேலே ப்ளோர்க்கு சர்வீஸ் கிடையாது..” அவன் உரைக்கவே அனைவரும் இறங்கிக் கொண்டார்கள்.

எஸ்க்கலேட்டர் என்றாலே கீர்த்திக்கு பயம்தான். ஏறும்பொழுதும், ஏறிய பிறகு அங்கே இறங்கவும் கொஞ்சமாவது அவளால் பேலன்ஸ் செய்ய முடியும். ஆனால்.., இறங்குகையில் அவளால் சுத்தமாக முடியாது.

ஒற்றைக் காலால் பேலன்ஸ் செய்கையில், விருட்டென அது நகர்ந்துகொண்டே இருக்கையில், நிச்சயம் அவள் அத்தனை படிகளையும் உருண்டு கடந்துவிடுவாள். எனவே முடிந்தவரை லிப்ட்.., இல்லையா படிக்கட்டையே அவள் தேர்வு செய்வாள்.

ஆனால் அங்கே படிக்கட்டு இல்லாமல் போகவே, அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அங்கே இருக்கும்

உதவியாளரிடம் சொல்லி எஸ்க்கலேட்டரை நிறுத்திவிட்டு, படிக்கட்டில் இறங்குவதுபோல் இறங்கிவிட முடியும்.

ஆனால்.., அங்கே இருக்கும் அத்தனை பேரின் பார்வைக்கு தான் ஒரு காட்சிப் பொருளாவதை அவள் விரும்புவது கிடையாது.

பவி எஸ்க்கலேட்டரை பார்த்தவுடன் வேகமாக ஓடி அதில் ஏறியிருக்க, அக்ஷயாவும் அவள் பின்னால் சென்றுவிட்டாள். எஸ்க்கலேட்டரில் ஒவ்வொருவராக ஏற, திடும் திடுமென அதிரும் மனதை ஒரு வழியாக அடக்கி, வலக்காலை சற்று ஊன்றி இடக்காலை சட்டென வைத்து ஏறிவிட்டாள்.

இறங்குகையிலும் கொஞ்சம் தடுமாறினாலும் சம்மாளித்து இறங்கி விட்டாள். ‘வீட்டுக்குச் செல்கையில் எப்படி..?’ என்ற பயம் அப்பொழுதே இருந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

பவியின் சேட்டையிலும், பேச்சிலும், பாதி படத்திலுமாக அந்த பயம் சற்று மட்டுப் பட்டிருக்க, படம் முடிந்து கிளம்புகையில் அது பூதாகரமாக மிரட்டியது.

ஆனால்.., அவள் பயத்துக்கு மாறாக, பின்னால் படிக்கட்டு வழியாக அவுட் இருக்க, நிம்மதியாகவே இறங்கினாள். அதுவும் இரண்டாம் தளம் வரைக்குமே கை கொடுத்தது.

அதன் பிறகோ.., ஒரு புட் கோர்ட் வழியாகச் சென்று, மீண்டும் எஸ்க்கலேட்டர் பயணம் எனத் தெரியவர, சர்வமும் அவளுக்கு ஆடியது. அந்த இடம் தாண்டி விட்டால், லிப்ட் இருப்பது தெரியவே, என்ன செய்வது எனத் தெரியாத பயம்.

நேரம் மாலை ஆறு முப்பது ஆகியிருக்க, பவி தனக்கு பசிக்கிறது எனச் சொல்லவே, அவளது தொல்லை தாங்காமல், அவளை அழைத்துக் கொண்டு புட் கோர்ட் சென்றாள் அக்ஷயா.

“நான் கார் பார்க்கிங்ல வெயிட் பண்றேன்..” அவளிடம் தன் நிலையை வெளிப்படுத்த முடியாமல் அவள் உரைக்க, சரி என அவளும் சென்றுவிட்டாள்.

அவர்கள் திரும்பி வந்த பிறகுமே கீர்த்தி எஸ்க்கலேட்டரில் ஏறியிருக்கவில்லை.

“கீர்த்தி, போகலையா.., சரி வா..” அழைத்தவள் முன்னால் குழந்தையோடு சென்றுவிட, நிச்சயம் அழுகை முட்டியது.

அதற்குள்ளாகவே.., ‘எத்தனைபேர் என்னை வேடிக்கை பார்த்தார்களோ.., என்ன நினைத்தார்களோ..? சிரிக்கிறார்களோ..?’ அவளால் அந்த நினைவால் அங்கே இங்கே பார்க்கக் கூட முடியவில்லை.

திரும்பிப் போய்விடலாம் என்றால்.., எங்கே போய், என்ன செய்வது? கண்கள் கண்ணீரால் நிறைந்தே விட்டது. சரியாக அதே நேரம்.., அங்கே வந்தான் அன்பு.

தன் கையில் இருந்த காகிதத்தால் அவள் தோள் தட்டியவன், ‘நான் உதவிக்கு வரவா..?’ கண்களால் கேள்வி கேட்டான்.

அவளுக்குத்தான்.., தன் மனம் கவர்ந்தவனின் முன்பு, சிறுமை பட்டுப்போகும் உணர்வு. அவள் முகம் கசங்க, அவனால் தாங்கவே முடியவில்லை. அவள் இப்படி ரியாக்ட் செய்வாள் என்பதால்தான் சற்று நேரமாக ஒதுங்கி நின்றிருந்தான்.

இறுதியில் தன்னால் அப்படி இருக்க முடியாமல் போகவே, அவளைத் தேடி வந்தான். அவள் முகம் கசங்கிப் போகவே, தன் கையை, ‘ஒரு நிமிஷம்..’ என்பதாக அவளுக்கு முன்னால் நீட்டியவன், அவளை சற்று நகர்த்தி அழைத்து வந்தான்.

அவள் நகர்ந்து வந்தாலும், அவன் முகம் காணாமல் இருக்கவே, கைகளை குறுக்காக கட்டிக்கொண்டு

அசையாமல் நின்றான். அவனிடம் எதிர்வினை ஒன்றும் இல்லாமல் போகவே, ‘என்ன..’ என்பதுபோல் அவனை நிமிர்ந்து பார்க்க,

“நான் ஒண்ணு கேக்கவா..?” அவன் மென்மையாக வினவ, அதன் பாவனை அவன் முகமெங்கும் பரவ, சம்மதமாக தலை அசைத்தாள்.

“என்னை உங்களுக்குத் தெரியும் தானே..” அவன் சந்தேகமாகக் கேட்க, ‘உன்னைத்தாண்டா மனசுக்குள்ளே கட்டி வச்சிருக்கிறேன்..’ மனம் கூச்சலிட, ‘தெரியும்..’ என்பதுபோல் தலை அசைத்தாள்.

“சப்போஸ்.., ஒரு பேச்சுக்குதான் சொல்றேன்.., சப்போஸ்.., என்னால் இப்போ இந்த எஸ்க்கலேட்டர்ல இறங்க முடியாது. நீங்க வர்றீங்க.., என்னைப் பாக்கறீங்க.., என்ன பண்ணுவீங்க..? உங்க மனசுக்குள் என்ன நினைப்பீங்க..?” அவன் வெகு நிதானமாக வினவ,

‘உனக்கு அப்படி ஒரு நிலை வேண்டாம்..’ மனதுக்குள் பதறியவள், “கண்டிப்பா ஹெல்ப் பண்ணுவேன்..” அவள் குரல் மெல்லியதாக ஒலித்தது.

“சரி.., என்னைப்பத்தி ரொம்ப மட்டமா நினைப்பீங்களா?” அவன் அடுத்த கேள்வியை வீச.., துடித்துப்போய் அவனைப் பார்த்தாள்.

அவள் கண்களில் விரவும் வலி, அவனுக்குள் இறங்கினாலும், இளகாமல், “அப்போ.., நான் மட்டும் அப்படி நினைப்பேன்னு நீங்க நம்பறீங்களா?” அவன் வார்த்தைகளை வெகு நிதானமாக கோர்க்க, அவனைத் தாவி கட்டிக் கொண்டு, அவன் நெஞ்சுக்குள் புதைந்து விம்மும் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடிப் போனாள்.

நொடியில் அவள் கண்களில் தெறித்து விலகிய மின்னலின் அர்த்தம் புரியாமல் அவன் விழிக்க, அவனுக்கு

பதில் சொல்லாமல், அவள் சட்டென திரும்பி நடந்தாள்.

‘இப்போ நான் ஹெல்ப் பண்ணவா வேண்டாமா..? எதுவுமே சொல்லாமலே போறாங்களே.., சும்மாவா நான் காந்தாரின்னு பேர் வச்சிருக்கேன்..’ தனக்குள்ளே புலம்பியவன் அவள் பின்னால் ஓடினான்.

அவர்களது நல்ல நேரமோ என்னவோ.., அந்த நேரம் எஸ்க்கலேட்டரில் செல்ல ஆட்கள் இல்லாமல் போகவே, அதன் முன்னால் நின்றவள், வரும் அவனைத்தான் இமை கொட்டாது பார்த்திருந்தாள்.

அவள் அருகில் வந்தவன்.., தன் வலுவான கரத்தை அவள் பக்கம் நீட்ட, மறுப்பாக தலை அசைத்தாள். அவள் மறுப்புக்கான காரணம் புரியாமல், “என்னங்க.., நீங்க புடிச்சுக்கற ஒரு கட்டையா நினைச்சுக்கோங்க..” சற்று பரிதாபமாகவே உரைத்தான்.

அப்பொழுதும் அவள் மறுப்பாக தலை அசைக்கவே.., “என்னன்னு சொல்லுங்க..” கெஞ்சினான். அந்த கெஞ்சல் கூட அவளுக்கு அவ்வளவு பிடித்தது.

பொதுவாகவே அவள் யாரின் தோளிலாவது சற்று தன் எடையை சாய்த்துக் கொண்டால் மட்டுமே அவளால் அதில் ஏற முடியும் என்கையில், தன் மனதுக்குள் ஒளிந்திருக்கும் நேசத்தில், தன் கரத்தின் வழியாக அது வழிந்துவிடுமோ என்ற பயம்..

அப்பொழுதும் அவள் அமைதியாக இருக்கவே.., “அட.., தொட்டால்லாம் இந்த கருப்பு உங்க மேல ஒட்டிக்காதுங்க..” சற்று இலகுவாக்க முயன்றான்.

அவள் மனமோ.., ‘என் தேகம் முழுவதும் உன் நிறம் ஒட்டிக் கொள்வதாக இருந்தாலும் எனக்கு சந்தோஷமே..’ ஒருவித கற்பனை, முதல் முறையாக அவளைத் தீண்ட, அவளுக்கே அந்த நிலை பயத்தைக் கொடுத்தது.

“என..க்கு.., தெரியலை..” மனதுக்குள் ஓடிய எண்ணத்தால் சற்று பயத்துடனே அதை உரைத்தாள்.

“சரி.., சரி.., நான் பாத்துக்கறேன்..” அவன் அந்த வார்த்தைகளை முடிக்கும் முன்பு, அவனோடு எஸ்க்கலேட்டரில் பயணப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு முகம் காட்டி, ஒரு ஸ்டெப் கீழே அவள் இருக்க, அவள் கரம் ஒன்று அவன் சட்டையை கொத்தாக பற்றியிருக்க, மற்றொரு கரமோ அவன் இடையைக் கட்டியிருந்தது. கண்களோ இறுக மூடி இருந்தன.

அந்த நிலையில் அவர்களைப் பார்த்த யாருக்கும், கட்டிப்பிடித்துகொண்டு செல்லும் காதலர்களாகவே கண்ணுக்குத் தெரிவார்கள்.

அவன் என்னவோ, அவளை ஜவுளிக்கடை பொம்மையைத் தூக்குவதுபோல், இரண்டு தோள்களிலும் அழுத்திப் பிடித்து, ஒரு தூக்கு தூக்கி முதல் படியில் விடும் முன்பே, தானும் ஏறியிருந்தான். அவளை விட்டவுடன் கைகளை அவன் விலக்கிக்கொள்ள, அவள்தான் பயத்தில் அவனை அப்பியிருந்தாள்.

படியில் இறங்கியபொழுதும் அவள் விலக மறுக்க, சட்டென எதிரில் இருந்த பார்க்கிங் செல்லும் படிக்கட்டில், அண்டர் வொர்க் என்ற பெயர்ப் பலகையைத் தாண்டி வேகமாக இறங்கி நின்றிருந்தான்.

ஆயிரம்தான் இருந்தாலும் அவனும் ஒரு ஆண்மகன்.., இளமைத் துடிப்பு மிக்கவன், ஒரு பெண்ணின் நெருக்கத்தில் அவனால் சட்டென நிலை தடுமாறாமல் இருக்க முடியவில்லை.

அவள் பயத்தால் தான் தன்னை அண்டி நிற்கிறாள் என புத்திக்குத் தெரிந்தாலும்.., தன்மேல் உணர்ந்த அவள் அழகிடங்களின் ஸ்பரிசம், அவனை சற்று இம்சித்தது.

அவளோ.., சட்டென நேர்ந்த அந்த அழுத்தத்தில், ஒரு மாதிரி, உறக்கமும் அற்ற, மயக்கமும் அற்ற நிலைக்குச் சென்றிருந்தாள். அவன் கழுத்தடியில் தலை சாய்த்திருந்தவளுக்கு, அவன் இதயம் துடிக்கும் ஓசையும், கூடவே அவனது ஆண்மை வாசனையும் சேர, முகத்தை இன்னும் அழுத்திக் கொண்டாள்.

அவளைப் பொறுத்த வரைக்கும், இந்த ஜென்மத்தில், ஒரு ஆண் அவளைத் தீண்டுவதாக இருந்தால் அது அன்பு மட்டுமே. எனவே, அவளுக்கு இது தவறாகத் தெரியவில்லை.

“என்னங்க.., இங்கே பாருங்க..” அவளை வேகமாக விலக்கியவன், அவள் விழி திறக்காததைக் கண்டு, அதிகமாக பயந்துவிட்டாள் என உணர்ந்து கொண்டான். ஒரு கையால் அவளைத் தாங்கியவன்,

அவள் தோளில் இருந்த பையை வேகமாக ஆராய, நல்ல வேளையாக உள்ளே சிறு தண்ணீர் பாட்டில் வைத்திருந்தாள். சுவற்றில் அவளை சாய்த்து நிற்க வைத்து, தண்ணீரை கைகளில் ஊற்றி அவள் முகத்தில் தெளித்தவன், அவள் கண் விழிக்கும் முயற்சியின்பொழுதே, தண்ணீரை அவள் வாயில் சரித்தான்.

மறுக்காமல் அதை குடித்தவள், “சாரி..” முழுதாக விழிப்பு வரவே, வேகமாக அவனிடமிருந்து விலகி நின்றாள். பெரும் சங்கடமான முகபாவம். ‘என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்..’ உள்ளுக்குள் ஒரு நினைவு வேகமாக உலா போனது.

“அட.., அத விடுங்க..” வேகமாக உரைத்தவன், அவள் முகத்தை ஆராய்ந்தான். அவளும் அவன் முகத்தைப் பார்க்க, அதில் தெரிந்த கவலையின் சாயலில் குளிர் காய்ந்தது பெண்மை.

“ஒரு எக்ஸ்ட்ரீமா பயப்பட்டாலோ, இல்ல ஸ்ட்ரெஸ்ஸா பீல் பண்ணாலோ இந்த மாதிரி ஆயிடுவேன்..” சங்கடமாக உரைத்தாள்.

“உப்.., வேகமாக வாய் நிறைய காற்றை எடுத்து ஊதியவன், “என்னங்க.., நான் என்ன பூச்சாண்டியா..? இப்படி பயந்துக்கறீங்க. தூக்கும்போது என்னவோ சோளக்கொல்லை பொம்மை மாதிரி லேசா இருந்தீங்க. பாத்தா பொசுக்குன்னு மயக்கம் போட்டீங்க.., நான் என்னன்னு நினைக்கிறது..” அவன் மெல்லியதாக வாய்க்குள்ளாக சிரித்துக் கொண்டான்.

தானும் மெல்லியதாக புன்னகைத்தவள், அப்பொழுதுதான் அவனது டிஷர்ட்டை கவனித்தாள். ‘பிட்சா ஹட்..’ என அதில் எழுதியிருக்க, அந்த கடைக்கான யூனிபாமில் அவன் இருப்பதைப் பார்த்தாள்.

“நீங்க இங்கேதான் வொர்க் பண்றீங்களா?” அவள் சற்று ஆர்வமாக வினவ,

“இங்கேயும் வேலை பாக்கறேன். எனக்கு ஒரு வேலை கிடையாதுங்க.., ஏகப்பட்ட வேலை.., சரிங்க.., லேட் ஆகிடுச்சு. நான் கடைக்குக் கிளம்பறேன் கஸ்டமர் வர நேரம்..” அவன் கிளம்ப முயன்றான்.

“அன்பு..” படிகளில் ஏறப் போனவன், அவளது அழைப்புக்கு திரும்பிப் பார்க்க, “தேங்க்ஸ்..” கண்களால் அவனை சிறை செய்தவாறே உரைக்க, அவள் பார்வையின் வசியத்தில் சிக்கிப் போனான்.

நொடியில் தன்னை மீட்டவன், “இனிமேல் தியேட்டர் வந்தீங்கன்னா.., புட் கோர்ட் பக்கம் நீங்க வந்த வழியே வராமல், லெப்ட்ல ஒரு சின்ன படிக்கட்டு இருக்கும். அந்த வழியை யூஸ் பண்ணுங்க. அது கார் பார்க்கிங்கில் கொண்டு போய் விடும்..” அவன் உரைக்க அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

கூடவே.., “அப்போ.., இனிமேல் வந்தால் என்னை தொல்லை பண்ணாதன்னு சொல்றீங்க அப்படித் தானே..” அவள் கேட்க, தான் சொன்னதில் எங்கே இப்படி ஒரு அர்த்தம் வந்தது என திடுக்கிட்டான்.

கூடவே அவள் கண்களில் தெரிந்த வலியில், ஏறிய நான்கு படிகளை ஒரே எட்டில் தாண்டி அவள் அருகில் வந்தவன், “நீங்க மயக்கம்போட்டு விழ மாட்டேன்னு மட்டும் சொல்லுங்க. இன்னும் பத்து முறை அந்த எஸ்க்கலேட்டர்ல உங்களை கூட்டி வர்றேன்..” ஓசை வராமல், இதழசைத்து அவன் உரைக்க, அவன் டிஷர்ட்டைபிடித்து இழுத்து, தன்னோடு இணைத்துக்கொள்ள பரபரத்த கைகளை, இறுக்கி, கைப்பையை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

*****

# பகுதி – 7.

அன்பு விடை பெற்றுச் சென்ற பின்பு, அவன் பின்னால் செல்லத் துடித்த கால்களை அடக்கவே மிகுந்த சிரமப்பட்டாள். ‘அன்பு வேண்டும், அவனுடனே இருக்க வேண்டும்..’ அவள் கன்னி மனம் தவித்தது.

அதே நேரம்.., கணியமான அவன் பார்வையை நினைத்துப் பார்த்தவளுக்கு, அவனுக்கு என்மேல் நேசம் இல்லையே. நினைக்கவே நெஞ்சத்தின் ஓரம் வலித்தது.

தன் நேசத்தை அவனிடம் வெளிப்படுத்தும் தைரியம் இருக்கவில்லை. மூன்றுமுறை பார்த்த ஒருவன்மேல் காதல் என்றால் உலகமே சிரிக்கும். அப்படி இருக்கையில், இப்படி ஒரு குறையை வைத்துக் கொண்டு, முழு தகுதியுள்ள ஆண்மகனான அவனிடம் நேசத்தை வெளிப்படுத்தவே முடியாது என்னும் வலி.., உள்ளுக்குள் துவண்டு போகச் செய்தது.

அதே நேரம் அவள் அலைபேசி அதிர, அப்பொழுதுதான் அக்ஷயா தனக்காக காத்திருப்பாள் என்பது புரிய, படிகளில் இறங்கினாள்.

‘வந்துட்டே இருக்கேன்..’ குறுஞ்செய்தியை வேகமாக அனுப்பி வைத்தாள்.

டிரைவர் காரைக் கிளப்ப, வீட்டுக்கு வந்தவளுக்கு பவி பேசியதோ, அக்ஷயா உரையாடியதோ.., அதற்கு தான் என்ன பதில் சொன்னோம் என்பதோ மூளையில் பதிவாகவே இல்லை.

அதே நேரம், அன்புவுக்கோ வேலையில் கவனம் பதியாமல் மெல்லிய தடுமாற்றம். கீர்த்தியின் பார்வையில் தெரிந்த ஒருவித உரிமையும், சொந்தமும், தவிப்பும்.., தான் பார்த்தது உண்மை தானா? கேள்வி மனதைக் குடைந்தது.

அவளது நடை, உடை, பாவனை, அதில் மின்னும் மேல்தட்டு களை.., நிச்சயம் அது பிரம்மையாகத்தான் இருக்கும்.., தனக்குள் முடிவெடுத்துக் கொண்டான்.

ஆனாலும்.., பார்வையாலேயே தன்னை சிறை செய்யும் அவளது கண்கள், வேலைக்கு நடுவிலும் தொல்லை செய்தது.

மனமோ.., பூஜாவையும், கீர்த்தியையும் தன்னை அறியாமல் ஒப்பிட்டது. பூஜாவின் கண்களில், தன்னை வசியம் செய்யும் தன்மையும், உன்னை விட்டேனா பார் என்ற சவாலும் அதிகம் இருக்கும். ஆனால்.., கீர்த்தியின் பார்வையில், என்னைப் புரிகிறதா என்ற பாவனை.., தன்னை அர்ப்பணிக்கும் ஒரு பாவனை..,

“ஆண்டவா, எனக்கு கிறுக்குதான் பிடிச்சிருக்கு..” வாய்விட்டே அவன் புலம்ப,

“அன்பு, என்னடா.., உண்மையை இப்படி உளர்ற..” உடன் வேலை செய்யும் ஜெரோம் அவன் தோள் தட்ட, அப்பொழுதுதான் தான் வாய்விட்டே உளறியதை உணர்ந்து கொண்டான்.

“ஹா..ஹா.. போடா..” அவன் கேலியில் சிரித்தவன், ஓவனைப் பார்க்கும் பாவனையில் திரும்பிக் கொண்டான்.

“என்ன அன்பு, இத்தனை மாசத்தில் உன்னை இப்படி பார்த்ததே இல்லையே..” கண்களில் குறும்பு வழிய, குறுகுறுவென அவனை ஆராயும் பார்வை பார்க்க, தன்னை வேகமாக சரிபண்ணிக் கொண்டான்.

“ம்ச் ஜெரோம்.., அதெல்லாம் ஒண்ணும் இல்லை. திடீர்ன்னு ஏதோ யோசனை..” ஓவனுக்குள் வைத்திருந்த பிட்சாவை எடுத்தவன், வேகமாக அவற்றை கட் செய்து எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

“பய எங்கேயோ சிக்கிட்டான் போல..” எண்ணிய ஜெரோம், அதை அத்தோடு விட்டுவிட்டு, தன் வேலையை கவனித்தான்.

அன்புவோ, ‘உன் நிலைக்கு அவங்க உன்னோட பேசுவதே பெருசு, இதில் உனக்கு தேவையில்லாத நினைப்பு வேற, உனக்குள் இப்படி ஒரு எண்ணம் ஓடுவது தெரிந்தால் அவங்க என்ன நினைப்பாங்க. வேண்டாம்..’ தனக்குள் எண்ணிக் கொண்டான்.

‘உன் லட்சியம் என்னவாயிற்று.., உன் தாயின் கனவை நீ நிறைவேற்ற வேண்டாமா?’ உள்மனம் கேள்வி கேட்க, தன் நினைப்புகளை மொத்தமாக உதறினான்.

ஆனால்.., மறுநாள் கீர்த்தியை பிட்ஸாஹட்டில் பார்த்த பொழுது, ஒரு நொடி தடுமாறி, தன்னை சீர்படுத்திக் கொண்டான்.

“மேடம்.., ஆடர் ப்ளீஸ்..” அது வார்த்தையிலும் வெளிப்பட்டது.

“பவி.., உனக்கு என்ன வேணும்..?” சற்று தூரத்தில், அங்கே கட்டப்பட்டிருந்த பலூனை எட்டிப் பிடிக்க, பிஞ்சு கால்களால் குதித்துக் கொண்டிருந்த பவி வேகமாக அவள் அருகில் வந்தாள்.

“எனக்கு சாக்கோ கேக்..” உரைத்தவள், அன்புவைப் பார்த்து, அங்கிள், எனக்கு அந்த பலூன் எடுத்து தறீங்களா? கண்களால் கெஞ்சி, ஆசையாய் அவள் வினவ, அவள் அழகில் மயங்கித்தான் போனான்.

“ஓ.., எடுத்து தரேனே..” அவன் அங்கே செல்ல, வேகமாக அவன் பின்னால் ஓடியவள்,

“என்னை தூக்குங்க.., நானே எடுத்துக்கறேன்..” கைகளை தூக்கி, என்னை தூக்கித்தான் ஆக வேண்டும். என நின்றாள்.

“ஓகே..” அவளை கைகளில் அள்ளியவன், தன் தலைக்குமேல் அவளைத் தூக்க, அந்த பலூனை கைப்பற்றியவளுக்கு அவ்வளவு சந்தோசம்.

“தேங்கியு..” உரைத்தவள், அவன் கழுத்தை கட்டிக் கொள்ள, அவனும் இரு கரங்களால் அவளை முழுதாக அணைத்துக் கொண்டான்.

அவள் பட்டுக் கன்னத்தில் இதழ் பதிக்க விரும்பினாலும், அது நன்றாக இருக்காது என்பதால், அவளை தூக்கி வந்து, கீர்த்தி அமர்ந்திருந்த மேஜையில் அமர வைத்தான்.

அவ்வளவு நேரமாக அவன் மீதே கவனமாக இருந்தவள், அவன் கரத்தில் பவியைப் பார்த்த பொழுது, அவன் அவளை அணைத்திருந்த விதம் ஒருவித பொறாமையை அவளுக்கு விதைத்தது.

அதே கரங்களில், அதே அரவணைப்பில் தான் ஒடுங்கிக் கொள்ள பேராவல் எழ, விழிகளால் அவனைத் தொடந்தாள்.

“மேடம்.., உங்களுக்கு..” மெனு அட்டையை அவள் பக்கம் நகர்த்த, அப்பொழுதுதான் தன் பார்வையை சற்று கலைத்தாள்.

“ரெண்டு சாக்கோ கேக் போதும்..” உரைத்தவளுக்கு, அவனது மேடம் என்ற அழைப்பு ஒரு மாதிரி மனதைப் பிசைந்தது. நேற்றுவரை அவன் பார்வையில் அவள் மீதான அன்பையும், ஒருவித அக்கறையையும் பார்த்தவளுக்கு, இன்றைய அவனது உரையாடல் அப்பட்டமான ஏமாற்றத்தை அளித்தது.

அவனுக்கோ.., அவள் தன்னை பார்வையில் தொடர்வது அப்பட்டமாய் விளங்க, ‘ஏன் இப்படி..?’ அவனுக்கு உள்ளுக்குள் சிறு பயம் எழுந்தது.

வேகமாக அங்கிருந்து நகர்ந்தவன், அவர்கள் கேட்டதை ரெடி செய்ய, அவள் உள்ளே உலாவுவதை ஆர்வமாய் பார்த்திருந்தாள். அவனைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்..' அவள் மனதின் ஆசையை அவளால் அடக்கவே முடியவில்லை.

காலை எழுந்தது முதல், மாலை எப்பொழுது வரும் என ஆர்வமாய் எதிர்பார்த்திருந்தவள் ஆயிற்றே. மனதிலோ பெரும் போராட்டம்.., என் குறையை அவன் கண்டுகொண்டதால் இப்படி நடந்துகொள்கிறானோ.., தாழ்வு மனப்பான்மை அவளை மொத்தமாய் ஆக்கிரமிக்கத் துவங்கியது.

அவர்களுக்கான கேக்கை கொடுத்தவன், அடுத்த டேபிள் சென்று ஆடர் எடுக்க, அவள் பக்கம் பார்க்கவே இல்லை. மனதிலோ.., 'இன்னைக்கு எப்படி எஸ்க்கலேட்டார்ல போவாங்க..?' மனம் அவனை மீறி தவித்தது.

அதே நேரம்.., "அன்பு.." அவள் அழைப்பு அவனைத் தீண்ட, வேகமாக அவள் அருகே விரைந்தான்.

"வேற ஏதாவது வேணுமா..?" குரல் கனிந்தது.

"லெமன் ஜூஸ் இருக்கா..?" பார்வை அவனை மொய்க்க, கொஞ்சம் கூட தயங்காமல் கேட்டாள்.

"இருங்க.., எடுத்துட்டு வரேன்.." உள்ளே சென்றவன், அடுத்த ஐந்தாவது நிமிடம் அவள் முன்னால் அதை வைத்தான். மேலும் சிலவற்றை அவள் பார்சலுக்கு ஆடர் செய்ய, அவள் அங்கேயே தாமதிக்க விரும்புவது அவனுக்கு அப்பட்டமாய் புரிந்தது.

"பிப்டீன் மினிட்ஸ் ஆகும்.." அவன் உரைக்க, "பரவாயில்லை நான் வெயிட் பண்றேன்.." அவள் பதிலில், அவனுக்குள் சிறு பிரளயம்.

அவளுக்கோ.., அங்கிருந்து கிளம்பிச் செல்லும் எண்ணமே இருக்கவில்லை. பவி பாதி கேக்கிலும், மீதி பலூனிலும் கவனமாக, கீர்த்தியின் பார்வை அவனைத்தான் தொடர்ந்தது.

எவ்வளவு நேரம்தான் அங்கேயே இருக்க முடியும்? மனமே இல்லாமல் அவள் இருக்க, குழந்தையோ.., "அம்மாகிட்டே போகலாம்..?" அவளிடம் கேட்கத் துவங்கினாள்.

வேறு வழியின்றி அவனிடம் பில் கேட்க, பணத்தை கொடுத்தவளுக்கு, அவனுக்கு டிப்ஸ் கொடுக்க மனம் ஒத்துழைக்கவில்லை. அவனோ.., 'டிப்ஸ் கொடுத்துட்டா பரவாயில்லை..' தன் உள்மன பிராண்டலுக்கு ஒரு முடிவு கட்டிவிடலாம் என அவன் எதிர்பார்த்தான்.

அவன் எதிர்பார்ப்பை பொய்யாக்கியவள், "அன்பு.., ஸ்டெப்ஸ் எந்தப் பக்கம் இருக்கு?" இருக்கையில் இருந்து எழுந்துகொள்ள, "வாங்க.." அவளை அழைத்துச் சென்றவன், "இதுதான்.." படிகளில் அவளை விட, "தேங்க்ஸ்.." மனமே இல்லாமல் அவனிடம் விடை பெற்றாள்.

அவனுக்கு அப்பட்டமாய் புரிந்தது, 'இவங்க என்னைப் பாக்கத்தான் வந்திருக்காங்க..' அவனால் மகிழ முடியவில்லை. கீர்த்திக்கு அவன் சாதாரணமாக உரையாடியது வருத்தத்தை அளித்தாலும், அவனைப் பார்த்து விட்டதில் மனம் முழுக்க மகிழ்ச்சி.

அடுத்த நாளும் அவள் அங்கே வர, அங்கே அன்பு இருப்பதற்கான சுவடே இருக்கவில்லை. ஏமாற்றம் மனதைக் கவ்வ, அவனை என்னவென்று யாரிடம் விசாரிக்க..?' மனம் கலங்கிப் போனது.

'என் வரவு பிடிக்காமல்தான் போய்விட்டானா?' மனம் கேள்வி எழுப்ப துவண்டு போனாள். அன்பு அங்கே மாதத்தில் பத்து நாட்கள் மட்டுமே வேலை செய்வான் என்பதை யார் அவளுக்கு சொல்வது?

மொத்தமாக துவண்டு போனவள், வீட்டில் தன் ஏமாற்றத்தை வலியை கோபமாய் வெளிப்படுத்த, வீட்டில் இருப்பவர்கள் குழம்பிப் போனார்கள்.

மாணிக்கம் அவள் செய்கைக்கான காரணம் புரியாமல், டிரைவரிடம் அவள் சென்ற இடத்தைப் பற்றி கேட்க, அவள் மாலுக்கு சென்றதை அவன் உரைக்க, அங்கே அப்படி என்ன நடந்தது என்பதை அவர்களால் அறியவே முடியவில்லை.

அவளை யாராலும் நெருங்க முடியவில்லை. ஏனென்று கேட்க கேள்விக்கும் அவளிடம் பதில் இருக்கவில்லை.

மீண்டும் அவள் உலகம் அறைக்குள் முடங்க, பெற்றவர்களின் கவலை அவளை அலைக்கழித்தது. ஆனால்.., உள்ளுக்குள் உருக வைக்கும் காதலை, அன்புவுக்கான தன் தேடலை என்ன செய்யவென்று அவளுக்குத் தெரியவில்லை.

காரணமே இல்லாத கோபம், எரிச்சல், தாயின் ஆராயும் பார்வை, அவரது கேள்விகள், தனக்குள் இருக்கும் காதலை வெளியே சொல்ல முடியாமல் வலி மட்டுமே வியாபித்தது.

கிட்டத்தட்ட ஒரு மாதம்.., அறைக்குள்ளேயே முடங்கியவளுக்கு, எம்பிஏ இரண்டாம் வருடத்துக்கான முதல் செமஸ்டர் தேர்வுகள் நெருங்கி வரவே, முயன்று தன்னை படிப்பில் செலுத்தினாள்.

முழு வெற்றி கிடைத்ததா எனக் கேட்டால் நிச்சயம் இல்லை. ஆனால், கொல்லும் அவன் நினைவுகளில் இருந்து சிறிதாக தப்பிக்கொள்ள முயன்றாள்.

அறைக்குள்ளேயே முடங்கி எவ்வளவு நாள் இருப்பது? பரீட்சை வரவே, தன் சென்டருக்குச் சென்றாள். பரீட்சை எழுதுகையில் கூட அவன் நினைவு. ஒரு வழியாக பரீட்சையை முடித்துவிட்டு வெளியே வர, காரை எடுத்து

வந்து நிறுத்திவிட்டு, அவளுக்காக கதவைத் திறந்தான் டிரைவர்.

நினைவு முழுவதும் அன்புவே வியாபித்து இருக்க, படிகளில் இறங்கியவளின் கவனம் சிதறவே, தடுமாறி விழப் போனாள். அதைப் பார்த்த டிரைவர், ஒரே பாய்ச்சலில் அவளை நெருங்கி அவளை விழாமல் தாங்கிக் கொண்டவர், “அம்மாடி.., நீங்க கவனமா இருக்க வேண்டாமா..?” பதறிப்போய் உரைத்தார்.

தன் வழக்கப்படி அவரும் சற்று உரக்கவே உரைக்க, அங்கே அவளுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. தன் குறையை வெளிச்சம் போட விரும்பாமல் தான், அவள் ஹியரிங் மெஷின் வைப்பதே இல்லை. அப்படி இருக்கையில், அதை மற்றவர் அறிய வெளிச்சம் போடும் அவர்களது செய்கையை அறவே வெறுத்தாள்.

“அதென்ன நான்.., ஏன் நீங்கல்லாம் தடுமாறவே மாட்டீங்களா? என்னை ஏன் இப்படி சாகடிக்கறீங்க...?” ஆத்திரமாக மொழிந்தவள், அவரை வேகமாக தள்ளிவிட்டு, காருக்குள் விருட்டென அமர்ந்தாள்.

சற்று திகைத்தாலும், எதுவும் பேசாமல் காரைக் கிளப்ப, அவளுக்கோ காருக்குள் இருக்கவே முடியவில்லை. ஒரு மாதிரி, இயலாமை கலந்த கோபம். கல்லூரியை விட்டு வெளியே வரும் வரைக்கும் சற்று அமைதியாக இருந்தவள்,

“காரை நிப்பாட்டுங்க.., நான் இறங்கிக்கறேன்..” கோபம் குறையாமலே உரைக்க, டிரைவர் திகைத்துப் போனான்.

“அம்மாடி..” அவர் எதையோ பேசத் துவங்கும் முன்னர்,

“இப்போ நிறுத்தல.., காரை விட்டு குதிச்சுடுவேன் பரவாயில்லையா?” வெடிக்க, காரை சாலை என்றும் பாராமல் நிறுத்தியிருந்தான்.

கார் நின்ற உடனே, பின்னால் வாகனம் வருகிறதா என்பதைக் கூட பாராமல் வெடுக்கென கதவைத் திறந்து பட்டென இறங்க முயன்றாள். பின்னால் வந்துகொண்டிருந்த பைக் திடுமென அவள்மேல் மோத முயன்று, இறுதி நிமிடம் சுதாரித்து பிரேக் போட்டவன், அதன் வேகம் தாளாமல் சாய்ந்து ரோட்டில் விழுந்திருந்தான்.

டிரைவர் பதறிபோய் வெளியே வர, கீழே விழுந்தவனோ.., "இப்படித்தான் ரோட்ல பாக்காமல் இறங்குவீங்களா..?" கையில் ஏற்பட்ட சிராய்ப்பை பார்த்தவாறே உரைக்க, அங்கே நேரவிருந்த விபாரீதம் தாளாமல் அதிர்ந்து நின்றுவிட்டாள்.

டிரைவரோ.., விழுந்த அவனைப் பாராமல், "அம்மாடி.., உங்களுக்கு அடி பாடலையே.." பதறிபோய் வினவினான்.

"நீங்க பண்றது ரொம்ப நல்லா இருக்கு.." கோபமாக உரைத்தவன், அப்பொழுதுதான் நிமிர்ந்து பார்க்க, எதிரில் நின்றிருந்தாள் கீர்த்தி.

"சரியான காந்தாரி.., அப்படி என்ன கோபம்..? அதென்னங்க.., எப்போ பாத்தாலும் அப்படி ஒரு கோபம்..? அக்கம் பக்கம் பாக்கவே மாட்டீங்களா..?" அவனும் கோபமாகவே வினவியிருந்தான்.

"அன்பு.., நீ.." கேட்டவள், தன்னை நெருங்கியவனை நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட்டு, வேகமாக சாலையைக் கடந்தாள்.

அவள் செய்கையில் திகைத்துப் போன டிரைவர், "சாரி தம்பி.., நான்தான் பாக்காமல் சடன்பிரேக் போட்டுட்டேன். அடி ஏதாவது பட்டுடுச்சா?" அவன் அருகில் வந்தார்.

கூடவே.., "உங்களுக்கு பாப்பாவை தெரியுமா?" அவர் கேட்க, இதற்கு என்ன பதில் சொல்வது எனத் திணறியவன், "ம்.."

மெதுவாக முனகிவிட்டு கீழே கிடந்த தன் வண்டியை தூக்கி நிறுத்தினான்.

அவள் கண்களில் தானாகவே கண்ணீர் வழிய, அதைக் கண்ட பிறகு அவனால் வண்டியைக் கிளப்பிக் கொண்டு செல்ல முடியவில்லை.

அவள் எங்கே எனப் பார்க்க, அருகில் இருந்த காந்தி மண்டபத்துக்குள் அவள் நுழைவது தெரிய, சாலையைக் கடந்து அவனும் அங்கே விரைந்தான். அது மதிய நேரம் என்பதால், இடமே வெறிச்சோடி இருக்க, அங்கே ஓரத்தில் இருந்த மரத்தின் நிழலில் போட்டிருந்த பெஞ்சில் சென்று அமர்ந்து கொண்டாள்.

கீர்த்திக்கு அழுகை பொங்கியது. ஒரு மாதத்துக்கு மேலாக அவனைப் பாராத ஏக்கம், கவலை, அவனை எதிர்பாராமல் கண்ட அதிர்ச்சி, டிரைவரின் பேச்சு.., அனைத்தும் சேர, தன்னை நிலைப்படுத்த முடியாமல் முகத்தை மூடிக் கொண்டு குலுங்கி அழுதாள்.

அதைப் பார்த்தவன், வேகமாக அவளை நெருங்கி, சற்று இடைவெளி விட்டு அருகே அமர்ந்தான்.

சற்று நேரம் கடந்த பிறகும் அவள் நிலையில் மாற்றமில்லாமல் போகவே, தயக்கமாக அவள் தோள் தொட்டு உலுகியவன், “ஏங்க இப்படி அழறீங்க? யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க..” அவன் கேட்டுக் கொண்டிருக்க, அவன் முகம் பாராத்தால் அவன் பேசுவது அவளுக்குப் புரியவில்லை.

வேகமாக அவன் கரத்தை விலக்கியவள், “ஏன் எனக்கு கோபப்பட மட்டும்தான் முடியுது.., அதைக் கூட செய்யக் கூடாதா?” கிட்டத்தட்ட வெடித்தாள்.

‘நான் என்ன கேட்டேன்.., இவங்க என்ன சொல்றாங்க..’ அவன் புரியாமல் திகைக்க, அப்பொழுதுதான் அவன் முகம்

பார்த்தவள், அவன் திகைப்புக்கான காரணம் புரியாமல் துவண்டாள்.

அதே நேரம்.., அவன் எதையோ சொல்லியிருக்கிறான் என்பதும் புரிய, “ஆமா.., எனக்கு எதுவும் கேக்காது.., கால் நடக்க வராது.., போதுமா?” சம்பந்தமே இல்லாமல் உரைக்க, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

அவனைக் கண்டுகொள்ளாமல், “ரெண்டு காலும் சரியா இருக்குறவங்க தடுமாறவே மாட்டாங்களா இல்ல விழ மாட்டாங்களா? அதென்ன நான் மட்டும் பாத்து போறது..? இப்போ நீங்க கூட சொல்லல.., அக்கம் பக்கம் பாக்க மாட்டீங்களான்னு..” கோபத்தில் வார்த்தைகள் தடுமாறி, மூச்சு வாங்கியது.

மேலும் சற்று நேரம் அவள் எதை எதையோ உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டான். அவன் அமைதியாகவே இருக்கவே, அவன் முகம் நோக்க, “உங்களுக்கே உங்களை பிடிக்கலன்னா.., வேற யாருக்கு உங்களைப் பிடிக்கும்?” அவன் நிதானமாக வினவ, புரியாமல் விழித்தாள்.

“இதெல்லாம் ஒரு குறையா? கை இல்லாமல், கால் இல்லாமல், பார்வை கூட இல்லாமல் இருக்குறவங்க நிறையப்பேர் இந்த உலகத்தில் தன்னம்பிக்கையோட வாழ்ந்துட்டு இருக்கறாங்க. உங்களுக்கு அதெல்லாம் தெரியவே இல்லையா?

“யார் என்ன சொன்னாலும், ஆமா.., இது இப்படித்தான்.., நான் இப்படித்தான்னு தைரியமா ஏன் நிக்க முடியலை? உங்க குறையை மத்தவங்க அறியாதவாறு எவ்வளவு அழகா கையாள்றீங்க.., அந்த ஸ்பிரிட்டை தயங்காமல் எல்லோரிடமும் வெளிப்படுத்த என்ன தயக்கம்?

“உங்ககிட்டே சத்தமா குரல் உயர்த்தி பேசுறவங்க கிட்டே, எனக்கு மெதுவா பேசினாலே புரியும்னு தைரியமா ஏன் சொல்ல முடியலை? அப்போ, மத்தவங்களோட சிம்பதியை நீங்க எதிர்பார்க்கறீங்களா? மத்தவங்களோட இரக்கத்தை

ஒரு சின்ன புன்னைகையில் கடந்துவிட முடியுமே அது ஏன் முடியலை?” அவன் வினவ, விழி விரிய அவனைப் பார்த்திருந்தாள்.

பொதுவாக அவளுக்கு அட்வைஸ் செய்தால் பிடிக்காது. ஆனால், அவன் பேசுவதை கேட்க அவ்வளவு பிடித்தது. அவனது அந்த கோபம் பிடித்தது, அவனது பேச்சுக்கு தக்க, அவன் தொண்டைக்குழி ஏறி இறங்குவது பிடித்தது. அவன் கண்களில் வழியும் பாசம் பிடித்தது.

மொத்தத்தில் அவனையே அவளுக்கு பிடித்து தொலைத்தது. காரணமே இல்லாமல், கணக்கிட முடியாத அளவு பிடித்தது. அவன் அருகில் இருந்தால் தன் குறை அவளைத் தீண்டவே இல்லையே.., அந்த நிலை பிடித்தது.

அவன் பேசிக்கொண்டே இருக்க, மென்மையாக அவன் கரத்தை பற்றிக் கொள்ள, ஒரு நொடி தடுமாறியவன், அவள் அறியாமல் சுதாரித்து, அவள் தாடையைப் பிடித்து தன் கண்களைக் காண வைத்தவன் தொடர்ந்தான்.

‘இப்படியே அவன் நெஞ்சில் சாய்ந்து கொள்ளவா..?’ அந்த நிம்மதியை அனுபவிக்க வேண்டும்.., அவள் விழி சேதி சொல்ல, அதை முதல் முறையாக படிக்க மறுத்தான்.

தன் பார்வையை அவள் விழிகளில் இருந்து இறக்கி, அவள் மூக்கைப் பார்த்து உரையாடத் துவங்கினான். அவள் விழி, தன்னை கொள்ளையிடுவதை அவன் வேறு எப்படி தடுப்பதாம்?

“மொழி படம் பாத்திருக்கீங்களா? அதே மாதிரி ஹிந்தியில் ப்ளாக் படம் பாத்திருக்கீங்களா? அவங்களோட குறையைக் கடந்து, நான் இப்படித்தான், என் இயல்போடு என்னை ஏத்துக்கோன்னு எவ்வளவு தைரியமா இருக்காங்க.

“உங்களுக்கெல்லாம் ஆயிரம் படம் வந்தால் கூட உங்களோட காம்ப்ளெக்ஸ் எல்லாம் போகாதா? முதல்ல மனசு திறந்து பேசப் பழகுங்க, சுத்தி இருக்குறவங்க கிட்டே

சின்ன சிரிப்பு, வாழ்க்கை எவ்வளவு அழகா மாறிப் போகும் தெரியுமா?” அவன் கேட்க, அவனைப் பார்த்து புன்னகை பூத்தவளை தடுக்க முடியாமல் தடுமாறிப் போனான்.

மீண்டும் தெளிந்தவன், “படிப்பு எல்லாத்தையும் கத்துக் கொடுக்கணும், அதை விட்டுட்டு.., இப்படி முடங்கிப் போனால்.., கொஞ்சம் உங்க கூட்டை விட்டு வெளியே வந்து பாருங்க. உலகம் ரொம்ப அழகானது, அதைவிட மனிதர்கள், அதிலும் நம்ம மேலே அக்கறை உள்ள மனிதர்களின் அன்பு, அதைவிட இனிமையானது.

“உங்க முன்கோபத்தால் நீங்க எதையும் இழப்பது எனக்குப் பிடிக்கலை, அதனால்தான் இவ்வளவு தூரம் சொல்றேன். தப்பா இருந்தா மன்னிச்சிடுங்க..” கொஞ்சம் வேகமாக மொழிந்தவன், இறுதியில் அமைதியாக முடிக்க, அவனையே அசையாத பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளது பார்வை அவன் கரத்தில் பதிய, சிறு சிராய்ப்பில் ரத்தம் கசிவதைக் கண்டவள், “ரியலி சாரி.., என்னால் தானே..” சற்று துடித்துப்போய் தன் கைக்குட்டையால் அந்த ரத்தத்தை துடைத்தாள்.

“ஐயோ என்ன பண்றீங்க.., கர்ச்சீப் வேஸ்ட் ஆகப் போகுது.., அப்படியே விட்டால் போதும், அதுவே சரியாயிடும். விடுங்க..” வேகமாக தன் கரத்தை விடுவித்துக் கொண்டான்.

‘நான் சொன்னது ஏதாவது இவங்களுக்கு புரிஞ்சுதா இல்லையா?’ அவன் மனம் கேள்வி கேட்க, அவளது காதல் சுமந்த பார்வையை பிடிவாதமாய் தவிர்த்தான்.

“தேங்க்ஸ்.., நீங்க சொன்னதை ட்ரை பண்றேன்..” மெல்லிய குரலில் உரைக்க, அவன் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பிரகாசம்.

சற்று தூரத்தில் இருந்து அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான் டிரைவர். ‘பாப்பாவுக்கு இந்த தம்பியை எப்படி பழக்கம்? பாத்தா இன்னைக்கு நேத்து பழக்கம் மாதிரி தெரியலையே..’ அவன் யோசனை ஓட, இதை உடனே மாணிக்கத்திடம் தெரிவிக்க வேண்டும் என முடிவெடுத்தான்.

அன்புவோ.., நேரமாவதை உணர்ந்து, “சரிங்க.., எனக்கு டைம் ஆகுது, நான் கிளம்பறேன். நீங்களும் கிளம்புங்க..” இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

அவளுக்கு உள்ளுக்குள் உயிர் துடித்தது. ‘போகாதே..’ கெஞ்சிவிட மனம் தவிக்க, அதைச் சொல்ல முடியாமல் பார்வையில் செய்தியை வழிய விட்டாள்.

அவள் பார்வையில் இருந்த எதிர்பார்ப்பும் ஏக்கமும் புரிய, சற்று திணறிப் போனான். ‘இது எந்த காலத்திலும் நடக்கவே முடியாத நினைப்பு வேண்டாம்..’ தனக்குத் தானே உரைத்தவன், அவள் பார்வை புரியாதவன்போல் நடித்தான்.

அவன் விலகிச் செல்ல முயல, ‘இனிமேல் எங்கே.., எப்படிப் பார்ப்பது?’ அவள் மனம் தவிக்க, “அன்பு..” செல்லும் அவனை குரல் உயர்த்தி அழைத்தாள்.

‘ஆண்டவா, ஏன் இப்படி சோதிக்கற? அவங்களை நான் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கறேன்னு எனக்குத் தெரியுது. ஆனா.., இந்த நேசத்துக்கு ஆயுளே கிடையாது என்பது அவங்களுக்கு ஏன் புரியலை..?’ மனதுக்குள் அரற்றியவன் அவள் அழைப்புக்கு கட்டுப்பட்டு வந்தான்.

“நீங்க பிட்சாஹட்ல இப்போ வேலை பாக்கலையா..?” அவள் கேட்க, உள்ளுக்குள் பலமாக உதறிப் போனான் அன்பு.

*****

# பகுதி – 8.

அவளது அந்த கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்றே அவனுக்குத் தெரியவில்லை. அதைவிட, அவள் தன்னை மீண்டுமாக அங்கே காண வந்திருக்கிறாள் என்னும் நினைப்பு அவனை உள்ளுக்குள் பயம் கொள்ளச் செய்தது.

அதை மறைத்தவன், "நான் ஒரு இடத்தில் இருக்க மாட்டேங்க.., ஓடிட்டே இருப்பேன். ஒரு இடத்தில் தேங்குவது எனக்கு எப்பவுமே பிடிக்காது சோ.." அவள் கேள்விக்கான பதிலை அழகாய் தவிர்த்தான்.

அதுவே அவனுக்கு வினையாகிப் போக, "நீங்க எங்கே தங்கி இருக்கீங்க?" அவளது அடுத்த கேள்வியை அவன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

'உங்களுக்கு எதுக்கு அதெல்லாம்..?' அவன் கேட்டிருந்தால் அனைத்தும் அங்கேயே முடிந்திருக்கும். ஆனால்.., தன் முன்னால் மலர்செண்டை நீட்டும் அவளிடம் முள்ளை பரிசளிக்க அவனால் எப்படி முடியும்?

எங்கே அவன் அப்படி கேட்டு விடுவானோ..?' என அவள் பரிதவித்ததை அவன் அறிந்திருக்க நியாயமில்லைதான்.

அதே நேரம்.., அவன் பாக்கெட்டில் இருந்த அலைபேசி குரல் எழுப்ப, வேகமாக அதை எடுத்தவன், "ஹல்லோ.., சார்.., இன்னும் அஞ்சே நிமிஷத்தில் அங்கே இருப்பேன். கொரியர் பிக் பண்ணிட்டேன். ஆன் தி வே.." அந்த பக்கம் அவனுக்கு என்ன அவசரமோ? அவசரமாக கொரியரை எதிர்பார்த்திருப்பது அவரது பேச்சிலேயே தெரிந்தது.

அலைபேசியை அணைத்தவன், 'இதுதான் சாக்கென எதுவும் சொல்லாமல் போய்விடுவோமா?' ஒரு நொடி எண்ணியவன், தன் முகம் பாராமல், ஏதோ தவறு செய்த

குழந்தைபோல் அமர்ந்திருக்கும் அவளைப் பார்த்துவிட்டு, எப்படிச் செல்வான்?

“உங்களுக்கு வேலை இருக்குன்னா கிளம்புங்க..” அவன் முகம் பார்க்காமல் உரைக்க, அவனுக்கு உள்ளுக்குள் பிசைந்தது.

‘அன்பு.., நீ இங்கே இருப்பது இன்னும் ஒரு மாதமோ.., இல்லை மூன்று மாதமோ.., அதன் பிறகு இவை எல்லாம் மாறி விடக் கூடும். சொல்லிடு..’ அவன் மனம் குரல் கொடுக்க, அவளை நெருங்கினான்.

அவன் தன்னை விட்டு விலகிச் செல்லாமல், நெருங்கி வருவதே அவளை உயிர்பிக்க, வேகமாக அவனை ஏறிட்டாள். “பூந்தமல்லி ஏரியாவில் தாங்க இருக்கறேன். காலைல நாலு மணியில் இருந்து ஏழு மணி வரைக்கும் அங்கே இருக்கும் தெருவில் பேப்பர் போட்டுட்டு, அங்கேதான் சுத்திட்டு இருப்பேன்.

“அதை விட்டா, பூந்தமல்லி பஸ்டப் பக்கத்தில் திரும்புற தெருவில் இருக்கும் அண்ணாச்சி கடை கஸ்டமர்க்கு தண்ணி கேன் சப்ளை பண்ணுவேன். பிறகு.., இந்த கொரியர் வேலை.., மதியம்.., பிளம்பர் வேலை செய்வேன்.

“மோட்டார் ரிப்பேர் பாக்குறது.., அந்த வேலையும் நடுவில் நடக்கும். ஏதாவது எஞ்சினியர் கூப்ட்டா, அவங்க ஹெல்புக்கு போவேன், பிட்ஸாஹட், பெட்ரோல் பாங்கு.., இப்படி நாடோடிதான்..” ஒரு வேளை தன் நிலையைப் பற்றி சொன்னால், அவள் மனநிலை மாறும் என எண்ணினானோ?

ஆனால், அதற்கு மாறாக.., “உங்க போன் நம்பர் என்ன?” அவள் திடுமென கேட்க, இப்பொழுது அப்பட்டமாய் அதிர்ந்து போனான்.

‘நான் அவ்வளவு சீக்கிரம் மாற மாட்டேன்..’ அவளது பிடிவாதம் கண்களில் வழிய, மானசீகமாக தலையில் கை

வைத்துக் கொண்டான்.

‘ஆண்டவா.., இதென்ன உல்ட்டாவா வொர்க்கவுட் ஆகுது..’ மனதுக்குள் புலம்பியவன்,

“போன் நம்பர்..” சற்று திணறினான்.

“அதான் பிளம்பிங் வேலை, மோட்டார் எல்லாம் ரிப்பேர் பண்ணுவேன்னு சொன்னீங்களே.., எங்க வீட்டிலும் எல்லாம் இருக்கு..” அவள் இதழ்களில் ஒரு வசீகரப் புன்னகை தவழ்ந்தது.

“ஓ.., அப்படியா..?” கேட்டவன் தன் எண்ணை சொல்லத் துவங்க,

“என் நம்பர்க்கு ஒரு மிஸ் கால் கொடுங்க, நான் சேவ் பண்ணிக்கறேன்..” அவளது எண்ணை உரைக்க, கைகள் சற்று நடுங்க, அவள் எண்களை அழுத்தியவன், ரிங் போக காத்திருந்தான்.

அவளது கைப்பையில் இருந்த அலைபேசி அதிரும் ஒலி கேட்க, தன் அலைபேசியை வெளியே எடுத்தவள், அவன் முகத்துக்கு நேராக அதைக் காட்டி, “இதுதானே..” அவனிடம் கேட்க, மெதுவாக தலை அசைத்தான்.

“சரி.., உங்க வேலையை நான் டிஸ்டப் பண்ணலை.., நீங்க கிளம்புங்க..” அவள் உரைக்க, ஒரு மாதிரி மந்திரத்துக்கு கட்டுப் பட்டவனாக அங்கிருந்து கிளம்பினான்.

‘என்னடா செய்து வச்சிருக்க..’ தனக்குத் தானே புலம்பிக் கொண்டவன், அங்கிருந்து விரைந்தான்.

அவளுக்கோ.., உலகையே வென்றுவிட்ட சந்தோசம். இனிமேல் அவனை யாராலும் தன்னிடமிருந்து பிரிக்க முடியாது என்ற பரவசம்.., அவ்வளவு நாள் இருந்த இறுக்கம் குறைய உற்சாகமானாள்.

வீட்டுக்கு வந்தவள், “அம்மா பசிக்குது..” வந்த வேகத்தில் உரைக்க, சாந்திக்கு தன் காதையே நம்ப முடியவில்லை. அவள் பசிக்கிறது எனச் சொல்லக் கேட்டே சில வருடங்கள் கடந்து விட்டன. அப்படி இருக்கையில், காலை வரைக்கும் எதையோ பறிகொடுத்தவள் போல் இருந்தவள், சட்டென இப்படி மாறினால்.., அவர் வியக்காமல் என்ன செய்வார்?

“இதோ கொண்டு வரேன் கீர்த்தி..” உரைத்தவர், சாப்பாடு போட்டு அவளுக்கு கொடுக்க, தன் கைப்பையில் இருந்து ஹியரிங் மெஷினை எடுத்து மாட்டிக் கொண்டாள். கூடவே அலைபேசியும் அவள் கரத்தில் தவழ்ந்தது.

“ஊட்டி விடும்மா..” அவள் கேட்கையில், மயக்கமே வராத குறைதான்.

சாந்தி ஒரு நொடி ஸ்தம்பித்து நின்றுவிட, “அம்மா..” தாயை உலுக்கினாள்.

கண்களில் வழியத் துடித்த கண்ணீரை, மகளின் கோபத்துக்காக கட்டுப் படுத்தியவர், வேகமாக பிசைந்து ஊட்டினார்.

“அப்பா எப்போம்மா வருவாங்க..?” அடுத்த கேள்வி அவளிடம் பிறக்க, எங்கே கையில் இருக்கும் தட்டை கீழே போட்டு விடுவோமோ எனப் பயந்தவர் கெட்டியாக அதைப் பிடித்துக் கொண்டார்.

“போன் போட்டு வரச் சொல்லவாம்மா..” இப்படியான விசாரிப்புகள் அவளிடமிருந்து வந்ததே இல்லை என்பதால் வேகமாகக் கேட்டார்.

“ம்ச் இல்ல.., வேண்டாம்.., அப்பா வந்த பிறகு பேசிக்கறேன்..” உரைத்தவளது பார்வை முழுவதும் அலைபேசியிலேயே இருக்க, மகளது புதுவிதமான நடத்தையில் ஒரு தாயாக அவரது புலன்கள் எல்லாம் அலாட் ஆனது.

அவளுக்கு எதிரில் நின்று ஊட்டியதால், அவள் அலைபேசியில் என்ன பார்க்கிறாள் என்பதை அவரால் காண முடியவில்லை.

அப்பொழுது அந்த நேரம்.., அவள் அலைபேசியின் திரையில், அன்புவின் புகைப்படம் ஒளிர்ந்து கொண்டிருந்ததைப் பார்த்திருந்தால் அவர் என்ன ஆகி இருப்பாரோ?

வீட்டுக்குள் இருந்தாலே.., 'என்னை தொல்லை செய்யாதே..' என்னும் விதமாக ஹியரிங் மெஷினை பொருத்தாமல் இருக்கும் மகள், முதல் முறையாக, தன்னிடம் பேச வேண்டி அதைச் செய்திருக்கிறாள்.

வழக்கமே இல்லாமல்.., சாப்பாடு கேட்டு, அதை தன்னையே ஊட்டிவிடச் சொல்லி, தந்தையைப் பற்றி வினவி.., அலைபேசியை இமைக்க கூட மறந்து பார்த்திருந்தால்.., அவருக்கு சந்தேகம் வராமல் என்ன செய்யும்?

ஒரு தாயாக அவளது மாற்றம் மகிழ்ச்சி என்றாலும், அதே தாயாக.., மகள் எந்த சிக்கலிலும் மாட்டிவிடக் கூடாது என்றும் இருக்கும் தானே.

"போன்ல அப்படி என்னம்மா பாக்குற..?" தாய் கேட்க, அப்படியொன்றும் கீர்த்தி தடுமாறவில்லை.

அப்படி அவள் தடுமாறியிருந்தால் சாந்தி சந்தேகப்பட்டிருப்பாரோ என்னவோ? அவளோ.., "ஒரு போட்டோம்மா.." உண்மையாக இருந்தாலும், முழு உண்மையை அவள் உரைக்கவில்லை.

'யாரோட போட்டோ..?' அவருக்கும் கேட்க ஆசைதான். ஆனால்.., இத்தனை வருடங்களில் ஒரு நாள் கூட அவளிடம் கேள்வி கேட்டு பழகியிராதவர்.., அப்படி கேட்கும் அளவிலும் அவள் நடந்துகொள்வதில்லை என்பது வேறு விஷயம்.

“சரிம்மா.., அப்பா வந்தால் என்னை கூப்பிடுங்க..” எவ்வளவு உண்டோம் எனத் தெரியாமலே எழுந்து செல்ல, மகள் இவ்வளவு சாப்பாடு சாப்பிட்டதே இல்லை என்பதை அந்த தாயுள்ளம் குறித்துக் கொண்டது.

தன் அறைக்கு வந்தவள், கதவை சாத்தி விட்டு, படுக்கையில் குப்புற விழுந்து அலைபேசியை கைகளில் எடுத்துக் கொண்டாள். அலைபேசியில், சற்று திகைத்த முகத்தோடு நின்றிருந்தான் அன்பு. மனதுக்குள் கல்வெட்டாய் பதிந்து போன அவன் உருவம்தான்.

ஆனால், அதையே தன் கைகளுக்குள் பார்க்கையில் இனம் புரியாத பரவசம். “அன்பு..” சொல்லிக் கொண்டவள், ஆசையாய் அவனைப் பார்த்திருந்தாள்.

சாதாரணமாக ஒரு டிஷர்ட்.., வெயிலின் அலைச்சலை காட்டும் வகையில் கலைந்த தலை, சற்று வியர்வை வழிய, கண்களில் மட்டும் ஒருவித பாவனையைத் தாங்கி அவன் நின்ற விதம்.., அப்படியே அவளை அள்ளிக்கொண்டு போனது.

முதல் பார்வையில் வெகு சாதாரணமாக கடந்துவிடும் தோற்றம்தான். ஆனால்.., அவன் பார்வையை சந்திக்கும் எவராலும், அவனோடு நட்பு பாராட்டாமல் இருக்க முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது.

அவனிடம் ஆளை அசர வைக்கும் வசீகரம் இல்லை என்றாலும், ஒரு ஆளுமை இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இன்னும் கொஞ்ச நேரம் என்னை பார்த்துக் கொண்டிரேன்.., என அழைக்கும் கண்கள்.., “போடா..” செல்லமாக சொல்லிக் கொண்டாள்.

முதல் வேலையாக அந்த புகைப்படத்தை பாஸ்வேர்ட் போட்டு லாக் செய்து பத்திரப் படுத்தினாள். இந்த காதல் வந்தால் கள்ளத்தனமும் சேர்ந்தே வந்துவிடுமோ?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

ஒரு கட்டத்தில் இனிய நினைவுகளோடு தன்னை மீறி உறங்கி விட்டாள். எத்தனை இரவுகள் உறக்கம் தொலைத்தாள் என்பதை அவள் வீட்டு பால்க்கனியைக் கேட்டால் அது சொல்லும்.

சாந்தி இரு முறை வந்து பார்த்து சென்றதோ.., மாணிக்கம் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்தவர், அவளை தேடிச் சென்று திரும்பியதையோ.., அவளது தம்பி வாசன், இருமுறை அவளை உலுக்கியும் கூட அவள் எழவே இல்லை. அவ்வளவு ஆழமான உறக்கம்.

பொதுவாக அவளது புலன்கள் எப்பொழுதும் விழிப்பிலேயே இருக்கும். உறக்கத்தில் இருந்தால் கூட, அவளது அறைக் கதவைத் திறந்து ஒருவர் உள்ளே வந்தால், கேட்காமலேயே அதை அவளால் உணர முடியும். அப்படி இருக்கையில், இத்தனைபேர், இத்தனை முறை சென்றும் அவள் எழாமல் போகவே சற்று குழம்பித்தான் போனார்கள்.

“சாந்தி.., கீர்த்திக்கு உடம்பு சரியில்லையா..? இல்ல நீ ஏதாவது சொன்னியா..?” நூறாவது முறையாக இதே கேள்வியை தன்னிடம் கேட்ட கணவனை கொலைவெறியோடு பார்த்தார்.

“எத்தனை முறை இதையே கேப்பீங்க? வெளியே போயிட்டு வந்தவ, என் கையால் திருப்தியா சாப்ட்டு படுத்திருக்கான்னு சொன்னால் நம்பவே மாட்டீங்களா? உங்க தொல்லை பொறுக்காமல், அவ நெத்தியில் கூட கை வச்சு பாத்துட்டேன்.., அவ எழவே இல்லை.

“இப்போ அவளை உசுப்பி எழுப்பி விடவா? இல்லன்னா வாசனை அனுப்பவா?” சற்று கோபமாகவே வினவினார்.

“அதெல்லாம் எதுவும் வேண்டாம். நானே ரெண்டு முறை அவளை உசுப்பிட்டேன். அவ அசையிற வழியைக் காணோம்..” வேகமாக உரைத்தவன், பெற்றவர்களின்

சூடான பார்வையில் தான் உளறியதை உணர்ந்து கொண்டான்.

“ஏண்டா.., தூங்குற புள்ளையை உசுப்பினியா..? உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்..” அவர் கொந்தளிக்க, இன்னைக்கு தான் செத்தோம் என்ற முடிவுக்கே அவன் வந்துவிட்டான்.

“ஐயோ அப்பா.., சும்மா லேசாதான்..” அவன் சரணாகதி ஆக, அப்பொழுதும் மாணிக்கம் அவனை விடவே இல்லை.

“இந்த வீட்டில் என் பொண்ணு நிம்மதியா தூங்கக் கூட முடியாதா..?” எனக் கேட்டவர் ருத்ரதாண்டவமே ஆட, சற்று நேரத்துக்கு முன்னர், இவரும்தானே அங்கே போய் வந்தார் என்பதெல்லாம் அவருக்கு மறந்தே போனது.

“அப்பா.., அப்படியெல்லாம்..” அவன் கெஞ்சத் துவங்க, அதே நேரம்..,

“அப்பா.., எதுக்கு இப்போ இவ்வளவு சத்தம்..?” கீர்த்தியின் குரல் அவரை அப்படியே கட்டிப் போட்டது.

“அம்மாடி.., அப்பா சத்தம் போட்டு உன்னை எழுப்பிட்டனா? நீ வேண்ணா இன்னும் கொஞ்ச நேரம் படுத்துக்கோ..” அவர் உரைக்க, சாந்தியும், வாசனும் அமுக்கமாக சிரித்துக் கொண்டார்கள்.

“இவர் சத்தம்போட்டு அவ எழுந்திரிக்கவா? நல்ல கதையா இருக்கே. நல்ல நேரத்திலேயே அவளுக்கு..” வார்த்தையை முடிக்கும் முன்னர், சாந்தியின் கரம் அவனை அழுந்தப் பற்றியது.

கண்கள் அவனை உக்கிரமாக முறைக்க, இந்த வீட்டில் தனக்கு கொஞ்சமாவது சப்போட் செய்யும் தாயின் கோபத்துக்கு ஆளாக அவன் தயாராக இருக்கவில்லை.

“அம்மா.., நான் ஏதோ புளோல சொல்லிட்டேன். மத்தபடி..” தாயிடம் சின்னக் குரலில் உரையாட, வேகமாக எழுந்து தன் அறைக்குச் சென்றுவிட்டார்.

தாயின் பின்னால் அவன் ஓட, அவர்களை மாணிக்கமோ, கீர்த்தியோ கண்டுகொள்ளவில்லை. நிதானமாக படிகளில் இறங்கி வந்தவள், “அம்மா, காபி..” குரல் கொடுக்க, மகனை தள்ளி விட்டு, வேகமாக கிச்சனுக்கு விரைந்தார்.

கைகள் அதன் போக்கில் காபி போட, கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது. தன்னால் தாய் அழுவதை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பொதுவாகவே வாசனுக்கு அவன் அக்கா என்றால் உயிர்தான். அவள் விலகிச் சென்றாலும், அவளிடம் நட்பு பாராட்டவே விரும்புவான்.

அப்படி இருக்கையில்.., “அம்மா.., அம்மா.., அதான் நான் தெரியாமல் சொல்லிட்டேன்னு சொல்றேனே..., கேளுங்கம்மா..” தாயின் கரம் பிடித்து கெஞ்சினான்.

“மனசுக்குள்ளே இருக்கது தாண்டா வார்த்தையில் வரும். அவளை பாத்துக்க வேண்டிய நீயே இப்படிப் பேசினால்.., உன்மேல் வச்சிருக்கும் நம்பிக்கையை எல்லாம்.., அந்த வார்த்தையாலேயே கொன்னுட்டடா..” அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

வாசனின் வயதுக்கு அதெல்லாம் ஒரு சாதாரண கேலி வார்த்தைகள். ஆனால், அவன் வீட்டுக்குள் எப்பொழுதும் யோசிக்காமல் பேசிவிட முடியாது. இன்று தன்னை மீறி அவன் பேசியது, இப்படி ஒரு நிலையில் தன்னை நிறுத்தும் என அவன் எதிர்பார்க்கவே இல்லை.

காபியை வேகமாக கலக்கியவர், “இனிமேல் என்கிட்டே பேசாதடா. குழந்தையில் இருந்து உனக்கு சொல்லிச் சொல்லி வளத்ததெல்லாம்.., உன் வாயில் இருந்து இப்படி ஒரு வார்த்தையை கேக்கவா..?” வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டார்.

வாசனுக்கும் தன் தவறு புரிகிறதுதான். இந்த உலகமே எதிர்த்தாலும், தன் அக்காவுக்குக் பிறகுதான் தனக்கு எதுவும் என்பது அவன் தெளிவாக அறிந்த உண்மை. அப்படி இருக்கையில், இன்றைக்கு எந்த சாத்தான் தன் வாயில் இருந்தது எனத் தெரியவில்லையே.., மறுகிப் போனான்.

கிச்சனுக்குள் எவ்வளவு நேரம் இருக்க முடியும்.., அவன் மெதுவாக வெளியே வர, “அப்பா.., நம்ம கன்ஸ்ட்ரக்ஷன்ல ப்ளம்பர் எல்லாம் இருக்காங்களா?” அவள் கேட்க, பொதுவாக எதைப் பற்றியும் விசாரிக்காத மகள், அதைப் பற்றி தனிப்பட கேட்கவே சற்று நிதானித்தார்.

“ஏம்மா.., உனக்குத் தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா..?” அவர் குரலில் பாசம் மட்டுமே நிரம்பி வழிந்தது.

“ம்.., ஆமாப்பா.., அவர் பேர் அன்பு..” அவள் தயங்கி உரைக்க,

“அம்மாடி.., நீ ஆடர் போடும்மா.., இந்த அப்பா செய்து கொடுக்கறேன். நீ எதுக்கு தயங்கற? அதுவும் இந்த அப்பாகிட்டே பேச, கேட்க என்னம்மா தயக்கம்? தம்பியை நாளைக்கு ஆபீஸ் வந்து என்னைப் பாக்கச் சொல்லு..” அவள் பேச்சுக்கு மறுப்பே கிடையாது என்பதை நிரூபித்தார்.

“நானும் நாளைக்கு ஆபீஸ் வரேப்பா..” அவள் உரைக்க, அவர் முகம் சந்தோஷத்தில் நிரம்பி வழிந்தது.

“அது உன் ஆபீஸ்ம்மா.., அங்கே வர நீ யாரைக் கேக்கணும்? வாம்மா..” மகள் தன்னிடம் அமர்ந்து இப்படி பேசி எத்தனை காலங்கள் ஆகி விட்டது. அப்படி இருக்கையில், அவள் ஒன்றைக் கேட்டு அவர் மறுப்பதா?

தந்தையும் மகளும் பேசிக்கொள்ள, கணவன் முகத்தில் இருந்த நிறைவு சாந்தியை ஆசையாய் பார்க்கச் செய்தது.

கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களுக்குப் பிறகு அவர் முகத்தில் மகிழ்சியைக் காண்கிறார்.

அவர் செய்த தவறுக்கான தண்டனையை மகள் அனுபவிக்கறாளே என்ற கோபம் அவருக்கு இப்பொழுதும் கணவன்மேல் இருக்கிறதுதான். ஆனால், அவர் மகள்மேல் கொண்டிருக்கும் பாசம் பொய்யில்லையே.

ஒரு தந்தையாக மகளது ஆசையை நிறைவேற்றுவது ஒன்றே அவருக்கு குறிக்கோளாக இருக்க, மகளது முகத்தில் தெரியும் மலர்ச்சி, கண்களில் மிதக்கும் கனவு, அவள் முதல்முறையாக வைக்கும் கோரிக்கையே மற்றவனுக்காக என இருக்கையில், அதை இயல்பான ஒன்று என ஏற்க அவர் தயாராக இல்லை.

மகளின் வாழ்க்கையில் ஒரு நல்லது நடக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கும் மலையளவு இருக்கிறதுதான். அதுவும் மகளுக்கு பிடித்த விதத்தில் அமைய வேண்டும் என்பது அவரது மிகப்பெரும் அவா. அப்படி இருக்கையில், அவள் மனதுக்குள் ஒளிந்திருக்கும் ரகசியம் என்னவென்று அறிய ஆவல் எழுந்தது.

மகள் கண்மூடித்தனமாக யாரையும் நம்பிவிடுவாள் என்பது அவரது பயமில்லை. மாறாக.., அவள் மனதில் இருப்பதை ஏன் மறைக்கிறாள் என்பதே அவரது எண்ணமாக இருந்தது.

இத்தனைக்கும் அவளது பேச்சுக்கு மறு பேச்சு இங்கே கிடையாது என்கையில், அவள் மறைப்பதன் காரணம்? ஒரு வேளை நான் நினைப்பதுபோல் எதுவும் இல்லையோ? ஆனால், அவள் கண்களில் தெரியும் கனவு.., அது பொய்யில்லையே.., அவர் கண்கள் அவளை ஆராயத் துவங்கியது.

வேறு நேரமாக இருந்திருந்தால், தாயின் பார்வையை அவள் கண்டு கொண்டிருப்பாள். இப்பொழுதோ அவள்

கனவில் மிதந்து கொண்டிருந்தாளே, எனவே அதை அவளால் உணர முடியவில்லை.

தன் மனதின் எண்ணத்தைச் சொல்லி கணவனையும் குழப்ப மனமில்லாமல், நடப்பதை மௌனமாக வேடிக்கை பார்க்க தயாரானார் சாந்தி.

*****

# பகுதி – 9.

அந்த இரவின் நிசப்தத்தில் தன் அலைபேசியை வெறித்தவாறு படுத்திருந்தான் அன்பு. நடப்பவை எதையும் நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. வாழ்க்கை தன் கையை மீறிச் செல்லும் உணர்வு.

‘நடப்பது எதுவும் நல்லதுக்கு இல்லை..’ மனம் அடித்துப் பேசியது.

கீர்த்திக்கு தன்மேல் இருக்கும் நேசம் அவனுக்கு தெளிவாகப் புரிகிறது. ஆனால், அதை தவிர்க்கும் மார்க்கம்தான் தெரியவில்லை. அதை ஏற்பது என்பதை ஒரு வாதத்துக்காக என்று கூட அவனால் நினைத்துப் பார்க்க கூட பிடிக்கவில்லை.

சென்னை வாழ்வு என்பது அவனுக்கு இன்னும் சில மாதங்களே. அதற்குப் பிறகு, தன் சொந்த ஊரில், ஒரு ராஜாவாக இருப்பதையே விரும்பினான். சென்னையில் அவனது படிப்புக்கு ஏதோ ஒரு கம்பெனியில் நல்ல வேலை கிடைக்கும் தான்.

அதையெல்லாம் விடுத்து, இந்த சென்னை வெயிலில் உலாவுவது, தன் உடல் உழைப்புக்கு பழக்கப்பட வேண்டுமே தவிர, ஏசி குளிரிலும், அதன் இதத்திலும் மூழ்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் பிடிவாதமாக வேலை செய்கிறான்.

அப்படி இருக்கையில், சென்னையிலேயே பிறந்து, இங்கே இருக்கும் வசதிக்கும் வாய்ப்புக்கும் பழகிய கீர்த்தி எப்படி என்மேல் நேசம் கொள்கிறாள்? அப்படி என்னிடம் என்ன இருக்கிறது..?’ தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

தன் மொபைலில் கேமராவை ஆன் செய்து, திருப்பி வைத்து, போட்டோ எடுத்தவன், அதைத் திருப்பிப் பார்க்க,

அப்படியொன்றும் பிரம்மாதமான மாற்றம் எதுவும் அவன் கண்களுக்குத் தெரியவில்லை.

சொல்லப்போனால் சென்னை வெயிலில் அலைந்து, இன்னும் கொஞ்சம் நிறம் மங்கிப் போனதாகத்தான் தோன்றியது. சென்னையில் உலவும் இளைஞர்களை ஒப்பிடுகையில், தான் ஆவரேஜ் மார்க் வாங்கித்தான் பாஸ் ஆவோம் என்று கூட தோன்றியது.

அவனுக்குத் தெரியவில்லை, ஒரு பெண்ணின் மனதைத் தொட அழகு முக்கியமில்லை, மாறாக, என்னை இவன் நன்றாக பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை. அவனோடு இணைந்தால் என் வாழ்வு சிறக்கும், தன்னை அவன் கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொள்வான் என்ற பற்றுதல் மட்டுமே வேண்டும் என அவனுக்குப் புரியவில்லை.

தன்னை தனக்காக, தன் நிறை குறைகளோடு அப்படியே ஏற்றுகொள்ளும் ஆண்மகனை ஒரு பெண் உயிராய் நேசிப்பாள் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? தன் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவள் உணர்வுகளை மதித்து நடக்கும் ஜீவனை அவள் விட்டுவிட நினைப்பாளா?

எந்த எல்லைக்கும் சென்று அவனை தன்னவனாக ஆக்கிக் கொள்வாள் என்பது அவன் அறியாதது.

மீண்டும் நினைவு அலைபேசியில் வந்த விஷயத்துக்குத் தாவ, ‘நாளைக்கு எங்கே செல்வதா வேண்டாமா?’ மனதுக்குள் மிகப்பெரும் போராட்டம். அதே நேரம், அங்கே சென்றால் கிடைக்கும் வருமானத்தை நினைக்கையில், நிச்சயம் செல்ல வேண்டும் என மனம் முரண்டியது.

இப்பொழுது அவன் இருக்கும் நிலைக்கு ஒற்றை ரூபாயாக இருந்தாலும் அதை அவன் இழக்க தயாராக இருக்கவில்லை. ஒவ்வொரு மாதமும் அவன் சம்பாதிக்கும் ரூபாயை அவன் செலவு செய்தால், சென்னையில் ஒரு

நிறைவான வாழ்வை அவனால் அமைத்துக்கொள்ள முடியும்.

ஆனால் அதை அவன் செய்வதே கிடையாது. மாதம் ஐந்தாயிரம் முதல் ஏழாயிரம் மட்டுமே அவன் செலவுக்காக வைத்துக் கொள்வான். மீதி வருமானம் முழுவதும் அவனது அக்கவுண்டில் மிகவும் பத்திரமாக பாதுகாக்கப் பட்டு வருகிறது.

பசிக்கு உண்பது, வயிறுக்கு நிறைவாக, நாக்குக்கு ருசியாக என அவன் சாப்பிட்டே வருடங்கள் கடந்து விட்டன. முடிந்த அளவுக்கு அவனே சமைத்துக் கொள்வான். அளவுக்கு சாப்பாடு, ஊற்றிக் கொள்ள ரசம், சாம்பார், அவ்வளவுதான் அவனது சமையல்.

காலையில் கூட டிபன் என்பதை அவன் துறந்து வருடங்கள் சென்றுவிட்டது. இரவில் அவசரத்தில் வைக்கும் சாப்பாட்டில் நீர் ஊற்றி சாப்பிடுவான். இல்லையா.., காலையில் அரக்க பரக்க ஒரு கஞ்சி வைப்பான் அவ்வளவே.

அவனது லட்சியத்தை எட்டும் வரைக்கும் ருசிக்கு உணவு என்பதை அவன் நினைத்து கூட பார்க்க முடியாது. ஒரு மாதிரி பிடிவாதம்.., ஒரு காலத்தில் அந்த பணத்தை ஒரு பொருட்டாகவே அவன் கருதியது கிடையாது.

இன்று அப்படி இல்லை.., அதை சம்பாதித்து தன் தாய், தந்தையின் கௌரவத்தை மீட்டே ஆக வேண்டிய கட்டாயம்.., பிடிவாதம்.., அலைபாயும் மனதை இந்த நினைவுகள் கட்டிப் போட, அலுப்பில் அப்படியே உறங்கிப் போனான்.

காலையில், நான்கு முப்பதுக்கு விழிப்பு வர, வழக்கமான அவனது ஓட்டம் துவங்கியது. மதியம் இரண்டு மணிக்கு, மாணிக்கம் அழைத்த அந்த அலுவலகம் செல்ல, உயர்ந்து நின்ற அந்த கட்டிடைத்தை பார்க்கவே ஒருவித பதட்டம் அவனை தொற்றிக் கொண்டது.

தன் வண்டிய ஓரமாக நிறுத்தியவன் இறங்கி நிற்க, “தம்பி.., முதலாளியம்மா உங்களை வரச் சொன்னாங்க. முதல் மாடியில் இருக்காங்க..” செக்கியூரிட்டி உரைக்க, வேகமாக பார்வையை சுழற்றியவன், அங்கே இருந்த கண்காணிப்பு கேமராவை கண்டு கொண்டான்.

அது கீர்த்தியின் அப்பாவின் இடம் என்பதால், சற்று கண்ணியமாகவே உடை அணிந்து வந்திருந்தான். அவரது முதல் பார்வையிலேயே தான் கீழிறங்கி தெரியக் கூடாது என தன்னை மீறி ஒரு எண்ணம்.

இது வரைக்கும், என் உழைப்புக்கும், நேர்மைக்கும் அவர்கள் ஊதியம் கொடுத்தால் போதும், என்ற நினைப்பு போய், முதல் முறையாக தன் தோற்றத்தைப் பற்றி அக்கறை கொண்டது எதனால் என அவனுக்கே புரியவில்லை.

“தேங்க்ஸ்ண்ணா..” உரைத்தவன், லிப்ட்டை தவிர்த்து படிகளில் விரைந்தான்.

‘அவர் தானே இருப்பேன்னு சொன்னார்.., இவர் என்ன முதலாளியம்மான்னு சொல்றார்.., ஒரு வேளை..’ அவன் எண்ணி முடிக்கும் முன்பு, படிக்கட்டின் வலப்புறம் இருந்த கதவு திறக்கப்பட, கீர்த்தி வாசலில் பிரசன்னமானாள்.

“அன்பு...” அவள் குரலில் கொட்டிக் கிடந்த மென்மையில், அவனுக்குள் சிறு பிரளயம். முதல் முறையாக அவளது காதில் அந்த கருவியைப் பார்க்கிறான். ஸ்கின் கலரில், அது இருப்பதே தெரியாத அளவுக்கு, அவள் காதில் கச்சிதமாக பொருந்தி இருந்தது.

அவன் தன் இடப்பக்கம் திரும்பிப் பார்க்க, சிறு தடுப்புகளுக்குப் பின்னால் நான்கு ஐந்து பேர் இருப்பதை கண்டுகொண்டான். அவர்களது பார்வை இங்கேயே இருக்க, அதை கொஞ்சம் கூட கண்டுகொள்ளவில்லை கீர்த்தி.

“வாங்க..” அழைத்தவள் தன் அறைக்கு அழைத்துச் செல்ல, அத்தனை பார்வையும் தன்னைத் தொடரும் உணர்வு.

அறைக்குள் நுழைந்தவள், தன் இருக்கையில் அமராமல், எதிரில் இருந்த இருக்கையில் ஒன்றில் அமர்ந்து, மற்றதில் அவனை அமரச் சொல்ல, தயக்கமாக என்றாலும் அமர்ந்து கொண்டான்.

“என்ன சாப்பிடறீங்க..? காபி.., ஆர் கூல்டிரிங்ஸ்..” அவள் உபசரிக்க,

‘என்ன இவங்க இப்படி பண்றாங்க.., இப்போ இவங்க அப்பா வந்தா என்ன நினைப்பார்? வேலைக்கு வந்தவனை இப்படிதான் உக்கார வச்சு பேசுவாங்களா?’ உள்ளுக்குள் பதைப்பாக எண்ணம் ஓட, “இல்லங்க.., எதுவும் வேண்டாம்..” வேகமாக உரைத்தான்.

அவள் பார்வையோ அவனிடமே நிலைத்து இருந்தது. இமைகளை தட்டி முழிப்பதை தவிர, அங்கே இங்கே நகர்த்தவில்லை. அவனுக்கு ஏசியின் குளிர் உடலைத் தாக்க, ‘இந்த வசதியில் இருக்குறவங்க எப்படி..?’ சிந்தையை கலைத்தது கதவைத் தட்டும் ஓசை.

‘அவளது அப்பாவாக இருக்குமோ..?’ எண்ணியவன் எழ முயல, “ம்ஹும்..” மறுத்து மெல்லியதாக முனகியவள், வாசல் பக்கம் பார்க்க, கையில் ஒரு ஃபயிலோடு உள்ளே வந்தான் ஒருவன்.

அதை வாங்கி மேஜைமேல் வைத்தவள், “திருப்பதியை வரச் சொல்லுங்க..” அவனிடம் உரைக்க, தலையசைத்துவிட்டு அவன் வெளியேறினான்.

வந்தவனது பார்வை தன்மேல் சுவாரசியமாக பதிந்து மீண்டதை ஏனோ ரசிக்க முடியவில்லை.

“அன்பு.., இங்கே வொர்க் பண்றதில் உங்களுக்கு சிரமம் எதுவும் இல்லையே..” அங்கே இருந்த மௌனத்தை அவளே

கலைத்தாள்.

“அப்படியெல்லாம் எதுவும் இல்லங்க..” ஒப்புக்கு பதில் அளித்தவன், ‘இங்கே வந்திருக்கக் கூடாதோ..?’ அவளது உபசரிப்பு.., ஏற்றுகொள்ள முடியாமல் அவனை திணறச் செய்தது.

அடுத்த ஐந்தாவது நிமிடம், திருப்பதி அங்கே வர, “திருப்பதி, அப்பா சொன்னாங்கல்ல.., அன்பு, இவர் தான். ஜஸ்ட் திரீ ஹவர்ஸ் தான்.., என்ன வேலைன்னு சொல்லிடுங்க..” அவள் உரைக்க மறுப்பு தெரிவிக்காமல் கேட்டுக் கொண்டான்.

“நீங்க வெயிட் பண்ணுங்க.., இப்போ வருவார்..” அவனை அனுப்ப, அவன் பார்வையில் தெரிந்த வியப்பை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

அவனுக்கு கீழே வேலை பார்க்க வந்திருக்கும் அவனுக்கு இப்படி ஒரு அறிமுகம் கொடுத்தால் அவன் வியக்காமல் என்ன செய்வான்?

“அப்போ நான் போறேன்..” தேவையில்லாமல் அவளுக்கு தன்னால் ஒரு அவப்பெயர் வருவதை அவன் விரும்பவில்லை.

“ஆல் தி பெஸ்ட்..” அவள் உரைக்க, சிறு புன்னகையில் அதை ஏற்றுக் கொண்டவன், சிறு தலையசைப்பில் விடை பெற்றான்.

திருப்பதியைப் பின்தொடர, “முதலாளியம்மாவை உனக்கு முன்னமே தெரியுமா?” அவனது கேள்விக்கு, மௌனத்தையே அவன் பதிலாக்க, அதற்குமேல் அவனை எதுவும் கேட்கவில்லை.

அவனது வேலையைச் சொல்லி, “இந்த வேலையை எவ்வளவு சீக்கிரம் முடிக்கிறியோ நீ கிளம்பலாம்..” சொல்லிவிட்டு அகன்றுவிட்டான்.

அதே நேரம்.., கீர்த்தியின் வீட்டில், மாணிக்கம், சாந்தியின் முன்னால் தயக்கமாக நின்றிருந்தான் டிரைவர் மோகன்.

“என்ன மோகன் சொல்ற..? நீ சொல்றது நிஜமா?” நம்ப முடியாமல் கேட்டார் மாணிக்கம்.

“ஆமாங்க ஐயா.., நேத்து பாப்பா அந்த தம்பிகிட்டே பேசிட்டு இருந்தாங்க. அதுவும்..” அவன் தயங்க,

“என்னன்னு முழுசா சொல்லு..” வெடித்தார்.

“ரொம்ப பழகுனவங்களாட்டம்..” அவனால் சொல்லவும் முடியவில்லை. சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை என்னும் குரலில் தயங்கியே நிறுத்தினான்.

“இதுக்கு முன்னாடி அவங்க பேசி பாத்திருக்கியா? அப்போ ஏன் என்கிட்டே சொல்லலை?” மாணிக்கத்திடம் கோபத்தையும் மீறி ஒரு பதட்டம்.

“இதுக்கு முன்னாடி பாத்தது இல்லைங்கையா..” படபடத்தான்.

“அப்போ எப்படி பழகுனவங்க மாதிரி பேசிட்டு இருந்தாங்கன்னு சொன்ன?” அவருக்கு புரியவே இல்லை.

இதற்கு அவன் என்ன பதில் சொல்வான்? அமைதியாய் அவன் நிற்க, மாணிக்கம் இருக்கையில் இருந்து எழுந்து அந்த ஹாலை அளந்தார்.

மோகன் சற்று நடுங்கிபோய் நிற்க, “மோகன்.., நீங்க போங்க..” சாந்திதான் அவனை அனுப்பினாள்.

“என்ன சாந்தி.., என்னென்னவோ நடக்குது. ஆனா, எதுவும் புரியவே இல்லை..” மகளது விஷயத்தில் சட்டென எதுவும் அவரால் செய்துவிட முடியாதே.

ஆனாலும்.., ஒரு சாதாரண வேலை செய்யும் ஒருவனோடு தன் மகள் பழகுகிறாள் என்பதைக் கேட்க அவருக்கு கஷ்டமாகத்தான் இருந்தது.

“நான் கேட்டுட்டே இருக்கேன்.., பித்து பிடிச்சவ மாதிரி உக்காந்து இருந்தால் என்ன அர்த்தம்..?” மகளிடம் காட்ட முடியாத கோபம், மனைவியிடம் பாய்ந்தது.

“இந்த கேள்வியை நீங்க உங்க பொண்ணு கிட்டே கேக்கணும்..” அவர் நிதானமாக உரைக்க, கட்டுக்கடங்காமல் கோபம் பெருகியது.

“போயும் போயும் ஒரு அன்னக்காவடி கூட பழக..” மேலே என்ன சொல்லியிருப்பாரோ, மனைவியின் பார்வை அவரது வாயை கட்டிப் போட்டது.

“நமக்கு தெளிவாக தெரியாத எந்த விஷயத்திலும் நாம தீர்ப்பு சொல்ல முடியாதுங்க” கணவனை அடக்குவது மட்டுமே அவரது அப்போதைய தேவையாக இருந்தது.

“இதையெல்லாம் முளையிலேயே கிள்ளி எறியணும். அப்படியே வளர விட்டால்.., இல்ல.., நான் விட மாட்டேன்...” ஒரு மாதிரி சூளுரைத்தார்.

“என்னங்க.., இது அவசரப்பட்டு முடிவெடுக்கும் விஷயம் கிடையாது. பொறுமையா, நிதானமா.., நம்ம பொண்ணுகிட்டே கேட்க வேண்டிய விஷயம்..” சற்று குரல் உயர்த்தியே பேசினார்.

“என் பொண்ணுகிட்டே அவனைப் பத்தி கேக்கச் சொல்றியா நீ..?” அந்த சூழலிலும் மகளிடம் கேள்வி கேட்க மாட்டேன் எனச் சொல்லும் கணவனை உக்கிரமாகவே பார்த்தார்.

“இப்படிப் பார்த்தால்..” அவர் உறும,

“நீங்க பெத்த பொண்ணுகிட்டே கேள்வி கேட்க முடியாது. ஆனால், மூணாவது மனுஷனை நீங்க குறை சொல்லுவீங்களா? இந்த அவசர புத்தியை எப்போதான் விடப் போறீங்க?

“உங்க பொண்ணு ஒரு விஷயத்தை மறைக்கணும்னு நினைத்திருந்தால், உங்க கிட்டேயே அவனுக்கு வேலை கொடுக்கச் சொல்லி கேட்டிருப்பாளா? ஒரு வேளை அவளுக்கு ஒரு நல்ல தோழனா அவன் இருந்தால்?” சாந்தி கேட்க, ‘அதுவும் யோசிக்க வேண்டிய விஷயம்தான்..’ அவர் அருகில் வந்து அமர்ந்தார்.

“இப்போ நான் என்ன செய்யட்டும்..?” பரிதாபமாக மனைவியின் முகம் பார்த்தார். தொழிலில் பல முடிவுகளை அசால்ட்டாக எடுக்கும் கணவன், மகள் விஷயத்தில் முழுக் கோழையாக மாறுவதை எண்ணி கவலை கொண்டார்.

“ஒண்ணு கவனிச்சீங்களா? முந்தி தனக்குள்ளேயே முடங்கிக் கிடந்த நம்ம கீர்த்தி, இப்போ அவளாகவே ஆபீஸ் போயிருக்கா. நாலு இடம் போய் வரா.., மத்தவங்களோட பழகறா. எதுவாக இருந்தாலும் கீர்த்தி நம்மகிட்டே சொல்லாமல் இருக்க மாட்டா.

“அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இருங்க. தேவையில்லாமல் நீங்க எதையாவது செய்யப்போய்.., அதுவே வேறு விதமா வினையாகிப் போவதை விட, பொறுமையாக இருந்தால் விஷயம் தன்னைப்போல் வெளியே வந்துவிட்டுப் போகுது.

“தேவையில்லாமல் குழப்பிக்காம, நீங்களும் அவளோட சேர்ந்து போய் வேலையைப் பாருங்க. அந்த தம்பியும் அங்கே தானே இப்போ போயிருக்கும். போங்க.., போங்க..” தன் வேலை முடிந்தது என எழுந்து சென்றுவிட்டார்.

சாந்திக்கு நன்றாகத் தெரியும்.., தன்னிடம் சாடும் கணவன், மகளின் முன்னால் பெட்டிப் பாம்பாக அடங்கித்தான் போவார் என்று. கூடவே, கீர்த்தி அங்கே இருக்கும்

நேரத்தில், மறந்தும் கூட அன்புவிடம் எதையும் பேசிவிட மாட்டார் என்பதும் அவருக்குத் திண்ணமே.

எனவே தைரியமாகவே அவரை அங்கே அனுப்பினார். அலுவலகத்துக்கு கிளம்பி வந்த மாணிக்கம், தன் அறைக்குச் செல்ல, அங்கே, ஜன்னலின் அருகே நின்று வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அம்மாடி.., ஏன் நின்னுட்டு இருக்க..?” தந்தையின் குரல் கேட்கவே, அவரைத் திரும்பிப் பார்த்தவள், “இன்னும் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு வர வேண்டியது தானேப்பா..” கேட்டவள் அங்கிருந்த இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

அவர் அமர்ந்து சற்று ரிலாக்ஸ் ஆகவே, “அப்பா.., அன்புவை திருப்பதி கூட அனுப்பி வைத்திருக்கிறேன். கொஞ்சம் பாத்துக்கோங்க..” மகள் உரைக்கவே மறுக்காமல் கேட்டுக் கொண்டார்.

பண விஷயம்.., சில முக்கியமான முடிவெடுக்கும் விஷயங்கள் தவிர மற்ற அனைத்தையும் மேற்ப்பார்வை பார்ப்பது அவருக்கு கீழே வேலை செய்பவர்கள்தான். அப்படி இருக்கையில், ஒரு சாதாரண பிளம்பரை நான் என்ன பார்ப்பது என்று கூட அவர் கேட்கவில்லை. அது அவரால் முடியவும் செய்யாது.

“ஏம்மா.., தம்பிக்கு வேண்ணா இங்கேயே நிரந்தரமா ஒரு வேலை போட்டு கொடுக்கவா?” அவருக்கு இப்படித்தான் கேட்கத் தெரியும்.

“இல்லப்பா.., அது சரி வராது. இதுவே போதும்..” மகள் முடித்துவிட அதற்கும் மறுத்து எதையும் பேசவில்லை.

தொடர்ந்த நாட்களில், அன்புவின் வருகை அங்கே தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிப் போனாலும், அவன் கீர்த்தியை காணக் கூட முயலவில்லை. முதல் நாளிலேயே, தனக்கு

அவன் வேண்டியவன் என்பதான அவளது நடத்தை, அங்கே அவனை அடையாளம் காட்டியிருந்தது.

அதை வளர விடுவதில் அவனுக்கு அவ்வளவாக உடன்பாடு இல்லை. எனவே முழுதாக தவிர்த்தான் என்றே சொல்லலாம். கீர்த்தியோ அவனை தினமும் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆங்காங்கே வைக்கப் பட்டிருக்கும் கண்காணிப்பு கேமரா அதற்கு உதவி செய்தது என்றால் அது மிகையில்லை.

அவளுக்கு அவனை தன் கண் முன்பாக காணுவதே போதும் என்ற நிலை. தன்னை அவன் தவிர்ப்பது அவளுக்கும் புரிகிறது தானே.

அன்புவின் விலகலும், மகளது சாதாரண நடத்தையும், மாணிக்கத்துக்கு எந்தவிதமான செய்தியையும் உரைக்கவில்லை. ஒரு வேளை, வேலைக்காக மகளை அணுகி இருப்பானோ.., என்ற யூகத்துக்கே அவரால் வர முடிந்தது.

அன்றைக்கு முழு அடைப்பு.., கடைகள் வாகனங்கள் என அனைத்தும் முழுதாக முடங்கி இருக்க, அன்புக்கு அன்றுதான் முதல் முறையாக ஓய்வு கிடைத்தது.

வீட்டில் அவன் ஓய்வெடுக்க, அவன் அலைபேசிக்கு முதல் முறையாக கீர்த்தியிடம் இருந்து அழைப்பு பிறந்தது. இத்தனை மாதங்களில், ஒரு நாள் கூட அவள் அவனுக்கு அழைத்தது கிடையாது. அப்படி இருக்கையில் அந்த அழைப்பை அவனால் தவிர்க்க முடியவில்லை.

“சொல்லுங்க..” வேகமாக அழைப்பை ஏற்றவன், மெதுவாக வினவ,

“ஆபீஸ் வாங்க அன்பு..” அவனது கேள்விக்கு அவளது பதில் இவ்வளவுதான்.

‘என்ன திடீர்ன்னு..’ யோசனை ஓடினாலும், அடுத்த கால்மணி நேரத்தில், அலுவலகத்தில் அவள் முன்னால் இருந்தான்.

அலுவலகமே வெறிச்சோடி இருந்தது. அங்கே அவர்களைத் தவிர யாரும் இருக்கவில்லை. அதுவே அவனுக்கு ஒருவித பதட்டத்தை கொடுக்க, ‘ஆண்டவா, இவங்க எதையும் சொல்லிடக் கூடாது..’ எங்கே அவள் மனதுக்குள் இருப்பதை சொல்லிவிடுவாளோ என்ற பயம் அவனுக்கு.

அவள் இதழ் வார்த்தைகளை உதிர்க்கவில்லை என்றாலும், அவள் கண்கள் பேசும் மொழி அப்பட்டமாக அவனுக்கு புரிகிறதே. அவள் நேசத்தை ஏற்கும் நிலையில் நான் இல்லை என்பதை விட, மறுக்கும் நிலைக்கு என்னை வைத்துவிடாதே கடவுளே..’ என்பதே அவனது இப்போதைய வேண்டுதலாக இருந்தது.

அவள் தன்னை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், நிச்சயம் தன்னை தினமும் பார்க்கிறாள் என அவன் உள்ளுணர்வு உரைப்பதை அவன் நம்பித்தான் ஆகவேண்டி இருந்தது.

தன் பதட்டத்தை மறைத்தவன், “என்னங்க.., ஏதாவது வேலை இருக்கா..?” நிச்சயம் அவள் அதற்காக அழைத்திருக்க மாட்டாள் எனத் தெரிந்தும் கேட்டான்.

“உக்காருங்க அன்பு..” உரைத்தவள், அங்கே இருந்த பிளாஸ்கில் இருந்த காபியை இரு கப்பில் ஊற்றி, ஒன்றை அவனுக்குக் கொடுத்து, மற்றதை தான் எடுத்துக் கொண்டாள்.

“இங்கே வேலை எல்லாம் எப்படி இருக்கு..?” கப்பில் இருந்த காபியை உறிஞ்சியவாறு கேட்க, பார்வையோ.., என்னைப் பார் என அவனுக்கு கட்டளை இட்டது.

“நல்லா போகுதுங்க..” அவள் கண்களுக்குள் ஊடுருவியவன் உரைத்தான். அவள் கண்களை விட்டு

மீளும் எண்ணமே அவனுக்கு இல்லை.

‘என்னை விட்டு எத்தனை நாள் தப்பிச் செல்வாய்..?’ அவள் கண்கள் கேட்க, அதற்கு எப்படி அவன் பதில் சொல்வதாம்?

‘எதற்கு அழைத்தாய்..?’ அவளிடம் கேட்க வேண்டிய கேள்வியை மனதுக்குள் முனகிக் கொள்ள மட்டுமே அவனால் முடிந்தது. ஒரு உண்மையான நேசத்தை உணர்ந்த பிறகு, அதைத் தவிர்ப்பது எவ்வளவு பெரிய வலியைக் கொடுக்கும் என அவன் உணர்ந்த நொடி அதுதான்.

சில நாட்களுக்கு முன்னர், பூஜாவிடம் மிகத் தெளிவாக மறுக்க முடிந்த தன்னால், இவளிடம் மட்டும் ஏன் முடியவில்லை..? தனக்குத் தானே கேட்டுக் கொண்டவனுக்கு பதிலை அறிந்த வினா என்றே தோன்றியது. வெளியே மழைச்சாரல் திடுமென அடிக்க, இருவரின் பார்வையும் ஜன்னலுக்குத் திரும்பியது.

அவனுக்கு இருந்த தயக்கமோ, குழப்பமோ அவளுக்கு கொஞ்சம் கூட இருந்ததாகத் தெரியவில்லை. ‘இவன் எனக்கானவன் என முடிவு செய்துவிட்டேன்..’ அவளது ஒவ்வொரு அசைவும் அவனுக்கு அதைத்தான் பறை சாற்றியது.

அவளது செய்கையில் முரட்டுத்தனமும், ஆணவமும் தெரிந்திருந்தால் சிலிர்த்து எழுந்திருப்பான். ஆனால்.., ஒருவித சரணாகதி தெரிகையில், அந்த மாயக் கட்டுக்குள் சிக்கிக் கொள்வதை தவிர, திமிறி விடுபட வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றவில்லை.

அதே நேரம், தன் நிலை, இடம்.., சற்று திணறி தன் நினைப்பில் இருந்து விடுபட்டவன், “மழை வந்துடுச்சு.., இது எப்போ நிக்கும், வரும்னே தெரியாது. நீங்க கிளம்புங்க..” சட்டென அந்த இடமே இருள் மாயமாகிவிட, ஒரு பெருமழை காத்திருப்பதை அது உரைத்தது.

“சரி போகலாம்..” இருக்கையில் இருந்து எழுந்து கொண்டவள், லிப்டின் பக்கம் நகர்ந்தாள்.

நடக்கையிலேயே.., “உங்களை ஏன் கூப்ட்டேன்னு கேக்கவே இல்லையே..” அவன் பக்கம் திரும்பினாள்.

“அதை நீங்களே சொல்லுவீங்கன்னு நினைத்தேன்..” உரைத்தவன், லிப்ட் பட்டனை அழுத்தி திறந்தான்.

அதற்குள் நுழைந்தவள், ‘ஜஸ்ட் உங்களை நேர்ல பாக்கணும்னு தோணிச்சு அதான்..’ உண்மையை உரைக்கும் தைரியமின்றி, “எனக்கு இங்கே டைம் பாஸ் ஆகலை அதான் வரச் சொன்னேன்..” முழுப்பொய் அவள் உரைக்க, அதைக் கண்டுகொண்டவனுக்கு தித்திப்பாய் உள்ளே இறங்கியது.

இதழ்கள் உரைத்த பொய்யை மீறி, தன் கண்களுக்குள் கணை வைத்து, அவனை வீழ்த்த, ஒரு நொடி மூச்சு திணறிப் போனான். ‘நேரடியாக இப்படிச் சொல்வாள் என அவன் எதிர்பார்த்திருக்கவில்லையே.

நிஜமாய் அவள் சொன்ன பொய்க்கு அவன் ஏமாந்திருக்க வேண்டும். ஆனால், அவன் கண்டுகொண்ட உண்மை, அவனை ஏமாற விடவில்லை. அவன் கண்களுக்குள் எதையோ துழாவியவள், அதில் இல்லாத ஏமாற்றத்தைக் கண்டு சற்று சோர்ந்து போனாள்.

ஆனால்.., அவனோடு இருக்கும் அந்த நிமிடம், அந்த ஏமாற்றம் கூட இனித்தது. காதல் பயித்தியம் பிடித்துவிட்டதாக தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

லிப்ட் மூடிக் கொள்ள, அந்த சிறிய லிப்ட்டில் இன்னும் இடம் இருந்தாலும், அவனோடு தோள் உரசும் நெருக்கத்தில் நின்றுகொண்டாள்.

இதில் கவனிக்க வேண்டிய விஷயமே.., தன் தடுமாற்றம், திகைப்பு அனைத்தையும் ஒரு சதவீதம் கூட அவளை எட்ட

அவன் அனுமதிக்கவில்லை.

‘எங்கே இதற்கு பதில் சொல் பார்ப்போம்..’ அவள் பார்வை சவால் விட, வேகமாக பின் வாங்கினான். லிப்ட் நொடியில் தரைத்தளத்தை தொட, “மழை ரொம்ப அடிக்குதே.., குடை வச்சிருக்கீங்களா? காருக்கு போக முன்னாடி நனஞ்சுடுவீங்க போல..” பார்வையை மழையின் பக்கம் திருப்பிக் கொண்டான். அவளுக்கு பதில் சொல்வதில் இருந்து தப்பிக்கும் மார்க்கம் அவனுக்கு வேறு இல்லையே.

“அன்பு.., ஒரு நிமிஷம் மழையில் நனைந்தால் எதுவும் ஆகாது. நீங்க எப்படி போவீங்க..?” நிஜமான கவலை அவளிடம்.

அதை உணர்ந்தவன், “அட.., இந்த உடம்புக்கு மழையோ வெயிலோ எல்லாம் ஒண்ணுதான். நீங்க பத்திரமா போங்க..” டிரைவர் காரை கொண்டு வந்து நிறுத்த, அவளை ஏற்றிவிட்டு, மழையில் நனைந்தவாறே தன் பைக்கை கிளப்பிச் சென்றான்.

மனதுக்குள்.., ‘சீக்கிரம் இங்கே இருந்து கிளம்பி விட வேண்டும். சென்னையில் நம் அத்தியாயம் முடியப் போகிறது..’ எண்ணியவன், மழையை கிழித்துக்கொண்டு பயணித்தான். அவனது திட்டமும், கடவுளின் திட்டமும் ஒன்றாக இருக்க வேண்டுமே.

*****

# பகுதி – 10.

அன்பைப் பார்த்து முழுதாக மூன்று நாள் கடந்துவிட்டது. அவனது அலைபேசிக்கு அழைத்தால், அதுவோ நாட் ரீச்சபிளில் இருக்க, என்ன செய்வது எனத் தெரியாமல் திணறிப் போனாள்.

‘எங்கே போய்விட்டான்..? என் கண் முன்பாக வைத்திருக்க வேண்டும் என நான் நினைக்க, என் கண் வட்டத்தை மீறி எங்கே சென்றான்?’ மனம் தவியாய் தவித்தது.

சாதாரண நோக்கியா போனாக இருந்தால், அவள் அழுத்தியதற்கு, எண்கள் அழிந்தே போயிருக்கும். ஆனால் ஆப்பிள் போனாகையால் சற்று சூடாகித்தான் போயிற்று. வேறு நேரமாக இருந்தால் அலைபேசியைப் பற்றிய நினைவே இல்லாமல் இருப்பவள், இப்பொழுது அதுவே துணை என்றானது.

முன்புபோல் மற்றவரிடம் கோபம், வெறுப்பு இல்லாமல் போனாலும், தனக்குத் தானே தனிமையை நாடினாள். உயிர்ப்பும், துவளலுமாக அவளது நிலையைப் பார்க்க பெற்றவர்களால் தான் தாங்க முடியவில்லை.

மாணிக்கத்துக்கோ அன்புவின்மேல் கட்டுக்கடங்காமல் கோபம் பெருகியது. ஆனால், அதை வெளிக்காட்டவும் அவரால் முடியவில்லை.

பெற்றவர்கள் தங்களுக்குள் பேசிகொள்வதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாதவர்களாகிப் போனார்கள். அவளிடம் எப்பொழுதும், எதற்காகவும் அவர்கள் கேள்வி கேட்டு பழகியது இல்லையே. பிறகு எப்படி இப்பொழுது கேட்பதாம்? அதைவிட என்னவென்று கேட்பதாம்? தயக்கம் அவர்களை கட்டிப் போட்டது.

தனக்குள் மூழ்கிப் போனாலும், அலுவலகம் வருவதை அவள் நிறுத்தாததே பெரும் ஆறுதலாக இருக்க, அவளுக்கு

துணை நிற்பதே அவர்களது கடமையானது.

எதையோ உண்டு, எதையோ உடுத்து, கண்களில் தேடலைச் சுமந்து திரியும் அவளைக் கண்கொண்டு பார்க்கவே முடியவில்லை. ஒரு பக்கம், 'தங்களிடம் ஏதாவது சொல்வாளா?' ஏக்கம் அவர்களையும் வதைத்தது.

அவள் மனதுக்குள் இருக்கும் நினைப்பு அவர்களுக்கும் லேசாக புரிகிறதே. கூடவே, அந்த மழை நாளில் அவனோடான அவளது சந்திப்பு.., அதை ஒரு நட்பின் வெளிப்பாடு என அவர்களால் ஏமாற முடியவில்லை.

அவனைப் பற்றி பேசினாலோ, அவன் பெயரை உச்சரித்தாலோ அவள் கண்களில் தெரியும் பாவனையும், அன்பும்.., அவள் சொல்லாமலே அவர்களுக்கும் புரிகிறது.

ஆனால், அவளது தேவையை அவளாகச் சொல்லித்தான் அவர்கள் கேட்டு பழக்கம். தாங்கள் செய்வது அவளுக்கு பிடிக்காமல் போய்விடக் கூடாது, எதையும் அவள்மேல் திணிப்பதாக ஆகிவிடக் கூடாது என்ற அவர்களது கவனமே அனைத்துக்கும் காரணம்.

இப்பொழுதும் அவள் சொல்லாமல் எதையும் செய்துவிட அவர்களால் முடியவில்லை. ஒரு வழியாக, நான்காம் நாள் முடிவில், அவளது அழைப்பிற்கு பலன் இருக்க, அவளது அழைப்பு கனெக்ட் ஆனதும் இங்கே பெரும் பரபரப்பானாள்.

அதென்னவோ அவள் அலைபேசியில் அவ்வளவாக உரையாடுவது கிடையாது. அதற்கு காரணம், அதில் பேசிய பிறகு, காது வலிக்கும் உணர்வை அவள் உணர்வதும், கூடவே.., இனம் புரியாத ஓசை காதுக்குள் கேட்பதுபோல் உணர்வதால் அறவே தவிர்த்து விடுவாள்.

ஆனால், முதல் முறையாக அவனுக்காக, நான்கு நாட்களாக ஹியரிங் மெஷினை, உறக்கத்தில் கூட அவள் கழட்டி வைத்திருக்கவில்லை. 'ஒரு வேளை அவன் அழைத்து, நான்

எடுக்கவில்லை என்றால்..' என்ற நினைப்பே அதற்கு காரணம்.

அவன் அலைபேசியை எடுக்க ஆன அந்த சில நொடிகளுக்குள் மொத்தமாக பதறிப் போனாள் என்பதுதான் சரியாக இருக்கும்.

“ஹலோ..” அவனது அழைப்பில் இருந்த சோர்வு.., அவன் உடல்நிலையை அவளுக்கு வெளிச்சம்போட, மேலும் தவித்தாள்.

“அன்பு.., என்ன பண்ணுது..? உடம்பு சரியில்லையா? ஏதாவது பேசு..” கிட்டத்தட்ட கத்தினாள்.

“ம்.., நான் பிறகு பேசவா..?” கேட்டவன்.., அவள் பதிலைக் கூட எதிர்பாராமல் அலைபேசியை வைத்து விட்டான்.

‘அவருக்கு உடம்பு சரியில்லை..' தேகம் முழுவதும் தீப்பற்றிக் கொண்ட அவசரம். உடனே அவனைப் பார்க்க வேண்டும்.., அவன் அருகில் இருக்க வேண்டும்.., அவள் செல்கள் அனைத்தும் தவித்தது.

நேரம் மாலை நான்கை நெருங்கிக் கொண்டிருக்க, தன் அறையிலிருந்து வெளியேறியவள், காருக்கு விரைந்தாள். “மோகன்.., பூந்தமல்லி போங்க..” அவள் குரலில் இருந்த அவசரத்தில், மேலே ஒரு வார்த்தை பேசாமல் காரைக் கிளப்பினான்.

“கொஞ்சம் சீக்கிரம் போங்க..” சாலையில் கார் விரைந்தாலும், அதை மீறி அவள் செல்கள் பயணித்தது.

பூந்தமல்லி போய் என்ன செய்யப் போகிறாள்? எப்படி அவனைக் காணப் போகிறாள்? எதுவும் அவள் நினைவில் இல்லை. உடனே அவன் இருக்கும் இடத்துக்குப் போக வேண்டும்.., அது மட்டுமே அவள் சிந்தையில் ஓடியது.

இத்தனை நாளாக கூட அவன் இருக்கும் இடம் அவளுக்கு சரியாகத் தெரியவில்லை என்றாலும், இந்த ஏரியாவில் இருக்கிறான் என அவளுக்குத் தெரியும்தான். ஆனால், அவனைப் போய் பார்க்கும் தைரியம் அவளுக்கு இருக்கவில்லை.

இன்று.., எதையும், யாரைப் பற்றியும் நினைக்கும் நிலையில் அவள் இல்லை. மோகனுக்கோ.., 'இந்த நேரம் அங்கே யாரைப் பாக்கப் போறாங்க? அவனையா?' சிந்தைக்குள் ஓடினாலும், ஒரு வார்த்தை அதைப்பற்றி அவன் மூச்சு விடவில்லை.

அரைமணி நேரப் பயணத்தில் அங்கே வந்திருக்க, "பஸ்ஸ்டான்ட் போங்க" அவள் உரைக்க, மறுக்காமல் அதையும் செய்தான்.

மீண்டும் அன்புவின் அலைபேசிக்கு அழைத்து அவனை தொல்லை செய்ய அவள் விரும்பவில்லை. 'எந்த நிலையில் இருக்கிறானோ?' மனம் பதைத்தது.

பஸ்ஸ்டான்ட் வந்த பிறகு அவளைத் திரும்பிப் பார்க்க, 'இங்கே தானே சொன்னான்..' அவள் நினைவுகள் சுழல, "இங்கே லெப்ட்ல அண்ணாச்சி கடை எங்கே இருக்குன்னு பாருங்க.." அவள் உரைக்க, வைக்கோல் போருக்குள் குண்டூசியை தேடும் நிலையில் விழித்தார்.

சரியான அட்ரஸ் இருந்தாலே சென்னையில் ஒரு இடத்தை கண்டு பிடிப்பது கடினம். அப்படி இருக்கையில், இங்கே அண்ணாச்சி கடையைத் தேடு என்றால் அவரும் என்னதான் செய்வார்?

அவர் கண்களில் ஒரு நொடி தயக்கத்தைப் பார்த்தவள், சட்டென காரில் இருந்து இறங்க, ஒரு நொடி பதறிப் போனார். "அம்மாடி.., நீங்க காரிலேயே இருங்க.., நான் பாக்கறேன்.." காரை வேகமாக ஓரங்கட்டியவர், கீழே இறங்கி விரைந்தார்.

“மோகன்.., லெப்ட்ல.., ஸ்ட்ரீட்க்கு உள்ளே.., மளிகைக் கடை.., கூடவே தண்ணி கேன் போடும் இடம்ன்னு சொல்லிக் கேளுங்க..” அவளிடம் இருந்த பதட்டத்தில் மேலே ஒரு வார்த்தையும் கேட்க அவர் நிற்கவில்லை.

அவர் இறங்கிச் சென்ற ஐந்து நிமிடத்துக்குள்.., தன்னையே வெறுக்கும் நிலைக்கு சென்றுவிட்டாள். ‘அவன்கிட்டே அட்ரஸ் வாங்கியிருக்கணும்.., முட்டாள்த்தனமா இருந்துட்டேன்..’ தன்னையே திட்டிக் கொண்டாள்.

அங்கே தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும், அவன் எப்படி இருக்கிறானோ என்ற நினைவே கொன்று கூறு போட்டது. அவன் உடல்நிலை கொஞ்சமாவது சரியாக இருந்திருந்தால் அப்படி பேசியிருக்க மாட்டான்.., அதுதான் அவளது இந்த பதட்டத்துக்கு காரணம்.

பத்து நிமிடங்கள் கடந்தும் மோகன் வராமல் போகவே, காருக்குள் இருந்து இறங்கி மோகன் சென்ற தெருவுக்குள் இறங்கினாள். கண்கள் நாலு பக்கமும் சுழல, நேரம் நான்கு முப்பதைக் கடந்திருந்தது.

‘இன்னும் எவ்வளவு நேரம்..?’ அவள் எண்ணுகையிலேயே, அவளுக்கு எதிரில் மோகன் வந்தார்.

“அம்மாடி.., நாலு கடை தள்ளிதான் இருக்கு..” உரைத்தவர் சற்று தயங்க, “வாங்க..” அழைத்தவள் அவரோடு நடந்தாள்.

அண்ணாச்சி கடைக்கு முன்பாக அவர்கள் நிற்க, கடைக்குள் சற்று கூட்டமாகத்தான் இருந்தது. “இங்கே அண்ணாச்சி..” அவள் கண்கள் துழாவ,

“அம்மாடி.., என்ன கேக்கணும்னு சொல்லுங்க.., நான் கேக்கறேன்..” அவள் நிலைக்கு இங்கே இப்படி நின்று பரிதவிப்பதை அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதைவிட, இந்த விஷயம் மாணிக்கத்துக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ என்ற பயம் வேறு அவரைக் கவ்வ, கெஞ்சினார்.

“அன்பு.., அன்பு எங்கே இருக்கான்னு கேளுங்க..” விட்டால் அழுதுவிடும் நிலையில் இருந்தாள்.

முழுதாக திடுக்கிட்டவர்.., தான் கேட்கவில்லை என்றால், நிச்சயம் அவள் செய்வாள் என்பது புரிய, வேகமாக கடைக்குள் பாய்ந்தார்.

“இங்கே அண்ணாச்சி..?” அவர் கேள்வியாக இழுக்க,

“நான்தான்..” கல்லாவில் இருந்தவர் எழுந்து நின்றார்.

சட்டென அத்தனை பேருக்கு முன்னால், அதுவும் கீர்த்தியை உடன் வைத்துக் கொண்டு, அன்புவைப் பற்றி கேட்க ஒரு மாதிரி இருக்க, “ஐயா, ஒரு நிமிஷம்..” கண்களை சற்று வெளியே நின்ற கீர்த்தியின் பக்கம் செலுத்தி அவர் அழைக்க, கேள்வியைச் சுமந்த பார்வையோடு எழுந்து வெளியே வந்தார்.

“ரமணா.., கல்லாவைப் பார்..” குரல் கொடுத்துவிட்டு, மோகனைப் பின்தொடர்ந்தார்.

மோகன் விசாரிக்கும் முன்பு, வேகமாக அவர் எதிரில் வந்து நின்றவள், “அன்பு வீடு எங்கே இருக்கு?” முதல் கேள்வியே அதுவாகத்தான் இருந்தது.

சற்று புருவம் நெரிய அவளைப் பார்த்தவர்.., “அன்புவா.., அவனைப் பத்தி நீங்க ஏன் கேக்கறீங்க? எதுவும் பிரச்சனையா?” அவன் அப்படி எதுவும் செய்ய மாட்டானே.., என்ற பாவனை அவரிடம் வெளிப்பட்டது.

“ம்ச்.., அவரோட வீடு எங்கே இருக்குன்னு சொல்லுங்களேன்..” உன் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன் என்ற பாவத்தில் அவள் உரைக்க, மோகனை வேகமாக ஏறிட்டார்.

“இவங்க.., அவனோட முதலாளியம்மா.., நாலு நாளா அவன் வேலைக்கு வரலை அதான்..” அவர் எதையும் தவறாக

புரிந்துகொள்ளக் கூடாதே என வேகமாக இடை புகுந்தார்.

“அவனுக்கு மேலுக்கு முடியலன்னு சொன்னான்..” அதற்கு மேல் என்ன நினைத்தாரோ.., அவனது விலாசம் உரைத்து, அது இருக்கும் இடத்தையும் சரியாக அடையாளம் காட்டி உரைத்தவர், “இந்த கிருஷ்ணா பய இல்லை, இல்லன்னா உங்களோட அனுப்பி இருப்பேன்..”.

“உடம்பைப் பாக்காமல் உழைச்சு கரைஞ்சா என்னதான் செய்ய? சொன்னாலும் கேக்க மாட்டான்..” தன் ஆதங்கத்தை கொட்டினார்.

“ரொம்ப நன்றிங்க..” அவரிடம் உரைத்தவள், “மோகன்.., வாங்க..” தன் காருக்கு விரைந்தாள்.

அண்ணாச்சி, அவர்கள் செல்லும் திக்கையே பார்த்தவாறு நின்றுவிட்டார். “இந்தப்பய என்னதான் வசியம் வச்சிருக்கானோ..?” வாய்விட்டே உரைத்தவர், ‘எல்லாம் நல்லா நடந்தா சரி..’ எண்ணியவாறு வேலையைப் பார்க்கச் சென்றார்.

அன்பு இருக்கும் தெருவுக்குள் கார் நுழைய, “அம்மாடி.., இந்த சந்துக்குள் போய், அதோ அங்கே தெரியிற அந்த பச்சை கலர் பில்டிங்ன்னு சொன்னார். நான் போய் பாக்கவா..?” காரை அங்கே நிறுத்த முடியாது என்பது புரிய காரை கிளப்பி, சற்று தள்ளி நிறுத்த முயன்றார்.

“மோகன்.., நீங்க காரை தள்ளி நிப்பாட்டுங்க.., நான் போறேன்..” காரிலிருந்து இறங்கியவள், தன் கைப்பையை அள்ளிக்கொண்டு காரிலிருந்து இறங்கினாள்.

அவள் அந்த தெருவில் இறங்கி நடக்க, ஒன்றிரண்டு பார்வைகள் அவள்மேல் படிந்து மீள, எதையும் அவள் கண்டுகொள்ளவில்லை. நடையை விரைவுபடுத்தியவள், அந்த பச்சைநிற பெயிண்ட் அடித்த படிகளில் ஏற, கால்கள் சற்று தள்ளாடவே செய்தது. ‘அங்கே இந்த நேரம் போய் நின்றால் என்ன நினைப்பான்? ஏதாவது சொல்வானா?

போய்விடு என விரட்டுவானோ?’ சிந்தைகள் ஒரு பக்கம் சுழன்றது.

சற்று தயங்கி, மொட்டை மாடியில், அந்த ஒற்றை அறைக்கு முன்னர் வந்து நிற்க, அவளுக்கு சிரமம் வைக்காமல் கதவு திறந்தே இருக்க, வாசலுக்கு நேராக உள்ளே, பாயில் அன்பு படுத்திருப்பது தெரிந்தது.

அவனிடமிருந்து மெல்லிய முனகல் வெளிப்பட, “அன்பு..” அழைத்தவள், உள்ளே பாய்ந்திருந்தாள். அதற்குமேல் அவளிடம் எந்த தயக்கமும் இருக்கவில்லை.

“ம்.., ம்..” ஜுர வேகத்தில் அவன் அனற்றுவது புரிந்தது. “அன்பு.., அன்பு..” அவன் அருகில் சென்று அழைக்க, அதை உணரும் நிலையில் கூட அவன் இருக்கவில்லை.

அவன் நெற்றியில் கைவைக்க, அதுவோ நெருப்பாய் காய்ந்தது. “ஹையோ, இவ்வளவு ஜுரமா..? அன்பு.., அன்பு.., வாங்க ஹாஸ்பிடல் போகலாம்..” அவன் தோள் தொட்டு உலுக்கினாள். அந்த நேரம், தான் ஒரு ஆண்மகனின் அறையில் தனித்து நிற்கிறோம், அவனை தொட்டு அசைக்கிறோம் என்பதெல்லாம் அவள் நினைவில் இருக்கவில்லை.

அவள் மனதில் நின்றதெல்லாம், அவனுக்கு உடல்நிலை சரியில்லை, அதை எப்படியாவது சரி செய்ய வேண்டும் என்பதே.

அவள் அதிகமாக அசைக்கவே.., மெதுவாக கண் திறந்தவன், “ம்.., இல்ல.., வேண்டாம்..” சோம்பலாக விழி மூடிக் கொண்டான்.

இப்பொழுது டிரைவரை அழைத்து, அன்புவை அழைத்துச் செல்வது கூட முடியாத காரியம் என்பது புரிய, வேகமாக டாக்டர் சந்திரனுக்கு அழைத்தாள்.

வழக்கமான அவரது செய்கையாக, “என்னம்மா..” என்ற செய்தி வந்து விழ, மீண்டும் அழைக்கவே, அவளது அழைப்பை ஏற்றார்.

“அங்கிள்.., நீங்க இப்போ எங்கே இருக்கீங்க..?” முழு பதட்டத்தில் அவளது குரல் ஒலிக்கவே,

“நான் ஹாஸ்பிடல் கிளம்பிட்டு இருக்கேம்மா.., என்ன விஷயம் சொல்லு?” எதுவும் அவசர விஷயம் இல்லாமல், அவள் அலைபேசியில் உரையாட மாட்டாள் என்பது அவருக்குத் தெரியுமே.

“அங்கிள்.., இங்கே அன்புக்கு உடம்பு சரியில்லை. உடம்பு நெருப்பா கொதிக்குது. நீங்க உடனே வாங்க..” அவளுக்கு இருந்த மனநிலையில், அவருக்கு அன்பு யார் என்றே தெரியாது என்பதோ? இங்கே வா எனச் சொன்னால், அவர் எங்கே வருவார் என்றோ எதுவும் உறைக்கவில்லை.

அவள் மனநிலையை உணர்ந்தவர், “சரிம்மா.., உடனே வர்றேன்.., நீ அட்ரஸ் சொல்லு..” அவளை தேவையில்லாமல் துருவ முனையவில்லை.

அவனது அட்ரஸ், வீட்டு அடையாளம் உரைத்தவள், “டிரிப்ஸ் போட வேண்டி இருக்கும்.., ப்ளீஸ் அங்கிள்.., கொஞ்சம் சீக்கிரம் வாங்க..” கெஞ்சினாள்.

“கீர்த்தி.., இன்னும் அரைமணி நேரத்தில் அங்கே இருப்பேன் போதுமா? நீ எமோஷனல் ஆகாதே..” அலைபேசியை வைத்தவர், சிலபல கேள்விகள் மனதுக்குள் எழுந்தாலும், அதை தவிர்த்துவிட்டு காரைக் கிளப்பிச் சென்றார்.

“அன்பு.., இங்கே பாருங்க..” அவனை நினைவுக்கு கொண்டுவர அவள் முயல, எதையும் உணரும் நிலையில் அவன் இருக்கவில்லை.

ஜுரம் அதிகமாக இருக்கவே, அங்கே இருந்த பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து, தன் கர்ச்சீப்பை நனைத்து அவன் நெற்றியில் வைத்தாள். சில நொடிகளுக்குள் அது சூடாக, மீண்டும் அதைச் செய்தவாறே அமர்ந்திருந்தாள்.

“இவ்வளவு ஜுரம் அடிக்குது.., என்கிட்டே சொல்லணும்னு உங்களுக்கு தோணவே இல்லையா?” கேட்டவளது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து அவள் கன்னம் நனைத்தது.

அரைமணி நேரமாக அவள் செய்த வேலையால், அவனுக்கு சற்று தெளிவு வர, “மேடம்.., நீங்க.., இங்கே.., கனவா..?” அவன் குரல் மெலிந்து ஒலிக்க, விழி திறக்க முயன்றான்.

“அன்பு..” அவன் சற்று தெளியவே அவள் அழைக்க, “ம்.., நீங்க..” அவனுக்கு இன்னுமே தான் காண்பது கனவா, நினைவா என பிரித்தறிய முடியவில்லை.

அடுத்த முக்கால்மணி நேரத்தில் சந்திரன் அங்கே வர, தன் பேகோடு அவன் அறைக்குள் நுழைந்தார். “அட.., டிரீட்மென்ட் நீயே ஆரம்பிச்சுட்ட போல” கேட்டவர், தன் பையைத் துழாவ,

“அங்கிள்.., முதல்ல அவரை செக் பண்ணுங்க..” அவர் கேலியை அவள் ரசிக்கவில்லை என அவள் குரலும், முகமும் அவருக்கு உணர்த்த மெல்லியதாக சிரித்துக் கொண்டார்.

“அதுக்கு தானே வந்திருக்கேன்..” உரைத்தவர், தெர்மாமீட்டரை எடுத்துக்கொண்டு அவனை நெருங்கினார்.

அவன் வாய்க்குள் அதை சற்று சிரமப்பட்டு திணித்தவர், அதை மீண்டும் எடுத்துப் பார்க்கையில் நூற்றி நான்கு டிகிரியை அது காட்ட, “ஜுரம் அதிகமாத்தான் இருக்கு..” அவளிடம் உரைத்தவர், தன் பேகில் இருந்து இன்ஜெக்ஷன் எடுத்தார்.

அன்பு முழுக்கை சட்டை போட்டிருக்க, “இன்ஜெக்ஷன் போடணுமே..” கொஞ்சம் அவன் சட்டையை கழட்டும்மா..” அவர் உரைக்க, சற்று திடுக்கிட்டு அவரைப் பார்த்தாள்.

அவள் பார்வையை கண்டுகொள்ளாமல், “சீக்கிரம்மா.., டிரிப்ஸ் வேற போடணும்.., இதை எங்கே மாட்ட..” குளுக்கோஸ் பாட்டிலை கையில் எடுத்தவர், அருகில் இருக்கும் சுவரில் ஆணி எதுவும் இருக்கிறதா என பார்வையால் துழாவ, அவர் சொன்னதைச் செய்ய முடியாமல் அவள் கைகள் நடுங்கியது.

நேரம் தாமதிப்பது நல்லதல்ல என அவள் புத்தி இடித்துரைக்க, நடுங்கும் கரங்களால் அவன் சட்டை பட்டனை கழட்ட முயன்றாள். அவ்வளவு நேரமாக உணர்வற்று கிடந்தவன், யாரோ தன் சட்டையை கழட்டுவது புரிய, “ஏய்.., யார்.., விடு..” அந்த ஜுர வேகத்திலும், அவள் கரத்தை விலக்கித் தள்ளினான்.

அவள் ஒரு மாதிரி விக்கித்துப் போக, “இந்த ஜுரத்திலும் ரொம்ப தெளிவுதான். பய பரவாயில்லையே..” சிறு நக்கலாக அவர் சிலாகிக்க, தன்னால் ஆனமட்டும் அவரை முறைத்தாள்.

“அங்கிள்.., உங்களுக்கு கிண்டலா இருக்கா..?” சற்று சீறவும் செய்தாள்.

“அட.., நான் என்னம்மா இப்போ தப்பா சொல்லிட்டேன்..” அப்பாவியாக வினவியவரது முகமோ சிரிப்பில் முக்குளித்துக் கிடந்தது.

“நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்.., நீங்களே பாருங்க..” அவள் வெடுக்கென விலகி நிற்க, “இப்போ நான் இன்ஜெக்ஷன் போடவா வேண்டாமா?” தான் விடாக்கண்டன் என்பதை நிரூபித்தார்.

‘மறுபடியும் இவன் ஏதாவது சொன்னால்..?’ ஒரு மாதிரி அவஸ்தையாக உணர்ந்தாள்.

அவனோடு சாதாரண நட்பாக இருந்தால், ‘டேய்.., நான்தான்.., சும்மா இரு..’ என ஒற்றை வார்த்தைகளில் அதட்டி முடித்துவிடலாம். ஆனால்.., மனதுக்குள் முழுவதும் அவன் நினைப்பை சுமந்திருக்கையில், தன் செய்கை பெரும் பிரளயத்தையே அவளுக்கு விதைத்தது.

அவனது கரங்கள் இரண்டும் தன் சட்டையை இறுகப் பற்றியிருக்க, “அன்பு.., நான்தான்..” அவள் உரைத்தது அவளுக்கே கேட்டதோ என்னவோ?

“என்னம்மா அவன்கிட்டே ரகசியம் பேசிகிட்டு இருக்க..” மீண்டும் தன் கேலியை அவர் துவங்க, எதையாவது எடுத்து அவர் தலையில் போட்டால் என்ன என்று யோசிக்கவே துவங்கிவிட்டாள்.

டிரிப்ஸ் பாட்டிலை ஆணியைத் தேடி மாட்டியவர், அவன் கரத்தில் வெயின்பிளான்ட் பொருத்த வெயின் தேடத் துவங்கினார்.

“அங்கிள்..” சற்று ஆத்திரமாக கத்த, ‘கூப்ட்டியா..?’ என்ற பாவனையில் பார்த்தவர், தன் வேலையில் கவனமாக, அவர் வேண்டுமென்றே செய்கிறார் என்பதை புரிந்துகொண்டவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

வேறு வழியின்றி, அவன் கரத்தை சற்று விலக்க முயல, அவனோ முடியாது என்பதுபோல் கரத்தை இன்னும் கெட்டியாக்கிக் கொண்டான்.

இப்பொழுது வாய்விட்டே சிரித்தவர், “பொண்ணுங்க கூட கற்பை இவ்வளவு காப்பாத்த மாட்டாங்க போல..” தன் நகைச்சுவைக்கு அவரே வாய்விட்டு மேலும் சிரிக்க, ஆத்திரமென்றால் அவளுக்கு அவ்வளவு ஆத்திரம்.

“யங் மேன்.., உங்களுக்கு ஜூரம் குறைய வேண்டாமா? கொஞ்சம் கோவாப்பரெட் பண்ணுங்க..” அவனை நெருங்கி, தாடையை சற்று வேகமாகத் தட்டி உரைக்க,

“அங்கிள்.., வலிக்கப் போகுது..” அவர் தட்டிய வேகத்தில் அவசரமாக குரல் கொடுத்தாள்.

“ம்..” ஒரு ஆணின் குரல் கேட்கவே சற்று இலகுவானவன், அதன் பிறகு, சட்டையை கழட்ட சற்று ஒத்துழைக்க, அவன் செய்கை ஏனோ அவள் அடி மனதையும் அசைத்துப் போட்டது.

அவன் புஜத்தில் இரு ஊசி மருந்தை செலுத்தியவர், வெயின்பிளான்ட் வைத்து, டிரிப்சையும் மாட்டினார். சில மாத்திரை அட்டைகளை பேகில் இருந்து எடுத்தவர், “இவன் காலையில் கண் முழித்த பிறகு, இட்லி ஏதாவது சாப்ட்ட பிறகு டேப்லட் போடச் சொல்லும்மா..” என சில மாத்திரைகளையும் அவள் கையில் கொடுத்தார்.

அனைத்தும் முடிய, அவ்வளவு நேரமாக அனத்திக் கொண்டிருந்தவன், உறக்கத்துக்குச் சென்றதை அவளால் உணர முடிந்தது.

“அங்கிள்.., அவருக்கு..?” பார்வையை அவன்மேல் இருந்து திருப்பாமல் கேட்டாள்.

“வைரல் பீவர் தான். மழையில் நனஞ்சிருப்பானா இருக்கும். அன்னைக்கே பாத்திருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்காது. ஒரு ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்தால் எல்லாம் சரியா போய்டும்..” உரைத்தவர், தன் பேகை எடுத்துக் கொண்டார்.

அறைக்கு வெளியே வந்தவர், அவளைப் பார்க்க, அவர் பின்னால் வந்தவள், தயங்காமல் அவர் முகம் நோக்கினாள்.

“அப்போ இவர்தானா அது..?” அவர் கேட்க, இதற்குமேல் எதையும் மறைக்க இருபதாகத் தோன்றாமல், “ஆமா..” தைரியமாகவே உரைத்தாள்.

“சரிம்மா.., டிரைவரை இங்கே இருக்க சொல்லிட்டு, நீ வீட்டுக்கு கிளம்பு..” அவர் உரைக்க, மறுப்பாக அவரைப் பார்த்தாள்.

“இல்ல அங்கிள்.., நான் போக மாட்டேன்..” பிடிவாதமாக உரைக்க, அவள் பிடிவாதம் உணர்ந்தவருக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

அதற்குள், டிரைவர் மூலம் விஷயம் அறிந்த மாணிக்கம்.., பிரம்மை பிடித்து அமர்ந்துவிட்டார்.

*****

# பகுதி – 11.

தன் செவியில் விழுந்த செய்தியை நம்ப முடியாமல் திகைத்துபோய் அமர்ந்துவிட்டார் மாணிக்கம். “மோகன், என்ன சொல்ற?” அதை அவர் வார்த்தையிலும் வெளிப்படுத்தினார்.

“ஆமாங்க ஐயா.., நம்ம பாப்பா இப்போ அந்த தம்பி ரூமுக்குதான் போயிருக்கு. அதே மாதிரி நம்ம டாக்டரையா வேற இங்கே தான் இருக்கார்” சற்று பயத்துடனே உரைத்தான்.

“உன்னை யார் அவளை அங்கே கூட்டி போகச் சொன்னது?” ஆத்திரமாக அவர் கத்த, இதற்கு பதில் உங்களுக்கே தெரியும் என அமைதியாயான்.

‘அங்கே.., அவன் ரூமில்.., இவள், தனியாக..’ அதை நினைக்கவே ஒரு தந்தையாக மிகக் கொடுமையாக உணர்ந்தார். அதே நேரம், தன் மகளை தவறாக எண்ணவும் அவரால் முடியவில்லை.

திருமணமாகாத ஒரு கன்னிப்பெண், ஒரு பேச்சிலர் அறைக்கு, அதுவும் மாலை மங்கி, இரவு கவிழும் நேரம் சென்றிருக்கிறாள் என்றால், அதை அவ்வளவு சாதாரணமாக எடுத்துவிட முடியுமா என்ன?

‘நீ என்ன செய்வியோ தெரியாது.., அவளை உடனே இங்கே அழைச்சுட்டு வர..’ வெடிக்கத்தான் முயன்றார். ஆனால்.., அப்படி அவரால் செய்துவிட முடியுமா என்ன?

“நீ வை.., நான் பேசிக்கறேன்..” அலைபேசியை வைத்தவர், மனைவி எங்கே என்று தேடி கிச்சனுக்கு விரைந்தார்.

“சாந்தி.., உன் பொண்ணு என்ன காரியம் செய்திருக்கா தெரியுமா? இந்த நேரம், அந்த அன்பு பய ரூமுக்கு போயிருக்கா. அவனுக்கு ஏதோ உடம்பு சரியில்லையாம்.

அவனுக்கு உடம்பு சரியில்லன்னா கவனிக்க இவ யார்?" என்னதான் முயன்றாலும் இந்த நேரம் மகளை சப்போட் செய்ய அவரால் முடியவில்லை.

"என்ன சொல்றீங்க..?" ஒரு நொடி பதரியவர், சட்டென தெளிந்தவராக, "நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன்.., இந்த கேள்வியெல்லாம் நீங்க உங்க பொண்ணுகிட்டேதான் கேக்கணும். என்னைக் கேட்டால் நான் என்ன செய்ய?".

"அப்போ.., அவ இந்த நேரம் அங்கே போயிருக்கிறது சரின்னு சொல்றியா?" அவரால் நம்பவே முடியாமல் கேட்டார்.

"இப்போ எனக்கு ஒரே ஒரு விஷயம்தான் தெரியணும். உங்க பொண்ணுக்கு அவன்தான் வேணும்னு அவ கேட்டால் நீங்க என்ன செய்வீங்க?" நேரடியாக அவரிடம் வினவினார்.

"நான் என்ன சொல்றேன்.., நீ என்ன கேக்கற?" அவருக்கு அதற்கு பதில் கொடுக்க முடியவில்லை.

"நான் கேட்ட கேள்விக்கு இது பதில் இல்லையே.." அவர் அதிலேயே இருந்தார்.

"என்ன கேள்வி.., இதெல்லாம் ஒரு கேள்வியா? இப்போ கீர்த்தி அங்கே இருக்கறா? உன்னால் இதை சாதாரணமா எடுத்துக்க முடியுதா?" ஓடிபோய் அவளை இங்கே அழைத்து வந்துவிடும் வேகம் அவரிடம்.

"சரி.., அவ அங்கே போயிருக்கான்னு யார் சொன்னா?" கேள்வியை மாற்றினார்.

"மோகன்தான்.., அது மட்டுமில்லை.., சந்திரனும் அங்கேதான் இருக்காராம். அவனுக்கு ஏதோ உடம்பு சரியில்லைன்ற மாதிரி எதுவோ சொன்னான். எனக்கு அதெல்லாம் தெரியலை.., அவளுக்கு போன் போடவா?"

படபடவென கொட்டியவர், இறுதி வார்த்தையை உரைக்கையில் குரல் உள்ளே போய்விட்டது.

சாந்திக்கும் உள்ளுக்குள் அவ்வளவு பயமும் தவிப்பும் கொட்டிக் கிடக்கிறதுதான். ஆனால் அதையும் மீறி, மகளது வாழ்வு மலர்ந்துவிடாதா என்ற எதிர்பார்ப்பு அதிகம் இருக்கிறதே. பணம் அவர்களிடம் கொட்டிக் கிடக்கிறது, ஆனால் நிம்மதி என்பது கொஞ்சமும் இல்லையே.

மகளது வாழ்க்கை மலர்ந்து மணம் வீசினால் மட்டுமே அந்த வீட்டுக்கு நிம்மதி என்பது கிட்டும் என்பது அவர் முழுதாக அறிந்த உண்மை. அதற்காக மகள் செய்வது அனைத்தும் சரியென அவரால் ஒத்துக்கொள்ள முடியவில்லைதான்.

தவறு செய்பவளாக இருந்தால், அவள் டிரைவரை அழைத்துச் சென்றிருக்க மாட்டாள். கூடவே, தங்கள் மருத்துவர் சந்திரனை அழைத்தே இருக்க மாட்டாள். அவள் அப்படிச் செய்கிறாள் என்றால், அவள் மனதுக்குள் தீர்மானமான ஒரு முடிவுக்கு அவள் வந்துவிட்டாள் என்பதை அது அவருக்கு காட்டுகிறதே.

“நீங்க போன் பண்ண வேண்டாம்.., அவளே பண்ணுவா பாருங்க..” அவர் உரைத்து முடிக்கையில், சந்திரனது அழைப்பு அவர்களை எட்டியது.

“டாக்டர் பேசறார்..” உரைத்தவர் அலைபேசியை ஆன் செய்து ஸ்பீக்கரில் போட்டார்.

“டாக்டர்.., சொல்லுங்க..” மாணிக்கத்தின் குரலில் இருந்த வருத்தமே அவர்களுக்கு விஷயம் தெரியும் என்பதை புரிய வைக்க, ஒரு பெருமூச்சை வெளியேற்றினார்.

“மாணிக்கம்.., இப்போ நான் அந்த அன்பு பையன் வீட்டில் இருந்துதான் வர்றேன். நம்ம கீர்த்தி அங்கேதான் இருக்கா..” உரைத்தவர், இது அவ்வளவு ரசிக்கும் விஷயமாக அவர்களுக்கு இருக்காது என்பதால் சற்று இடைவெளி விட்டார்.

“டாக்டர்.., நீங்க கூடவா அவளை இதுக்கு அனுமதிச்சீங்க..” அவர் குரலில் அவ்வளவு ஆதங்கம்.

“கீர்த்தி, நாம சொல்லி ஒரு விஷயத்தை கேப்பான்னு நீங்க நினைக்கறீங்களா? இல்ல.., நான் சொல்லாமல் இருப்பேன்னு நினைக்கறீங்களா?” அவர் கேட்க, பதில் சொல்ல முடியவில்லை.

அங்கே ஒரு அழுத்தமான அமைதி நிலவ, “டாக்டர்.., அன்புவுக்கு உடம்புக்கு என்ன?” சாந்தி இடை புகுந்தார்.

“அது.., வைரல் பீவர்ம்மா.., கொஞ்சம் கவனிக்காமல் விட்டுட்டான், அதான் ஹெவியா ஆயிடுச்சு. இன்ஜெக்ஷன் போட்டிருக்கேன்.., ரெண்டு நாள்ல சரியாயிடுவான்” உரைத்தவர், “பய தங்கமான பயம்மா..” எதற்காக இதைச் சொல்கிறார் என ஆத்திரமாக போனை முறைத்தார் மாணிக்கம்.

அதே நேரம்.., கீர்த்தியின் அழைப்பு வரவே, “டாக்டர்.., கீர்த்தி லைன்ல வர்றா..” உரைத்துவிட்டு, அவளது அழைப்பை வேகமாக ஏற்றார்.

“கீர்த்தி.., எங்கே இருக்க..?” சற்று கோபமாகவே இரைந்தார்.

மனைவி கோபமாக பேசவே, அந்த நேரத்திலும் அவரை முறைத்தார் மாணிக்கம். அதைக் கண்டவர், ‘இப்போ கூட பொண்ணுகிட்டே நான் கொஞ்சிகிட்டே பேசணுமாம்..’ மனதுக்குள் புலம்பியவர், அவளது பதிலுக்காக காத்திருந்தார்.

“அம்மா.., நான் அன்புவோட ரூம்ல இருக்கேன்..” இதைச் சொல்ல அவள் பயப்பட்டது போலவே தெரியவில்லை.

“முதல்ல கிளம்பி வீட்டுக்கு வா கீர்த்தி. நேரம் என்னன்னு உனக்குத் தெரியிதா இல்லையா?” முதல் முறையாக மகளிடம் கோபம் காட்டினார்.

தாயின் கோபத்தில் இருந்த நியாயம் புரியவே, ஒரு நொடி அமைதியானவள், “அம்மா.., நீங்க கிளம்பி இங்கே வர்றீங்களா? எனக்கு பயம்மா இருக்கும்மா..” அவள் அழுகையை இங்கே இவர்களால் உணர முடிந்தது.

“கீர்த்தி.., இது சின்னப்பிள்ளை விளையாட்டு கிடையாது. முதல்ல கிளம்பி வா” மகளது வாயில் இருந்து அவருக்கு உண்மையை வாங்க வேண்டுமே., கடுமையாகவே பேசினார்.

“ஏய்.., அவ அழறா.., நீயென்ன..” மனைவியிடம் சாடியவர்.., “அம்மாடி.., என்னம்மா இதெல்லாம். எதுக்கு இப்போ அழற..?” மனைவியின் கையில் இருந்து அலைபேசியை வாங்கினார்.

“அப்பா.., நானே உங்ககிட்டே பேசணும்னு நினைத்தேன். ஆனா, இப்போ அதுக்கு டைம் இல்லை. அன்பு இங்கே தனியா இருக்கார்ப்பா. என்னால் இவரை விட்டுட்டு வர முடியாது..” அழுகையில் உரைத்தாலும், அதில் இருந்த பிடிவாதம் அவரைச் சுட்டது.

மனைவியைத் திரும்பி பார்க்க, ‘என்ன சொல்லணுமோ நீங்களே சொல்லுங்க’ என்ற ரீதியில் அழுத்தமாக நின்றுகொண்டார்.

“புரிஞ்சுக்காம பேசறியே கீர்த்தி..” அவரால் கண்டிக்க முடியாமல் திணற,

“அப்பா.., இந்த ஜென்மத்தில் உங்க பொண்ணோட வாழ்க்கையில் ஒரு ஆம்பளை இருக்கான்னா.., அது அன்பு மட்டும்தான். அவர் இல்லன்னா.., என்னைக்கும் உங்க பொண்ணு, உங்க பொண்ணா மட்டும்தான் இருப்பா. இப்போ சொல்லுங்க.., நான் இங்கே இருக்கவா.., வரவா..?

“அப்படி நான் வந்துட்டேன்னா.., என் முடிவில் எந்த காலத்திலும் மாற்றம் இருக்காது. முடிவை நீங்களே சொல்லுங்க..” சொல்லிவிட்டாள், தன் மனதுக்குள்

இருந்தது மட்டுமல்ல, தன் முடிவையும் தெளிவாக உரைக்க, பெற்றவர்கள் உறைந்துதான் போனார்கள்.

மாணிக்கத்தின் கரத்தில் இருந்த அலைபேசி கிடுகிடுவென ஆட, வேகமாக அதைக் கைப்பற்றிய சாந்தி, “கீர்த்தி, டிரைவரை வரச் சொல்றேன். ஏதாவது ஹெல்ப் வேணும்னா அவரைக் கேள்...” அலைபேசியை அணைத்துவிட்டார்.

“சாந்தி.., என்ன இது..? நம்ம பொண்ணுக்கும், அவனுக்கும் எப்படி..?” ஒரு தந்தையாக அவரால் இதை ஏற்க முடியவில்லை.

“அதான் நம்ம பொண்ணு அவ்வளவு தெளிவா சொல்றாளே.., இதுக்கு மேலே நாம என்ன செய்ய?” அவரிடமும் வருத்தம் கொட்டிக் கிடந்தது.

“அதுக்காக இப்படியே விட முடியுமா சாந்தி? அவன்.., அவன் ஒரு..” அவருக்கு எப்படிச் சொல்வது எனத் தெரியவில்லை. மகளது நடத்தையில் இருந்த மாறுதலை வைத்தே, அவனைப் பற்றி ஆதியோடு அந்தமாக ஆராய்ந்து விட்டார்.

அவனது குணத்தை குறை சொல்ல முடியாத அளவுக்கு, அனைவரும் பத்தரை மாற்று தங்கம் என்றே உரைத்தார்கள். ஆனால்.., பணத்தில் புரளும் அவர்களுக்கும், அன்றாடம் உழைத்து பிழைக்கும் அவனுக்கும் எப்படி ஒத்துவரும்?’ இதுவே அவரது பெரும் கவலையாக இருந்தது.

சாந்திக்கோ, மகளிடம் இருக்கும் விருப்பம் அவனிடம் இருக்கிறதா? என்பதே பெரும் கவலையாக இருந்தது. நிச்சயம் இருக்காது என்றே தோன்றியது. கணவன் தன்னிடம் உரைத்ததை வைத்து பார்க்கும்போது, மகள்தான் அவன்மேல் விருப்பம் கொண்டிருக்கிறாள் என்பதை அவர் சொல்லாமலேயே உணர முடிந்தது.

‘இது எங்கே போய் முடியும்?’ என்பதே அவரது பெரும் கவலையாக இருந்தது.

அன்றைய இரவில் உணவு என்பது பெற்றவர்களுக்கு இறங்காமல் போக, ஹாலில் சோபாவிலேயே அப்படியே அமர்ந்துவிட்டார்கள். உறக்கம் என்பது அவர்களைத் தீண்டுமா என்ன?

கீர்த்தியும் இங்கே குமுறி அழுதுகொண்டிருந்தாள். பெற்றவர்களிடம் இவ்வளவு ஹார்ஷாக பேசும் விஷயமா இது? “சாரிப்பா.., சாரிம்மா.., எனக்கு வேற வழி தெரியலை..” கண்ணீர் ஆறாகப் பெருகியது.

அதே நேரம்.., “அம்மா.., ம்மா..” அன்பு மெல்லியதாக முனக, வேகமாக அறைக்குச் சென்றாள்.

“அன்பு..” கண்ணீர் குரலில் அவள் அழைக்க, “அம்மா..” என அழைத்து, கைகளால் துழாவினான். டிரிப்ஸ் போட்டிருக்கும் கரத்தை அவன் அசைக்கவே, வேகமாக அதைத் தடுத்தவள்,

“தூங்குங்க அன்பு..” மென்மையாக உரைத்தாள்.

அவன் அருகே மண்டியிட்டு அமர, “ம்மா.., நான்.., உங்களோட வர மாட்டேன். உங்க பையன் வாழ்க்கையில் ஜெயிக்கணும்மா.., நம்ம ஊர்ல நான் மறுபடியும் தலை நிமிர்ந்து நடக்கணும். உங்க ஆசையை நிறைவேற்றாமல் உங்க கிட்டே வர மாட்டேன்..” உறக்கத்தில், விட்டு விட்டு அவன் புலம்ப, அவனையே இமைக்காமல் பார்த்திருந்தாள்.

அதே நேரம் வாசலில் நிழலாட, “மோகன்.., வாங்க..” அவள் அழைக்க, தயக்கமாக அறைக்குள் நுழைந்தான்.

அவன் கண்கள் அந்த அறையைத் துழாவ, சிறிய அறை என்றாலும் அவ்வளவு சுத்தமாக இருந்தது. பேச்சிலர் அறையைபோல் துணிகள் இறைந்து கிடக்காமல், கொடியில் கிடந்த ஒற்றை டவ்வலைத் தவிர வேறு துணிகள் அங்கே இல்லை.

இடது ஓரம், ஒரு ஸ்டவ், சமையல் பாத்திரங்கள் இரண்டு இருக்க, ஒரு பிளாஸ்டிக் டப்பாவின் மசாலா தூள் இருக்கலாம் என யூகித்துக் கொண்டார். ஒரே ஒரு சூட்கேஸ்.., அது சாதாரணமானதாக இருக்கவில்லை, அமெரிக்கன் டூரிஸ்டர் சூட்கேஸ்.., அந்த இடத்துக்கே சற்று ஒட்டாமல் தெரிந்தது.

அவரது பார்வை அன்புவிடம் நிலைக்க, அப்பொழுதுதான் அவனை அவ்வளவு நெருக்கத்தில் பார்க்கிறார். கட்டான ஒரு ஆண்மகன், அழகு இல்லை என்றாலும், ஒரு ஆளுமையோடு, அந்த களைப்பிலும் அவன் முகத்தில் தெரிந்த கம்பீரம் அவரை கவனிக்க வைத்தது.

“என்னம்மா.., இப்படி கீழே உக்காந்துட்டீங்க..” அப்பொழுதுதான் கீர்த்தி தரையில் அமர்ந்திருப்பதை பார்த்தவராக பதறினார்.

“விடுங்க மோகன்.., அங்கே இன்னொரு பாய் இருக்கு பாருங்க. எடுத்து வெளியே போட்டு படுத்துக்கோங்க. ஏதாவது வேணும்னா எழுப்பறேன்..” அவள் உரைக்க, அதற்குமேல் அங்கே இருக்காமல் வெளியேறினார்.

“நான் அப்படி சுவர் ஓரமா உக்காந்துக்கறேம்மா.., எனக்கு இது பழக்கம்தான்” பாயை அவர் எடுத்துக் கொள்ளவில்லை.

அவர் வெளியே செல்ல.., “ம்மா.., ஏம்மா என்னை விட்டு போனீங்க.., உங்களுக்கு எப்படி மனசு வந்துது?” அவன் புலம்ப, அவன் கடைவிழியோரம் கண்ணீர் கசிந்தது.

அது ஜுரத்தினாலா, இல்லை அழுகிறானா என அவளால் அறிய முடியவில்லை. ஆனால், அவன் அழுவது பிடிக்காமல், தன் கைகளால் அவன் கண்ணீரைத் துடைத்தாள்.

நேரம் கடந்துகொண்டிருக்க, அவன் நெற்றியில் கை வைத்துப் பார்க்க, ஜுரம் சற்று குறைந்திருப்பது

அவளுக்குத் தெரிந்தது.

“ம்மா..” மேலும் அவன் புலம்பியது எதுவும் அவள் செவிகளைத் தீண்டவில்லை. ஆனால்.., அவன் அனத்திக் கொண்டே இருப்பது பெரும் கவலையை அளித்தது.

‘ஆழ்ந்து உறங்கவில்லை என்றால் ஜூரம் எப்படி சரியாகும்?’ அவளுக்கு கவலை தொற்றிக் கொண்டது.

“அம்மா.., நீ எங்கம்மா இருக்க..?” அவன் கைகள் இப்பொழுது காற்றில் துழாவ, வேகமாக அவன் கரத்தை பற்றிக் கொண்டாள். அவனோ.., “அம்மா.., அம்மா.., நீ என்கூடதான் இருக்கியா..?” கேட்டவன், அவள் கரத்தை நெஞ்சோடு அழுத்திக் கொண்டான்.

அவளது வலக்கரம் அவனது பிடியில் இருக்க, இடக் கரத்தால், மென்மையாக அவன் சிகையை வருடினாள். உள்ளுக்குள் சிறு நடுக்கம் ஓடினாலும், அவன் தவிப்பதை அவளால் பார்த்துக் கொண்டிருக்க முடியாதே.

அந்த வருடல் அவனைத் தீண்ட.., “ம்மா..” தாயைத் தேடும் கன்றாக உரைத்தவன், அவள் பக்கம் திரும்பி, அவள் காலுக்கு அருகில் முகம் பதித்தவன், மேலும் சில அம்மாக்களோடு புலம்ப, “ம்ச்.., தூங்குங்க அன்பு..” அவள் மென்மையாக கடிந்துகொள்ள, அதன் பிறகு அவனிடம் ஆழ்ந்த உறக்கம்.

அவளோ.., அவன் முகம் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். அவன் வாழ்க்கையில் எதுவோ நடந்திருகிறது என்பதை அவன் வாய் வார்த்தை உணர்த்தியிருக்க, அது என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை.

நேரம் கடக்கவே.., தன்னை மீறி அவள் கண்ணயர, “அம்மாடி..” மோகனின் குரல் அவளைத் தீண்ட, சட்டென விழித்தவள், முதல் வேலையாக அன்புவைத்தான் பார்த்தாள்.

“என்ன மோகன்..?” கேட்டவள் எழ முயல, கால்கள் இரண்டும் சுத்தமாக மரத்துப் போயிருந்தது. ஒரு வழியாக அவற்றை சரிப்படுத்திவிட்டு, நிமிர்ந்து பார்க்க, டிரிப்ஸ் முடியப் போவது தெரிந்தது.

இரவு முழுவதும் அதைப் பார்ப்பதுதானே அவளது வேலையே. வேகமாக அதை அவள் நிறுத்திவிட்டு, அவரைப் பார்த்தாள்.

“சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வரவா? காபி குடிக்கறீங்களா?” அவன் கேட்க, நேரம் பார்த்தவளுக்கு அது ஐந்து முப்பதைக் காட்டியது.

“ம்.., இட்லி வாங்கிட்டு வாங்க..” உரைத்தவள் பணம் கொடுக்க, அவர் அங்கிருந்து நகர்ந்தார்.

அவர் செல்லவே.., அங்கிருந்து எழும் முன்னர், அவன் நெற்றியில் கைவைத்துப் பார்க்க, இப்பொழுது லேசாக சுடுவது தெரிந்தது. வேகமாக தன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தவள், நிம்மதியாக மூச்சு விட்டாள்.

மென்மையாக அவன் சிகை கோதியவள், அவன் முன்நெற்றி முடி விலக்கி, மென்மையாக இதழ் ஒற்றியவள், தன் செய்கையை நம்ப முடியாமல் திகைத்து, அங்கிருந்து எழுந்தாள். இரவு முழுவதும் அவனை ஒரு சேயாக மடி தாங்கிய உணர்வின் தாக்கம் இது, என்பதை உணர்ந்தவளுக்கு அப்பொழுதுதான் சற்று இயல்பாக மூச்சு விட முடிந்தது.

அவன் அறையை அப்பொழுதுதான் பார்த்தவள், ஓரத்தில் இருந்த பாத்திரத்தை திறந்து பார்க்க, அவன் என்றைக்கோ வைத்திருந்த சாதம் நீர் விட்டு, கெட்டுபோய் காட்சியளிக்க, வேகமாக அதை மூடி வைத்தாள்.

அவன் பெரிதாக எதையும் சமைத்து சாப்பிட்ட அறிகுறியே இல்லை. ‘இவர் சாப்பாடு இதுவா?’ அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

‘ஏன் இப்படி..? உழைத்து சம்பாதிப்பதே உண்ணத்தான்.., ஆனால் இவர் இப்படி..’ நினைவைக் கலைத்தது மோகனின் வருகை.

அவள் அந்த பாத்திரங்களுக்கு அருகே நிற்கவே, அங்கே சென்றவர், அவற்றைப் பார்த்துவிட்டு, “இதை கொட்டிட்டு கிளீன் பண்ணிட்டு வர்றேன்..” அங்கிருந்து எடுத்துச் சென்றார்.

அங்கே இருந்த பிளேட்டில் இட்லியை எடுத்து வைத்தவள், அன்பு கண்விழிக்க காத்திருந்தாள். அவளை அதிக நேரம் சோதிக்காமல் கண் விழித்தவன், முதலில் கண்டது தன் இடக்கரத்தில் இருந்த வெயின்பிளாண்டைத்தான்.

‘இது எப்படி..?’ இமைகளை அழுந்த மூடித் திறந்தவனது நாசி, அங்கே கீர்த்தி உபயோகிக்கும் செண்டின் மணம் உணர, வேகமாக பார்வையைச் சுழற்றினான்.

அவளைக் கண்டுகொண்டவனுக்கு, அந்த நேரம்.., அவளை அங்கே சத்தியமாக எதிர்பார்க்கவில்லை என்பதை அவன் விழிகள் காட்டிக் கொடுத்தது.

“நீங்க.., இங்கே.., இந்த நேரம்..” கேட்டவன், அப்பொழுதுதான் தான் சட்டை இல்லாமல் இருக்கிறோம் என்பது உறைக்க, வேகமாக கொடியில் இருந்த டவ்வலை எடுத்து தன்மேல் போர்த்திக் கொண்டான். அவன் செய்கையைப் பார்த்தவள், வாய்க்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

‘ஹப்பா.., டாக்டர் சொன்ன மாதிரி, பொண்ணுங்களை விட கான்ஷியஸ் அதிகம்தான்’ கண்கள் அவன் தள்ளாட்ட உணர, நிச்சயம் தன்னால் ஓடிபோய் அவனைத் தாங்க முடியாது என்பதால் அமைதியாக நின்றுகொண்டாள்.

ஒரு வேளை அவனைப் பிடிக்கிறேன் எனப் போய்.., அவன் தன்னை தாங்கிக் கொள்ளும் நிலை வந்துவிடக் கூடாது என நினைத்தாள்.

தேகம் சற்று தள்ளாடினாலும், பிடிவாதமாக அதை உதறியவன், தன் கரங்களால் முகத்தை அழுந்த துடைத்துக் கொள்ள, இரவில் நடந்தவை அனைத்தும் கலங்கலாக அவன் நினைவிற்கு வந்தது.

“மேடம்.., என்ன இப்படி பண்ணிட்டீங்க..? ஆண்டவா..” நெற்றியை அழுத்தமாக தேய்த்துக் கொண்டான்.

அவனது எந்த செய்கைக்கும் அவளிடம் எதிர்வினை எதுவும் இருக்கவில்லை. “நீங்க முதல்ல இங்கே இருந்து கிளம்புங்க.., இது தப்பு.., ஹையோ..” அவள் இரவு முழுவதும் தன்னோடு இருந்திருக்கிறாள் என்ற நினைவை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

“என்னப்பா.., யாரை விரட்டுற..?” கேட்ட சந்திரன் அறைக்குள் வர, அவரது கழுத்தில் இருந்த கருவியே அவர் யார் என்பதை உணர்த்த, அப்படியே நின்றுவிட்டான்.

“கொஞ்சம் தெம்பு வந்த உடனே கீர்த்தியை விரட்டுறியா..?” கேட்டவர், தன் பேகில் இருந்து இன்ஜெக்ஷன் எடுக்க, “வாங்க அங்கிள்.., அவருக்கு ஜுரம் இப்போ பரவாயில்லை..” அப்பொழுதுதான் அவள் வாய் திறந்தாள்.

அப்பொழுது மோகனும் உள்ளே வர, ‘இங்கே என்ன நடக்கிறது..?’ படுக்கையில் சட்டென அமர்ந்துவிட்டான்.

வெயின் இன்ஜெக்ஷனை அவனுக்குப் போட்டவர், “மோகன்.., தம்பிக்கு அந்த இட்லியைக் கொடுங்க.., கீர்த்தி.., வாம்மா.., நானே உன்னை வீட்ல டிராப் பண்றேன்..” அவர் உரைக்க, இப்பொழுது அவள் மறுக்கவில்லை.

அன்புவின் பார்வை அவளைத் தொடர, முதல் முறையாக அதைக் கண்டுகொள்ளாமல் அறையை விட்டு வெளியேறினாள். பிரம்மை பிடித்த நிலையென்றால் இப்படித்தான் இருக்குமா? உறைந்துபோய் அமர்ந்துவிட்டான்.

‘என்னை உடன் இருந்து அவங்க கவனிக்கும் அளவுக்கு, நான் அவங்களுக்கு என்ன செய்தேன்?’ அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவனிடம் விடைபெறக் கூட அவள் நிற்கவில்லை. ‘இனிமேல் அவன் பார்த்துக் கொள்வான். கூடவே மோகன் இருக்கவே கிளம்பிவிட்டாள். வீட்டில் பெற்றவர்களை அவள் சந்தித்தாக வேண்டுமே.

‘அவர்களிடம் என்ன சொல்லப் போகிறேன்..?’ எண்ணுகையிலேயே கலக்கமாக இருந்தது. நிச்சயம் இரவு முழுவதும் அவர்கள் உறங்கியிருக்க மாட்டார்கள் என்பது திண்ணமே.

கூடவே, காலையிலேயே சந்திரன் ஏன் வந்து நின்றார் என்பதை அறியாத அளவுக்கு அவள் ஒன்றும் குழந்தை இல்லையே. ஒரு பெண் அந்த நேரம் அன்புவின் அறையில் இருந்து தனியாகச் செல்வதற்கும், அவரோடு உடன் செல்வதற்கும் இருக்கும் இமாலய வித்தியாசம் அவளுக்கு தெரியாதா என்ன?

அவரோடு நடந்தவாறே.., “தேங்க்ஸ் அங்கிள்..” அவள் உரைக்க, அமைதியையே அவளுக்கு பதிலாக்கினார்.

‘நீ செய்ததில் எனக்கும் உடன்பாடு இல்லை..’ அவரது மௌனம் அதை உணர்த்த, இவருக்கே இப்படியென்றால், பெற்றவர்கள்..

காருக்குள் அமைதியே நிலவ, வீட்டின் முன்னால் கார் நிற்க, இறங்கி உள்ளே சென்றவளுக்கு, ஹாலில், சோபாவில் அமர்ந்திருந்த பெற்றவர்களின் தோற்றம் மனதைப் பிசைய, அழுகையோடு அவர்களை நெருங்கினாள் கீர்த்தி.

*****

# பகுதி – 12.

கா ரை நிறுத்திவிட்டு உள்ளே வந்த சந்திரன், அந்த வீட்டின் சூழலை, அதன் அமைதியை ஒரு நொடி நின்று உள்வாங்கினார். கீர்த்தியின் பெற்றவர்களின் முகத்தில் விரவியிருந்த வருத்தத்தில் சற்று வருந்தினாலும், அதை வெளிக்காட்டாமல்,

“அப்போ நான் பிறகு வர்றேன்..” உரைத்தவர், தான் அங்கே அதிகப்படி என்பதை உணர்ந்து, ‘உங்கள் பொண்ணை அழைத்து வந்துவிட்டேன்’ என் வேலை முடிந்தது என அமைதியாக கிளம்பிவிட்டார்.

கீர்த்தியோ, சற்று நடுக்கமாக பெற்றோரை அணுகியவள், “அம்மா.., அப்பா.., சாரி..” அவர்கள் அருகில் அமர்ந்தாள்.

அவர்கள் அமைதியாக இருக்கவே, “அவருக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்த பிறகு, என்னால் இங்கே இருக்கவே முடியலம்மா, அதான்.., நான் செய்தது தப்புதான்.., எனக்குத் தெரியுது. ஆனா, எனக்கு வேற வழி தெரியலப்பா...” அவர்கள் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

“ஏதாவது பேசுங்கப்பா.., அம்மா.., நீங்களாவது ஏதாவது சொல்லுங்க” பொதுவாக அவள்தான் அமைதியாக இருந்து வதைப்பாள். முதல் முறையாக அவர்களது மௌனம் அவளை சுட்டது.

“போன்ல என்னென்னவோ சொன்னம்மா.., நாங்க என்னன்னு நினைக்கறது?” மாணிக்கம் வாய் திறந்தார்.

“அப்பா.., போன்ல சொன்னது சரி கிடையாதுதான்..” அவள் அதற்கு மட்டுமே வருந்தினாளே தவிர, சொன்ன விஷயத்துக்காக வருந்தவில்லை என்பதை உணர்ந்தவர்களுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“அம்மாடி.., நீயே யோசித்துப் பார்.., இது எப்படிம்மா சரியா வரும்?” அவரால் அழுத்தி பேச முடியவில்லை.

“நான் அவரோட இருந்தேன்னா சந்தோஷமா இருப்பேன்ப்பா.., என் குறை ஒரு சதவீதம் கூட தெரியாமல், அது என் ஞாபகத்துக்கே வராமல், என்னை பாத்துப்பாருப்பா..” கண்ணீர்த்தடம் அவள் கண்களில்.

இவ்வளவு நம்பிக்கையாக, உறுதியாக பேசும் அவளிடம் மேலே எப்படிப் பேச எனத் தெரியாமல் மாணிக்கம் தடுமாறிப் போனார்.

“உன் முடிவை சொல்லிட்ட.., அன்புக்கு உன் மனசுக்குள் இருக்கும் நேசம் தெரியுமா?” தாய் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

“இப்படிச் சொன்னால் எப்படி கீர்த்தி?” சாந்தி கேட்க, சத்தியமாக விடை அவளிடம் இருக்கவில்லை.

மாணிக்கத்துக்கு இன்னுமே அவள் காதலை அங்கீகரிக்க முடியவில்லை. மகளது விருப்பத்தை மறுக்கும் தைரியமும் அவருக்கு இல்லை. ஊசலாடும் மனநிலையில் அமர்ந்திருக்க, தந்தையை நிமிர்ந்து பார்த்தாள்.

“நீங்க ஏதாவது சொல்லுங்கப்பா..”

“எனக்கு என் பொண்ணோட சந்தோஷம்தான் முக்கியம். ஆனா.., இதை எப்படி எடுத்துக்கன்னு எனக்குத் தெரியலம்மா..” மகளது சந்தோஷம் அவனிடம் இருக்கிறது என அவள் உரைக்கையில், எப்படி மறுப்பதாம்?

“சரிம்மா.., நீ சாப்ட்டு போய் ரெஸ்ட் எடு.., சாந்தி, கூட்டி போ..” அவர் உரைக்க, மகளை அழைத்துக் கொண்டு சென்றார்.

அவர்களின் கட்டாயத்துக்காக உண்டவள், படுக்கையில் விழ, உடல் மட்டுமே அங்கே இருந்தது. நினைவுகள்

முழுவதும் அவனே நிறைந்திருக்க, அவனிடம் போகச் சொல்லி மனம் முரண்டியது.

ஜுரம் விட்டிருந்தாலும், களைப்பு அதிகமிருக்க, சோர்ந்துபோய் படுத்திருந்தான் அன்பு. மோகனையும் பிடிவாதமாக அனுப்பி விட்டான். நினைவுகள் முழுவதும் கீர்த்தியே நிறைந்திருந்தாள்.

தான் அவளை விட்டு விலகிச் செல்லும் முடிவில் இருக்க, கடவுள் வேறாக நினைப்பதை என்ன செய்யவென்று அவனுக்குத் தெரியவில்லை. இரண்டு நாட்களில் ஊருக்கு கிளம்பிவிட முடிவெடுத்துதான் அந்த மழை நாளில் அறைக்குத் திரும்பினான்.

ஆனால், அன்று இரவே ஜுரம் அடிக்கவே, ஒரு பேரசிட்டமால் வாங்கிப் போட்டவனுக்கு, ஜுரம் மட்டுப்படுவதாக இல்லை. மழையில் போன் வேறு நனைந்துவிட, அதை பிரித்து அரிசிக்குள் புதைத்து வைத்தான். மறுநாள் காலையில் ஜுரம் சற்று அதிகரிக்க, மேலும் மாத்திரை போட்டாலும் அது மட்டுப்படவே இல்லை.

ஹாஸ்பிடல் செல்லலாம் என்றால்.., சாதாரண ஜுரம் தானே என அவன் அசட்டை செய்ய, அதுவே அவனை வீழ்த்தும் அளவுக்கு உரு மாறியது அவனே அறியாதது. அன்றைக்கு கிருஷ்ணா வந்துதான் அவனது அலைபேசியை பொருத்திக் கொடுத்துவிட்டுப் போனான்.

அவர்கள் தெருவில் இருக்கும் அந்த அக்காவும், கோயில் கொடை என ஊருக்குச் சென்றிருக்க, அவனை கவனிக்க யாரும் இருக்கவில்லை. முதல் முறையாக தனிமையை அவன் உணர்ந்த தருணம்.

அவ்வளவு நாளாக, பெற்றவர்கள் தன்னை பாதியில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்களே என்ற வருத்தம் இருந்தாலும், தான் அனாதையாக, தனியாக பீல் பண்ணியதில்லை. ஆனால்.., முதல் முறையாக தன்னைத்

தாங்க ஒரு தோள் இல்லை, தனக்கு சாய ஒரு நிழல் இல்லை என அவன் மிகவும் வருத்தப்பட்டான்.

அது வரைக்கும் மட்டுமே நினைவிருந்தது. அதன் பிறகு நடந்தவை அவனே எதிர்பாராதது. ‘கீர்த்தி..’ அவள் நினைப்பே கண்களில் நீரை வர வைத்தது.

‘உன் அன்பை எப்படி நான் ஏற்க..?’ அவன் மனம் கேள்வி கேட்க, அதை மறுக்கும் நிலையை நினைத்தால், முதல்முறையாக மனதுக்குள் பிசைந்தது.

‘போய்விடு.., இங்கே இருந்து போய்விடு..’ அவன் உள்மனம் விரட்ட, அது வலுப்படவே செய்தது. தேவையில்லாமல் அவள் மனதில் ஆசையை வளரவிட்டு, அது நடக்காமல் போனால், சேதாரம் அதிகமிருக்கும் என உள்மனம் எச்சரித்தது.

நிச்சயம் அவன் வாழ்க்கை சென்னையில் இல்லை. அவனது வேர் தஞ்சையில் இருக்கிறது. அது மட்டுமே தன்னை உயிர்ப்போடு உலாவ வைக்கும், தான் தோற்ற இடத்தில் ஜெயித்துவிடும் வேகம்.., வென்றாக வேண்டிய கட்டாயம்.., மனதை இறுக்கிக் கொண்டான்.

ஆனால்.., பாறையின் இடுக்கில் கசியும் நீரூற்றாக கீர்த்தியின் நினைவு, அவனை பலகீனமாக்கத் துவங்கியது. அங்கே இருந்து ஓடிவிடச் சொல்லி உள்மனம் உந்த, தன் உடல்நிலை கருதி அதை ஒத்தி வைத்தான்.

தான் இனிமேல் ஊருக்குள் செல்கையில், பலகீனமானவனாக இருப்பதை அவன் விரும்பவில்லை. செய்யவேண்டிய வேலைகள் மலைபோல் இருக்க, இனிமேல் தனக்கு ஓய்வு என்பதே இருக்கப் போவதில்லை என்பது புரிய, பிடிவாதமாக விழி மூடினான்.

இமைகள் மூடினாலும் நினைவுகள் அடங்குமா என்ன? தன் சிகைக்குள் கை கோர்த்து கோதிய அவள் விரல்கள், காலையில் தன் நெற்றியில் பதிந்த அவளது ஈர முத்தம்,

விடியும்வரை தனக்காக அவள் பரிதவித்த விதம், நிழலாக தோன்றி அவனை இம்சித்தது.

அவள் அன்பை அனுபவிக்கச் சொல்லி, அவள் அன்பில் கரைந்து போகச் சொல்லி அவன் மனம் கெஞ்ச, அவளது வசதியும், தன் நிலையும் எப்படி ஒத்துப் போகும்? அவனுக்கு புரியவே இல்லை. கீர்த்தியின் பெற்றவர்கள், உடன் பிறந்த தம்பி.., இவர்களை நினைக்கையில், அவள் விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவார்கள் என அவனுக்குப் புரியவே இல்லை.

எந்த நம்பிக்கையில் என்மேல் ஆசையை வளர்த்துக் கொள்கிறாள்? சிந்திக்கையில் தன் ஒரு சுழலுக்குள் சிக்கிக் கொள்வதை உணர்ந்தான். அது சுகமாக இருப்பதில் இன்னும் திடுகிட்டான். முயன்று விழி மூட, களைப்பால் அவன் உறக்கத்துக்குச் சென்றான்.

அன்றைக்கு முழுவதும் ஓய்வெடுத்தவன் சற்று தெம்பாக உணர்ந்தான். ஆனாலும், உடனடியாக வேலைக்குச் சென்று உடலை மேலும் பலவீனமாக்க முயலாமல், அடுத்த நாளும் அறையிலேயே முடங்கினான்.

அன்று காலையிலேயே அவன் மனம் ஏனென்றே தெரியாமல் படபடக்க, ‘ஏன் இப்படி..?’ அவன் சிந்திக்கையிலேயே அங்கே வந்தாள் கீர்த்தி.

ஒரு நொடி தடுமாறி, “வாங்க..” வேகமாக அழைத்து, அங்கே இருந்த தண்ணீர் கேனை எடுத்துப் போட்டு, அதன்மேல் ஒரு பலகையை வைத்தவன் அவளை அமரச் சொன்னான்.

அவன் செய்கையை கவனித்தாலும், பார்வை முழுவதும் அவனிடமே நிலைக்க, “இப்போ எப்படி இருக்கு அன்பு..” வருடும் குரலில் அவள் வினவ, “ஜுரம் சரியாயிடுச்சுங்க..”, அவள் செய்த உதவி கண்முன் நிழலாட, பேச்சற்ற மௌனம் நிலவினாலும், பார்வைகள் ஒன்றை ஒன்று கவ்வி நின்றது.

ஒரு மாதிரி நெகிழ்ந்து போய், தடுமாறி, தொண்டையை சற்று செருமியவன், “நீங்க செய்த உதவிக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே எனக்குத் தெரியலை.., என் அம்மா, அத்தைக்குப் பிறகு, என்னை கவனிச்சு இருக்கீங்க…”.

அவன் குரல் கொஞ்சம் தடுமாற, ‘ஏண்டா இப்படி..?’ அவனை இழுத்து அணைத்து ஆறுதல் சொல்லும் வேகத்தை தவிர்க்க முடியாமல் அவனைப் பார்த்தாள்.

அவனுக்கு ஜுரம் இல்லை என அவன் சொன்னாலும், அவன் முகத்தில் இருந்த களைப்பை கண்டவளுக்கு, இன்னும் அவனுக்கு ஜுரம் இருக்கிறதோ என்ற சந்தேகம்.

“நிஜமாவே ஜுரம் சரியாயிடுச்சா..?” அவள் கண்கள் அவனை வேகமாய் ஆராய்ந்தது.

“நிஜமாவே சரியாயிடுச்சுங்க.., நீங்களே வேண்ணா பாருங்க..” தன் கரத்தை அவளுக்கு முன்பாக நீட்டினான். அவள் கண்களில் வழியும் பரிதவிப்பை அவனால் தாங்க முடியவில்லை. எனவே அவ்வாறு செய்தான்.

கொஞ்சம் கூட தயங்காமல் அவன் முழங்கை வரைக்கும் தன் கையை வைத்து உணர்ந்தவள், அவனுக்கு ஜுரம் இல்லை என்று தொட்டு உணர்ந்த பிறகே நிம்மதியானாள். அதை உணர்ந்த பிறகு, அவன் எப்படி உணர்ந்தான் என்றே சொல்ல முடியவில்லை.

‘இது நடக்காது.., உங்க மனசுக்குள் ஆசையை வளர்த்துக் கொள்ளாதீங்க..’ அவனுக்கு நெஞ்சுவரை முட்டிய வார்த்தைகளை உரைக்க முடியவில்லை. அவள் வாய்விட்டு எதையும் உரைக்கவில்லை என்றாலும், அவள் காட்டும் அக்கறையில் அவனுக்குத் தெரியாததா?

அவனுக்கோ.., அவள் வீட்டில் என்ன நினைத்திருப்பார்கள்.., எப்படி சம்மாளித்திருப்பாள்? உள்ளுக்குள் பெரும் பிரளயமாக ஓடியது. அங்கே ஒருவித அமைதி நிலவ, அது

பிடிக்காமல், “உங்க வீட்டுக்கு வந்திருக்கேன், குடிக்க எதுவும் கொடுக்க மாட்டீங்களா?” அவள் கேட்க,

“சாரிங்க.., போய் டீ வாங்கிட்டு வரவா..?” சற்று பரபரப்பானான்.

“இல்ல.., வீட்ல என்ன வச்சிருக்கீங்களோ அதையே கொடுங்க..” அவனை தடுத்தாள்.

“வீட்ல.., ப்ளாக் டீ தான் போட்டேன்..” பெரும் தயக்கம் அவனிடம்.

“பரவாயில்லை அதையே கொடுங்க..” அவள் உரைக்கவே, தன் அறைக்குள் நுழைந்து, எடுத்து வந்து கொடுத்தான்.

டம்ப்ளரை கையில் வாங்கியவள், “சமையல் எல்லாம் நீங்களே செஞ்சுப்பீங்களா?” அவள் கேட்க, ஆமோதிப்பாக தலை அசைத்தான்.

“இன்னைக்கு என்ன சமைச்சீங்க..?” அவள் துருவ, “கஞ்சிதாங்க..” அவள் எதிரில், கைப்பிடி சுவரில் அமர்ந்தான்.

“என்னைக்குதான் விருந்து சமைப்பீங்க?” தன் கையில் இருந்த டீயை மெதுவாக உறிஞ்சியவாறு கேட்டாள்.

“ம்ச்.., அதெல்லாம் கிடையாதுங்க.., ஒரு கஞ்சி, இல்லையா சாம்பார், ரசம்.., ஊறுகாய்.., இதுதான் என் சமையல். சில நேரம் பிரெட் வாங்கிப்பேன்...” நான் இதுதான்.., இவ்வளவுதான். உண்மை உணர்ந்தால் விலகிவிட மாட்டாளா? உள்ளுக்குள் ஓடியது.

“அது போதுமா?” அவள் குரல் கனிந்து கிடந்தது. எதற்கு இதையெல்லாம் பேசுகிறோம்? அவசியமா? எதுவும் தோன்றவில்லை. காதலர்கள் பேசும் ஸ்வீட் நத்திங் போல, ஏதோ உரையாடவேண்டும்.., நெஞ்சம் தவித்தது.

“அட நீங்க வேற.., ஒரு காலத்தில் சாப்பிடதுக்கு வேண்டியே வாழ்ந்தவங்க நான். இப்போ..” கடந்த கால நினைவுகள் அவனுக்குள் ஓடியது.

“அன்பு.., உங்க ஊர் எது? அம்மா அப்பா..?” அவள் கேள்வியாக நிறுத்த, அவன் முகத்தில் கவிழ்ந்த வேதனை அவளை வெகுவாய் தாக்கியது. கூடவே.., “அன்னைக்கு ஜுர வேகத்தில் என்னென்னவோ சொன்னீங்க..” அவள் உரைக்க, மெதுவாக அவளை ஏறிட்டான்.

“ஓ..” உரைத்தவன், வேகமாக அவளுக்கு முதுகு காட்டி திரும்பினான். அவன் ஏதோ நினைவுகளில் இருந்து தப்பிக்கப் போராடுவது அவளுக்குத் தெரிந்தது. கையில் இருந்த கப்பை அருகில் வைத்தவள், அவனை நெருங்கி, தோளில் கை வைத்தாள்.

“உங்களுக்கு ஒண்ணு தெரியுமா..? என்கிட்டே ஒண்ணு இல்லன்னு சொல்றதை விட, என்கிட்டே அது இருந்ததுன்னு சொல்றது.., ரொம்ப கொடூரமானது..” அவன் குரலில் விரவிய வேதனையில் அப்படியே உறைந்து போனாள்.

“எனக்கும் அது தெரியும் அன்பு..” அவள் பார்வை தன் காலுக்குச் சென்று, செவிமடலை வருட, அந்த நேரம், அவளை இறுக அணைத்துக் கொள்ள அவன் கைகள் பரிதவித்தது.

“சாரி.., நான்..” அவன் தன் வேதனை மறைத்து அவளிடம் மன்றாட,

“ம்ச்.., உங்ககிட்டே இருக்கும்போதுதான் நான் என் குறைகளை உணர்வதே இல்லை. நீங்களும்..” அவள் அவனை விட்டு விலக, வேகமாக அவள் முன்னால் வந்து நின்றான்.

“இங்கே ரொம்ப வெயிலா இருக்கு. உள்ளே வாங்க..” அழைத்தவன், அந்த கேன்களை உள்ளே எடுத்துப் போட்டு, அவளை அமரச் சொல்லிவிட்டு, அவள் எதிரில் அமர்ந்தான்.

அவன் அழகாய் அதைக் கடந்த விதம் பிடிக்க, அவனையே பார்த்திருந்தாள். “நீங்க என்ன படிச்சிருக்கீங்க..?” அவள் கேட்க,

“ஜம்பமா சொல்றதா இருந்தால் பிஈ.., பட்.., அதில் இன்னும் ஏழு அரியர் வச்சிருக்கேன்..” மெல்லியதாக புன்னகைக்க முயன்று தோற்றான்.

கனமாய் சில நொடிகள் கடக்க, அவன் முகத்திலேயே கவனமாக இருந்தவள், “என்ன ஆச்சு அன்பு..?” அவனை கலைத்தாள்.

“ஒரு காலத்தில் எதுவுமே பெருசா தெரியலை. ஆனா.., எல்லாத்தையும் இழந்துட்டு நிக்கும்போது.., ரொம்ப வலிக்குது..” ஒரு நொடி இடைவெளி விட்டு தொடர்ந்தான்.

“தஞ்சாவூர் பக்கத்தில் இருக்கும் சின்ன கிராமம்தான் என் ஊர். முழு விவசாயம்தான் எங்க தொழில். கிட்டத்தட்ட ஐம்பது ஏக்கர்.., நெல், வாழை, தென்னை.., இப்படி பலவிதமான தோட்டம். அப்பாவும் அம்மாவும் ஒரு நிமிஷம் விடாம உழைப்பாங்க.

“ஆனா நான்.., அவங்க சம்பாதிக்கிறதை செலவழிக்கவே பொறந்தேன் போல. பிளஸ்டூ ல ஆவரேஜ் மார்க் தான் வாங்கினேன். அக்ரி படின்னு சொன்ன அவங்க பேச்சை கேக்காமல், இஞ்சினியரிங்தான் படிப்பேன்னு பிடிவாதம்.

“நாலு லட்சம் செலவு பண்ணி சீட் வாங்கி கொடுத்தாங்க. காலேஜ் போக ராயல்என்பீல்ட் பைக் தான் வேணும்னு கேட்டேன். அதையும் வாங்கிக் கொடுத்தாங்க. காலேஜ்ல பிலிம் காட்டத் தெரிந்த எனக்கு, படிக்கணும்னு தோணலை. எல்லாம் ஒரு நாள் மாறிப் போச்சு…” அவன் விழி மூடிக்கொள்ள, இமைக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அப்பாவுக்கு தீராத வயிற்றுவலி.., ஹாஸ்பிடல் போய் பார்த்தால், கேன்சர்ன்னு ரொம்ப ஈசியா சொன்னாங்க..,

அப்பாவால் வயல்ல இறங்க முடியலை, அம்மாவால் அப்பாவை விட்டு வேற எதையும் யோசிக்க முடியலை. எல்லாத்தையும் வேடிக்கை பார்த்தேன்..” குமுறி அழ, அவளால் தாங்க முடியவில்லை.

வேகமாக தான் இருக்கும் இடத்தில் இருந்து இறங்கி, அவன் அருகே அமர்ந்து, அவன் கரத்தை பற்றிக் கொண்டாள்.

“விவசாயம் போச்சு.., வருமானம் போச்சு.., அப்பாவுக்கு வயித்தியம் பாக்க பணம் வேணும்.., நிலம் அடமானமா போச்சு.., கடைசியா.., அப்பாவும்.., நான் நல்லவன் இல்லங்க.., ரொம்ப கொடூரமானவன்.., கேவலமானவன்..” அவள் கரத்தை பற்றியவன், குலுங்கி அழ, இத்தனை நாள் அவன் மனதுக்குள் இருந்த விஷயம் வெளியே வருவதை உணர்ந்து கொண்டாள்.

அவள் கைகளில் அவன் கண்ணீர் வழிய, “அன்பு.., என்ன இது..? குழந்தை மாதிரி..” அவன் தோள் தொட்டு உலுக்கினாள்.

“உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? எங்க ஊர் பண்ணையாருக்கு அடுத்தது பெரிய குடும்பம் நாங்கதான். ஆனா.., எல்லாத்தையும்.., நான்., ஏன் அப்போ அப்படி இருந்தேன்னே தெரியலை. அம்மா அப்போ கூட என்னை ஒரு வார்த்தை சொல்லலையே..” அவள் முகம் பார்த்தவன் பரிதாபமாக உரைக்க, அவள் கண்களிலும் கண்ணீர்.

“அப்போ அம்மா..” அவள் குரலே சற்று நடுங்கியது.

“அப்பாவும் போய்ட்டார்.., நிலமும் அடமானமா போச்சு.., அம்மாவால் தனியா வயல்ல இறங்க முடியலை. தென்னந்தோப்பு வருமானம் இருந்தாலும், ஊருக்குள் வாழ்ந்து கெட்ட குடும்பம்னு பேர் வாங்குனதை அவங்களால் தாங்க முடியலை.

“அன்னைக்கு என்னை கூப்ட்டு பேசினாங்க.., நான் அவங்க நிலத்தை மீட்டு, அந்த ஊருக்குள் தலை நிமிந்து நடக்குறதை பாக்கணும்னு சொன்னங்க. அப்போ கூட எனக்குத் தெரியலையே.., அம்மா என்னை விட்டு போகப் போறாங்கன்னு தெரியாமலே, அசால்ட்டா இருந்துட்டேன்.

“காலையில் பாத்தா.., அம்மா இல்ல.., என் அம்மா என்னை அனாதையா ஆக்கிட்டு போய்ட்டாங்க. காலேஜ் முடிச்சுட்டேன்.., ஆனா கையில் இருபது அரியர்.., விவசாயம் எனக்கு ரத்தத்தில் ஊறிப் போனது. அதை கண்டுக்காமல், அவங்களுக்கு துணை இருக்காமல், வயசுக்கான திமிரில் அலைந்த எனக்கு, எல்லாம் ஒரே நாள்ல முடிஞ்சு போச்சு..” அவள் கரத்தை இறுக்கிக் கொள்ள, அவள் கரம் வலித்தாலும் அவனுக்காக பேசாமல் அமர்ந்திருந்தாள்.

“ஊருக்குள்ளே ஒவ்வொருத்தரும் பார்த்த பார்வை.., அந்த இரக்கம்.., என்னால் அங்கே இருக்கவே முடியலை. நம்மளை கௌரவமா பார்த்த கண்ணெல்லாம், இரக்கமா உச்சுகொட்டும்போது.., அப்படியே உயிரே போற வலி.

“அப்போ முடிவு பண்ணேன்.., எங்க அம்மா அப்பா அடமானமா வச்ச நிலத்த மீட்க பணம் வேணும்.., அதை சம்பாதிக்காமல் அந்த ஊருக்குள் போகக் கூடாதுன்னு வெறி.., கிளம்பி வந்துட்டேன்.., பத்து லட்சம் எனக்கு ரொம்ப பெரிய அமவுண்ட் தான். ஆனா.., நிலத்தை மீட்காமல் விட மாட்டேன்” அவன் குரலில் சாதிக்கும் வெறி மின்னியது.

“நிச்சயமா நீங்க சாதிப்பீங்க.., எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு..” அவனுக்கு நம்பிக்கை அளித்தாள். அவன் கதையைக் கேட்டு, அவள் மனம் பாரமாகிப் போனது. கூடவே.., அவள் மனதுக்குள் சிறு யோசனை ஓட, அவனையே பார்த்திருந்தாள்.

‘தன் யோசனைக்கு அவன் ஒத்துக் கொள்வானா?’ கண்கள் அவனையே தீண்ட, ‘என்ன?’ என்பதுபோல் அவளையே பார்த்திருந்தான் அன்பு.

*****

# பகுதி – 13.

கீர்த்தியின் சிந்தை முழுவதும் அன்பே நிறைந்திருந்தான். அவனது துன்பத்தை போக்க வேண்டும்.., அதற்கு தன்னால் முடிந்தது செய்ய வேண்டும், இவை மட்டுமே எண்ணமாக இருந்தது.

அவள், அவனைப் பற்றிய நினைப்பில் மூழ்கி இருக்க, சென்னையில் இருந்து கிளம்பும் வேலையில் முனைப்பாக செயல்பட்டான் அன்பு. இன்னும் நான்கு நாட்களில் இந்த மாதம் முடிந்துவிடும் என்பதால், அந்த மாத ஊதியத்தை வாங்கிவிட்டு செல்வது என முடிவெடுத்தான்.

அந்த நான்கு நாட்களில் கூட ஓய்ந்து இருக்காமல் அவன் உழைக்க, தன் அலுவலகம் வந்த அவனை எதிர்கொண்டாள் கீர்த்தி.

“இன்னும் ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்திருக்கலாமே அன்பு..” கனிவாய் அவள் கேட்க,

“அதெல்லாம் பரவாயில்லங்க.., நான் நல்லாத்தான் இருக்கேன்” அவன் விலகிச் செல்ல முயல, அவன் எதிரில் ஒரு டிபன்பாக்ஸை நீட்டினாள்.

கேள்வியாக அவளை ஏறிட, “உங்களுக்குத்தான்..” அவள் உரைக்க, ‘ஏற்கனவே நீங்க செஞ்ச ஹெல்ப் போதுங்க’ மறுக்க தோன்றினாலும், முடியாமல் வாங்கிக் கொண்டான்.

“சாப்ட்டுட்டு வேலை பார்த்தால் போதும்..” சிறு கண்டிப்பில் உரைக்க, வேகமாக தலை அசைத்தான்.

உணவு தொண்டைக்குள் இறங்க, நீண்ட நாட்களுக்குப் பிறகான வீட்டு சாப்பாடு அவனுக்கு அமிர்தமாகத்தான் இருந்தது. நொடியில் உணவு காலியாக, அவன் உண்ட வேகத்தை மறைவிலிருந்து பார்த்துக்

கொண்டிருந்தவளுக்கு, அவனுக்கு அது போதவில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

தாயிடம் தனக்கென அவள் உணவு கேட்க, அவள் அளவுக்கு கட்டிக் கொடுத்த உணவு, அவனுக்கு எப்படி போதும்? தொடர்ந்த நாட்களிலும் இதுவே வழக்கமாக, தன் வயிற்றை கவனிக்கும் அவள்மேல் தன்னை மீறி நேசம் கொண்டான் அன்பு.

‘இங்கிருந்து ஓடிவிடு..’ ஒரு மனம் விரட்ட, ‘அவளை இப்படியே விட்டுச் செல்வாயா?’ ஒரு மனம் சாடியது. இருதலைக் கொள்ளி எறும்பாக தவித்துதான் போனான்.

அடுத்து வந்த நான்கு நாட்களும் மின்னல் வேகத்தில் கடக்க, அனைத்து இடங்களிலும் அடுத்த மாதம் முதல் வேலைக்கு வர மாட்டேன் எனச் சொல்லிவிட்டான். ஆனால், கீர்த்தியிடம் உரைத்துவிடும் தைரியம் மட்டும் வரவே இல்லை.

அதே நேரம்.., அன்புவை வீட்டுக்கு அழைத்து, அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைக்க விரும்பினாள் கீர்த்தி. அதற்கு, வாசனின் பிறந்த நாளை தேர்ந்தெடுத்தாள். கூடவே, அன்புவுக்கு ஒரு நாள், ஒரு நேரமாவது வயிராற உணவு கொடுக்க வேண்டும் என பெரும் ஆவல் கிளர்ந்தது.

‘இதை எப்படி வீட்டில் உரைக்க..?’ சற்று கைகளைப் பிசைந்தாள்.

அவள் தன் மனதுக்குள் இருக்கும் நேசத்தை உரைத்த பிறகு, மாணிக்கம் சற்று சோர்ந்து போனதாகத் தெரிந்தது. அதைவிட, ஒன்று இரண்டு முறை, அவளிடம் எதையோ பேச விரும்பி வருவதும், அது முடியாமல் திரும்புவதையும் அறிந்துகொண்டுதான் இருந்தாள்.

வாசனுக்கும் வீட்டில் இருக்கும் நிலவரம் ஒரு மாதிரி புரிய, கீர்த்தியை தேடி வந்தான். பொதுவாக அவன் அந்த நேரம்

தன்னைத் தேடி வர மாட்டான் என்பதால், கேள்வியாக அவன் முகம் நோக்கினாள்.

“வாசன்.., என்ன இந்த நேரம் வந்திருக்க? தூங்கப் போகல..?” நேரம் பதினொன்றை எட்டியிருக்கவே கேட்டாள்.

அவள் எதிரில் அமர்ந்தவன், தன் கையில் இருந்த ஹியரின் மெஷினை அவளிடம் கொடுக்க, ‘இவன் எப்போதான் புரிஞ்சுப்பானோ?’ சுணங்கிய மனதை சீராக்கினாள்.

மூன்றாம் மனிதரிடம் தன்னைப் பற்றி விளக்குவது அவளுக்கு கஷ்டமாக இருக்கவில்லை. ஆனால், தன்னைச் சார்ந்தவர்களே தன்னைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்களே என எண்ணுகையில், மனதின் ஓரம் வலித்தது.

அவன் கொடுத்ததை செவியில் பொருத்த, “நீ லவ் பண்றியாக்கா..?” அவன் நேரடியாக வினவ, சற்று திடுக்கிட்டு போனாள்.

“உன..க்கு யார் சொன்னா..?” தடுமாறிப் போனாள். அவனுக்கு முன்னோடியாக, வழிகாட்டியாக இருக்க வேண்டிய தானே, தவறு செய்கிறோமோ? சிந்தை சுழன்றது.

“உனக்கு மாமாவை ரொம்ப புடிச்சிருக்காக்கா.., மாமாவுக்கும் உன்னை பிடிச்சிருக்கா? அவங்களுக்கு உன்னைப்பற்றி எல்லாம் தெரியுமா? அதில் அவங்களுக்கு வருத்தம் எல்லாம் இல்லையே..?” தான் கேட்பது சரியா தவறா எனத் தெரியாத குழப்பமும், பயமும் அவன் குரலில் சரி சமமாக விரவி இருந்தது.

அதை கவனித்தவள், “என்னடா திடீர்ன்னு..?” அவனை தன் அருகில் கட்டிலில் அமர்த்திக் கொண்டாள்.

“இல்ல.., வீட்ல அம்மாவும் அப்பாவும் எப்பவும் உன்னை பத்தியே பேசிக்கறாங்க. அதே நேரம், ரொம்ப

கவலையாவும் இருக்காங்க. ஆனா, நீ இப்போதான் சந்தோஷமா இருக்க மாதிரி எனக்குத் தெரியுது அதான்..” ஒரு மாதிரி குழப்பியடித்தான்.

“உனக்கு என்ன தெரிஞ்சுக்கணும் வாசன்..? எதுவா இருந்தாலும் நேரடியா கேள்” அவன் சொல்ல வருவது அவளுக்கு புரியவே இல்லை.

“அவங்க எப்பவுமே உன் சந்தோஷம்தான் முக்கியம்னு சொல்லுவாங்க. ஆனா இப்போ.., நீ சந்தோஷமா இருக்கற, அதை அவங்களால் ஏத்துக்க முடியலை. மாமா நம்மளை விட வசதியில் குறைஞ்சவரா? அதான் அவங்களுக்கு புடிக்கலையா?” அவனுக்கு எப்படி விளக்குவது என அவளுக்குப் புரியவில்லை.

“அப்படியில்லை வாசன்..” இது பெற்றவர்களுக்கே உரிய பயம். நம் வீட்டில் செல்லமாக இருந்து பழகிய மகள், அடுத்த வீட்டில் கஷ்டப்படக் கூடாதே என்ற கவனம், நம் சக்தியை மீறி அவள் போகும் இடத்தில் நன்றாக இருக்க வேண்டும் என சாதாரண மனிதர்களே நினைக்கையில், கீர்த்தி நன்றாக இருக்க வேண்டும் என்ற அக்கறை, அதை எப்படி தவறாக நினைக்க முடியும்?

“இல்லக்கா.., எனக்குத் தெரியும். மாமாவை அவங்களுக்கு புடிக்கலை. ஆனா, எனக்கு.., நீ சந்தோஷமா இருந்தால் போதுங்க்கா, நீ மாமா கூட போய்டுக்கா, உனக்கு நான் புல் சப்போட் பண்றேன்..” அவளுக்குப் பிடித்த வாழ்க்கையை அமைத்துக் கொடுத்துவிடும் வேகம் அவனிடம்.

அப்பொழுது அவனைப் பார்த்தால், அவளுக்கு தம்பியாக இல்லை, அண்ணனாகத் தெரிந்தான். ஆனால், அவன் பேச்சில் இருந்த சிறுபிள்ளைத்தனம், மெல்லியதாக சிரித்துக் கொண்டாலும், அவன் அன்பை எண்ணி வியந்து போனாள்.

இத்தனைக்கும் அவனிடம் அவள் அவ்வளவு ஒட்டுதல் கூட கிடையாது. ஆனால், அவன் அவள்மேல் கொண்டிருக்கும்

அன்பை எண்ணி குளிர்ந்து போனாள்.

“என்ன.., ஐயா திடீர்ன்னு என் லவ்வுக்கு இவ்வளவு சப்போட் பண்றீங்க? ஒரு வேளை..” அவனை கூர்மையாக அளவிட,

“ஐயோ அக்கா.., அப்படியெல்லாம் எதுவும் இல்லை. உன் சந்தோஷம்தான் முக்கியம்னு என்கிட்டே சொல்லிட்டு, இப்போ அவங்களே எதிரா இருக்காங்களேன்னு கோபமா வருது..” பதினைந்து வயது பாலகனுக்கு வாழ்க்கையின் சூட்சுமம் புரியுமா என்ன?

“அது அப்படி இல்லை வாசன்.., ரெண்டு பக்கம் இருந்து வந்தால்தான் அது காதல். ஒரு பக்கம் இருந்து வந்தால்? அவங்களுக்கு அந்த பயம்தான். வேற எதுவும் இல்லை”.

“என்னக்கா சொல்ற? மாமாவுக்கு உன்னை புடிக்காதா?” அதிர்ந்தான்.

“புடிக்காதுன்னு இல்ல.., ஆனா வேற எதுவோ..” அவன் சூழல் அவளுக்கும் புரிகிறதுதானே.

“இல்லக்கா.., அப்போ வேண்டாம்..” வேகமாக மறுத்தான்.

“ஏண்டா.., இவ்வளவு நேரம் சப்போட் பண்ண..?”.

“அது.., அவருக்கும் உன்னை புடிக்கும்னு நினைத்தேன். ஆனா இப்போ.., நான் ஏதோ ஒரு வார்த்தை தெரியாமல் சொல்லிட்டேன்னே அம்மா என்கிட்டே பேச மாட்டேன்னு சொல்லிட்டாங்க. இப்போ இது தெரிந்தால்.., அதான் அவங்க கவலையா இருக்காங்களா?

“ஏன்க்கா...? உனக்கு இப்படி இருப்பதால்..?” அவனால் முழுதாக சொல்ல முடியவில்லை. அதைப்பற்றி பேசக் கூடாது என்பது அந்த வீட்டின் கட்டளை ஆயிற்றே.., அதை எப்படி அவன் மீறுவான்?

அவன் தோளோடு அணைத்தவள், “உன் பெர்த்டேக்கு அன்புவை வரச் சொல்றேன். நீயே பாத்துட்டு சொல்லு.., அவர் அப்பபடிப்பட்டவரா இல்லையான்னு” அவள் உரைக்க,

“எனக்கு பெர்த்டேவா..?” அவன் வியந்து போனான். பொதுவாக அவன் பிறந்த நாளுக்கு ஒரு வாழ்த்து, புது உடை, பள்ளிக்கு கொண்டு செல்ல ஸ்வீட் அவ்வளவுதான் கிடைக்கும். வீட்டில் கேக் கட் பண்ண கூட அனுமதி கிடையாது. அதென்னவோ கீர்த்திக்கு செய்யாத எதுவும் அவனுக்கும் கிடைப்பது இல்லை.

“இந்த வருஷம் செலிபரேட் பண்றோம். உன் ப்ரண்ட்ஸ் யாரையாவது கூப்பிடுறியா?”

“இல்ல.., அதான் அன்பு மாமா வர்றாங்கன்னு சொல்றியே.., அதுவே போதும். அப்போ நான் மாமாகிட்டேயே கேட்டுக்கறேன்..” ஒரு மாதிரி குதூகலித்தான்.

“டேய்.., அவர்கிட்டே மாமான்னு உளறி வைக்கக் கூடாது புரியுதா?” கட்டளையாக சொல்ல, கேள்வியாக அவளை ஏறிட்டான்.

அவன் கேள்வியை உணர்ந்தவள், “அது ஏன்னு உனக்கு சொல்லி புரிய வைக்க முடியாது வாசன். வேண்டாம்னா வேண்டாம்.., சரியா?” அவள் சாதாரணமாக உரைத்தாலே கேட்டுக் கொள்பவன், கட்டளையிட்டால் மீறுவானா என்ன?

“சரிக்கா.., ஆனா.., மாமாவுக்கு உன்னை நிஜமாவே புடிக்குமா? புடிக்காதா?” அவனுக்கு குழப்பம் மிஞ்சியது.

“அதையும் நீயே பாத்துட்டு முடிவு பண்ணிக்கோ..” அவள் உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

“சரி.., ரொம்ப லேட் ஆகிடுச்சு.., போய் தூங்கு. தேவையில்லாமல் எதையும் யோசிக்காதே. இந்த வருஷம் நீ நல்ல மார்க் வாங்கணும்..” அவன் தலையை செல்லமாக ஆட்ட, தலையை ஆட்டிவிட்டு விடை பெற்றான்.

மறுநாள் காலையில் எழுந்த உடனே, பெற்றவர்களைத் தேடி அவள் வர, இருவரும் 'இன்றைக்கு என்னவோ..?' என்பதுபோல் பார்த்தார்கள்.

"அப்பா.., நாளைக்கு வாசன் பெர்த்டே.., அன்புவை வீட்டுக்கு கூப்பிடலாம்னு நினைக்கறேன். நீங்க என்னப்பா சொல்றீங்க?" கண்களில் எதிர்பார்ப்பு மின்ன கேட்கும் மகளை ஆதூரமாகப் பார்த்தார்.

நேற்றுவரை அவள் கேட்ட எதையுமே மறுத்தது இல்லை என்னும்போது, இன்றைக்கு மட்டும் என்னவாம்?

"சரிம்மா.., வரச் சொல்.." அனுமதி வழங்க, சாந்தி மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

"அம்மா.., நாளைக்கு பிரேக்பாஸ்ட்க்கு வரச் சொல்லவா.., இல்ல லஞ்சுக்கா?" அவளுக்கு மூன்று நேரமும் அவனுக்கு சாப்பாடு போட ஆசைதான். ஆனால், அதை அவன் விரும்ப வேண்டுமே.

"லஞ்சுக்கே வரச் சொல்லும்மா.., ஒரு நாளைக்காவது வயிறார சாப்பிடட்டும். எத்தனை நாள்தான் அரை வயிறு சாப்பாடு போடுறது.." அவர் உரைத்துவிட்டுச் செல்ல, ஒரு நொடி திகைத்துப் போனாள். மாணிக்கம் புரியாமல் திகைத்து நின்றிருந்தார்.

அதைக் கண்டுகொள்ளாமல் சாந்தி செல்ல, தாயின் பின்னால் கிட்டத்தட்ட ஓடியவள், "அம்மா.., எப்படிம்மா..?" திணறினாள்.

"ஆபீஸ்ல போய் லஞ்ச் சாப்ட்டுக்கறேன்.., எனக்கு சாப்பாடு கட்டிக் கொடுங்கன்னு சொன்ன உடனே பேசாமல் கட்டிக் கொடுக்கறேனே.., அப்போவே உனக்குத் தெரிய வேண்டாம்..?" தான் அவளுக்கு தாய் என்பதை நிரூபித்தார்.

"தேங்க்ஸ்ம்மா.." தாயை தோளோடு கட்டிக்கொள்ள, அவர் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

தன் மகள், தன்னிடம் இப்படிக் கொஞ்சி எத்தனை நாளாயிற்று.., ‘உன் சந்தோஷம் மட்டுமே எனக்கு முக்கியம்..’ எண்ணியவர் மகளை அணைத்துக் கொண்டார்.

அன்புவை வீட்டுக்கு அழைக்க வேண்டி, காலையிலேயே அவன் வீட்டுக்கு கிளம்பிவிட்டாள். மதியம் அலுவலகத்தில் பார்க்கும் இடத்தில் அழைப்பது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை.

அதே நேரம்.., இரண்டு நாட்களுக்கு முன்னர், ஒரு பிளான்க் செக் எழுதி, அதை அவனிடம் கொடுக்க, கேள்வியாக அதைப் பார்த்திருந்தான்.

“உங்களுக்கு தேவையான அமவுண்டை எழுதிக்கோங்க…” அவன் முகம் பார்க்கத் தயங்கி அவள் உரைக்க,

“மூணாவது மனுஷன் கிட்ட இருக்க கடனை அடைக்க நான் ஓடி ஓடி உழைத்தால், இப்போ உங்ககிட்டே கடனாளியாக ஆகச் சொல்றீங்களே? இதை எப்படி என்னால் செய்ய முடியும்?” அவன் வேதனையாய் கேட்டு விலகிச் சென்றிருக்க, அவளால் அதை தாங்கவே முடியவில்லை.

அதன் பிறகு அவன் முகம் பார்க்கவே ஒரு பெரும் தயக்கம்.., இரண்டு நாளாக அவனுக்கு உணவு கொடுத்தாலும், நேரடியாக முகம் பார்க்க முடியவில்லை.

இன்று அவனைத் தேடி வந்திருக்கிறாள். ‘எப்படி வரவேற்பான்’ உள்ளுக்குள் ஓடியது.

அவள் சத்தம் போடாமல் அவன் அறைக்குள் நுழைய, சற்று வெறுமையாக இருந்த அறையே அவளை வரவேற்றது. இதற்கு முன்பும் அவன் அறையில் பெரிதாக எதுவும் இருந்தது இல்லைதான். ஆனால் இது.., அதைவிட அதிகமாக வெறுமையாக இருந்தது.

“அன்பு..” அவள் அழைக்க, கிச்சன் சாமான்களை ஒரு மூட்டையாக கட்டிக் கொண்டிருந்தவன், சற்று திடுக்கிட்டு

திரும்பினான்.

“மேடம்…, நீங்க.., வாங்க.., என்ன திடீர்ன்னு.., போன் போட்டிருந்தால் நானே வந்திருப்பேனே..” தன் முதுகின் பின்னால் அந்த மூட்டையை மறைக்க முயன்றான்.

சற்று துணுக்குற்றாள்.., “வீட்டை காலி பண்றீங்களா அன்பு..?” அவள் கேட்க, “ஆமா.., இல்ல.., இதெல்லாம் கொஞ்சம் பழசா போச்சா அதான்” திணறி உரைத்தான்.

அவள் பார்வை இமைக்க கூட செய்யாமல் அவனை வெறிக்க, அதை தொடர்ந்து சந்திக்க முடியாமல் பார்வையை விலக்கிக் கொண்டான்,

அவளது இதயமோ, திடும் திடுமென அதிர்ந்தது. ‘இல்லை.., நீ பொய் சொல்ற அன்பு..’ அவள் பார்வை அவனிடம் உரைக்க, அதை சந்திக்க மறுத்தான்.

அவளோ அதை தவிர்த்தவள், “நாளைக்கு என் தம்பிக்கு பெர்த்டே செலிபரேட் பண்றோம். மதியம் உங்களுக்கு லஞ்ச் எங்க வீட்லதான். நீங்க கண்டிப்பா வர்றீங்க” அவள் குரல் சற்று உதறிப் போனது.

அதைக் கேட்டவன் வேகமாக அவள் முகம் நோக்கினான். அவன் முகம் மறுப்பை வெளியிட, “நான் காத்துட்டு இருப்பேன்..” அவ்வளவுதான்.., அதற்குமேல் ஒரு நொடி கூட அங்கே இருக்கவில்லை.

அவள் திரும்பிவிட, ஓடிபோய் அவளை தடுக்க முயன்ற கால்களை பிடிவாதமாக கட்டி வைத்தான். ‘இப்போ அவங்களுக்கே தெரிந்திருக்கும்..’ உள்ளுக்குள் ஓடியது.

எதற்கென்றே தெரியாமல் கண்ணீர் முட்ட, அதை பெரும் முயற்சி செய்து அடக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். ‘பொய் சொல்றான்.., அன்பு பொய் சொல்றான். என்னை விட்டு போகப் போகிறான்..’ அவள் மனம் விடாமல் அரற்றியது.

மறுநாள்.., அன்பு வருவானா மாட்டானா என்ற சந்தேகம் எல்லாம் அவளுக்கு இருக்கவில்லை. நிச்சயம் வருவான்.., அவள் மனம் அடித்துச் சொன்னது.

பெரியவர்கள் பிடித்தும், பிடிக்காமலும் அமர்ந்திருக்க, வாசன் மட்டும், நூறு முறை, அவன் எப்பொழுது வருவான் என கேட்டுவிட்டான்,

அதற்கு மேலும் அவர்களை சோதிக்காமல், ஒரு மணியளவில், தன் பைக்கில் அவர்கள் வீட்டின் முன்னால் வந்து இறங்கினான். அங்கே வருவதற்கு ஆயிரம் முறை யோசித்துதான் வந்திருக்கிறான். அன்றைக்கு கீர்த்தி தன் வீட்டில் இரவில் உதவிக்கு தங்கியபொழுதே அவர்களை சந்திக்க எண்ணியிருந்தான். ஆனால் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

இப்பொழுது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த எண்ணியே வந்திருந்தான். “அக்கா.., பைக் சத்தம் கேக்குது..” கிட்டத்தட்ட கூவியவன், வாசலுக்கு விரைந்தான்.

அவனைப் பார்த்தவுடன்.., “அன்பு.., மா..” மாமா என உரைக்க வந்தவன் சட்டென தெளிந்தான்.

“நீங்களா..? உங்களை இதுக்கு முன்னாடி எங்கேயோ பாத்திருக்கேனே..” அவன் தடுமாற,

“உங்க கடை திறப்புவிழாவுக்கு தண்ணீர் சப்ளை பண்ண வந்திருந்தேன்..” அவன் நினைவூட்ட, “எஸ்.., ஐ காட் இட்.., வாங்க.., உள்ளே வாங்க..” கிட்டத்தட்ட அவன் கை பற்றி இழுத்து வந்தான்.

“ஹேப்பி பெர்த்டே..” தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து, அந்த சிறிய கிப்ட் பார்சலை எடுத்துக் கொடுத்தான்.

“தேங்க்ஸ்..” உரைத்தவன் அதை பெற்றுக் கொண்டான், “அக்கா.., இங்கே பார்..” கூக்குரலிட்டான்.

அப்பொழுது கீர்த்தி ஹியரிங் மெஷின் வைக்கவில்லை என்பதாலேயே அவன் அவ்வாறு நடந்து கொண்டான். தயக்கமாக வீட்டுக்குள் நுழைந்தவன், கீர்த்தியைப் பார்த்து ஒரு மலர்ந்த புன்னகையை வெளியிட்டவன், அவளது பெற்றவர்களைப் பார்த்து கை கூப்பி வணங்கினான்.

“வணக்கம்..” அவன் உரைக்க, சாந்தி அவனை சற்று ஆர்வமாகவே பார்த்தார். மகளையும், அவனையும் ஒரே மேடையில் நிறுத்தி அழகு பார்க்கத் துடித்தது அந்த தாயுள்ளம்.

கீர்த்தி அவனது புன்னகைக்கோ, பேச்சுக்கோ எந்த எதிர் வினையும் செலுத்தவில்லை. மாறாக, அவனையே அசையாமல் பார்த்திருந்தாள்.

“ஹலோ மேடம்..” அவன் உரைக்க, “என்னது மேடமா..?” வாசன் திடுக்கிட்டு அவனைப் பார்க்க, அவளைப் பெற்றவர்களோ, ஆராய்ச்சியாய் பார்த்தார்கள்.

அவன் பேச்சில் துவண்ட மனதை சீராக்கியவள், “வாங்க அன்பு..” அவள் அழைக்க, ஹாலுக்குள் பிரவேசித்தார்கள்.

“உக்காருங்க..” சோபாவை காட்டியவள், “அம்மா, தண்ணி..” அவள் குரல் கொடுக்க, வேகமாக நீரோடு வந்தார். “உங்க பேரண்ட்ஸ்க்கு நான் ஸ்பெஷல் தேங்க்ஸ் சொல்லணும்..” அவன் உரைக்க, வாசனோ, அக்கா மெஷின் வைக்கலையே, இவர் பாட்டுக்கு பேசிட்டே போறார்..’ அங்கிருந்த அனைவரின் எண்ணமும் இதுவாகத்தான் இருந்தது.

வாசன் எதையோ உரைக்க முயல, “நீங்களே நேரடியா சொல்லிடுங்க..” அவள் உரைக்க, மூவரும் அவளை ஏறிட்டார்கள். ‘அவன் பேசியது இவளுக்கு புரிந்ததா?’ மூவரும் அவளைத்தான் பார்த்திருந்தனர்.

அவன் உரைத்த நன்றியோ.., மகளின் பேச்சோ, பார்வையோ, மறுப்போ, எதுவும் அவர்களை எட்டவில்லை.

மாறாக, வெகு இயல்பாக, சாதாரணமான அவனது பேச்சு, அதற்கு மகளின் பதில், அதிலேயே சுழன்றது.

மகளது காதில் மெஷின் இல்லையென்றால் பெற்றவர்கள் பேசவே மாட்டார்கள். வாசன் கத்தி கூச்சல் போடுவான். ஆனால் அன்பு, இரண்டில் எதையும் செய்யவில்லை. மாறாக, அவள் குறை எனக்குத் தெரியவே தெரியாது என்பதுபோல், எனக்கு அது ஒரு பொருட்டே இல்லை என்பதுபோல் நடந்து கொள்ள, வெட்கிப் போனார்கள்.

“கேக் கட் பண்ணலாம்..” கீர்த்தி உரைக்க, அவளை ஓடி வந்து அணைத்துக் கொண்டான் வாசன். கூடவே, “சாரிக்கா..” அவள் முகம் பார்த்து உரைக்க, “எதுக்குடா சாரி.., பெர்த்டே பாய்.., இப்படி அழுவாங்களா..? வா, வந்து கேக் கட் பண்ணு..” அவனை இயல்பாக்க முயன்றாள்.

சாந்தி கணவனை அர்த்தமுள்ள பார்வை பார்க்க, அவரும் அதே பார்வையை செலுத்த, ‘இத்தனை வருடங்கள் தாங்கள் கவனிக்காத, கவனிக்க தவறிய ஒரு விஷயத்தை, அவளைப் பார்த்த சில மாதங்களுக்குள்ளாகவே அவன் அறிந்ததை என்னவென்று சொல்ல?

‘என் குறை தெரியாமல், எனக்கு நினைவுக்கே வராமல் என்னை பாத்துப்பான்’ அவள் சொன்னபொழுது தெரியாதது, பொட்டில் அறைந்தாற்போல் புரிய, குறுகிப் போயினர்.

“அம்மாடி..” பெற்றவர்களும் மகளை அணைத்துக் கொள்ள, அந்த காட்சியை புரிந்தும் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தான் அன்பு.

‘நீ எனக்குச் செய்வது என்னன்னு உனக்குப் புரியுதா அன்பு..’ மானசீகமாக அவனிடம் கேட்டவள், பார்வையை அவன்மீதே நிலைக்க விட்டாள்.

‘என்ன..?’ அவன் இதழசைவில் வினவ, ‘ஒன்றும் இல்லை..’ தலையசைப்பில் உரைத்தாள்.

அந்த நிமிடம்.., அன்புவை கீர்த்தியின் பெற்றவர்களுக்கு அவ்வளவு பிடித்தது. அவள் குறை தெரியாமல் அவளை பார்த்துக் கொள்ளும் ஒருவன் தானே அவர்களுக்கு வேண்டும். அது இவனைத் தவிர வேறு யாரால் முடியும்? அந்த கேள்வி அவர்களை துரத்தியது.

கேக் கட் செய்த பிறகும் சரி, உணவு மேஜையில் அவர்கள் அமர்ந்த பொழுதும் சரி, அவள் முகம் பார்த்து அவன் உரையாட, அதில் சில வார்த்தைகளை அவர்களால் கூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மெல்லியதாக உரைக்க, அதை மகள் மொழிபெயர்த்துக் கொள்ளும் அழகை இமைக்காமல் ரசித்தார்கள்.

அதே நேரம்.., இடையில் வாசன் அவளிடம் எதையோ சொல்ல முயல, “வாசன், உங்க அக்கா தோளைத் தொட்டுட்டு பிறகு பேசு..” அவன் உரைக்க, வேகமாக தன் தம்பியின் பக்கம் திரும்பினாள்.

“என்ன வாசன்..?” அவள் கேட்க, “எனக்கு அந்த ரைத்தாவை எடுத்துக் கொடுக்கா” அவன் மெதுவாக உரைக்க, அவள் அதைச் செய்ய, நிச்சயம் அந்த நேரம் அவர்களால் உணவை உண்ண முடியவில்லை என்றே சொல்லலாம்.

அவர்களது உணர்வுகளை சரியாக படம் பிடித்தன கீர்த்தியின் கண்கள். ‘என் அன்புவைப் பார்த்தீர்களா?’ ஒரு மாதிரி பெருமிதமாக இருந்தது.

உணவை நொடியில் முடித்த மற்றவர்கள் விலகிச் செல்ல, தன் உணவை முடிக்க முயன்ற அவனை, கீர்த்தி தடுத்தாள். “இன்னைக்கு நீங்க திருப்தியா சாப்பிடணும்..” அவளது அன்புக் கட்டளையை அவன் மீற முயலவில்லை.

அதே நேரம்.., அவள் விழிகள் கேட்கும் கேள்வி.., மற்றவருக்குப் புரியவில்லை என்றாலும், அவனுக்கு தெளிவாகப் புரிகிறதே. ‘எங்கே போகிறாய்? போய் விடுவாயா?’ இடை இடையே எட்டிப் பார்க்கும் அந்த வினா.., அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

உணவு இறங்கவில்லை என்றாலும், கீர்த்திக்காக, அவள் திருப்திக்காக உண்டான். இங்கே உணவை முடித்துக் கொண்டு, நேராக அவன் தஞ்சை செல்ல, பேருந்து நிலையம் செல்லப் போகிறான். அதை எப்படி அவளிடம் தெரிவிக்க?

இப்பொழுது அவன் வாழ்க்கையில் ஜெயிக்க மட்டுமல்ல, கீர்த்தியை தன் வாழ்வில் இணைக்க வேண்டும் என்றால் கூட, தன் திறமையை அவன் நிரூபித்தாக வேண்டும்.

தான் காதலிக்க கூட ஒரு தகுதி வேண்டும். அப்படி ஒரு தகுதியை தான் வளர்த்துக் கொள்ள வேண்டும். கீர்த்தியின் பெற்றவர்களிடம் பேச வேண்டும் என்றால் கூட, தன் பக்கம் ஒரு பிடிப்பு, நியாயம் இருக்க வேண்டும் என எண்ணினான்.

அப்பொழுது கூட, ஒரு விவசாயிக்கு தங்கள் பெண்ணை மணம் முடித்துக் கொடுப்பார்களா? மில்லியன் டாலர் கேள்வி.., அவனை மிரட்டியது. இப்பொழுது கூட, தான் உணவை முடிக்கும் முன்னர், அனைவரும் கலைந்து சென்றிருக்க, தனக்கு சமமாக அமர்ந்து அவர்கள் உண்ணவே விரும்பாதபொழுது, உங்கள் பொண்ணைக் கொடுங்கள் என அவன் எப்படி கேட்கவாம்?

உள்ளுக்குள் சுருட்டியடிக்கும் சூறாவளியை அவனால் அடக்க முடியவில்லை. “என்ன அன்பு.., சாப்பிடாமல் என்ன யோசனை?” அவனை உலுக்க, நடப்புக்குத் திரும்பியவன், உண்ணத் துவங்கினான்.

நேரம் செல்லச் செல்ல, அந்த வீட்டின் பிரம்மாண்டம்.., அவர்களது நளினம், நாசூக்கு.., பணக்காரக் களை.., அனைத்தும் அவனை மிரட்டியது என்றே சொல்லலாம். கீர்த்தியின் அழகுக்கு முன்னால், தான் கொஞ்சம் சாதாரணமோ என்ற எண்ணம் வேறு ஆட்டி வைத்தது.

அவனது கம்பீரத்திலும், அவன் விழிப் பார்வையின் வசியத்திலும் மயங்கும் கீர்த்தியை அவன் நினைக்கவே

இல்லையோ..

உணவு உண்டு முடிக்கும் முன்பே, மனதளவில் சற்று சோர்ந்து போனான். தன் கண் பார்த்து பேச மறுக்கும் அன்புவைக் காண, கீர்த்தியின் அடி மனதில் கலக்கம் மூண்டது.

இது வரைக்கும் அவன் முகம் இப்படி கருத்து அவள் பார்த்ததில்லை. எந்த நேரத்திலும், நான் இப்படித்தான்.., இதுதான் நான்.., என நிமிர்வாகவே அவனைப் பார்த்து பழகியவளுக்கு, அவனது தலை தாழ்ந்து இருப்பதை காணச் சகிக்க முடியவில்லை.

‘அவரை இங்கே அழைத்து, என் வசதியைப் பார், என தம்பட்டம் அடிப்பதாக எண்ணிவிட்டாரோ?’ மனம் கலங்கியது.

அவனுக்காக தான் பார்த்து பார்த்து அலங்காரம் செய்திருக்க, இந்த அழகுக்கு முன்னால் தன்னால் நிற்க முடியாது என எண்ணிவிட்டாரா? சிந்தை முழுவதும் பிரளயம்.

கீர்த்தியின் பெற்றவர்களின் மௌனம், அவர்களது விலகல், அன்புவை அதிகம் காயப்படுத்தியது. என்னதான் இருந்தாலும், கீர்த்தி அழைத்தாள் என்பதற்காக தான் இங்கே வந்திருக்கக் கூடாது.., அவளுக்கு நான் என்னவாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு.., நான் ஒரு சாதாரண வேலைக்காரன் தானே..’ கண்கள் வேர்க்கும் உணர்வு.

கீர்த்தியின் பெற்றவர்களின் மனநிலை அவனுக்கு புரிய வாய்ப்பில்லையே. பெற்ற மகளின் மனதை, உணர்வுகளை புரியாமல் இருக்கும் தங்களது நிலை, மிகப் பயங்கரமாகத்தான் இருந்தது.

ஒரு வழியாக அவன் உணவை முடித்துவிட்டு ஹாலுக்கு வர, மகளிடம் எதையோ கொட்டத் தவித்த

பெற்றவர்களுக்கு, அன்புவின் முன்னால் அதைச் செய்ய முடியவில்லை. அதே நேரம், இயல்பாக அங்கே இருக்கவும் முடியாமல், தங்கள் அறைக்குச் சென்றார்கள்.

“நீங்க பேசிட்டு இருங்க..” சாந்தி மெல்லியதாக முனகிவிட்டு கணவனைத் தேடிச் சென்றுவிட்டார். வாசனுக்கு அங்கேயே இருக்க ஆசைதான், ஆனால், தன் அக்காவின் முகத்தில், அவனோடு தனிமையில் உறவாடும் எதிர்பார்ப்பை பார்த்த பிறகு, அவனால் அங்கே இருக்க முடியவில்லை.

வேகமாக அன்புவை தாவி அணைத்தவன், “தேங்க்ஸ்.., மா..” அவன் உரைக்கப் போன வார்த்தையை உணர்ந்தவள், “வாசன்..” என அழைக்க, தெளிந்து விலகினான்.

வாசன் டியூஷன் செல்வதாக உரைக்கவே, அன்புவை அழைத்துக் கொண்டு மாடியேறினாள். தன் அறைக்கு அருகில் இருக்கும் சிறிய ஹாலில் அவனை அமர வைத்தவள், அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனுக்கோ.., அதற்குமேல் அங்கே இருக்க முடியாது என்னும் நிலை. “நான் கிளம்பறேன்..” அவள் முகம் பாராமல் உரைத்தவன்.., எழுந்து செல்லத் திரும்பினான்.

அதைப் பார்த்தவள்.., “ஏன் அன்பு.., ஒரு கடன் காரியா கூட உங்க லைப்ல நான் வரத் தகுதி இல்லன்னு நினைச்சுட்டீங்கல்ல..” கலங்கிய குரலில் அவள் வினவ,

அவ்வளவுதான்.., அவனுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு வேகம் வந்ததோ? இல்லை.., எதை நிரூபிக்க விரும்பினானோ.., கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் எதிரில் வந்தவன், ஒற்றைக் கையால் அவளை இருக்கையில் இருந்து எழுப்பி, தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டான்.

ஒரு சிறு அதிர்ச்சி.., அவ்வளவுதான்.., கீர்த்தி அவனைப் பார்த்திருந்தாள்.

ஒற்றை நொடிக்குள், அவள் முகம் முழுவதும் ஓராயிரம் முத்தங்கள் இட்டான். அவள் கன்னத்தோடு கன்னம் இழைய, அவன் தாடையின் உரசல், சிறு எரிச்சலிலும் சுகமாய் அவளைத் தாக்கியது. இடக்கரத்தால் அவள் தலையை சற்று சாய்த்து, அவள் இதழை அழுத்தமாக பூட்டிக் கொண்டான்.

அவன் முத்தமிட்ட முகம் தேனாய் தித்திக்க, அந்த உணர்வை ஆழ்ந்து அனுபவித்தாள். ‘இவ்வளவு நேசம் உனக்குள் வைத்திருக்கிறாயா?’ அவனிடம் கேட்டவள், வாகாக ஒட்டிக் கொண்டாள்.

அவள் சிகைக்குள் கரம் கோர்த்தவன், இடைஞ்சலாக இருந்த கிளிப்பை நொடியில் அகற்றியிருந்தான். மூச்சு விடவும் மறந்து, மூச்சடக்கி அவனோடு ஒட்டிக் கொண்டாள் கீர்த்தி.

‘அது என்ன செய்ததாம் இவனை..?’ அவன் செய்கையில் மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

‘இது எங்கே செல்லும்..?’ ஒரு நொடி பயத்தில், விழி திறத்து அவனைப் பார்க்க, அவ்வளவு நெருக்கத்தில், இமைகளை அழுத்தமாக மூடி, தன் இதழ்களுக்குள் தொலைந்து போயிருந்த அவனைப் பார்க்க, அவளால் நம்பவே முடியவில்லை.

‘இது நடக்கிறதா? இல்லை கனவா..?’ இமை கொட்டி, தன் கரத்தால், தன்னோடு ஒட்டிக் கொண்டிருந்த அவன் முதுகை வளைத்துக் கொள்ள, அது கனவில்லை நிஜம் எனப் புரிந்தது. அதைவிட, தன் இதழ்களுக்குள் கதகதப்பாய் பரவும் அந்த இதம்.., அடிவயிற்றில் கிளம்பிய உணர்வு, தேகம் முழுவதும் பயணிக்க, மறந்தும் கூட அவனை விலக்க முயலவில்லை.

அவன் கரம், அவள் முதுகு முழுவதும் பயணிக்க, இடக்கரமோ, அவள் தலையை இன்னும் அழுத்தமாக தனக்குள் புதைக்க முயன்றது.

இப்பொழுது இமைகளை அழுத்தமாக மூடி, அவன் போக்கில் தன்னை விட்டுவிட்டு, அவன் செய்கையை ரசிக்கத் துவங்கினாள். அவன் இதயத்தின் ஓசையை, அவள் நெஞ்சில் அழுத்தமாக உணர்ந்தாள். ஒரு கட்டத்தில், இதற்குமேல் முடியாது என்னும் படியான நிலைக்கு அவன் தள்ளப்பட, சட்டென தெளிந்தான்.

அவள் அவனை விலக்கித் தள்ளியிருந்தால் இவ்வளவு தூரத்துக்கு அது சென்றிருக்காதோ என்னவோ.., ஆனால்..., ‘உன்னால் இவ்வளவுதான் முடியுமா?’ ஒரு சவாலான பார்வையில், இதுவரை அவன் இதழ்களுக்குள் சிறைப்பட்டிருந்த தன் கீழுதட்டை வாய்க்குள் மடித்தவள், அசராமல் நின்றிருந்தாள்.

அவளை அணைத்தபொழுதும் சரி, அவளை விட்டு விலகிய வேகத்திலும் சரி, அவள் தடுமாறி விழுந்துவிடக் கூடாது என அவன் கவனமாக இருந்ததை, அந்த நேரத்திலும் அவள் மனம் குறித்துக் கொண்டது.

‘பாவி.., இந்த அளவுக்காடா என்னை தெரிந்து வைத்திருக்கிறாய்..’ பார்வை அவனை துளைத்தது.

ஒரு விஷயம் அவளுக்குத் தெரியும்.., அவனது எல்லைக் கோட்டை அவன் நிச்சயம் தாண்ட மாட்டான் என்று. எனவேதான், அவனது இந்த போராட்டத்தில் சிறு எதிர்ப்பு கூட இல்லாமல் நின்றிருந்தாள். கூடவே, அவனை மீறி, அவன் மனதுக்குள் இருக்கும் நேசம், இப்படி வெளிப்படுவதை அவளால் எப்படி தடுக்க முடியும்?

அவளைப் பொறுத்த வரைக்கும், இந்த ஜென்மத்தில் அவளை ஆளும் உரிமை அவனுக்கு மட்டுமே இருக்கிறது. அப்படி இருக்கையில்.., அவள் ஏன் அவனைத் தடுக்க வேண்டும்?

அவனுக்கோ.., தன் செய்கையை நம்ப முடியாத திகைப்பு.., உண்ட வீட்டுக்கே ரெண்டகம் செய்வதுபோல், அவள் வீட்டிலேயே உணவருந்திவிட்டு, இப்பொழுது அவளையே..,

தன் உள்ளங்கையால் நெற்றியில் பலம் கொண்ட மட்டும் அடித்தவன், அவளிடம் என்ன சொல்வது என்றே தோன்றவில்லை.

அவன் உணர்வுகளைத் தாங்கிய அவளுக்கு, அவனது தன்னிரக்கத்தை தாங்க முடியவில்லை. உரிமையாய் தொட்டேன் என அவன் சொல்லியிருந்தால் அந்த நிமிடம் அவனுக்கு ஆயிரம் முத்தங்கள் அவள் இட்டிருப்பாள்.

ஆனால்.., தவறு செய்துவிட்டேன் என அவன் தவிப்பதை அவளால் காண முடியவில்லை. “இங்கே இருந்து போய்டு அன்பு..” மடிந்து சோபாவில் விழுந்தவள் குலுங்கி அழுதாள்.

அவள் அழுகையைக் காண முடியாமல், தன் செய்கையை நம்ப முடியாமல், அவள் போகச் சொன்னதை ஏற்க முடியாமல், சென்னையில் இருந்து தன் பயணத்தை துவங்கியிருந்தான் அன்பு.

*****

# பகுதி – 14.

பேருந்து தஞ்சையை நோக்கி பயணிக்க, அன்புவின் உடல் மட்டுமே அங்கே இருந்தது. மனம் முழுவதும், கீர்த்தியை விட்டு வர மாட்டேன் என சண்டித்தனம் செய்தது.

‘நான் என்ன செய்து வைத்திருக்கிறேன்? செய்வதையும் செய்துவிட்டு, இப்படி கோழை மாதிரி..’ அப்பொழுதும் உள்ளங்கையால் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். அருகில் அமர்ந்திருந்தவர் அவனை வித்தியாசமாகப் பார்த்ததை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

‘கீர்த்தி.., கீர்த்தி..’ மனம் விடாமல் புலம்பியது. இவ்வளவு நாட்களாக தன்னையே தான் ஏமாற்றி வந்திருக்கிறோம்.., தன்னை உணர்ந்த தருணம், அவனால் ரசிக்க முடியவில்லை.

‘எதற்காக இப்படிச் செய்தேன்? அப்படியென்ன வேகம் எனக்கு? என் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கா தரம் தாழ்ந்து போனேன்?’ தன்னையே கேட்டுக் கொண்டான்.

அந்த நேரம்.., அவள் தனக்கு யார் என புரிய வைத்துவிடும் வேகம்.., அது மட்டுமே தன்னை அவ்வாறு செயல்படத் தூண்டியது என்பதை நினைத்தால், மனதுக்குள் பாரம் அழுத்தியது.

தன் செய்கையில், ஒரு சிறு எதிர்ப்பு கூட இல்லாமல் தன் கைகளுக்குள் அவள் குழைந்த விதம், தன்னோடு ஒட்டிக்கொண்ட அவளது செய்கை, அவள் மனதுக்குள் தான் முழுதாக இருப்பதை அவனுக்கு பறைசாற்ற, இந்த அன்புக்கு என்னால் எதுவும் செய்ய முடியவில்லையே.., மனம் பாரமாய் அழுத்தியது.

பயணம் முழுவதும் ஒரு பொட்டு கூட அவனால் உறங்க முடியவில்லை. இமைகளை அழுத்தமாக, பிடிவாதமாக மூடிக் கொண்டாலும், விழிகளுக்குள் வந்து நிற்கும் அவளை என்ன செய்து தவிர்க்க?

கூடவே.., தான் செய்ய வேண்டியது என்னவென்றும் நினைத்துக் கொண்டான். கையில் இருக்கும் பணம் நிச்சயம் போதாதுதான்.., ஆனால், இதை வைத்துக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக தான் நினைத்ததை நிறைவேற்ற முடியும்.., நம்பிக்கை பிறந்தது.

தஞ்சை வந்து இறங்கி, ஊருக்குச் செல்லும் கடைசி பேருந்தை கடைசி நொடியில் பிடித்தவன், பேருந்து சற்று வெறுமையாக இருக்கவே ஒரு இடத்தில் சென்று அமர்ந்தான்.

அவன் ஏறியதைப் பார்த்த அங்கே இருந்த சிலர், ஒரு நொடி புருவம் சுருக்கி அவனைப் பார்த்தவர்கள், அடுத்த நொடி, விழிகள் பிரகாசமாக, “கங்கம்மா மகன் செல்வம் தானே நீ.., இத்தனை வருஷம் எங்கப்பா இருந்த? இப்போதான் ஊருக்கு வர வழி தெரிஞ்சதா?” ஒரு பெரியவர் வாய் திறக்க,

“ஆமா மாமா.., செல்வம்தான்..” தயக்கமாய் உரைத்தவன், அவரை அடையாளம் கண்டு கொண்டு, முறை சொல்லியே உரையாடினான்.

“எப்படி வாழ்ந்த குடும்பம்.., இப்படி சிதஞ்சி.., ஊரை விட்டே போய்.., தாங்கலையேப்பு..” வேகமாக அவன் அருகில் வந்து அமர்ந்தார்.

ஊருக்குள் அவனை அன்பு என யாருக்கும் தெரியாது.., அந்த ஊருக்குள் அவன் செல்வம்தான். அவன் தாய் கங்கம்மா வாய் நிறைய அன்பாக அழைத்த பெயர்.., சென்னையில் அந்த பெயரை பயன்படுத்த கூட அவனால் முடியவில்லை. நினைவுகள் துரத்துகையில் சில மாறுதலுக்காக பெயரைக் கூட விட வேண்டி இருந்தது.

“மாமா.., எல்லாத்தையும் சரி பண்ணிடுறேன்.., அதுக்குத் தானே வந்திருக்கேன்” தெளிவாகவே உரைத்தான்.

“சரி பண்ணனும்.., உன் அப்பனும், ஆத்தாளும் நிம்மதியா இருக்கணும்னா நீ செய்யணும். ஏதாச்சும் வேணும்னா கேளுவே.., நான் ஒத்தாசை பண்ணுதேன்” அவர் உரைக்க, “உங்ககிட்டே கேக்காமையா..?” அதன் பிறகு பெரும் அமைதி.

மேலும் சிலர் உரையாட, அவர்களிடமும் உரையாடிக் கொண்டிருக்க, ஊரே வந்துவிட்டது. பேருந்தில் இருந்து இறங்கியவன், தன்னோடு இறங்கிய அவரைப் பார்த்துவிட்டு, “மாமா.., உங்களுக்கு அடுத்த ஸ்டாப் தானே..” கேள்வியாக ஏறிட்டான்.

“அரை பர்லாங்கு போய்க்கிட மாட்டனா.., நீ வா..” அவனுக்கு முன்னால் இருந்த ஒத்தையடிப் பாதையில், அவனுக்கு முன்பாக நடந்தார்.

அவர் அன்பில் நெகிழ்ந்தவன், அமைதியாக அவரைப் பின்தொடர, “செல்வம், உன்னை எங்கேயெல்லாம் தேடினோம் தெரியுமா? உங்க அத்த.., பாரிஜாதம்.., கொள்ள நாள் உன் வீட்டிலேயே பழியா கிடந்தா. என் மருமவன நான் அனாதையா விட்டுப் போட்டனேன்னு ஒரே அழுகை.., ஹம்..” கடந்த கால நினைவுகளை அலசினார்.

மனம் பாரமாக, இப்பொழுது கீர்த்தியின் நினைவு கூட பின்னுக்கு போய்விட்டது. “பாத்தியா.., எல்லாம் உன் வயல் தான்.., பண்ணையார் நெல் போட்டிருக்கார்.., அறுவடை சமயம்..” ஒரு பெருமூச்சு அவரிடம்.

கால்மணிநேர நடை.., சற்று தூரத்திலேயே தன் வீட்டைப் பார்க்க, வீட்டின் முகப்பில் விளக்கு எரிவது தெரிந்தது. “பாத்தியாவே.., பாரிஜாதம் இன்னும் விளக்கு போடுது..” அன்புவின் கண்கள் கலங்கிப் போயின.

அவனது அத்தையின் வீடு, அவன் வீட்டில் இருந்து கூப்பிடும் தூரத்தில்தான் இருந்தது. வீட்டின் முற்றத்தில் அவன் கால் வைக்கவே, “பாரிஜாதம்.., இங்கே வா.., யார் வந்திருக்கான்னு பாரு. உன் வேண்டுதல் வீண் போகலத்தா..” வந்தவர் குரல் கொடுக்க, சட்டென அங்கே தீ பற்றிக்கொண்ட வேகம் தெரிந்தது.

வெளியே வந்த பெண்மணி, ஒரு நொடி, கையை கண்களுக்குமேல் குடையாக்கி பார்த்தவர், அடுத்த நொடி, “எய்யா.., செல்வம்.., என் ராசா வந்துட்டியா..? இந்த அத்தை மண்ணுக்குள்ள போக முன்ன என்னை பாக்க வந்துட்டியா..?” பெரும் கதறலோடு, தன் வயதையும் மீறி ஓட்டமாக ஓடி வந்தார்.

“அத்த பாத்து..” தன் கையில் இருந்த பேகை கீழே போட்டவன், ஓடிபோய் அவரை தாங்கிக் கொண்டான்.

“பாரி.., மெதுவா.., கோட்டி கணக்கா இருட்டுக்குள்ளே எங்க போற..?” அவரது கணவர் பதறிபோய் பின்னால் வந்தார்.

“செல்வம்.., நீதானாய்யா.., இப்படி துரும்பா இளைச்சு போயிட்டியே.., உன் அம்மா பாத்தா உசுரையே விட்டிருப்பாளே.., இந்த அத்த உன்ன பாக்க மாட்டான்னு கண் காங்காம போயிட்டியே..” அவன் முகம் முழுவதும் வருடியவர், அப்படியே மடிந்து அமர்ந்து ஒப்பாரி வைத்தார்.

“அத்த.., அழுவாத.., அதான் வந்துட்டேனே..” அவன் குரல் கலங்கிபோய் இருந்தது. கூடவே, அவன் கண்களிலும் கண்ணீர்.

“மாப்ள..” அவன் மாமா மாரிமுத்து அவன் அருகில் வந்தவர், மேலே பேச முடியாமல், குரல் அடைக்க, அப்படியே அவன் அருகில் நின்றுவிட்டார்.

“செல்வம்.., ஒரு போன் போடணும்னு உனக்குத் தோணலையா? அரை உசுரா ஆயிப் போனமே..” அவனை இழந்து பரிதவித்த துக்கம் அவர் வார்த்தைகளில் வழிந்தது.

“மன்னிச்சுடு அத்த..” அவனால் வேறு எதையும் சொல்ல முடியவில்லை.

“சுளுவா சொல்லிப்போட்ட.., ஒத்த தகவலும் இல்லாம..” ஓவென கதறினார். அவன் இருக்கிறானா? இல்லையா? எங்கே இருக்கிறான்? என தெரியாமல், மூன்று வருடங்களாக காத்துக் கொண்டிருப்பவர்கள் ஆயிற்றே.

“ஏபுள்ள பாரிஜாதம்.., வந்த புள்ளையை கவனிக்கத விட்டுபோட்டு, இப்படி ஒப்பாரி வைக்க.., அதான் வந்துட்டானே.., வீட்டுக்குள்ள கூட்டி போ..” வந்தவர் அதட்ட, அப்பொழுது கூட அவர்கள் தெளியவில்லை.

“செல்வம்.., சொல்லு.., இனிமேல் எங்கேயும் போக மாட்டேன்னு சொல்லு.., இங்கதான் இருப்பேன்னு சொல்லு..” எங்கே அவன் மீண்டும் போய்விடுவானோ என்ற பயம் அவரிடம். அவனை இறுக அணைத்துக் கொண்டார்.

“வந்த புள்ளைகிட்டே என்ன பேசுதா பாரும்.., ஏய்.., எந்திரி, மொதோ அவனுக்கு குடிக்க ஏதாச்சும் கொடு..” மாரிமுத்து குரல் கோபத்துக்குச் செல்லவே, அப்பொழுதுதான் சற்று தெளிந்தார்.

அவன் எழுந்து, பாரிஜதத்தையும் எழுப்ப, “மாமா.., எப்படி மாமா இருக்க?” தன் அத்தையின் கடைசி மகள், கவிதாவின் குரல் கேட்க, சட்டென திரும்பிப் பார்த்தான்.

அந்த மெல்லிய வெளிச்சத்திலும், அவள் நிறைமாத கர்ப்பிணியாக இருப்பது அவனுக்குத் தெரிந்தது. அவன்மேல் உயிரையே வைத்திருந்த ஜீவனில் ஒன்று. அவனைத்தான் கட்டிக்கொள்வேன் என ஒரு காலத்தில் அவனையே சுற்றியவள்.

“நல்லா இருக்கேன் கவி.., நீ..?” அவளிடம் வினவ, தன் வயிற்றை ஒரு முறை பார்வையால் வருடியவள், “ரொம்ப

நல்லா இருக்கேன் மாமா” அவள் கண்களும் கண்ணீரில் மிதந்தது.

“சரிவே.., நான் போறேன்.., காலைல வர்றேன்..” வந்தவர் கிளம்பிவிட்டார்.

கவிதா, அன்புச்செல்வனின் வீட்டுச் சாவியைக் கொண்டு வந்திருக்க, வீட்டை அவளே திறந்து விட்டாள். மாரிமுத்து அவன் கொண்டு வந்திருந்த பேகை தூக்கிக் கொள்ள, வீட்டுக்குள் அடி வைத்தவன், கால்கள் தள்ளாட, அப்படியே தரையில் அமர்ந்துவிட்டான்.

எவ்வளவு முயன்றும், அவனால் தன் துக்கத்தை அடக்க முடியாமல், நெஞ்சம் விம்மியது. அந்த வீட்டின் வெறுமை முகத்தில் அறைய அப்படியே இறுகிபோய் அமர்ந்துவிட்டான்.

அவனது அந்த நிலை அனைவரின் நெஞ்சத்தையும் பாரமாக, “செல்வம்.., அழுதுடுய்யா..” அவன் நிலை ஒருவித பயத்தை கொடுக்க, அவன் அத்தை பதட்டமாய் குரல் கொடுத்தார்.

அதற்கு மறுப்பாக அவன் தலை அசைக்க, அங்கே மீண்டும் ஒரு பெரும் ஒப்பாரியே நடந்தேறியது. அவர்களது சத்தத்தில், அக்கம் பக்கம் இருந்தவர்கள் அனைவருமே கூடிவிட்டார்கள்.

“எய்யா.., நீ கலங்காத உனக்கு ஆத்தாளா நான் இருக்கேன்..” பாரிஜாதம் அவனை தாங்கிக் கொண்டார். சொல்லப்போனால் அவனது அந்த தோற்றமும் அமைதியும், அவரை அதிகம் கலவரப்படுத்தியது.

“செல்வம் வந்துட்டான்..”, “செல்வம் வந்துட்டான் போல..”, “கங்கம்மா ஆத்மா இப்போ சந்தோஷப்படும்..”, “பாவிப்பய.., அப்போ கொஞ்சம் சூதானமா இருந்திருக்கலாம்..” விதம் விதமான பேச்சு, வீடு முழுவதும் ஆட்கள் கூடிவிட்டார்கள்.

அடுத்த ஒருமணி நேரம்.., ஒரு வழியாக கடக்க, “சரி எல்லாம் போங்க.., காலையில் பேசிக்கலாம்..” கூட்டத்தில் ஒருவர் குரல் கொடுக்க, ஒரு வழியாக கூட்டம் கலைந்தது.

“கவிதா.., மாப்ளைக்கு குடிக்க ஏதாவது எடுத்துட்டு வா..” மாரிமுத்து குரல் கொடுக்க, அதற்குள் ஒரு வயதான பெண்மணி, கையில் டம்ப்ளரோடு அங்கே வந்தார்.

“ராசா.., மொதோ இதைக் குடி..” அவன் தோள் தொட்டு உலுக்கினார்.

“பாட்டி.., எப்படி இருக்க..?” தன் அருகில் அமர்ந்த அவர் கைகளை பற்றிக் கொண்டான்.

“உன்னை பாக்கத்தான் இந்த உசுரை வச்சிருக்கேன்.., அழுவாத ராசா.., உங்க அம்மா எங்கயும் போகல, இங்கனதான் இருக்கா. சின்ன புள்ளையாட்டம்..” அவனை கடிந்து கொண்டாலும், தன் சேலை முந்தானையால் தன் கண்களை துடைத்துக் கொண்டார்.

ஒரு வழியாக உணர்வுப் போராட்டம் ஒரு முடிவுக்கு வர, “பாரி.., மாப்பிளைக்கு சாப்பாடு எடுத்துட்டு வா.., அப்படியே ஒரு பாயும் தலகாணியும் எடு.., போ..” மனைவியை விரட்டினார்.

மனைவி செல்லவே, அங்கே இருந்த திண்ணையில் மாரிமுத்து அமர, அந்த நாலு கட்டு வீட்டை பார்வையால் அலசினான். பழைய வீட்டை இடித்துவிட்டு, புதிதாக கட்டியபொழுது கூட, நாலு கட்டு வீடாகவே கட்டிய தன் பெற்றவர்கள், பரண் வைத்து, வீட்டின் நடுவில் முற்றம், மழையோ, வெயிலோ, வீட்டுக்குள்ளும் அடிக்கும்.

சொல்லப்போனால்.., சைவம் படத்தில் வருமே.., அதே போன்ற வீடு. கீழே மூன்று அறைகள். மேலே இரண்டு அறை, மீதி இடம் பரண் போல உபயோகப்படுத்தி வந்தார்கள்.

வீடு அவ்வளவு சுத்தமாக இருந்தது. அதுவே சொன்னது.., பாரிஜாதம் அந்த வீட்டை பராமரிக்கும் விதத்தை. ஒவ்வொரு அறையாக சென்று பார்த்தவன், இறுதியாக பெற்றவர்களின் அறைக்குள் நுழைந்தான். பழங்கால தேக்குமரக் கட்டில்.., உபயோகிக்காத காரணத்தால், சற்று பூஞ்சை படந்து காணப்பட்டது.

பெற்றவர்களின் புகைப்படம், ஒரு பக்கம் இருக்க, அதில் வாடிய மாலைக்குள் மலர்ந்து சிரித்தவாறு அவனுக்கு காட்சி அளித்தார்கள். நின்றிருந்த கண்ணீர் மீண்டும் வரவா என மிரட்ட, நொடியில் சம்மாளித்தவன், அவர்கள் புகைப்படத்தை கைகளால் வருடினான்.

அங்கே இருந்த அலமாரியைத் திறக்க, சற்று புழுங்கிய வாடையோடு இருந்தாலும், அவர்களது உடமைகள் காட்சியளித்தது. டிராயரைத் திறக்க, தாயின் மேனியை அலங்கரித்த தாலி, கம்மல், காப்பு.., என இருக்க, மென்மையாக வருடினான்.

“மாமா.., சாப்பிட வா மாமா..” கவிதாவின் குரல் அவனைக் கலைக்க, அனைத்தையும் பூட்டிவிட்டு, மெதுவாக திரும்பி நடந்தான்.

“கவிதா.., இது எத்தனாவது மாசம்..?” மென்மையாக வினவ, “இதுதான் மாசம் மாமா.., இன்னும் பத்து நாள்ல டேட் கொடுத்திருக்காங்க..” உரைத்தவள், அவனுக்கான உணவை கூடத்தில் எடுத்து வைத்தாள்.

பாயில் அமர்ந்தவன் முன்னால் இலை போட்டவள், சூடாக தோசைகளை எடுத்து வைத்தாள். “அவசரத்துக்கு சட்டினிதான் பண்ண முடிஞ்சது மாமா..” சற்று கவலையாக உரைக்க,

“எனக்கு தண்ணி ஊத்திபோட்ட சாதமே போட்டிருக்கலாமே.., இந்த நேரம் எதுக்கு வீணா சிரமம்..?” கேட்டவன் உணவில் கை வைத்தான்.

“உனக்கு பழசு போடுறதா?” பழைய நினைவில் அவள் கண் கலங்க, “உன் மாமன் பழையதுதான் மூணு வருஷமா சாப்ட்டான்..” அவன் உரைக்க, மெல்லியதாக விசும்பவே துவங்கி விட்டாள்.

இங்கே இருந்த வரைக்கும் பழையது என்றால் முகத்தை அவ்வளவு சுழிப்பான். காலை, மாலையில் டிபன் இல்லை என்றாலும், சூடாக அவனுக்கு உணவு வேண்டும். கங்கம்மாவும் அவன் கேட்பதை சிரமம் பாராமல் செய்து கொடுப்பார்.

“ஏய் கவி.., அவனுக்கு சாப்பாட்ட போட்டுட்டு, என்னத்துக்கு அவன் முன்னாடி உக்காந்து அழுவுற.., இப்பதான் உன் அம்மாவை சரி கட்டினேன்.., இப்போ நீயா..?” மாரிமுத்து வெளியில் இருந்தே குரல் கொடுத்தார்.

“விடு மாமா.., நம்ம கவிதா தானே..” மாமன் மகளுக்கு பரிந்து வந்தவன், “மச்சான் என்ன பண்றார்? எப்போ கல்யாணமாச்சு..?” மெதுவாய் விசாரித்தான்.

“பக்கத்து ஊர்ல விவசாயம்தான் பண்றார். அந்த ஊர் மும்பர் வேற.., ஒரு வருஷம் ஆச்சு மாமா..” அவள் உரைக்க, அவன் உணவை முடித்துக் கொண்டான்.

“என்னமாமா.., அதுக்குள்ளே எழுந்துட்ட..?” சற்று பதறிப் போனாள்.

“வயித்தில் இடமில்லை கவிதா. எனக்கு போதும்..” அவன் உரைக்க, கேட்டுக் கொண்டிருந்த இருவருக்கும் மனம் கனத்துப் போனது.

முற்றத்தில் கை கழுவியவன், “அத்தைய எங்கே காணோம்..?”

“அவ அங்கன இருந்து இன்னும் ஒப்பாரி வைக்கா. அதான்.., அழுது முடிச்சுட்டு வான்னு சொல்லியிருக்கேன்..”

மாரிமுத்து உரைக்க, “ஏன் மாமா இப்படி பண்ற..?” கடிந்து கொண்டவன், அவர்கள் வீட்டுக்கு நடந்தான்.

கவிதாவும் உடன் வர, “சந்தோசமா இருக்கியா கவிதா. மச்சான் உன்னை நல்லா பாத்துக்கறாரா?” அவள் தன்மேல் வைத்திருந்த நேசம் அவனை அவ்வாறு கேட்கத் தூண்டியது.

“வெள்ளந்தி மனுஷன் மாமா. அவருக்கு நான்னா உசுரு..” தான் கேட்டதுக்கு நேரடியாக அவள் பதில் சொல்லாமல் தவிர்ப்பதை உணர்ந்து கொண்டாலும், அவனால் எதுவும் சொல்ல முடியவில்லை.

‘அக்காவதான் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்ட.., என்னையவும் அதே மாதிரி ஏமாத்திடுவியா மாமா..?’ ஒரு காலத்தில் அழுகையினூடே அவள் வினவியதும்,

‘உங்கள மாதிரி கருவாச்சிகள நான் கட்டிக்கவா..? நான் செவத்த புள்ளையதான் கட்டிப்பேன். ஒழுங்கு மரியாதையா அத்த சொல்ற பையனுக்கு கழுத்த நீட்டுற ஆமா..’ தயவே இல்லாமல் தான் பேசிய பேச்சுக்களும் அசந்தர்ப்பமாய் நினைவிலாட, ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

ஒரு விதத்தில் அவர்களுக்கு தான் எந்த நம்பிக்கையும் கொடுத்து ஏமாற்றவில்லை என்பது மட்டுமே ஆறுதலாக இருந்தது. அவன் வீட்டுக்குள் வரும் முன்னர், “அம்மா.., தோசை ஊத்தாதே.., மாமா இதையே சாப்பிடல” குரல் கொடுத்தவாறு, தன் நிறைமாத வயிற்றை சுமந்துகொண்டு வீட்டுக்குள் ஓடினாள்.

“ஏய்.., என்னடி சொல்லுத? நீ ஒழுங்கா சொல்லியிருக்க மாட்ட..” கோபமான அவர் குரலும், கூடவே, ஒரு மூக்குறிஞ்சலும் கேட்க, “அத்த, எனக்கு நெசமாவே போதும்..” உரைத்தவன் அடுக்களைக்குள் நுழைந்தான்.

“செல்வம்..” மேலே சொல்லும் முன்னர் அழுகை குறுக்கிட, “நாளைக்கு அழுவதுக்கு கொஞ்சம் மிச்சம் வை..,

இன்னிக்கே மொத்த தண்ணியையும் ஊத்தணுமா?" மாரிமுத்துவின் குரலில், வேகமாக முகத்தை துடைத்துக் கொண்டார்.

மாரிமுத்து, பாரிஜாதத்துக்கு மூன்று மகள்கள்.., அன்புச்செல்வனைத்தான் தங்கள் மகனாக அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தர்கள். தங்களது ஒரு மகளுக்கு அவனை மணாளனாக மாற்ற விரும்ப, அதில் அவனுக்கு விருப்பமில்லை என்பதை உணர்ந்து, கொஞ்சம் கூட கோபம் கொள்ளாமல், அவன் விருப்பத்துக்கு விட்டு விட்டார்கள்.

"மாமா.., சும்மா அத்தையவே அதட்டுற.., இதையெல்லாம் பாத்துட்டு நான் சும்மா இருக்க மாட்டேன் பாத்துக்க.." சற்று கோபமாகவே உரைத்தான்.

"உன் அத்த சும்மாவே எனக்கு அடங்கிருவா.., இப்போ நீ வேற கூட்டா.., எனக்கு திண்ணைதான்.." துண்டை உதறி தோளில் போட்டுக்கொள்ள,

"காலம்போன காலத்தில் மனுஷனுக்கு பேச்சைப் பார்.., போங்க.." அங்கே சற்று இயல்பு திரும்பியது.

"மாப்ள.., இங்கனயே படுக்கியா.., இல்ல.." அவர் கேட்டு முடிக்கும் முன்னர்,

"நான் அங்கேயே படுத்துக்கறேன் மாமா. அத்தைய பாக்கத்தான் வந்தேன். அத்த, சும்மா அழுவாதே.., காலையில் இங்கே.., உங்கிட்டே கொஞ்சம் பேசணும்.., வர்றேன்.." அவன் கிளம்ப, அவனோடு நடந்தார் மாரிமுத்து.

"மாமா.., நீயெங்க என்னோட வர.., இங்க ஆம்பளைத் துணை வேணும்..., நீ இரு.., நான் போறேன்.." அவன் கிளம்ப பிடிவாதமாக அவனோடு கிளம்பினார்.

"மாமா.., நான் இனிமேல் எங்கேயும் ஓடிப் போக மாட்டேன்.." அவன் உரைக்க,

“இனிமேல் நீ போனாலும் நாங்க விடுறதா இல்ல. உன் கால்ல சங்கிலியைக் கட்டியாவது போட்டுட மாட்டோம்..” அவனை பிரிந்து இருந்த வருத்தம் அவர் குரலில் நிரம்பி வழிந்தது.

வெளியே கயிற்றுக் கட்டிலில் படுத்தவர், “நீ வீட்டுக்குள்ள படுத்துக்க மாப்ள, நான் இங்கனயே படுக்கேன்..” அவர் அங்கேயே படுத்துவிட, பாயை எடுத்து திண்ணையில் விரித்தவன், “நானும் இப்படியே படுக்கறேன் மாமா..” படுத்தவன், விட்டத்தை வெறித்தான்.

‘அடுத்து என்ன செய்யப் போகிறோம்?’ சிந்தித்தவன், செய்ய வேண்டிய வேலைகள் ஒவ்வொன்றாக பட்டியலிட்டவாறே கண்ணயர்ந்தான். அவனைப் பார்த்தவாறே சற்று நேரம் இருந்த மாரிமுத்து, ‘மாப்ள என்ன முடிவுல இருக்கான்னு தெரியலையே..’ அதே யோசனையில் தானும் விழி மூடினார்.

*****

# பகுதி – 15.

அந்த காலை மிகவும் அழகாக விடிந்தது அன்புவுக்கு. கோழி கூவும் ஓசையில் கண் விழித்தவன், பாயில் இருந்து வேகமாக எழுந்து அமர்ந்தான்.

இன்னும் முழுதாக விடிந்திருக்கவில்லை. நேரம் அதிகாலை ஐந்தாக இருக்கலாம் என அவன் கணிக்க, அப்பொழுது தன் மாமா மாரிமுத்து படுத்திருந்த கட்டிலைப் பார்க்க, அது வெறுமையாக காட்சியளித்தது.

‘மாமா எங்க போனாரு..? சொல்லாமலே போயிட்டாரு..’ யோசனையாக எழுந்தவன், அத்தை வீட்டை நோக்கி நடந்தான்.

“அத்த..” வெளியில் இருந்தே குரல் கொடுக்க, “செல்வம்.., என்ன.., இம்புட்டு வெள்ளனே எழுந்துட்ட..? தூக்கம் வரலையா?” கேட்டவர் தன் முந்தானையில் கை துடைத்தவாறே வெளியே வந்தார்.

உள்ளுக்குள் வருந்திப் போனான். இங்கே இருந்த வரைக்கும் ஏழு மணிக்கு முன்னர் அவன் எழுந்த நாளே கிடையாதே. சிந்தையை ஒத்தி வைத்தவன், “மாமா எங்கத்த..?” கேட்டவன், முற்றத்தில் இருந்த தண்ணீரால் முகம் கழுவத் துவங்கினான்.

“நம்ம வாழைத் தோப்பில் இன்னைக்கு குலை வெட்டுறாக.., அங்கதான் போயிருக்கார். இனிமேல் லோட் ஏத்திட்டு ஒரு எட்டு மணிக்கா வருவார். நீ வா.., உனக்கு காப்பி தர்றேன்..” அவனை வீட்டுக்குள் அழைத்தார்.

“இல்லத்த.., நானும் தோப்புக்கு போயிட்டு வர்றேன்..” அவர் பதிலை எதிர்பாராமல் அவர் வீட்டுக்கு வலதுபக்கம் இருந்த பாதையில் திரும்பி நடக்கத் துவங்கினான்.

அவரது மறுப்பை கேட்கக் கூட அவன் அங்கே இருக்கவில்லை. ‘ஆத்தா.., புள்ளைக்கு துணை இரும்மா..’ வேகமாக வேண்டுதலை வைத்தார். கூடவே, “செல்வம்.., உன் புல்லட்டு வீட்டுக்கு பின்னாடிதான் நிக்குது.., எடுத்துட்டு வேண்ணா போ..” அவர் குரல் கேட்க சட்டென நின்றுவிட்டன.

தன் வண்டியில் அமர்ந்து ஊரைச் சுற்ற அவனுக்கும் ஆசைதான். ஆனால், அதற்கு முன்னர், தான் செய்ய வேண்டியதை செய்து முடிக்க வேண்டும்’ எண்ணியவன், “அதை பிறகு பாத்துக்கறேன்.., உடனே அதை எடுக்க முடியாது” உரைத்தவன் நடந்தான்.

பரிஜாதத்தின் வீட்டுக்கு பின்னால் இருக்கும் மாட்டுக் கொட்டகையைக் கடக்க, “ம்மா.., ம்மா..” ஒரு காளையின் குரல் அவனைத் தீண்டியது.

சட்டென நின்று திரும்பிப் பார்த்தவன், “எலேய் கருப்பா..” அந்த காளையைப் பார்த்ததில் அவனுக்கு அவ்வளவு சந்தோசம்.., அது குரலில் வழிய, சற்று பெரிய கூக்குரலாகத்தான் அது வெளிப்பட்டது.

அவன் குரலைக் கேட்ட காளையோ.., ஒரே பாய்ச்சலில் தன்னை கட்டியிருந்த கயிறை அறுத்துக்கொண்டு அவனை நோக்கி பாய்ந்து வந்தது, அந்த கருப்பு நிறக் காளை.

வந்த வேகத்தில்.., சற்று நிதானித்து.., அவன் நெஞ்சில் தன் முகத்தால் ஒரே முட்டு.., கூடவே.., “ம்மா..” ஒரு குரல் வேறு. அவனை அப்படியே சுழற்றி சுழற்றி முட்டியது.., தன் நாவை நீட்டி ஒரு முறை அவன் தலையை நக்கி கூட வைத்தது.

“கருப்பா.., நீ இங்கதான் இருக்கியா..? பெரியவனாயிட்ட.., உன்கூட இனிமேல் சண்டை போட முடியாது போல..” கேட்டவன், தன்னைவிட ஒருஅடி உயரமாக வளர்ந்துவிட்ட அதன் கொம்பை பிடித்து, அடக்கும் விதமாக பலம் கூட்ட, தன் இரநூறு முன்னூறு கிலோ எடையை வைத்து, அவனை

நெட்டித் தள்ள முயலாமல், அவனிடம் பின்வாங்கிப் போனது.

“எலேய் விட்டுக் கொடுக்குறியா..?” கேட்டவன் அதன் கழுத்தை கட்டிக்கொள்ள, அதுவும் அவனை அழுத்தமாக உரசிக் கொண்டது.

“செல்வம்.., உன்னைய இன்னும் மறக்கல பாத்தியா? யாருக்குமே அடங்காது. உன்கிட்டே எப்படி நிக்குது பாரேன். நாலு பேருக்கு கை மாத்தியும், எப்படியும் கயித்தை அத்துட்டு இங்கே வந்துடும். கடைசியா நாங்களே வச்சிருக்கோம்..” பாரிஜாதத்தின் கண்களில் கண்ணீர்.

“அத்த.., செவல காள..?” அவன் கேள்வியாய் நிறுத்த, அதுவும் இங்கனதான் இருக்கு. என்ன.., இவன் அளவுக்கு அவன் முரடு கிடையாதே.., அதான் கயித்த அத்துட்டு வராமல், கத்திகிட்டு கிடக்கான். அவனையும் ஒரு எட்டு பாரு..” அவர் உரைக்க, மறுக்காமல் கொட்டகைக்கு விரைந்தான்.

“செவல..” அவன் குரல் கொடுக்க, அதுவும் சற்று குதித்துக் கொண்டு அவனை நோக்கி வர முயன்றது.

“செல்வம்.., நீ இரு.., நான் அவனை வெளியே கூட்டி வர்றேன்.., உள்ள சாணியா இருக்கு..” பாரிஜாதம் உள்ளே செல்ல முயல, அவரைத் தடுத்தவன்,

“இனிமேல் இதையெல்லாம் பழகிக்கணும் அத்த.., நீ விடு..” உரைத்தவன், அதைப் போய் தடவிக் கொடுத்தான். அதைப் பார்த்த கருப்பன்.., அவன் முதுகில் முட்ட, “பொறாமையைப் பாரேன் உன் தம்பிக்கு..” பாரிஜாதம் உரைக்க, அதன் கழுத்தை மறு கரத்தால் தடவிக் கொடுத்தான்.

அந்த காட்சியைப் பார்க்கவே அவ்வளவு பாந்தமாக இருந்தது.

கருப்பன் அவர்கள் வீட்டில் இருந்த லஷ்மி என்ற பசுவுக்கு பிறந்த காளைக் கன்றுதான். பொதுவாக காளைக் கன்றை ஒரு வருடமோ, ஆறு மாதத்திலோ விற்று விடுவார்கள். ஆனால், முதல் முறையாக அன்புச்செல்வன் அந்த காளைக் கன்றோடு உறவாடவே. அதை விற்காமல் விட்டு விட்டார்கள்.

அது கன்றுகுட்டியாக இருந்த பொழுதே அதோடு விளையாடுவது அவனுக்கு அவ்வளவு பிடிக்கும். மல்யுத்தம், கயிறு இழுப்பது என அனைத்தையும் அதோடு விளையாடுவான்.

அவன் ஊருக்குள் எங்கே சென்றாலும் அவனோடு செல்லும் அளவுக்கான நெருக்கம். அவன் அழைத்தால், கயிறை அறுத்துக்கொண்டு அவன் குரல் கேட்ட திசையில் பயணித்து, அவனை வந்தடையும்.

“கருப்பா.., வாழைத்தோப்பு போறேன்.., வர்றியா...?” அவன் கேட்க, கொம்பில் இருக்கும் சலங்கை சப்திக்க தலையை அசைத்தது.

“பாரு செல்வம்.., நீ பேசுனா எப்படி கேட்டுக்குதுன்னு. நான் சொன்னா என்னைய முட்ட வரும்.., எலேய் கருப்பா.., எப்படியும் நான்தானே உனக்கு தண்ணி காட்டணும்.., இன்னைக்கு உனக்கு பருத்திக்கொட்டை கிடையாது போ..” அவள் உரைக்க, மேல் உதட்டையும், கீழ் உதட்டையும் அகலமாக விரித்து, அவளுக்கு அளவம் காட்டியது.

அதைப் பார்த்த அன்புச்செல்வன் வாய்விட்டு சிரிக்க, “அதுக்கு இருக்க குசும்பை பாத்தியாலே..” அதன் முதுகில் ஒன்று வைக்க, தன் வாலால் அவரை அது திருப்பி அடித்தது.

அதைப் பார்த்தவன், “கருப்பா.., சும்மா இரு..” அவன் அதட்ட, வேகமாக வாலை தாழ்த்திக் கொண்டது.

அதற்குள் கவிதா காபி கொண்டுவந்து கொடுக்க, “நீயும் எழுந்துட்டியா..?” கேட்டவன் அதை வாங்கிப் பருகினான். குடித்துவிட்டு டம்ப்ளரை அவளிடம் கொடுத்தவன்,

“வர்றேன் அத்த, கவிதா.., வாடா கருப்பா..” அவன் நடையை எட்டிப் போட, அவன் பின்னால் ஒரு பாதுகாவலனாய் தொடர்ந்தது கருப்பன்.

“எம்மா.., மாமா இனிமேல் இங்கே இருந்து போகாதே..” கவிதா கேள்வியாக இழுக்க,

“நானும் அப்படித்தான் நினைக்கேன். அவன் என்ன நினைக்கான்னு தெரியலையே” பெருமூச்சை வெளியிட்டவர் வேலையைப் பார்க்கத் துவங்கினார்.

பதினைந்து நிமிட நடையில், வாழைத்தோப்புக்குச் செல்ல, அங்கே வேலை ஜரூராக நடந்து கொண்டிருந்தது. “மாமா..” குரல் கொடுத்தவன் அங்கே செல்ல, “வா மாப்ள.., என்ன வெள்ளனே எழுந்துட்ட போல.., நானே வந்திருப்பேனே.., நீ எதுக்கு அலையிற?” கேட்டவர், குலை வெட்டுவதில் கவனமானார்.

“நீ ஏன் மாமா வெட்டுற? அதான் ஆளுங்க இருக்காங்களே..” அவரைத் தடுத்தான்.

“ஆளுங்க இருந்தா என்ன மாப்ள.., நாமளும் கூட செஞ்சா ஒரு கூலி குறையுமா இல்லையா..?” கேட்டவர் வேலையை நிறுத்தவே இல்லை.

“எனக்கும் ஒரு அருவா கொடு மாமா.., நானும் வெட்டுறேன்..” அவன் உரைக்க, பட்டென தான் செய்துகொண்டிருந்த வேலையை நிறுத்தி அவன் முகம் பார்க்க, நிச்சயம் அதில் விளையாட்டுத்தனமில்லை. அதில் ஒரு உறுதியும், பிடிவாதமும் தெரிய, தன் இடையின் பின்னால் தொங்கிய இன்னொரு அருவாளை அவனிடம் கொடுத்தார்.

“எப்படி வெட்டணும்னு தெரியுமா மாப்ள?” அவர் இழுக்க,

“நான் இந்த மண்ணுலதான் மாமா பொறந்தேன்.., வளந்தேன்..” உரைத்தவன், வாழை மரத்தின் நடுவில் ஓங்கி ஒரு வெட்டு வெட்டி, வாழையைச் சாய்த்தவன், குலையை கையால் பிடித்து, லாவகமாக ஒரே வெட்டில் வெட்டிப் பிரிக்க, மாரிமுத்து முகத்தில் அப்படி ஒரு நிம்மதியும், சந்தோஷமும்.

‘இனிமேல் என் மாப்ள பிழைச்சுப்பான்.., அவன் அப்பன் பேரை காப்பாத்துவான்..’ மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

அதே நேரம்.., கருப்பனோ.., “ம்மா..” குரல் எழுப்ப, “கருப்பா.., உனக்கு இங்கே வேலை இல்லை.., அப்படி ஓரமா இரு..” தன் வேலையைத் தொடரப் போனான்.

“மாப்ள.., சட்டையை கழட்டி வை.., நல்ல சட்டை கறைபட்டா போகாது..” அவர் உரைக்க, மறுக்காமல் தன் சட்டையை கழட்டி வைத்தவன் வேலையைத் தொடர்ந்தான்.

உடல் உழைப்பு அவனுக்கு சற்று பழக்கம்தான் என்றாலும், கை உழைப்பு புதியதாயிற்றே. சற்று களைத்தாலும், அதை ஒற்றி வைத்துவிட்டு வேலையைத் தொடர்ந்தான்.

வாழைக் குலைகள் அனைத்தையும் வெட்டி, ஒரு இடத்தில் குவித்துவிட்டு, வண்டி வரவே, அனைத்தையும் ஏற்றி, கட்டி.., நிமிர்கையில் சூரியன் அதன் கதிர்களை நன்றாக பாய்ச்சத் துவங்கி இருந்தான்.

“மாப்ள.., அசத்திட்ட..” அவன் தோள் தட்ட, தன் சட்டையை எடுத்து தோளில் போட்டுக் கொண்டவன், அவரோடு நடந்தான்.

“மாமா.., தென்னந்தோப்பு பக்கமும் ஒரு பார்வை பாத்துட்டு போவோமா?” அவன் கேட்க, சற்று ஆச்சரியமாக அவனைப் பார்த்தாலும், உற்சாகமாகவே அவனோடு சென்றார்.

“மாமா.., தென்னையெல்லாம் ரொம்ப வளந்துடுச்சு இல்ல..” கேட்டவன், அந்த தோப்பை சுற்றி வந்தான். தோப்பின் மூலையில் தென்னம் மட்டை, பாழை என குவிந்திருக்க, மறு பக்கம் தேங்காய் நார் குவிக்கப் பட்டிருந்தது.

“மட்டை எல்லாம் ஏன் மாமா அப்படியே கிடக்கு?” அவன் கேட்க,

“கொஞ்சம் கொஞ்சமா பக்கத்துல கொடுத்தா காசு கம்மியா வரும் மாப்ள, இப்போ இதை மொத்தமா வித்தால், இதுவே ஒரு நாலு அஞ்சாயிரம் கிடைக்கும் அதன். ரெண்டு நாள்ல ஆள் வந்துடுவாங்க..” உரைத்தவர், அவனது வயல்காடு முழுவதையும் சுற்றிக் காட்டினார்.

“வயக்காடு மொத்தமும் அடமானத்தில் இருக்கு செல்வம். பண்ணையார் தான் வெள்ளாம பண்றார்...” அவர் குரலில் அவ்வளவு வருத்தம்.

தன் பார்வையை சுழற்ற, கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் வயல்காடு விளைந்து, கதிர் முற்றி, தலை சாய்ந்திருந்தது. எப்படியும் ஒரு வாரத்தில் அறுவடை இருக்கும் என்பதை கணித்துக் கொண்டான்.

அவர்களது பம்புசெட்.., கிணறு, தொட்டி.., தாய் தந்தை இளைப்பாறிய மரம், வாய்க்கால்.., ஒவ்வொன்றையும் பார்க்க, மனம் கனத்துப் போனது. அவன் அமைதியைக் கலைக்க அவரும் விரும்பவில்லை.

சற்று நேரத்தில் தெளிந்தவன், “வா மாமா.., வீட்டுக்கு போகலாம்..” உரைந்தவன், நடந்தான்.

கருப்பனும் பின்தொடர, “மாப்ள.., என்னவே.., இவன் உனக்கு துணைக்கு வர்றான். என்னையெல்லாம் நெட்டி தள்ளிடுவான். இவன குளிக்க வைக்க கூட எனக்கெல்லாம் அம்புட்டு பயம். உன்கிட்டே என்னன்னா.., நாய்க்குட்டி மாதிரி வர்றான்..” அவர் குரலில் ஒரு பூரிப்பு.

“என் தம்பி மாமா.., உனக்குத் தெரியாதா..?” அவன் சொல்ல, அவர்கள் தன்னைப் பற்றிதான் பேசுகிறார்கள் என்பதை அறிந்தது போல், மாரிமுத்துவை திரும்பி ஒரு பார்வை பார்த்தது.

வீட்டுக்கு வரும் வழியில், வேப்பம் குச்சியை உடைத்து, பல் துலக்கியவாறே வந்து, வாய் கழுவிவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

“பாரி..” மாரிமுத்து குரல் கொடுக்க, “வாங்க.., லோடு போயிடுச்சா? விலை என்ன சொன்னாக? எப்போ கைக்கு காசு வரும்..?” ஒவ்வொன்றாக கேட்க, அனைத்துக்கும் பொறுமையாக பதில் கொடுத்தவர், “பத்து மணிக்கு காசோட இங்கே வர்றேன்னு சொல்லியிருக்கான்.., நீ சாப்பாட்டை எடுத்து வை..” தோளில் இருந்த துண்டால் தரையை தட்டிவிட்டு அமர்ந்து கொண்டார்.

அன்புச் செல்வனும் அவரோடு அமர, தட்டில் சூடாக இட்டிலி பரிமாறப் பட்டது. அமைதியாக அவற்றை உண்ண, மாரிமுத்து, ஜாடையாக மனைவியைப் பார்த்து ஜாடை பேச, ‘பொறுங்க..’ என்பதுபோல் கணவனிடம் கண் காட்டியவர், அவனுக்கு பார்த்து பார்த்து பரிமாறினார்.

அவர்களது மௌன பாஷையை கண்டு கொண்டவனுக்கு, சட்டென கீர்த்தியின் நினைவு. ‘இனிமேல் அவள் முகம் பார்த்து யார் பேசுவா?’ உண்பதை நிறுத்தி அவன் அமைதியாக,

“மாப்ள.., சாப்பிடு..” மாரிமுத்துவின் குரல் அவனைக் கலைக்க, அமைதியாக உண்டு முடித்தவன், கை கழுவிவிட்டு, அவர்கள் எதிரில் வந்து அமர்ந்தான்.

பெரியவர்கள் அவன் முகம் பார்க்க, கவிதா வாசல் பக்கம் நின்றிருந்தாள். “மாமா.., இரு வர்றேன்..” உரைத்தவன், தான் நேற்று கொண்டுவந்த பையை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தான்.

பேகைத் திறந்தவன், உள்ளிருந்து இரண்டு இரண்டாயிரம் ரூபாய் கட்டுக்களை எடுத்து வெளியே வைத்தவன், இரண்டு ஐநூறு ரூபாய் கட்டையும் எடுத்து வெளியே வைத்தான்.

பெரியவர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொள்ள, “மாமா.., பண்ணையார் வீட்டுக்கு போகணும்.., யாராவது பெரிய மனுஷங்களை கூப்பிடணும்னாலும் ஏற்பாடு பண்ணு மாமா. பாதி நிலத்தையாவது மீட்கணும்..” தீர்மானமாக பேசும் அவனை, ஆச்சரியமும், அதிர்ச்சியும் விலகாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

“மாப்ள.., இது..?” பாரிஜாதத்தால் கண்களை நம்ப முடியாமல், கண்ணீர் வழிந்தது.

“என்னோட மூணு வருஷ உழைப்பு அத்த.., சாப்பிடாமல், உடுக்க துணி வாங்காமல், நான் உழைச்சு சம்பாதிச்ச காசு..” குரல் நெகிழ்ந்து, கூடவே ஒருவித உறுதியை பறை சாற்றியது.

அவர்கள் கண்கள் சட்டென கலங்கினாலும், அவன் உழைப்பின் அருமை தெரிந்து வந்திருக்கிறான் என்பதில் அப்படி ஒரு நிறைவு.

“பாரி.., உள்ள போய் எடுத்துட்டு வா..” மாரிமுத்து மனைவியை ஏவ, உள்ளே சென்றவர், தானும் இரண்டு லட்சம் பணத்தோடு வெளியே வந்தார்.

“மாமா.., இது..” அவன் திணற,

“உன் தோப்பு, தோட்ட காசுதான். அப்படியே எடுத்து வச்சிருக்கோம். என் நிலத்தை எல்லாம் குத்தகைக்கு விட்டிருக்கேன். அதில் வர்ற வருமானம் எனக்கு போதும். உன் தோட்டத்துலதான் உழைக்கேன். என் மச்சான் காட்ட அப்படியே விட முடியுமா?” அவர் உரைக்க, அவரைத் தாவி அணைத்துக் கொண்டான்.

“மாமா.., நான்..” அவன் கலங்கிப் போக,

“செல்வம்.., உனக்கு செய்யாமல் யாருக்கு செய்யப் போறேன். விடுலே.., வாழைத்தோப்பு காசு ஒரு அறுபதாயிரம் வரும். ஆனா.., அதை விதை நெல்லு வாங்க வச்சுக்கலாம். இப்போ இருக்கதை பண்ணை கிட்டே கொடுத்துட்டு, முக்கா காட்ட மீட்கலாம். மிச்சத்த ஆறே மாசத்தில் மீட்டுடலாம்.

“நான் நாலு பேத்த கூட்டி வர்றேன்.., இப்போ போனாத்தான் அவர வீட்ல புடிக்க முடியும். வெளியே கிளம்பிட்டா பொறவு கஷ்டம்.., இரு வர்றேன்..” துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்டார்.

அடுத்த அரைமணி நேரத்தில் பண்ணையார் வீட்டுக்கு ஒரு பத்துபேர் செல்ல, அவர்கள் வரவை எதிர்பார்த்திருந்தவர்போல், அவர்களை எதிர்கொண்டார் பண்ணையார்.

“அட.., வாங்க.., வாப்பா செல்வம்..” அவர்களை வரவேற்றவர், “அம்மாடி, காப்பித்தண்ணி கொண்டுவா..” உள்ளே பார்த்து குரல் கொடுத்தார்.

“சொல்லுங்க.., ஊர் பெரியவங்க எல்லாம் சேர்ந்து வந்திருக்கீங்க” பேச்சை அவரே துவங்கினார்.

“நம்ம செல்வம்.., அடமானம் வச்ச நிலத்தை மீட்கலாம்னு வந்திருக்கான். மொத்தம் எவ்வளவு என்னன்னு சொன்னீங்கன்னா நல்லா இருக்கும்” வந்தவர் உரைக்க, பண்ணையார், அங்கே இருந்த கணக்காளனைப் பார்க்க, வேகமாக அவன் உள்ளே சென்றான்.

அதே நேரம்.., வீட்டுக்குள் இருந்து, கையில் ஒரு டிரேயோடு வெளியே வந்தவள், அந்த கூட்டத்துக்குள் அன்புச் செல்வனை கண்களால் தேடினாள். தேடியவன் பார்வைக்கு கிடைக்க, அவள் முகத்தில் அப்படி ஒரு நாணம்.

காபியை அவர்களிடம் கொடுக்க, “அட.., நம்ம சந்தியாவா..? நீ எப்போம்மா திருச்சியில் இருந்து வந்த? காலேஜ் எல்லாம் நல்லபடியா போகுதா?” வந்தவர் கேட்டார்.

“ரெண்டு நாள் ஆச்சு சித்தப்பா.., காலேஜ் நல்லா போகுது. இந்த வருஷத்தோட படிப்பு முடிஞ்சுடும்..” ஓரவிழிப் பார்வை அன்புச்செல்வனிடமே நிலைத்தது.

அன்புவின் பார்வை அவளை ஏறிட்டு பார்க்கவும் இல்லை, அவள் பேச்சில் நிலைக்கவும் இல்லை. மாறாக, வந்த வேலை எப்படி முடியும்? என்பதிலேயே இருந்தது.

முதல் கவலையே.., பண்ணையார் இருக்கும் பணத்தை வாங்கிக் கொண்டு, விளைநிலத்தை அவனிடம் கொடுக்க வேண்டும் என்பதே பெரும் கவலையாக இருந்தது.

ஒரு வேளை அவர் மறுத்துவிட்டால்.., அந்த நினைவே கொடூரமாக இருந்தது. நிச்சயம் அடுத்த ஒரு வருடத்தில் அவனால் அந்த மூன்று லட்சத்தை சம்பாதித்துவிட முடியும். ஆனால்.., அந்த ஒரு வருடம் என்பதுதான் பெரும் கவலையாக இருந்தது.

ஒற்றை இரவுக்குள்.., ஓராயிரம் நினைவுகள்.., கூடவே, ஒரு பக்கம், கீர்த்தி என்ன ஆகியிருப்பாள்? என்னைத் தேடி வீட்டுக்கு போயிருப்பாளா? அலைபேசியில் அழைத்திருப்பாளா? அதிலேயே உழன்றது.

அவன் பார்வை தன்மேல் விழாத தவிப்பில், சற்று கோபமாகவே நடந்து சென்றாள் சந்தியா. அவனோ, கையில் இருந்த காபியை கூட அருந்த முடியாமல் அமர்ந்திருந்தான்.

உள்ளே சென்ற பணியாள், கையில் சில பேப்பர்களோடு வெளியே வர, அதை பண்ணையாரிடம் கொடுத்துவிட்டு, அவர் காதுக்குள் ஏதோ சொல்லிவிட்டு விலகி நின்றான்.

“மாரிமுத்து.., உனக்குத் தெரியாதது இல்லை. மொத்தம் பத்து லட்ச ரூபா கொடுத்தேன். ஒத்த ரூபா கூட திருப்பி வரலை. வட்டிக்கு பதிலா, அவங்க காட்டில் வெள்ளாமை பண்ணேன். அது இந்த ஊருக்கே தெரியும். முதல்ல என்கிட்டே அடமானம் வச்ச நிலம் இருபது ஏக்கர்.

“அதில் இரண்டாம்தர பயிர் நல்லா வரும். கொஞ்சம் செம்மண் காடு..., அதுக்கு அடுத்து ஒரு பத்து ஏக்கர்.., அடுத்து.., அஞ்சு அஞ்சா வச்சாக.., நீங்க எதை மிக்க வந்திருக்கீக..? மொத்தமாவா.., இல்ல சில்லரையாவா?” அவர் கேட்க, அவ்வளவு நேரமாக அமைதியாக இருந்த செல்வம் வேகமாக நிமிர்ந்து அமர்ந்தான்.

“ஐயா.., முதல்ல வச்ச இருபது ஏக்கரை கடைசியா திருப்பிக்கறேன்.., மிச்சத்தை இப்போ வாங்கிக்கறேன். ஒரு ஒரு வருஷம் டைம் கொடுங்க, அதையும் மீட்டுடுறேன்..” வேகமாக படபடத்தான்.

சற்று நேரம் தாடையைத் தடவி யோசிக்க, அந்த பணியாள் மீண்டும் வந்து அவரது செவியில் மீண்டும் எதையோ சொல்லிவிட்டு, வீட்டுக்குள் பார்வையைச் செலுத்த, அங்கே நின்றிருந்தாள் சந்தியா.

‘ப்ளீஸ்ப்பா..’ அவள் பார்வையால் கெஞ்ச, தன் முறுக்கு மீசையை நன்றாக முறுக்கியவர், “அந்தக் காட்ல..” இழுத்து நிறுத்தி, அவர்கள் முகம் பார்க்க,

அவர் என்ன சொல்லப் போகிறாரோ.., என்பதுபோல் பதைப்பாக பார்த்திருந்தான் அன்புச்செல்வன்.

*****

# பகுதி – 16.

வாசனின் பத்தாம் வகுப்பு ரிசல்ட் வந்து, அவன் நல்ல மதிப்பெண் பெற்றிருந்தான். ஆனால், அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட அவனால் முடியவில்லை. வீடே களை இழந்து காணப் பட்டது. தன் கொண்டாட்டத்தை கூட அக்காவுக்காக ஒற்றி வைத்தான்.

ஆனாலும் தன் அக்காவிடம் உரைக்கவேண்டும்.., எழும் ஆவலை அவனால் தவிர்க்க முடியவில்லை.

அவனுக்குமே அன்புச் செல்வன் மாயமானதை தாங்க முடியவில்லை. தன் அக்காவின் முகத்தில் நிரந்தரமாக தங்கி விட்ட கவலையைக் காண்கையில், ஒரு பக்கம் அவன்மேல் அவ்வளவு ஆத்திரமாகக் கூட இருந்தது.

அவளுக்காகவென.., அவளது அலைபேசியில் இருந்து அன்புவின் அலைபேசி எண்ணை எடுத்து, ஒருலட்சம் முறையாவது அதை தொடர்பு கொள்ள முயன்றுவிட்டான்.

‘நீங்கள் அழைக்கும் வாடிக்கையாளர் எண் சுவிட்ச்ஆப் செய்யப்பட்டுள்ளது’ இந்த கணினியின் வாய்ஸ் தவிர, எந்தவிதமான பலனும் இருக்கவில்லை.

ஒரு சில நேரங்களில், அக்காவின் அறையைக் கடக்கையில், அவளது அலைபேசியில் இருக்கும் அன்புவின் நிழலுருவத்தை விடாமல் பார்த்துக் கொண்டிருப்பதை அவனும் கண்டிருக்கிறான். ஆனால், எல்லாம் அறிந்தும் எதையும் செய்ய இயலாத நிலை.

பெரியவர்களாலேயே எதுவும் செய்ய முடியவில்லை என்னும்போது, சிறுவனான அவனால் என்ன செய்துவிட முடியும்?

‘ஓரிருமுறை அன்புவின் இருப்பிடம் எங்கே..’ என கேட்டதற்கு கூட, கீர்த்தயின் பதில் மௌனமாகத்தான்

இருந்தது.

அன்பு சென்னையை விட்டுச் சென்று ஆறு மாதம் முடிந்துவிட்டது என்பதை நம்பவே அவ்வளவு கடினமாக இருந்தது. ஒரே நாளில் தங்கள் வீட்டுக்கு வந்து, தங்கள் மகளை எப்படி புரிந்து வைத்திருக்கிறான் என தங்களுக்கும் உணர்த்தி, அவளை தங்களுக்கு மீட்டுத் தந்துவிட்டு, கண் காணாமல் சென்றுவிட்டான்.

கீர்த்தியின் செய்கையை, நடத்தையை எப்படி எடுக்கவென்றே தெரியவில்லை. ஒரு பக்கம், அவன் செய்கையை எதிர்பார்த்தேன் என்பதுபோல் இருக்க, மறு பக்கம், மொத்தமாக துவண்டு போனாள்.

ஆனால், அதை மற்றவர் அறியாதவாறு நடந்துகொள்ள அவ்வளவு சிரமப்பட்டாள். அதை அவர்களும் உணர்ந்து கொண்டார்கள் என்பதுதான் வேதனைக்குரிய விஷயமே. பெற்றவர்கள் அவளிடம் சாதாரணமாக உரையாட, அப்படியே ஒட்டிக் கொண்டாள். வாசனிடம் அரட்டை அடித்தாள். அவனுக்கு புரியாத கணக்குப் பாடத்தை விளக்கி சொல்லிக் கொடுத்தாள்.

அலுவலகத்துக்கு விடாமல் சென்றாள். அவளது தோழி, அக்ஷயாவுக்கு இரண்டாவது குழந்தை பிறக்க, அந்த குழந்தையோடு நேரம் செலவழித்தாள். அலுவலகத்தில் இப்பொழுதெல்லாம் முக்கியமான முடிவுகள் கூட அவள்தான் எடுத்தாள். ஆனால்.., அனைத்துக்குப் பின்னும், அசைக்க முடியாத ஒரு வெறுமை..,

தாயின் கையால் உணவு உண்டாள். அவர் மடியில் படுத்து சில நேரம் அதன் இனிமையில் லயித்திருப்பாள். ஆனால்.., அவள் கண்களில் உயிர்ப்பு என்ற ஒன்று இல்லவே இல்லை. ஒரு யோகியைப்போல், என் வேலை இது.., என.., ஒரு மாதிரியான இயந்திரத் தன்மை.

‘என்னால் இவர்கள் வருத்தப்படக் கூடாது..’ என்பதான ஒரு எண்ணம்.., நான் நன்றாகத்தான் இருக்கிறேன்..,

போலியாகவேனும் அவர்களை நம்ப வைத்துவிடும் வேகம்.., தன்னை மீறிச் செய்தாள்.

ஆனால், இரவில், பலமணி நேரங்கள் சென்றாலும், அவள் அறையில் மட்டும் விளக்கு அணைய நள்ளிரவாகிவிடும். இரவில் வெகு நேரம், மகளது அறையில் இருந்து வரும் தொலைக்காட்சியின் ஒலியோ, ஒளியோ.., பெற்றவர்களை துவளச் செய்யும்.

அங்கே போய் பார்த்தால்.., தொலைக்காட்சியில் கவனமில்லாமல் அதை முறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பாள். இல்லையா.., சுவரை பார்த்திருப்பாள்.

பல நேரங்களில், எதிலும் பிடிப்பின்றி, தாங்கள் பேசுவதைக் கூட உணராமல், அமைதியாகிவிடும் அவளது செய்கை.., இவை எல்லாம் விட, ஒருவரது முகம் பார்த்து அவர்கள் பேசுவதை உணர்ந்து கொள்பவள், இப்பொழுது மற்றவர் முகம் பார்த்து பேச முடியாமல் திணறுவதைக் காண்கையில், ரத்தக்கண்ணீர் வழிந்தது.

எனக்கு இது வேண்டும்.., வெளியே செல்ல வேண்டும்.., ஷாப்பிங்.., சினிமா.., அனைத்தும் அடியோடு நின்று போனது.

உறக்கம் இல்லாததால், அவள் விழியைச் சுற்றி கரும் படலம் விழவே துவங்கி விட்டது. உயிரைக் காக்க உண்ணும் உணவால், கையில் இருக்கும் வளையல் தானாகவே உருவி விழும் நிலைக்கு சென்றுவிட்டாள்.

மற்றவருக்காக உண்ணும் உணவு, அவள் உடம்பில் ஒட்டவில்லை. பெற்றவர்களுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் மனதுக்குள் இருப்பது அவர்களுக்குத் தெரியுமே.

அவளுக்கு அன்புதான் வேண்டும் என்றால், அதை நடத்திக் கொடுக்கக் கூட மாணிக்கம் தயாராக இருந்தார். மகளது

நிலை அவரை வெகுவாக காயப்படுத்த, அவளை எப்படி அணுகவென நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதற்கு சரியான சந்தர்ப்பத்தை அவளே ஏற்படுத்தினாள். தன் ரிசல்ட்டை பார்த்த வாசன், பெற்றவர்களிடம் சொல்லிவிட்டு, தன் அக்காவிடம் சொல்லச் சென்றான்.

அலுவலகம் கிளம்பிக் கொண்டிருந்தவள், வாசன் மலர்ந்த முகமாக வரவே, “வாசன்.., கங்கிராட்ஸ்.., திஸ் இஸ் பார் யூ..” உரைத்தவள், ஒரு அழகிய கை கடிகாரத்தை அவனுக்கு பரிசாக வழங்கினாள்.

“ஐ.., தேங்க்ஸ்க்கா.., இதை எப்போ வாங்கின? எப்படிக்கா..?” ஆச்சரியமானான்.

“நீ கண்டிப்பா நல்ல மார்க் வாங்குவன்னு எனக்குத் தெரியும். அதான்.., நேத்தைக்கே வாங்கிட்டேன்..” அவனை அழைத்துக் கொண்டு கீழே வந்தவள், தாயை அழைத்தாள்.

“அம்மா.., இன்னைக்கு தம்பிக்கு பிடிச்ச ஐஸ்கிரீம் கேக் வாங்கறோம்.., செலிபரேட் பண்றோம். சாயங்காலம் டெம்பிள் போகலாமா?” அந்த வீட்டில் கலகலப்பை கொண்டுவர முயன்றாள்.

அவள் பேசுவதை கேட்டுக் கொண்டே வந்த மாணிக்கம்.., “அம்மாடி, எல்லாம் பண்ணலாம், அதுக்கு முன்னாடி.., நீ.., என்னம்மா முடிவு பண்ணியிருக்க?” அவர் கேட்க, சட்டென அங்கே கவிழ்ந்த அமைதியில், ‘இப்பொழுது இதை கேட்டிருக்கக் கூடாதோ’ என வருந்தியவர், ‘இதை விட்டால் நல்ல சந்தர்ப்பம் தங்களுக்கு கிடைக்காது என்றே எண்ணினார்.

“எதுக்குப்பா..?” அவர் கேட்க வருவதை புரியாதவளாக பாவித்தாள், அவர் முகம் காண மறுத்தாள்.

“இந்த அப்பாவோட முகத்தை பார்த்து சொல்லு.., நான் கேக்க வர்றது உனக்கு புரியலன்னு..” அவளை அமர

வைத்து தானும் அமர்ந்தார்.

சாந்தியும் அவர்கள் எதிரில் அமர, தான் அங்கே இருக்கவா? வேணாமா என்ற குழப்பத்தில் நின்றிருந்தான் வாசன்.

“இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்ப்பா.., அன்பு கண்டிப்பா வருவார்..” அவள் குரலில் அவ்வளவு பரிதவிப்பும், எதிர்பார்ப்பும் நிரம்பி வழிந்தது.

“கீர்த்தி.., அப்பா வேண்ணா தஞ்சை போகவா..?” மகளது பரிதவிப்பை காண சகிக்காமல் கேட்டார்.

“எதுக்கு..?” அவள் குரலில் அவ்வளவு பிடிவாதம்.

“அதான் உனக்கு அவன்தான்னு முடிவு பண்ணிட்டியே.., பிறகு ஏன் அதை தள்ளிப் போடணும்?” அவளது கோபத்துக்கான காரணம் அவருக்குப் புரியவே இல்லை.

“நான் முடிவு பண்ணிட்டா.., எனக்கு வாழ்க்கை கொடுக்கச் சொல்லி அவர்கிட்டே கெஞ்சப் போறீங்களா? போய் பிச்சை கேக்கப் போறீங்களா?” அவள் குரலில் அவ்வளவு ஆத்திரம், கோபம்.

“ஏண்டி இப்படி பேசற?” சாந்தி இடைபுக,

“வேற எப்படி பேசச் சொல்றீங்க? அவருக்கு நான் வேணும்னா அவர்தான் வரணும். என் காதலை நான் உணர்த்த தான் முடியும். அதை விட்டு, இறங்கிபோய்.., இல்லம்மா.., அது என்னால் முடியாது..” அழுகை முட்டி, கண்ணீர் விழவா என மிரட்டியது.

“இதில் என்னடி கௌரவம் பாக்க வேண்டி இருக்கு? ஊர் உலகத்தில் யாரும் மாப்பிள்ளை பாக்குறதே இல்லையா?” மகளது பிடிவாதத்தால் அவள் வாழ்க்கை பறிபோய்விடக் கூடாதே என்ற கவலை அவருக்கு.

“மாப்பிள்ளை பாக்குறதா..? ரொம்ப ஈசியா சொல்லிட்டீங்கல்ல..? என்னன்னு சொல்லுவீங்க.., எனக்கு இப்படி ஒரு செவிட்டுப் பொண்ணு இருக்கறா.., கூடவே, கொஞ்சம் நடக்கவும் முடியாது.., உனக்கு நான் கோடி கோடியாய் பணம் தர்றேன்.., அவளை கட்டிக்கன்னா..?” இதற்கு முன்னர் அப்படித்தான் நடந்தது என்பதை அவள் சுட்டிக் காட்ட, தங்கள் செய்கை அவளை எவ்வளவு காயப்படுத்தியிருக்கிறது என்பது புரிய கலங்கிப் போனார்கள்.

“அம்மாடி.., அது.., ஏதோ..” அவளுக்கு என்ன சமாதானம் சொல்வது எனத் தெரியாமல் அவர்கள் திணற, ஒரு பக்கம் வாசன் அழவே துவங்கி விட்டான்.

வேகமாக தன் கண்ணீரை சுண்டி எறிந்தவன், “அப்பா.., மாமா வந்து, அக்காவை கட்டிக் கொடுங்கன்னு கேக்க முன்னாடி நீங்க எதுவும் செய்ய வேண்டாம். அதான் அக்கா சொல்றால்ல.., மாமா கண்டிப்பா வருவார். அது வரைக்கும் நீங்க கொஞ்சம் சும்மா இருங்க..” பொதுவாக அவர்களிடம் எதையும் பேச தயங்குபவன், அக்காவுக்காக பேசினான்.

ஏனோ அக்காவின் தன்மானத்தில் பெரும் நியாயம் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவளுக்கு அனைத்திலும் துணை இருக்க முடிவெடுத்திருந்தானே.

கூடவே.., “அக்கா.., நீ அழாத.., மாமா சீக்கிரமே வந்துடுவார்..” அவள் அழுகையை அவனால் தாங்க முடியவில்லை.

அவ்வளவுதான்.., அதன் பிறகு அதைப் பற்றி பேசக் கூட பெரியவர்கள் முயலவில்லை. வாசன் முதல் குரூப் எடுத்து பள்ளியில் சேர, அவனுக்கு பள்ளியும் திறந்து விட்டது. அதற்குள் அடுத்த இரண்டு மாதங்கள் எப்படி சென்றது என்றே தெரியவில்லை.

***அன்புவோ.., அவன் நிலத்தில் அயராது உழைத்துக் கொண்டிருந்தான். இரவு பகல் பாராத உழைப்பு. இதில்

கவனிக்க வேண்டிய விஷயமே, பண்ணையார் அவனது நிலம் முழுவதையும் அவனிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அந்த மூன்று லட்சம் கூட ஒரு வருடத்துக்குப் பிறகு கொடுத்தால் போதும் என சொல்லிவிட்டார். எனவே, அனைத்து நிலங்களையும் கவனிக்கத் துவங்கினான். ஒரு நிலத்தில் நெல் போட முடியாது என்பதால், அதை அவர் வெறுமையாக விட்டிருக்க, முதல் வேலையாக வண்டி வைத்து அந்த நிலத்தில் மூன்று லோடு சாணி உரம் இறக்கியவன், நிலத்தை முழுதாக கொத்தி விட்டான்.

அதன் பிறகு, அதில் கிழங்கும், ஊடு பயிராக பயிரும் விதைக்க, அது ஒரு பக்கம் வளரத் துவங்கியது. வாழை தோட்டம் அறுவடை முடிந்திருக்க, அடுத்ததாக உடனே வாழை போடாமல், வேறு பயிர் போட முடிவெடுத்தான்.

அதன்படி, புடலை, பாகற்காய், கொடிகளை பயிரிட்டான். வாழைக்கு போட்டிருந்த உரம் நிலத்தில் அதிகமாக தங்கி இருந்ததால், அந்த கொடிகள் சற்று செழிப்பாகவே வளர்ந்தன.

மாதங்கள் அவனுக்கு நாட்களாகக் கடக்க, நிற்க கூட அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. அத்தோடு.., அவன் தென்னை தோட்டத்தில் மலைபோல் குவிந்திருந்த தேங்காய் மட்டைகளை வைத்து, கயிறு தயாரிக்க முடிவெடுத்தான்.

பழைய தொண்டுகளை ஊறப் போட்டு, அதை கயிறாகத் திரிக்க ஆட்களையும் நியமிக்க, அதுவும் ஒரு பக்கம் ஜரூராக வேலை நடந்தது. பொட்டல் நிலத்தில் கூட, மாட்டுத் தீவனப் பயிர் வளர்த்தான். கூடவே.., அங்கே ஒரு கிணறு வெட்ட ஏற்பாடு செய்தவன், மாட்டுப்பண்ணை வைக்கவும் முடிவெடுத்தான்.

அயராத உழைப்புக்கு, காலையில் காபி குடித்தால் வேலைக்காகாது எனப் புரிந்தவன், பழைய கஞ்சியை

கரைத்து, மோர் ஊற்றி, கூழாகக் கரைத்து குடிக்கப் பழகி இருந்தான். அது அவனுக்கு பெரும் தெம்பும், சக்தியும் அளிப்பதை உணர்ந்தான்.

பத்து மணிக்கு டிபன் சாப்பிட்டால், மதிய உணவு உண்ண, நேரம் இரண்டு ஆகிவிடும். அதன் பிறகும் ஓய்ந்து இருக்காமல், கயிறு திரிக்கும் இடம், பண்ணை என அவனது நேரம் அவனுக்கு சொந்தமின்றி சுழன்றது.

அவனது உழைப்பைக் கண்டு மாரிமுத்துவும், பாரிஜாதமும் பயந்துதான் போனார்கள். அவன் உழைப்பது அவர்களுக்கு சந்தோஷம்தான் என்றாலும், அயராத உழைப்பை அவர்களால் தாங்க முடியவில்லை. நிற்க நேரமில்லாமல், பம்பரமாக சுழன்றான்.

கவிதாவுக்கு குழந்தை பிறந்து ஐந்தாம் மாதம் தன் கணவன் வீட்டுக்கே சென்றுவிட்டாள். இப்பொழுது இவர்கள்தான் அவனுக்குத் துணை. எந்த பயிர், எப்பொழுது விதைக்க வேண்டும், என்ன உரம் போடலாம்.., இயற்கை உரம் போடுவது, அதை தயாரிக்கும் முறை என அனைத்தையும் அவனுக்கு கற்றுக் கொடுத்தார்கள்.

வயலை உழ, டிராக்டர் வாடகைக்கு எடுக்கலாம் என்றாலும், அதன் வாடகையை ஏன் கொடுக்க வேண்டும் என்பதால், கருப்பனையும், செவலைக் காளையையும் வைத்து, அவனே நிலத்தை உழுதான்.

முதலில், கலப்பையின் கனமும், அதை கையாளத் தெரியாத விதமும் சேர, சற்று திணறினாலும், மாரிமுத்து அதன் நுணுக்கத்தை கற்றுக் கொடுக்க, சட்டென பிடித்துக் கொண்டான்.

தொடர்ந்து ஒரு மாதம் வரைக்கும் ஏரோட்டும் வேலையே நடைபெற, ஒரு விவசாயத்துக்குப் பின்னால் இருக்கும் உழைப்பை அவன் உணர்ந்து கொண்ட தருணம். பழகாத உடல் உழைப்பால், இரவில் அடித்துப் போட்ட விதத்தில் உறக்கம் சொக்கும்.

அந்த நேரத்தில்.., கீர்த்தி தன் அருகில் இருந்திருந்தால், எப்படி தன்னை மடி தாங்கியிருப்பாள்.., என்ற நினைவே அவனை பல நேரங்களில் உயிர்ப்புடனும், உழைக்கவும் தூண்டியது.

வெட்ட வெளியில் கயிற்றுக் கட்டிலில் படுத்து வானத்தை வெறித்தால், வானத்தில் இருக்கும் நிலா கீர்த்தியின் முகமாக உருமாறும். அவளை ஒரு முறையாவது பார்க்கச் சொல்லி அவன் விழிகள் கெஞ்சினாலும், தான் எடுத்த லட்சியம் நிறைவடையாமல் அவளைச் சந்திக்க அவன் விரும்பவில்லை.

ஒரு அறுவடை முடிந்த பிறகுதான் அவளைப் பார்க்க வேண்டும்.., வருடத்தில் முப்போகம் விளையும் அவன் நிலம். நிலத்தை செம்மைப்படுத்தி, நெல் விதைத்துவிட்டால்.., நான்கே மாதங்களில் நெல் அறுவடை செய்து விடலாம்.

அதற்காகத்தான் காத்திருந்தான். விதைநெல், உரம், கூலி என போனாலும், நிச்சயம் கணிசமான காசு நிற்கும். கூடவே, காய்கறித் தோட்டம், கடலைக் காடு, பால் பண்ணை, பசுந்தீவனக் காடு, தென்னந்தோப்பு வருமானம், அதன் நார், அதிலிருந்து வரும் கயிறு.., நிச்சயம் மாத வருமானம் லட்சங்களைத் தொடலாம்.

முதல் உழைப்பின் பலன் கையில் இல்லாமல், அவள் முன்னால் சென்று நிற்க அவன் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. ஆனால், இப்பொழுதெல்லாம் அவள் நினைவுகள் அவனைக் கொல்வதை உணரத் துவங்கியிருந்தான்.

அவள் வேண்டும்.., அவள் நேசம் வேண்டும்.., மனம், வளர்ந்த குழந்தையாக அடம் பிடிக்கத் துவங்கியது. பாசத்தை அள்ளித் தெளிக்க இங்கே அவனுக்கு ஆயிரம் சொந்தம் இருக்கிறது. ஆனால்.., தான் யாருமற்ற

அனாதையாக நின்றபொழுது, தான் யாரென்றே தெரியாமல், தன்மேல் அன்பை செலுத்தியவள்..

அவளது அன்பு முழுதாக வேண்டும்.., இளமையின் உணர்வுகள் கூட அவளை நினைக்கையில் மேலெழுவதை அதிர்வாய் உள்வாங்கினான்.

சில நேரங்களில், முழுதாக நினைவுகள் ஆக்கிரமிக்கும் முன்பு, உறக்கம் அவனைத் தழுவி இருக்கும். மாரிமுத்துவும், பாரிஜாதமும் அவனை ஓய்வெடுக்கச் சொல்லி சில வேளைகளில் கெஞ்ச வேண்டி இருக்கும். அப்படி இருந்தது அவன் உழைப்பு.

அவனுக்கு பக்கபலமாக இருந்தது கறுப்பன்தான். நிலத்தில் இறங்கிவிட்டால், அன்பு ஓயும்வரைக்கும் கருப்பன் ஓயவே மாட்டான். அவனுக்காகவே தினமும் பசுந்தீவனம் எடுத்து வந்து கொடுப்பான் அன்பு.

சில வேளைகளில், கீர்த்தியின் நினைவில் அவன் மூழ்கி தன்னை மறக்கும் நேரத்தில், அவன் முகத்தில் தன் மூக்கால் இடித்து அவனைக் கலைக்கும்.

“கருப்பா.., உன் அண்ணியைப் பத்திதான் யோசிச்சுட்டு இருக்கேன்.., உனக்கு அவளைப் பாக்கணுமா?” அவன் கேட்கையில், பலமாக தலை அசைத்து தன் ஆர்வத்தை வெளிப்படுத்தும்.

மற்றவர்களிடம் மட்டுமா.., தன்னவளிடம் கூடத் தெரிவிக்காத தன் காதலை, முதலில் தெரிவித்ததே அந்த கருப்பனிடம்தான். அவன் மனதில் இருப்பதை கொட்ட, அவனுக்கு கிடைத்த ஒரே ஆதரவு.

கருப்பனும் அவனது சகோதரனைப்போல், அவன் எங்கே இருந்தாலும் அவனோடு உறவாடும். தன் புல்லட்டை விட, கருப்பனின் துணையைத்தான் அவன் அதிகம் நாடினான்.

ஒரு வழியாக நெல் விதைத்து, நாற்று நட்டு, களை பறித்து, நெல்பிள்ளை பிடித்து வளரும் நேரம்.., இன்னும் இரண்டு மாதங்களில் தன் உழைப்பின் பயனை அடையப் போகிறோம்.., அந்த இருட்டு வேளையில் தன் வயலில் பார்வையைப் பதித்திருந்தவனுக்கு அப்படி ஒரு நிறைவு.

காலையில் வயலுக்கு தண்ணி காட்டுவது துவங்கி, அனைத்தும் அவன்தான். துணைக்கு மாரிமுத்து மட்டுமே. களை பறிக்க, நாற்று நட மட்டுமே வெளி ஆட்கள் இருந்தார்கள். மற்றபடி, உரம் போடுவது முதல் அனைத்தும் அவன்தான்.

அந்த இரவின் இனிமையையும், மெல்லிய மண் வாசனையையும், குளிரையும் இதமாய் அனுபவித்தவன், வீட்டுக்கு வந்து உண்டுவிட்டு உறங்க, உறக்கத்தில் பெரும் கனவைக் கண்டவன் திடுக்கிட்டு விழித்தான்.

முதல் உழைப்பின் பயனை அடைந்த பிறகுதான் கீர்த்தியைக் காண வேண்டும் என்ற அவனது முடிவு காற்றோடு போக, இப்பொழுதே அவளைப் பார்க்க வேண்டும்.., அவன் மனம் அடித்துக் கொண்டது. அதன் பிறகு அவனால் இமை மூட முடியவில்லை.

*****

# பகுதி – 17.

காலையில் எழுந்து வந்தவுடன், சென்னைக்குச் செல்ல வேண்டும் என நிற்கும் அன்புச்செல்வனை கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவனது மாமாவும், அத்தையும்.

“இப்போ என்னத்துக்கு செல்வம் சென்னைக்கு போகணும்னு சொல்ற? அதான் இங்கேயே எல்லாம் நல்லாத்தானே போகுது?” எங்கே அவன் மீண்டும் காணாமல் போய்விடுவானோ என்ற கவலை அவரிடம் அதிகம் வெளிப்பட்டது.

“அத்த.., உனக்கு எப்படிச் சொல்லன்னு தெரியலை..” தான் எதைத் தேடிச் செல்கிறோம்? அங்கே என்ன நடக்கும் என முடிவே தெரியாத விஷயத்தை தான் தேடிச் செல்ல, என்னவென்று அவர்களிடம் சொல்ல? தயங்கி நின்றான்.

“என்ன மாப்ள.., முக்கியமான யாரையாச்சும் பாக்கணுமா?” அவன் கண்களில், முதல் முறையாகத் தெரிந்த கலக்கத்தில் சிறு சந்தேகம் கொண்டவராக வினவினார்.

அவர் அவ்வாறு கேட்கவே.., தன் எடையை தானே தாங்க முடியாதவனாக, கூடவே கனவின் தாக்கமும் சேர்ந்து கொள்ள, அவர்கள் வீட்டு திண்ணையில் அமர்ந்தவன்,

‘ஆம்..’ என்பதாக தலை அசைத்தவனுக்கு, வார்த்தைகள் வர மறுத்தன.

அவன் நிலையைப் பார்த்து திடுக்கிட்டவர்கள், “செல்வம்.., ராசா, என்னன்னு சொன்னாத்தானே தெரியும். இப்படி இடிஞ்சு போய் உக்காந்தா நாங்க என்னன்னு நினைக்க..?” பாரிஜாதம் சற்று பதறிப் போய் அவன் அருகில் வந்தார்.

“மாப்ள.., எந்த புள்ளையாச்சும் மனசுக்குள்ளே நினைச்சுட்டு இருக்கியா? இப்போ அவளைத்தான் பாக்கப்

போறியா?” அவர் தன் சந்தேகத்தை உறுதிபடுத்திக்கொள்ள முயன்றார்.

“என்ன பேசுதிய..? நம்ம செல்வம் எப்படி..” வேகமாக கணவனிடம் மல்லுகட்டப் போனவர், ‘அங்கே பார்..’ என மனைவியை ஜாடை காட்ட, செல்வத்தை ஏறிட்டார்.

“உன் மாப்பிள்ளையை ஒருத்தி உயிரா விரும்புறா மாமா. ஆனா.., அதை ஏத்துக்க முடியாமல், கோழை மாதிரி ஓடி வந்துட்டேன். நாலு நாளா கண் முழிக்காமல் கிடந்த என்னை வந்து பாத்து.., டாக்ட்டரை வர வைத்து, ஒரு நாள் முழுக்க முழிச்சிருந்து என்னை கவனிச்சுகிட்டா.., ஆனா நான்..” கடைசிநாள் தான் செய்ய செயல் நினைவுக்கு வர தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“என்ன செல்வம் சொல்லுத..? மேலுக்கு முடியாமல் இருந்தியா?” பாரிஜாதம் பதறினார்.

“ஆமா அத்த.., அவ மட்டும் என்னை வந்து பாத்திருக்கலன்னா.., நான் என்னைக்கோ..” அவன் சொல்லும் முன்பு, அவனை அதட்டினார் மாரிமுத்து.

“இப்போ என்ன.., அந்த புள்ளையை பாக்கப் போற அவ்வளவு தானே. ரெண்டு நாள் பொறு.., நாங்களும் சேந்து வாறோம்.., பேசி முடிச்சிடுவோம். உன்னை கவனிச்சிருக்கா.., நாங்க அவளைப் பாக்கணும்” தன் முடிவைச் சொன்னார்.

“நீ நினைக்கிற மாதிரி இல்ல மாமா.., அவ உயரம் தெரியாமல் பேசுற. அவ நினைச்சால், நம்ம ஊரைப்போல் நாலு ஊரையே நிமிஷத்தில் விலைக்கு வாங்குவா. அவளுக்கு நான் இணையே கிடையாது மாமா.

“அவ அழகுக்கும், படிப்புக்கும், வசதிக்கும்.., நான் எப்படி, எந்த விதத்தில் அவங்க அப்பாகிட்டே போய் பொண்ணு கேப்பேன்?” கலங்கிப் போனான்.

“மாப்ள, என்ன பேசுற நீ..? உனக்கு என்னவே குறைச்சல், நிறம் கொஞ்சம் மட்டுனாலும், உன் சோட்டுக்கு இங்கே எவன்லே இருக்கான்? நிலத்தில் பாடுபட்டா அது உனக்கு அள்ளிக் கொடுக்கும். அவளுக்கு நீ செய்ய மாட்டியா?” அவனை கடிந்து கொண்டார்.

“இல்ல மாமா.., நடைமுறை தெரியாமல் நீ பேசுற. அவ பட்டணத்திலேயே பிறந்து வளந்தவ. அவளால் எப்படி இங்கே..” பார்வை தன் நிலத்தில் சுழல, ‘இந்த உயிரோட்டமான இடத்தில் அவள் வேண்டும்..’ மனம் கதறியது.

“செல்வம்.., ஒரு பொண்ணு மனசுக்குள் ஒருத்தன் வந்துட்டா, அது குடிசையோ, கோபுரமோ அவ நிறைவா இருப்பா. அவளால் எல்லாத்தையும் மாத்த முடியும். நீ மனசு விடாதே.., அவளை இங்கே கூட்டி வா.., எனக்கு அவளைப் பாக்கணும்..” அவனை கவனித்துக் கொண்ட அவள்மேல் பாசம் பெருகியது.

மேலும் பல விதங்களில் அவனுக்கு நம்பிக்கை அளிக்க, அவளை அழைத்து வரும் முடிவுக்கு வந்தான். ஆனால்.., அவள் தந்தையிடம் பெண் கேட்கும் தைரியம் வரவில்லை. அது எப்படி சரி வரும் என்பதே அவனது இப்போதைய கேள்வியாக இருந்தது.

அன்றைக்கே அவன் கிளம்ப முயல, அன்று.., அவர்கள் பண்ணையில் இருந்த ஒரு பசுவுக்கு பிரசவ தினமாக மாறிப் போக, அங்கே அவனது இருப்பு அவசியமானதாகப் போய்விட்டது. எனவே அவனால் அன்று சென்னைக்கு செல்ல முடியவில்லை.

ஆனால்.., நினைவு முழுவதும் தான் கண்ட கனவிலேயே உழன்றது. ‘கீர்த்திக்கு ஏதோ ஆபத்து..’ அவன் மனம் விடாமல் புலம்பியது. அவனது கனவில், கீர்த்திக்கு கார் விபத்து ஏற்பட்டதாக கனவு காணவே சற்று பதறிவிட்டான்.

அவளிடம் நேரடியாக பேசவில்லை என்றாலும், அவளுக்கு எதுவுமில்லை என்றாவது தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது. தன் கனவைச் சொல்லி, மற்றவர்களையும் கவலைக்குள்ளாக்க அவன் விரும்பவில்லை.

****அதே நாள்.., முந்தின இரவு.., கீர்த்தியின் வீட்டில்.., அவள் திருமணப் பேச்சை மெதுவாக எடுத்தார் மாணிக்கம். அப்பொழுதே.., "இனிமேல் இதைப்பற்றி நாம பேச வேண்டாம்ப்பா.." அழுத்தமாகவே உரைத்தாள்.

அது சாப்பாட்டு மேஜை என்பதால், சட்டென அவளால் எழுந்து செல்லவும் முடியவில்லை.

"இப்படியே சொன்னால் எப்படிம்மா.., வருஷம் ஒண்ணாகப் போகுது. இன்னும் ஒரு தகவல் கூட இல்லை. நீயும் என்னை கேக்க விடலை. இப்படியே போனால்.., எனக்கு அவன்மேல் அவ்வளவு ஆத்திரம் வருது. இப்போவே போய், அவன் கையைக் காலை கட்டியாவது இங்கே இழுத்துட்டு வரணும்னு..

"அப்படியே அவன் முடியாதுன்னு சொன்னால்.., அப்படியே அவனை.." கையில் இருந்த உணவை அவர் கைகள் அழுத்திப் பிசைய, கீர்த்தியின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி, கூடவே வெறிகொண்ட கோபம்.

ஒரு நொடி கூட யோசிக்காமல், அங்கே பழம் நறுக்க வைத்திருந்த கத்தியை இடக் கரத்தால் எடுத்தவள், அவர்கள் என்னவென்று யோசிக்கும் முன்பே, வலக்கையின் மணிக்கட்டை கீறிக் கொள்ள, அவ்வளவுதான்.., அனைவரும் துடித்துப் போனார்கள்.

"அம்மாடி.." "கீர்த்தி.." "அக்கா.." அனைவரும் அவள் அருகில் வர முயல, அவர்கள் தவிப்பை கொஞ்சம் கூட சட்டைசெய்யாமல்,

"அப்பா, இந்த உலகத்தில் ஏதோ ஒரு மூலையில் என் அன்பு இருக்கான் என்ற ஒரே நம்பிக்கையில் தான் நான் இன்னும்

உயிரோட இருக்கறேன். அப்படி இல்லன்னு எந்த நிமிஷம் தெரிய வருதோ.., அப்போ..” வெறிகொண்டு கேட்டவள், சட்டென கத்தியை தன் கழுத்தில் வைத்துக் கொண்டாள்.

“அம்மாடி.., இல்ல.., இந்த அப்பா எதுவும் சொல்ல மாட்டேன். அப்பாவை மன்னிச்சுடும்மா. கையில் ரத்தம் கொட்டுது பாரும்மா..” அவர் கால்கள் அவளிடம் விரைய பரபரத்தது.

அவரது அழுகையை உணர்ச்சியே இல்லாமல் வெறித்தவள், “இன்னொரு வார்த்தை என் அன்பை பத்தி பேசுனீங்க.., சொல்ல மாட்டேன்.., செய்வேன்..” கழுத்தில் கத்தியை அழுத்த முயல, அனைவரும் வீறிட்டார்கள்.

“கீர்த்தி.., இந்த அம்மா சொல்றேன்.., உனக்கு அன்புதான் மாப்பிளை. முதல்ல காயத்தை காட்டும்மா.., கத்தியை கீழே போடு..” அவளை நெருங்கியவர், அவள் கைகளை பிடிக்க,

“வாசா.., அக்கா கையில் இருந்து கத்தியை வாங்கு..” கூச்சலிட, வேகமாய் அவர் சொன்னதைச் செய்தவன், அவள் கை காயத்தை அழுத்திப் பிடித்தான்.

“அம்மா.., ஹாஸ்பிடல் போய்டலாம். வெயினை நல்லா கட் பண்ணிட்டா..” ரத்தம் விடாமல் வழிய, அங்கே அவ்வளவு பதட்டம்.

அடுத்த அரைமணி நேரத்தில் மருத்துவமனைக்கு செல்ல, சிகிச்சை அளிக்கப் பட்டது. அதற்குள்ளாகவே சற்று ரத்தம் வெளியேறியிருக்க, அன்று இரவு முழுவதும் அவளை அங்கே இருக்கச் சொன்னார்கள்.

மாணிக்கம், சாந்தி, வாசன் அங்கே இருந்த வராண்டாவில், சேரில் இருக்க, உள்ளே அவளை கவனித்துக் கொண்டிருந்தார் மருத்துவர். “நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன்.., அவளுக்குன்னு ஒரு வாழ்க்கை தேடி வரப்போ, நடுவில் புகுந்து நாட்டாமை பண்ணக் கூடாதுன்னு. நீங்க கேக்கவே மாட்டேங்களா?

“அன்னைக்கு நீங்க செய்த பாவம் என் மக இப்படி ஆயிட்டா. இப்போ, உங்க பணத் திமிரால் அவ உயிரையும் குடிக்கணும்னு முடிவு பண்ணிட்டீங்களா? நீங்க எப்போதான் திருந்துவீங்க? என் பொண்ணை பலி கொடுத்த பிறகா..?” அது மருத்துவமனை என்றும் பாராமல் வெடித்தார்.

மாணிக்கத்தால் பதில் பேசவே முடியவில்லை. கொஞ்சம் அழுத்தி பேசினால் மகள் அன்புவிடம் போய் பேச சம்மதிப்பார் என்று நினைத்தாரே தவிர, இப்படி செய்து கொள்வாள் என நினைக்கவில்லையே.

அவருக்குமே, மகள் படும் துன்பம் தீர்ந்துவிட வேண்டுமே என்ற கவலையே தவிர, அவரது செல்ல மகள், செல்வ மகள், தன்னை விட்டுச் செல்வதை அவர் எப்படி தாங்கிக் கொள்வார்?

“சாந்தி.., நீயே இப்படிச் சொன்னால்..?” தன் உயரத்தையும், வயதையும் மீறி, அவர் கண்கள் கலங்கி, கண்ணீர் வந்தே விட்டது.

“நான்தான் சொல்றேன்.., சொல்லுங்க.., உங்க பொண்ணு மனசுக்கு பிடிச்ச வாழ்க்கையை அமைச்சு கொடுக்க முடியலன்னா, உங்ககிட்டே இவ்வளவு பணம் இருந்து என்ன பிரயோஜனம்..?” வெகுண்டெழுந்து விட்டார். மகளது செய்கையை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

“அவ மனசுக்கு பிடிக்காத எதையாவது நான் செய்வேனா? எனக்கு என் பொண்ணோட சந்தோஷம்தான் முக்கியம்.., நான் இப்படி பேசினாலாவது அவ கல்யாணத்துக்கு ஒத்துப்பாளோனு நினைத்தேன்..” பரிதாபமாக கெஞ்சினார்.

“நான் உங்களை நம்ப மாட்டேன். உங்க மனசுக்குள்ளே இருப்பது தானே வெளியே வரும். சும்மா சொல்லத்தான்

செய்தீங்களா? இல்ல..” அவர் பார்வை சந்தேகமாக அவர்மேல் பாய, சுத்தமாக பயந்தே போனார்.

“சாந்தி.., நம்ம பொண்ணு விஷயத்தில் எனக்கு அவ்வளவு தைரியம் பத்தாது..” என்னை நம்பேன் என அவர் பார்வை கெஞ்சியது.

அதில் இருந்த உண்மை புரிய, சற்று அமைதியானார். கூடவே, “இங்கே எல்லாம் சத்தம் போடக் கூடாது..” செவிலியின் குரலில், அப்படியே அமர்ந்துவிட்டார்.

வாசனோ, பெற்றவர்களின் பேச்சையும், அறைக்குள்ளும் ஒரு பார்வை பார்த்தவாறு அமர்ந்திருந்தான். ‘இது எல்லாத்துக்கும் அன்பு மாமா தான் காரணம்’ அவன் மனம் கோபமாக எண்ணிக் கொண்டது.

மருத்துவர் வெளியே வர, “அட்டம்டு சூசைட்.., நியாயப்படி நான் போலீஸ்க்கு சொல்லியிருக்கணும். பட் நீங்க என்பதால் சொல்லலை. கொஞ்சம் பிளட் லாஸ்.., நாளைக்கு நீங்க கூட்டி போகலாம்..” உரைத்தவர் அங்கிருந்து அகன்றுவிட்டார்.

அன்றைய இரவு அவர்களுக்கு அங்கே கழிய, மறுநாள் அவர்கள் வீடு வந்து சேர மதியமாகிவிட்டது. யாரும் கீர்த்தியிடம் எதுவும் பேசவில்லை. அதேபோல் அவளும்..,

***மறுநாள் விடிகாலையிலேயே கிளம்பிவிட்டான் அன்பு. மதியம் சென்னையை அடைய, நேராக அவர்கள் அலுவலகம் சென்றான். அங்கே அவர்கள் இருப்பதற்கான அறிகுறி இல்லை என்பதால், அவர்கள் இருக்கும் வீட்டுப் பக்கம் சென்றான்.

அது சற்று பெரிய ஆட்கள் இருக்கும் ஏரியா என்பதால், இரண்டு மூன்றுமுறை அங்கே நடந்தவனுக்கு அதற்குமேல் முடியவில்லை. சில வீடுகளின் முன்னால் இருந்த கூர்க்காக்களின் பார்வை ஏற்கனவே இவனை சந்தேகமாக அலசிவிட்டது.

பசி வேறு வயிற்றைக் கிள்ள, கீர்த்தியைப் பார்க்காமல் அவனால் உண்ணவும் முடியவில்லை. அவள் அலைபேசிக்கு அழைக்கலாம் என்றால், சுத்தமாக தைரியம் இருக்கவில்லை. அவள் வீட்டுக்குச் செல்லலாம் என்றாலோ, அவளது பெற்றவர்களை என்ன சொல்லி சம்மாளிப்பது என பெரும் கவலையாகப் போயிற்று.

மீண்டும் ஊருக்கே செல்லலாம் என்றால், பார்வையாலாவது அவளை ஒரு நொடி காணாமல், அங்கிருந்து செல்ல மனமில்லை. கிட்டத்தட்ட ஒருமணி நேரமாக போராடியவன், ஒருமணி நேரம் கழித்து மீண்டுமாக வரலாம் என எண்ணியவாறு அவர்கள் தெரு முனையில் இருந்து கிளம்ப முயன்றான்.

சரியாக அதே நேரம்.., பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான் வாசன். சற்று தூரத்திலேயே அவன் அன்பை கவனித்துவிட்டான். கிட்டத்தட்ட ஒரு வருடத்துக்கு முன்னர் பார்த்திருந்தாலும், மறக்கும் ஆளா அவன்?

ஒரு வருடத்துக்கு முன்பு, சற்று மெலிந்து, ஒரு சாதாரண ஆளாக இருந்தவன், ஒரு வருடத்தில், அவரது ஊட்டத்தால், ஒரு சுற்று உடல் தெளிந்து, உழைப்பின் உபயத்தால் முறுக்கேறி, முகத்தில் ஒரு தெளிவு இருக்கக் கண்டான்.

சிறு முறைப்போடு அவன் எதிரில் வந்து சைக்கிளை நிறுத்த, தன் நினைவுகளில் இருந்து மீண்டவன் அப்பொழுதுதான் வாசனைப் பார்த்தான். சட்டென முகம் பிரகாசமாக, அதை இதழ்வழியே புன்னகையாய் தவழவிட்டான்.

வாசனுக்கோ, நேற்று முன்தினம் இரவில் கீர்த்தி செய்து வைத்த செயலின் தாக்கம், சுள்ளென கோபம் பெருகியது. “எங்கே வந்தீங்க..? இங்கே என்ன பண்றீங்க?” சுள்ளென கேட்டான்.

அவன் இப்படி கேட்பான் என எதிர்பாராத அன்பு சற்று திகைத்துப் போனான். ‘என்னவென்று சொல்வான்..? என்னவென்று சொல்ல? உன் அக்காவைக் காண வந்தேன் என்று அவள் தம்பியிடம் சொல்ல முடியுமா என்ன?’ தடுமாறிப் போனான்.

‘கீர்த்தியின் நலம் அறிந்தே ஆக வேண்டும்.., மனம் முரண்ட, அவனது கேள்வியை அசட்டை செய்தான். ஆனாலும், வாசனின் கோபமும் அலட்சியமும் அவனை வருத்தவே செய்தது.

‘சின்னப்பையன்.., இவனே இப்படின்னா.., இவங்க அம்மா அப்பா..’ எண்ணியவன், “கேக்குறது உங்க காதில் விழுகுதா இல்லையா?” அவனது அடுத்த கேள்வியில் தெளிந்தான்.

முடிவெடுத்துவிட்டான்.., அவள் வாழ்க்கையின் ஒரு அங்கமாக முடியாவிட்டாலும், ஒரு தோழனாக, நலம் விரும்பியாக அவளைப் பார்க்கலாமே எண்ணியவன், “உங்க அக்கா எப்படி இருக்கா?” தைரியமாகவே கேட்டான்.

‘அவ எப்படி இருந்தால் உங்களுக்கு என்ன..?’ கோபமாக கேட்க எண்ணியவன், தன் அக்காவுக்காக, அவளது காத்திருப்புக்காக, இவன் வருவான் என்ற நம்பிக்கைக்காக, மொத்தத்தில் அவளுக்காக தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

“இன்னும் உயிரோடதான் இருக்கா போதுமா..?” ஏனோ அவள் நிலை அவனுக்குத் தெரிய வேண்டும் என ஒரு வேகம்.., சொல்லிவிட்டு, சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

அன்பு நிலை குலைந்து போனான். ‘என் கனவு நிஜமாகிவிட்டதா?’ பதறியவன், ஒரே எட்டில் அவனை அடைந்தான்.

“அக்காவுக்கு என்ன ஆச்சு..?” சத்தியமாக அன்புவிடம் அப்படி ஒரு கோபத்தை, பதட்டத்தை அவன்

எதிர்பார்க்கவில்லை.

“எனக்குத் தெரியாது.., வேண்டும்னா வந்து தெரிஞ்சுக்கோங்க..” சொல்லிவிட்டு, அவனைத் தாண்டி சென்றுவிட்டான். ‘ஒரு வேளை, நான் பார்க்கவில்லை என்றால் அப்படியே சென்றிருப்பாரோ..?’ அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதற்குமேல் எதையும் யோசிக்கவில்லை. அவன் பின்னால் சென்றவன், கீர்த்தியின் வீட்டு வாசலை மிதிக்கையில், அங்கே அவன் இருக்கவில்லை.

அவன் அழைப்புமணியில் கை வைத்து அழுத்த, வேகமாக வந்தார் சாந்தி. “வணக்கம்.., நான்.., அன்பு.., உங்களுக்கு ஞாபகம் இருக்கா?” சற்று தயங்கினாலும் தைரியமாகவே கேட்டான்.

‘உன்னை மறப்பதா..?’ உள்ளுக்குள் வேதனையாக எண்ணிக் கொண்டவர், “வாப்பா.., உள்ளே வா..” தன் பரபரப்பை காட்டாமல் நிதானமாகவே அழைத்தார்.

உள்ளே வந்து சோபாவில் அமர்ந்தவனது பார்வை மாடியை வேகமாய் அலசியது. ‘எங்காவது அவள் முகம் தெரிகிறதா?’ மனம் தவித்தது.

“என்ன குடிக்கற..?” அவனிடம் கேட்டவர், உள்ளே குரல் கொடுத்து முதலில் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி அவனிடம் கொடுத்தார்.

மாணிக்கத்துக்கோ அவன் வந்ததை எண்ணி ஒரு பக்கம் சந்தோசம் என்றால், மகளை இப்படி தவிக்க விடுகிறானே என ஆத்திரமாக வந்தது.

“என்னப்பா.., உன்னை ரொம்ப நாளா ஆளையே காணோம்? எந்த ஊர் நீ? என்ன பண்ற..?” அவருக்கு தெரிந்தே ஆக வேண்டும். தெரிந்த விஷயம் என்றாலும், அவன் வாயால் கேட்க வேண்டும். இன்னொருமுறை அவன்

காற்றில் காணாமல் போவதை அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

“நான் என் சொந்த ஊரே போயிட்டேன். தஞ்சை பக்கம் தான், விவசாயம் பண்றேன்...” தன் ஊர், அத்தை, மாமா, உறவு, பெற்றவர்கள் என அனைத்தையும் மறைக்காமல் சொன்னான். அவரிடம் மறைக்க என்ன இருக்கிறது?

பேச்சு அவரிடம் என்றாலும், தன் குரலைக் கேட்டு வந்துவிட மாட்டாளா? ஒரு மனம் தவித்தது. தாங்கள் பேசுவது அவளுக்கு கேட்காது என்பதெல்லாம் அப்பொழுது நினைவுக்கு வரவே இல்லை.

அவன் பரபரப்பை உணர்ந்தாலும், அதை கண்டுகொள்ளவே இல்லை. எதுவாக இருந்தாலும் அவன் வாயில் இருந்து வரட்டும்..’ அமைதியாகவே அமர்ந்து கொண்டார்.

வேலைக்காரம்மா கொண்டு வந்த தண்ணீரை வாங்கிக் குடித்தவன், “கீர்த்தி எப்படி இருக்காங்க? நான் அவங்களை பாக்கலாமா..?” தைரியமாகவே கேட்டான். அவன் என்ன பெண்ணா கேட்கிறான் பயப்பட?

“கீர்த்தி.., அவளுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை.., படியில் இறங்கி வரது..” அவர் வார்த்தையை முடிக்கும் முன்பே,

“நான் மேலே போய் பாத்துக்கறேன்..” சட்டென எழுந்தே விட்டான்.

அவன் பரபரப்பையும், பதட்டத்தையும் குறித்துக் கொண்டாலும், ‘இவனுக்கு யார் சொல்லியிருப்பா? வாசன் கூட போன் ரீச் ஆகலைன்னு சொன்னானே. இதுதான் காதலா..? அவளுக்கு ஒன்று என்றவுடன் இவனுக்கு தெரிகிறதா?’ உள்ளுக்குள் எண்ணிக் கொண்டார்.

அவர் என்ன நினைப்பார்.., என்பதெல்லாம் அப்பொழுது ஓடவே இல்லை. கீர்த்தி.., கீர்த்தி மட்டுமே அவனை ஆக்கிரமித்தாள்.

“ஒரு நிமிஷம்..” உரைத்தவர், “வாசன்..” குரல் கொடுக்க, மேலே இருந்து, தன் யூனிபாமை கழட்டாமலே, ஒரு முறைப்போடு இறங்கி வந்தான்.

“சொல்லுங்கம்மா..” தாயின் அருகில் செல்ல,

“இவருக்கு அக்கா ரூமை காட்டு..” அவர் உரைக்க, ‘வா..’ என்ற பார்வையோடு முன்னால் நடந்தான்.

இப்படி ஒரு சூழலில், தான் கேட்டவுடன், ஒரு வயதுப் பெண்ணின் அறைக்கு தன்னை எப்படி அனுப்புகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சிந்தை செல்லவே இல்லை. அவனுக்கு கீர்த்தியை பார்த்தால் மட்டும் போதும், அவ்வளவுதான்..,

மாடியில், கீர்த்தியின் அறைக்கு முன்பாக வந்து நின்றவன், “இதுதான்..” சொல்லிவிட்டு என் கடமை முடிந்தது எனக் கிளம்பிவிட்டான்.

அவளுக்கு என்னவோ.., ஏதோ.., என மனம் பதைக்க, கதவுக் குமிழைத் திருகி, கதவைத் திறந்து, “கீர்த்தி..” மெல்லிய அழைப்போடு உள்ளே பிரவேசித்தான்.

பார்வைக்கு நேராக கட்டில் இருக்க, அதைப் பார்த்தவனால், பார்வையை வேறு எங்கும் திருப்ப முடியவில்லை. கட்டிலில் அவனைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் கீர்த்தி.

“கீர்த்தி..” அவன் மீண்டுமாக அழைக்க, “அன்பு..” சந்தோசம் குமிழியிட அழைத்தவள், நம்ப முடியாமல், இமை கொட்டி, விழி விரித்து அவனைப் பார்த்தாள். தன் படுக்கையில் இருந்து எழுந்து, அவனை நோக்கி பாய்ந்தோடினாள்.

அடுத்த நிமிடம், அவனைத் தாவி அணைத்தவள், அவன் முகம் முழுக்க முத்தமிட்டாள். அழுகையில் அவள் தேகம் குலுங்க, கண்ணீரோடு சேர்த்து, அவன் முகம் ஈரத்தால் பளபளத்தது. அவள் கரங்கள் இரண்டும் அவன் சிகைக்குள் அலைய, அவன் தோள் தொட்டு, முதுகை வருடி, ஆவேசமாக தன் நேசத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

*****

# பகுதி – 18.

தன் முன்னால் அமர்ந்திருந்த கீர்த்தியை இமைக்க மறந்து வெறித்தான் அன்பு. அவன் கண்கள் இரண்டும், அவள் தலைமுதல் பாதம் வரை பயணிக்க, கண்கள் அவள் கைக் கட்டில் நிலைத்தது.

‘இதென்ன கட்டு.., எப்படி..? ஏதாவது விபரீதமாக செய்துவிட்டாளா?’ எண்ணங்கள் சுழல, பார்வையை அவள்மேல் இருந்து திருப்பவில்லை.

கீர்த்தியோ.., அவனைக் கண்ட வேகத்தில்.., தன் மனதில் எழுந்த தாக்கத்தில் இருந்து வெளியே வர முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

அவனைக் கண்ட நிமிடம், அவனைத் தாவி அணைத்து, அவன் முகம் முழுக்க முத்தமிட்டத் துடித்தாள். அழுகையில் அவள் தேகம் குலுங்க, கண்ணீரோடு சேர்த்து, அவன் முகம் ஈரத்தால் பளபளத்துதான் போயிருக்கும். அவள் கரங்கள் இரண்டும் அவன் சிகைக்குள் அலைய, அவன் தோள் தொட்டு, முதுகை வருடி, ஆவேசமாக தன் நேசத்தை வெளிப்படுத்த தவித்துக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

ஆனால்.., தன் சிந்தையின் வேகத்தில், ஒரு விஷயத்தை கூட தன்னால் செய்ய முடியாத நிலை, இயலாமை.., அழுகை வெடித்துக் கிளம்பியது. அதென்னவோ ஒரு ஆண்மகனால் வெகு எளிதாக தன் உணர்வுகளின் தாக்கத்தை ஒரு பெண்ணிடம் வெளிப்படுத்திவிட முடியும்.

ஆனால், ஒரு பெண்ணால் அதை செய்ய முடியாது. அவள் சிந்தைகளில் மட்டுமே அதை நிறைவேற்ற முடியும். பார்வையில் கூட தன் ஆசையை வெளிப்படுத்த முடியாது. அப்படி வெளிப்படுத்தினால், எனக்கு நீ வேண்டும் என ஒரு பெண் சொன்னால், வெகு எளிதாக ‘அலைகிறாள்’ என அவளை வார்த்தையால் அடித்து வீழ்த்திவிட முடியும்.

ஒரு ஆண்மகனுக்கு உணர்வுகள் வெடித்தால் அது காதல், அதுவே ஒரு பெண்ணுக்கு உணர்வுகள் வெடித்தால் அது காமம்.., சமுதாயத்தின் பார்வை.., வெட்கப்பட வேண்டும். உணர்வுகள் என்பது இருவருக்கும் பொதுவல்லவா.

தன் நேசத்தை இதழ் முத்தத்தால் வெளிப்படுத்த கூட இயலாத ஒரு பெண்ணின் நிலை.., மாற வேண்டியது ஆண்களா? இல்லை சமுதாயமா? கட்டிய கணவனிடம் கூட தன் தேவையை வெளிப்படுத்த முடியாமல் கோடிக்கணக்கான பெண்கள் இங்கே இருக்கையில், காதலை கூட சொல்லாத கீர்த்தியின் நிலை..

அதே நேரம்.., அன்று.., காதலைச் சொல்லாத நேரத்திலும், தன்னைத் தழுவி, தன் நேசத்தை உணர்த்திய அன்புவின் செய்கை.., அடிமனதை அசைத்துதான் பார்த்தது. இங்கே ஆணும் பெண்ணும் சமம் இல்லை.., அப்படி இருந்திருந்தால், இவ்வளவு நேரமாக அவள் மனதுக்குள் உலா போன உணர்வுகளை அவள் கொட்டியிருப்பாளே.

மனதுக்கு நெருக்கமானவனிடம் கூட மனதைத் திறந்து காட்ட முடியாத நிலை. ‘அன்றுபோல் இன்றும் அவன் ஒட்டிகொண்டால் பரவாயில்லை’ அவளால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. ஒரு பெண்ணான அவளுக்கு நினைக்க மட்டுமே முடியும்.., படுக்கையை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

‘அவனோடு ஒட்டிக்கொள்ள வேண்டும்.., அவன் வேண்டும்..’ உள்மனம் ஓலமிட, தன் படுக்கையில் இருந்து அசையக் கூட செய்யாமல் அவனை வெறித்தாள்.

கண்களின் கண்ணீர் பார்வையை மறைக்க, தன்னவனை அசையாமல் பார்த்தாள். கிட்டத்தட்ட ஒரு வருடம்.., ஒரு தொலைபேசி அழைப்பு கூட இல்லாமல், தன் நெருக்கத்தை, உணர்வுகளை, நொடிகளுக்குள் தன்னிடம் கொட்டிவிட்டு மாயமான அவன் செய்கை.., துக்கம் பெருகியது.

எத்தனை இரவுகள்.., தூங்காமல் கொள்ளைபோன எத்தனை இரவுகள். அவன் என்னவோ தன்னிடம் உணர்வுகளை கொட்டிவிட்டு விலகிச் சென்றுவிட்டான். ஆனால்.., அதை தாங்கிக் கொண்டவள் அவள் அல்லவா. அவள் மனநிலை அவனுக்கு எப்படி புரியும்?

அவன் செய்கையை அவள் என்னவென்று மொழி பெயர்த்துக் கொள்ள.., அவ்வளவு நாள் தனிமையில் அனுபவித்த துயர், அடக்கி வைத்திருந்த காதல், அதை உணர்ந்தும் உணர மறுத்துச் சென்ற அவன் செய்கை.., அவளால் தாங்க முடியவில்லை.

அதைவிட, அவன் முன்னால் அழுதுவிடுவோமோ என்ற பயம்.., தன்னை கட்டுப்படுத்த முடியாத விதம், கோபமாக உருமாற, அவனை கண்களால் முறைத்தாள்.

அவள் கண்களில் அவ்வளவு நேரமாக, கலவையாக வந்துபோன உணர்வுகளை விழி விரிய பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் கண்களில் கோபத்தைப் பார்க்கவே, “கீர்த்தி..” மென்மையாக அழைக்க, விருட்டென படுக்கையில் இருந்து எழுந்தாள்.

“யார் நீ..? என் ரூமுக்குள் நீ என்ன பண்ற..? ஒரு பொண்ணோட ரூமுக்குள் இப்படித்தான் பெர்மிஷன் இல்லாமல் வருவியா..? போ வெளியே..” அவள் குரல் அவ்வளவு உயர்ந்து ஒலித்து அங்கே யாருமே கேட்டதில்லை.

அன்பு அவள் வார்த்தைகளால் கொஞ்சம் கூட பாதிக்கப் படவில்லை. அவள் இதழ்கள் உரைப்பது அப்பட்டமான பொய்யென்று அவள் கண்கள் மொழி பெயர்க்கிறதே. அந்த பொய் அவ்வளவு தித்திப்பாய் இறங்கியது.

“காந்தாரி.., உனக்கு இன்னும் அந்த கோபம் மட்டும் போகவே இல்லை..” இதழசைவில் அவன் உரைக்க, அவனது காந்தாரி வார்த்தயை மட்டுமே அவள்

கவனித்தாள். கண்ணீர் பார்வையை மறைக்க, மீதி தெரியவில்லை.

பொதுவாகவே குரல் உயர்த்திப் பேசுவது அவளுக்குப் பிடிக்காது. தன் தந்தையிடம் தன் கோபத்தை காட்டுவதற்காக மட்டுமே கோபமாக பேசுவாள். அது கூட கத்தி கூச்சல் போட மாட்டாள். ஆனால் இன்று.., தன்னையும் மீறி வெடித்தவள், அவன் கை பிடித்து இழுத்து அறைக்கு வெளியே கிட்டத்தட்ட தள்ளினாள்.

அவன் நினைத்திருந்தால் அவளை வெகு சாதாரணமாக தடுத்திருக்க முடியும். ஆனால், அதை அவன் செய்யவில்லை. அவள் அறையிலிருந்து வெளியே தள்ள, சற்று தள்ளாடி வெளியே வந்து நின்றான்.

“போ.., இங்கே எதுக்கு வந்த..? உன்னை யாரும் இங்கே தேடலை.., போ.., என் கண் முன்னாடி நிக்காதே போ..” ஆத்திரமாக கத்தியவள், கதவை அறைந்து சாத்தினாள்.

அவளது குரலில், மாணிக்கம், சாந்தி இருவரும் கீழே இருந்து மேலே எட்டிப் பார்க்க, வாசன் தன் அறையில் இருந்து வேகமாக வெளியே வந்து பார்த்தான்.

ஏனோ அவனுக்கு அவ்வளவு சந்தோசமாக இருந்தது. அக்காவின் காயத்துக்கு இந்த மாற்றம் கொஞ்சமாவது ஆறுதலாக இருக்கும் அவன் எண்ணினான். அதே நேரம், அவன் அன்புவை வெளியே செல்லச் சொல்லவில்லை. அமைதியாக அவனைப் பார்த்திருந்தான்.

வாசனின் பார்வை தன்மேல் விழுந்தாலும், அதைப் பற்றி சிறிதும் அலட்டிக் கொள்ளவே இல்லை. அங்கே இருந்து சென்றுவிட அவன் விரும்பவும் இல்லை. அமைதியாக வந்தவன், அவள் அறைக்கு எதிரே, மாடிப்படியின் கைப்பிடி கம்பியில் சாய்ந்தவாறு தரையில் அமர்ந்துவிட்டான்.

வாசன் சற்று திடுக்கிட்டு போனான். அன்புவின் முகத்தில் கவிழ்ந்திருந்த சோர்வு, வேதனை அவனை சற்று

அசைத்துதான் பார்த்தது. தன் அக்காவின் கண்களில் பார்த்த அதே வேதனைக்கு சற்றும் குறையாமல் அவன் வலியும் இருக்க, அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

வாசன் வேகமாக படிகளில் இறங்க, “என் பொண்ணே அவனை வெளியே போகச் சொல்லிட்டா. இன்னும் ஏன் அவன் அங்கே இருக்கிறான்.., போக வேண்டியது தானே..” கோபத்தில் பொருமினார் மாணிக்கம்.

நிச்சயம் தன் மகள் முடிவாக அதைச் சொல்லியிருப்பாள் என அவர் நம்பவில்லை. கோபத்தில் சொல்லிவிட்டாள், இன்னும் ஏன் அவன் இருக்க வேண்டும் என்பது அவரது எண்ணம்.

“ஏன்.., நீங்க போய் வெளியே போகச் சொல்றது..?” ‘சொல்லித்தான் பாரேன்’ என்ற விதத்தில், சாந்தி நக்கலாக குரல் கொடுக்க, வாசன் பக்கென சிரித்துவிட்டான்.

“சாந்தி..” அவர் பரிதாபமாக அழைக்க,

“அதான் மககிட்டே ஒண்ணும் பண்ண முடியாதுன்னு தெரியுதில்ல, பிறகு எதுக்கு இந்த வெட்டி ஜம்பம்..?” நொடித்துக் கொண்டார்.

“அவன் என்னடா சொல்றான்..?” மாணிக்கம் மகனிடம் கேட்க,

“யாரை கேக்கறீங்க..? கொஞ்சம் மரியாதை கொடுக்க பழகுங்க..” சாந்தி கோபமாக இடையிட்டார்.

“நான் இங்கே கூட பேசக் கூடாதா?”.

“கூடாது.., இங்கே பேசுறதுதான் அங்கேயும் வரும்..” கட்டளையாக உரைக்க, சட்டென அடங்கிப் போனார்.

“அவர் என்னடா சொல்றார்..?” தன்னை திருத்திக் கொள்ள, தன்னை கேலி செய்கிறாரோ என கணவனைத் திரும்பிப் பார்த்தார். ஆனால், அதில் உண்மை மட்டுமே இருக்க அமைதியானார்.

“அக்கா கோபமா திட்டினதுக்கு கூட மாமா எதுவுமே சொல்லலப்பா. அக்கா ரூம் வாசலைப் பாத்தபடியே உக்காந்துட்டார். ரொம்ப டயடா தெரியறார்” தான் பார்த்ததை உரைத்தான்.

“ஒரு வேளை மதியம் சாப்பிட்டிருக்க மாட்டாரோ..?” தனக்குத் தானே கேட்டுக்கொண்ட சாந்தி, “செவ்வந்தி கிட்டே ஜூஸ் போட்டு எடுத்துட்டு போகச் சொல்றேன்.., நீ போ..” உரைத்தவர் கிச்சனுக்குச் செல்ல, அவர் பின்னால் சென்றார் மாணிக்கம்.

“சாந்தி.., நீ முடிவே பண்ணிட்டியா..?” மெதுவாக அவர் காதைக் கடித்தார்.

“உங்க பொண்ணுகிட்டே வேண்ணா கன்ஃபாம் பண்ணிட்டு சொல்லவா..?” முறைப்பாக கேட்க, சட்டென அடங்கிவிட்டார்.

செவ்வந்தி ஜூஸ் கொண்டு சென்ற பிறகு, அறைக்கு வந்தவர்கள், “ஏங்க, இன்னுமா உங்களால் அவரை மாப்பிள்ளையா பாக்க முடியலை? அவருக்கு என்ன குறைச்சல்? அன்னைக்கு பார்த்ததை விட, நிறம் கூட இப்போ பரவாயில்லை.

“நீங்க கட்டடம் கட்டுற மாதிரி, அவர் விவசாயம் பண்றார் அவ்வளவுதானே. இதில் அவ்வளவு பிடிக்காமல் போக என்ன இருக்கு?” மகளது விருப்பம் எதுவாக இருந்தாலும் நிறைவேற்றும் கணவர், இதற்கு மட்டும் குறுக்கே நிற்பதேன்? அவருக்கு புரியவே இல்லை.

“அவ.., நம்மளோட சென்னையில் இருந்தால் பரவாயில்லை. இங்கே இருந்து தஞ்சைன்னா.., உன்னால் அவளை விட்டுட்டு இருக்க முடியுமா? என்னால் அவளைப்

பார்க்காமல் ஒரு நாள் கூட இருக்க முடியாது. அதோட, அது கிராமம்.., அங்கே எப்படி இவ இருப்பா?

“இவளுக்கு விவசாயத்தை பற்றி என்ன தெரியும்? பார்க், பீச்.., மால்.., தியேட்டர்.., இப்படி எதுவும் இல்லாமல்.., ஒரு சூப்பர் மார்க்கெட் போகணும்னா கூட பத்து கிலோமீட்டர் போகணும்.., இதெல்லாம் அவளால் எப்படி சம்மாளிக்க முடியும்?” அவர் குரலில் அவ்வளவு கவலை.

தன் கணவனின் மறுப்புக்குப் பின்னால் இப்படி ஒரு விஷயம் இருப்பதை அப்பொழுதுதான் புரிந்து கொண்டவருக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“நீங்க சொன்னதையெல்லாம் உங்க பொண்ணு ஒரு நாளாவது என்ஜாய் பண்ணியிருக்காளா?” சாந்தி கேட்க அவரால் அந்த உண்மைக்கு பதில் கொடுக்கத்தான் முடியவில்லை.

கணவன் பதில் சொல்லாமல் போகவே, “அப்போ ஒண்ணு பண்ணுங்க.., ஒரு பத்து பதினஞ்சு நாள்.., அவளை அங்கே கிராமத்துக்கு அனுப்பி வைங்க.., அவளே முடிவு பண்ணட்டும்” வெகு சாதாரணமாக உரைக்க, அதிர்ந்துபோய் மனைவியைப் பார்த்தார்.

“ஏய்.., என்னநீ.., விளையாடுறியா..?” கோபமாகவே கேட்டார்.

சட்டென அழுதுவிட்டவர், “நம்ம பொண்ணு மனசுக்குள்ளேயே புழுங்குறதை என்னால் பாக்க முடியலங்க. ரெண்டு நாள் முன்னாடி உயிரையே விடுற அளவுக்கு போய்ட்டா. அதிலேயே உங்களுக்குத் தெரியலையா.., அவ அவரை எவ்வளவு தேடுறான்னு..

“இப்போ கூட அந்த தம்பி அவளை பொண்ணு கேக்க வந்த மாதிரி தெரியலை. அவர் மனசுக்குள்ளும் அவ மேலே நினைப்பு இருக்கு. ஆனா, அதை எப்படி சொல்லன்னு தெரியாமல் தவிக்கிற மாதிரி இருக்கு.

“இதுக்கு நாம ஒரு முடிவு எடுக்கலன்னா.., நம்ம பொண்ணு நிலைமைதான் இன்னும் மோசம் ஆகும். அப்படி இருக்கையில், என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க?” பொதுவாக தைரியமாக இருக்கும் மனைவியே கண்ணீர் விட, தவித்துப் போனார்.

“சாந்தி, அழாதே.., இப்போ நாம அதைப் பத்தி பேச போனா கூட, அதுக்கு கீர்த்தி விட மாட்டாளே, என்ன செய்ய?” மகளைப் பற்றி மனைவி இவ்வளவு சொன்ன பிறகு, அவர் மறுப்பாரா? அதுவும் அவளுக்காக என்னும்போது உயிரையே கொடுப்பவர் ஆயிற்றே.

“தெரியலங்க.., ரொம்ப ஈசியா சொல்லிட்டேன் ஆனா.., அவர் இப்போ அவளை இப்படியே விட்டுப் போனால், நம்ம பொண்ணு நமக்கு இல்லை.., என்னால் அதை மட்டும் உறுதியா சொல்ல முடியும்” மகளது நிலை அவரை இவ்வாறு பேசத் தூண்டியது.

“ஏன் இப்படி பயம் காட்டுற..?” மாணிக்கம் பதற,

“நான் பொய் சொல்றேன்னு நினைக்கறீங்களா? அவ அவரை ரொம்ப தேடறாங்க. புரிஞ்சுகோங்க..” இதற்குமேல் அவரால் எதையும் சொல்ல முடியவில்லை.

காதலுக்கு சம்மதம் வாங்கிவிட்டு, தங்கள் கையை கட்டி வைத்திருக்கும் மகள்.., காதலுக்கு எதிரி வெளியே என்றால் போராடலாம்.., அவளே எதிராக இருக்கையில் யாரிடம் போராட.., அவர்களுக்குத் தெரியவில்லை.

இங்கே இவர்கள் மகளுக்காக போராட, அவளோ.., உள்ளே கதறிக் கொண்ருந்தாள். ஒரு பக்கம் அவன் வந்துவிட்டது மகிழ்ச்சிஎன்றால், அன்று அவ்வளவு உரிமையாக இதழ் தீண்டியவன், இன்று விலகி நிற்பது அதைவிட வேதனையாக இருந்தது.

‘அப்படியென்றால் அது ஒரு வேகத்தில் நேர்ந்த நிகழ்வா..? அவர் மனதுக்குள் நான் இருப்பதால்.., உரிமையால்

விளைந்த செயல் இல்லையா?’ வேதனை நெஞ்சை அறுத்தது.

அவன் இன்று விலகி நிற்கையில், தன் உள்ளக் கொதிப்பில் அவனை நெருங்கியிருந்தால் என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பான்?’ புழுவாய் தவித்தாள்.

கூடவே.., நான் போ என்று சொன்னவுடன் போய்விட்டானா? நினைக்கையிலேயே நெஞ்சம் விம்மியது. அவனை வெளியே போகச் சொல்லி, வெளியே தள்ளிய பொழுது, கொஞ்சமாவது மறுப்பான் என அவள் எதிர்பார்க்க, அவன் அமைதியாகச் சென்றது அதிகமாக வலித்தது.

‘இப்படி விலகிப் போகவா என்னைப் பார்க்க வந்தான்..?’ உள்ளம் குமுறியது.

கால்மணி நேரம், அரைமணி நேரம்.., ஒருமணி நேரம் கடந்த பிறகும் தன் அறைக்கதவு திறக்கப் படாததில் ஓய்ந்தே போனாள். அழுகை முட்டியது. ‘போய்விட்டானா..?’ என ஒரு நொடி கலங்கிய மனம், ‘போகட்டும், எனக்கென்ன’ என ஒரு பக்கம் முறுக்கிக் கொள்ள, ‘போயே விட்டானா?’ மறு பக்கம் தவித்துப் போனது.

இந்த ஒரு வருடமாக ஏதோ ஒரு காரணத்தை தனக்குத் தானே சொல்லி தேறிக் கொண்டவளுக்கு, அவனது இந்த விலகலை தாங்க முடியவில்லை.

‘முழுதாக அவன் முகத்தை காணக் கூட இல்லையே..’ வெட்கமே இல்லாமல் மனம் புலம்பியது. அவன் வெளியே அமைந்திருப்பது அவளுக்குத் தெரியாதே.

வெளியே அமர்ந்திருந்தவனோ, தனக்கு ஜூஸ் அளிக்கப்பட, மறுக்காமல் வாங்கிக் குடித்தான். உழைப்பும், உழைப்புக்கேற்ற உணவுமாக வாழ்பவன் அவன். பசி ஏற்கனவே காதை அடைக்க, எங்கே தலைசுற்றிப் போவோமோ என பயந்தான்.

அதைவிட, கீர்த்தியின் கண்களில் தெரிந்த காதலும், அதை மீறிய கோபமும், அவள் செய்கையும்.., அவன் முன்னால் நிழலாடியது. அவளிடம் முறையாக சொல்லிக் கொள்ளாமல், அங்கிருந்து ஒரு நொடி கூட தன்னால் நகர முடியும் என்றே தோன்றவில்லை.

அவளிடம் பேசவும், பிறகு எழுந்து நடக்கவும் அவனுக்கு தெம்பு வேண்டும். எனவே மறுக்காமல் குடித்தான். அவளது பெற்றவர்கள், தம்பி இவர்களைப் பற்றி நினைக்க முடியாத அளவுக்கு மூளை முழுவதும் கீர்த்தியின் நினைவே ஆக்கிரமித்தது.

கிட்டத்தட்ட இரண்டுமணி நேரம் கடக்கப் போகையில், அதற்குமேல் அறைக்குள் இருக்கவே முடியாமல் மூச்சு முட்ட, அந்த நினைவுகளை தாள முடியாமல், அறைக்கதவை வேகமாகத் திறந்து வெளியேறினாள்.

அறைக்கதவு திறக்கப்படவே.., வேகமாக அவன் எழுந்து நிற்க, அவனை அங்கே அப்படி ஒரு நிலையில் எதிர்பாராத கீர்த்தி திகைத்துப் போனாள்.

‘ஏன் கீழே உக்காந்து இருக்கிறான்..?’ மனம் பாகாய் உருக, கூடவே, அவன் தனக்காக காத்திருந்ததில் சந்தோசம் குமிழியிட, ஒரு வருடமாக தன்னைக் காண வரவில்லையே என்ற கோபமும் சேர, ஆத்திரமாக அவனை நெருங்கியவள், சரமாரியாக அவனை அடித்தாள்.

அவள் அடிகள் அனைத்தையும் சுகமாய் தாங்கிக் கொண்டவன், அவளை பெயருக்கு கூட தடுக்கவில்லை.

“ஏண்டா.., ஏண்டா இப்படி பண்ற..? போன்னு சொன்னது உனக்கு கேக்கலையா?” அடிகளுக்கு இடையில் அவள் விடாமல் புலம்ப, இதழில் உறைந்த புன்னகையும், விழுங்கும் பார்வையுமாய் அவளையே பார்த்திருந்தான்.

ஆனமட்டும் அடித்து ஓய்ந்தவள், கீழே அங்கே அனைவரும் குழுமியிருப்பது தெரிய, வேகமாக அவன் கரம் பிடித்து

இழுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள். அப்பொழுதும் அவள் இழுப்புக்கு சென்றானே தவிர மறுக்கவில்லை.

“எதுக்கு இப்போ வந்திருக்க? என்னைப் பாத்துட்டு போகவா? அப்படின்னா நான் ரொம்ப நல்லா இருக்கேன் போதுமா..?” அவன் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசாதது அவளுக்கு வருத்தமாக இருந்தது.

அப்பொழுதும் அசையாமல் இருந்தவன், சட்டென அவள் வலக்கரத்தைப் பற்றி, அதில் போட்டிருந்த கட்டை பார்வையால் வருடி, அவளை அழுத்தமாக ஏறிட்டான். முகத்திலோ அவ்வளவு வருத்தம்.

“இதென்ன கீர்த்தி..?” முதல் முறையாக அவள் பெயரைச் சொல்லி அழைக்கிறான். அந்த நேரத்திலும் அது மூளையை எட்ட, தன் பயித்தியக்காரக் காதலை என்ன செய்வது என்றே அவளுக்குத் தெரியவில்லை.

“ரொம்ப ஈசியா கேட்டுட்ட.., ஆனா அதுக்கு பதில் சொல்வது அவ்வளவு ஈசி கிடையாது. ஒரு பொண்ணால் எந்த நேரத்திலும் மனசுக்குள் இருப்பதை வெளிப்படையா செய்ய முடியாது.., சொல்ல முடியாது.., நாங்கல்லாம் பாவிங்க..” அவள் குரலில் அவ்வளவு ஆதங்கம்.

அவன் அவள் கையை விடாமல், அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, “ஒரு ஆம்பளையால் சட்டுன்னு ஒரு நிமிஷத்தில் எல்லாத்தையும் கொட்டிட முடியும். ஆனா ஒரு பொண்ணால்.., மனசுக்குள் கூட, சுதந்திரமா யோசிக்க, செய்ய முடியாது..” அவனை தழுவிகொள்ளச் சொல்லி கைகளும், மனமும் பரபரக்க, அதைச் செய்ய முடியாத சூழலை அவள் அறவே வெறுத்தாள்.

அவள் குரலில் இருந்த வருத்தம் அவனைச் சுட, கூடவே.., அவள் சொல்வதன் அர்த்தமும், அவள் பார்வையில் இருக்கும் தவிப்பும் புரிய, அவனுக்கு ஒரு நொடி என்ன செய்வது என்றே தெரியவில்லை.

இங்கே வரும் முன்னர், அவளுக்கு தோழனாக ஒரு பார்வை பார்த்துச் செல்லலாம் என எண்ணியிருக்க, அவள் காதலின் அளவில் மெய் மறந்து, அவள் காலடியில் சுருண்டு விழும் மனதையும், அவள் காதலில் கைதியாகும் வேட்கையையும் அவன் என்ன செய்து தவிர்க்க?

“கீர்த்தி.., கீர்த்தி..” விடாமல் புலம்பியவனுக்கு, அவளை அப்படியே தனக்குள் சேர்த்து அணைத்துக் கொள்ளும் வேகம். அவளுக்கோ.., அவன் கைகளுக்குள் அடங்கிவிடும் வேட்கை. ஆனால்.., இருவராலும் எதையும் செய்ய இயலாத நிலை.

ஒருவர் அருகாமையை விலக்காமல், விலகாமல் அப்படியே நின்றிருந்தனர். பார்வைகள் நான்கும் பின்னிக்கொள்ள, இதழ்கள் இரண்டும் ஏங்கித் தவிக்க, கைகள் நான்கும் எல்லை மீறத் துடிக்க, தேகம் இரண்டும் தழுவிக்கொள்ள தேட.., செய்ய இயலாத வெறுமையில் மூச்சுக்காற்று அனலாய் வெளியேறியது.

அவனால் அவள் தவிப்பதை காணச் சகிக்க முடியவில்லை. ‘நானெல்லாம் ஒரு ஆளென்று.., எனக்காக இப்படி தவிக்கிறாயே கீர்த்தி. இதை நான் எப்படி தாங்கிக் கொள்வேன்..’ அவன் மனம் ஊமையாய் அழுதது.

அவள் காதலை.., நேசத்தை.., தனக்கான தவிப்பை ‘அலைகிறாய்’ என கொச்சைப் படுத்த முடியவில்லை. ஒரு பெண்ணை உயிராய் நேசிக்கும் ஒருவனால் அதை எந்த காலத்திலும் எந்த சூழலிலும் சொல்ல முடியாது. அவளை அப்படிச் சொன்னால், தன் மனதுக்குள் இருக்கும் நினைப்பிற்கு என்ன பெயர்? அன்று தான் செய்துவிட்டுப் போன செயலுக்கு என்ன பெயர்..?’ அவன் மனசாட்சி இடித்துரைத்தது.

‘அவளை இப்படியே விட்டுச் செல்ல முடியாது..’ அவன் மனம் போராட, “இப்படியே என்னோட வந்துடுறியா கீர்த்தி..?” தன்னை மீறி கேட்டுவிட்டிருந்தான் அன்பு.

*****

# பகுதி – 19.

அந்த சூழ்நிலையை எப்படி கையாளவென்று இருவருக்கும் தெரியவில்லை. மனதுக்குள் இருக்கும் நேசத்தை வாய் வார்த்தையாய் கொட்டிவிட முடியாத சூழல். அவன் சொல்லவேண்டும் என அவளும், அவள் உயரத்துக்கு தான் தகுதியில்லை என அவனும் உள்ளுக்குள் தங்கள் நேசத்தை ஒளித்து வைத்தார்கள்.

நேரம் செல்லச் செல்ல, அவளை விட்டு போக முடியாமல் தவித்தவன், “இப்படியே என்னோட வந்துடுறியா கீர்த்தி..?” தன்னை மீறி கேட்டுவிட்டிருந்தான் அன்பு. அவன் முகத்தில் இருந்து இம்மியளவு கூட பார்வையை திருப்பாத அவளுக்கு, அவன் சொன்னதைக் கேட்டு அவ்வளவு ஆனந்த அதிர்ச்சி.

தான் சொன்ன வார்த்தைகளின் பொருள் அவனுக்குப் புரியவில்லை. ஆனால், அவள் கண்களில் அப்பட்டமான அதிர்ச்சியும், நம்ப முடியாத தன்மையையும் காண, வேகமாக தன் வார்த்தைகளை அலசினான்.

“அன்பு.., என்ன கேட்டீங்க..?” வேகமாக அவனை நெருங்கி நின்றாள்.

“அது.., என்னோட.., எங்க ஊருக்கு வர்றீங்களா? ஒரு பத்து நாள்.., எங்க ஊரை சுத்திப் பார்க்கலாம். கண்டிப்பா உங்களுக்கு புடிக்கும். என் அத்தையும் உங்களை பாக்கணும்னு சொன்னாங்க..” வேகமாக உரைத்தான்.

‘பொய்.., பொய் சொல்கிறான்.., இதற்கு முன்னர் வேறு பேசினான்..’ எண்ணியவளுக்கு, அவனது மரியாதைத்தன்மை அழைப்பும், விலகலும் சட்டென ஒரு சோர்வைக் கொடுத்தது.

ஆனாலும், அவன் உரைத்த பொய் அவ்வளவு பிடித்தது. அவன் மறைத்த உண்மை அதைவிட பிடித்தது. அதே நேரம், அவனோடு இருக்கும் வாய்ப்பை இழக்கவும் மனம் விரும்பவில்லை.

“என்ன திடீர்ன்னு மரியாதையெல்லாம்..?” அவனை கூர்மையாக பார்த்தவள், அழுத்தமாக வினவ, அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

“இல்ல.., என்னவோ திடீர்ன்னு.., அப்படி..” அவள் கண்களை பார்த்து அவன் எப்படி பொய் உரைப்பதாம்? வார்த்தைகளை நிறுத்தி விட்டான்.

“என்னை கீர்த்தின்னே கூப்பிடுங்க.., அப்போதான் வருவேன்.., இல்லன்னா வர மாட்டேன்..” அவளது போலி மிரட்டல் அள்ளிக்கொண்டு போனது.

அவள் சம்மதத்தை கேட்ட பிறகுதான், அவளது பெற்றவர் பற்றிய நினைவே வந்தது. “உங்க அம்மா அப்பா ஒத்துப்பாங்களா?” அவன் குரலில் அவ்வளவு கவலை.

“கேட்டுப் பார்த்தால் தானே ஒத்துப்பாங்களா மாட்டாங்களான்னு தெரியும்? கேட்டுப் பாருங்க..” இரு பொருள்பட அவள் உரைக்க, அதை கவனிக்கும் நிலையில் அவன் இல்லை.

அவளோடு கீழே வர, மகளது சந்தோசம் பொங்கும் முகத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவள் முகத்தில் இப்படி ஒரு நிறைவையும், சந்தோஷத்தையும் அவர்கள் கண்டதே இல்லை.

‘அவனோடு இருந்தால் சந்தோஷமாக இருப்பேன்..’ என அவள் சொன்னது வெறும் வாய் வார்த்தை இல்லை என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

“அப்பா.., உங்ககிட்டே இவர் என்னவோ கேக்கணுமாம்..” கீர்த்தி உரைக்க, உள்ளுக்குள் பொங்கிய ஆவலை

மறைத்தவாறு அவனை ஏறிட்டார்கள்.

“சொல்லுங்க..” மாணிக்கம் உரைக்க,

“சார்.., கீர்த்தியை.., ஒரு பத்து நாள் எங்க ஊருக்கு கூட்டி போகவா?” அவன் கேட்க, அவர்கள் முகத்தில் அப்படி ஒரு ஏமாற்றம் படர்ந்தது. அது அவர்கள் முகத்திலும் வெளிப்பட சற்று பயந்து போனான்.

எங்கே அவர்கள் அவளை அனுப்ப மறுத்து விடுவார்களோ என அஞ்சியவன், “சார்.., கண்டிப்பா அவங்களை நல்லா பாத்துப்பேன். அவங்களை எப்படி அழைச்சுட்டு போறனோ.., அதே மாதிரி திருப்பி அனுப்ப வேண்டியது என் பொறுப்பு.., ஐ பிராமிஸ்..” இப்படி கேட்பது சரியா தவறா என்னும் பட்டிமன்றமே அவன் உள்ளத்தில் ஓடியது.

“அதெப்படி தம்பி.., வயசுப் புள்ளையை..” மாணிக்கம் வேகமாக மறுக்க, மகளது கண்டனப் பார்வையை அவரால் எதிர்கொள்ள முடியாமல் சட்டென அமைதியாகிவிட்டார்.

“நீங்க நினைக்கிற மாதிரி நான் தனியா எல்லாம் இல்லை. என் அத்தை, மாமா, மாமாவோட மூணு பொண்ணுங்க.., எல்லோரும் இருக்காங்க. நீங்க வேண்ணா அவங்க கிட்டே பேசறீங்களா?” கேட்டவன், தன் சட்டைப் பையில் இருந்து அலைபேசியை வெளியே எடுத்தான்.

அதே பழைய மொபைல்.., அவள் பார்வை அவனிடம் நிலைத்திருக்க, அவள் பார்வையை உணர்ந்தவன், “ஊர்ல பழைய சிம் வொர்க் ஆகலை. இப்போ புது நம்பர் போட்டிருக்கேன்..” சங்கடமாக உரைத்தவன், அலைபேசியில் எண்களை அழுத்தினான்.

அங்கே அழைப்பு எடுக்கப்படவே.., “அத்த.., நான்தான். இங்கே கீர்த்தி அம்மா பேசணும்னு சொன்னாங்க.., ஒரு நிமிஷம்..” அத்தையிடம் எப்படியும் மாணிக்கம் பேசமாட்டார் என்பதால், சாந்தியிடம் நீட்டினான்.

“வணக்கமுங்க.., நான் செல்வத்தோட அத்தை பாரிஜாதம் பேசறேன். நல்லா இருக்கீங்களா? கீர்த்தி எப்படி இருக்கு..?” என்னவோ ஆண்டு காலம் பழகியவரைபோல் இருந்தது அவரது பேச்சு. சாந்திக்கு அப்பொழுதே அவரைப் பிடித்துப் போனது.

“நாங்க ரொம்ப நல்லா இருக்கோம்.., நீங்க..?” அவர் அளவுக்கு சாந்தியால் வெளிப்படையாக உரையாட முடியவில்லை.

“எங்களுக்கென.., மாப்ள இல்லாததுதான் குறையா இருந்தது. இப்போ அவன் வந்துட்டானே. செல்வம் சொன்னான்.., அவன் காச்சலா கிடந்தப்போ பாப்பாதான் உதவி செஞ்சதுன்னு.., எங்களுக்கு பாப்பாவை பாக்கணும்.

“செத்த அனுப்பி வைக்கியளா? எனக்கும் மூணு பொட்டப்புள்ளை இருக்கு, என் கண்ணுக்குள் வச்சு பாத்துப்பேன். நீங்க கவலைப்படவே வேண்டாம்..” ஒரு வயதுப் பெண்ணை அடுத்த வீட்டுக்கு, அதுவும் தெரியாதவர்கள் வீட்டுக்கு அனுப்புகையில், ஒரு தாயின் உள்ளம் அவள் பாதுகாப்பை எண்ணி எவ்வளவு கவலைப்படும் என்பது அவருக்குத் தெரியாதா என்ன?

எனவே அதற்கு ஏற்றவாறே உரையாட, சாந்திக்கு பெரிதாக மறுக்கத் தோன்றவில்லை. ஏற்கனவே அன்புவைப் பற்றி ஆதியோடு அந்தமாக விசாரித்து தெரிந்தவர்கள் ஆயிற்றே. கூடவே, அதைப் பற்றி கூட ஓரளவு வீட்டில் அலசி விட்டார்கள்.

அவன் ஊரில் இருக்கையில் பொறுப்பற்று திரிந்ததும், அதன் பிறகு சொத்துக்கள் கைவிட்டு போன பிறகு, சென்னையில் வந்து உழைத்ததும், அதன் அருமையை தெரிந்ததும் அவர்களுக்குத் தெரியாதா என்ன?

மாணிக்கம் கூட, “இப்படி தாந்தோனியா இருந்த அவன் இனிமேல் அப்படி ஆக மாட்டான்னு என்ன நிச்சயம்..?” மனைவியிடம் கேட்டார்.

அதற்கு, “என்னங்க.., ஒருத்தன் எப்போவேண்ணா, எந்த நிமிஷம் வேண்ணா தப்பு செய்யலாம். ஆனால், தன் தவறை உணர்ந்து திருந்தியவன் எந்த காலத்திலும் அதைச் செய்ய மாட்டான்..” அடித்து பேசினார்.

அவர்களை குடும்பத்தோடு அழைக்க பாரிஜாதத்துக்கும் ஆசைதான். ஆனால், அன்பு, தான் ஒரு நிலையை அடையாமல் அவர்களிடம் பேசுவது அவ்வளவு நன்றாக இருக்காது என உரைத்த பிறகு, அவன் பேச்சை அவரால் மீற முடியவில்லை.

மேலும் சில நிமிடம் உரையாட, “கண்டிப்பா அனுப்பி வைக்கறோம்..” சாந்தி உரைத்துவிட்டு அலைபேசியை வைத்துவிட்டார்.

“அம்மா.., அக்காவோட நானும்..” வேகமாக வாசன் இடைபுக, கீர்த்தியின் மறுப்பான தலை அசைப்பில் வார்த்தைகளை முடிக்காமல் நிறுத்திவிட்டான்.

அதை உணராத அன்பு, “ஓ.., தாராளமா வா வாசன். உனக்கும் ரொம்ப புடிக்கும்...” உற்சாகமானான்.

“இல்ல.., எனக்கு ஸ்கூல் இருக்கு..” வேகமாக பின்னடைந்தான்.

“இப்போதான் வாரேன்னு சொன்ன.., அதுக்குள்ளே..” அன்பு குழம்பிப் போனான்.

“இல்ல தம்பி.., ஒரே நேரத்தில் ரெண்டுபேரும் இல்லாமல் எங்களால் இருக்க முடியாது. நீங்க கீர்த்தியை முதல்ல அழைச்சுட்டு போங்க. பிறகு நாங்க வர்றோம்..” அவர் பேச்சுக்கு அங்கே மறுப்பு இருக்கவில்லை.

அன்புக்கு அவ்வளவு சந்தோசம், நிம்மதி. தான் கேட்ட விஷயம் அவ்வளவு சுலபமாக முடிந்துவிடும் என அவன் நினைத்திருக்கவில்லையே. அந்த நொடியே அவளை

தன்னோடு அழைத்துச் செல்லும் வேகம்.., கால்கள் தரையில் பதியவில்லை.

மறுநாள் காலையில் செல்லலாம் என அவர்கள் சொல்ல, நள்ளிரவு கிளம்பினால், விடியக்காலம் ஊர் சென்றுவிடலாம் என அவன் சொல்லவே, அதற்குமேல் அவர்களால் மறுக்க முடியவில்லை.

நேரம் இரவைத் தொட்டிருக்க, இரவு உணவை அங்கேயே சாப்பிடச் சொன்ன அவர்களிடம் தன்மையாக மறுத்துவிட்டு, தான் இரவில் வருவதாகச் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டான்.

கீர்த்தி தன் பெட்டியை பேக் செய்ய, குடும்பமே அவளோடு இருந்தது. “அம்மாடி, மாப்ள கிட்டே இப்பவே பேசிடவா?” மாணிக்கம் தாங்க முடியாமல் கேட்டுவிட்டார். மகளது முகத்தில் இருந்த மகிழ்ச்சி சிறிது கூட வாடாமல், தாண்டவமாடினால் அவரும் என்னதான் செய்வார்.

“இல்லப்பா.., பத்து நாள்ல அவரே உங்ககிட்டே பொண்ணு கேப்பார்.., எனக்கு நம்பிக்கை இருக்கு..” அவன் சற்று நேரத்துக்கு முன்னர் தன்னிடம் கேட்டு, பிறகு மறுத்ததை நினைத்துக் கொண்டு சொன்னாள்.

“நீ சொன்னால் சரிதான்..” அவர் அமைதியாகிவிட, “கீர்த்தி, தெரியாத இடம், புது மனுஷங்க.., அங்கே யாராவது ஏதாவது சொல்லிட்டாலும், நீ எதையும் பெருசா நினைக்கக் கூடாது..” தாயின் உள்ளம் பரிதவித்தது.

“இல்லம்மா.., உங்க பொண்ணு இப்போ தெளிவா இருக்கா. நீங்க கவலைப் படாதீங்க. அதோட, அன்பு என் கூடவே இருக்கார்.., என்னை பாத்துப்பார்” அவர்களுக்கு தைரியம் சொன்னாள்.

என்னதான் இருந்தாலும் அவர்களால் அவ்வளவு சீக்கிரம் சமாதானம் அடைய முடியவில்லை. அவளுக்காக தங்களை தேற்றிக் கொண்டார்கள்.

டிரைவர் இரவில் உறங்கி, சற்று ஓய்வெடுத்திருக்க, இரவு பதினோரு மணிக்கு அவர்கள் தங்கள் பயணத்தை துவங்கினார்கள். அன்புக்கு அவள் காரில் செல்வது பெரும் தயக்கமாக இருந்தாலும், அவளை பேருந்தில் அழைத்துச் செல்வது முற்றிலும் முடியாத காரியம் என்பதால் அவளோடு கிளம்பிவிட்டான்.

காரின் முன்னிருக்கையில், டிரைவரோடு அவன் அமர்ந்துகொள்ள, பயணம் சுகமாகவே துவங்கியது. அவனிடம் எதையாவது உரையாடவேண்டும் என்றால் அவளுக்கு பரவாயில்லை, அவனுக்கோ, முகம் திருப்பி, அவளிடம் உரையாடவேண்டி இருந்தது.

பயணம் துவங்கிய ஒருமணி நேரத்தில், டிரைவர் சாலையோர டீக்கடையில் வண்டியை நிறுத்த, அன்புவை பின்னிருக்கையில் அமரச் சொன்னாள்.

சற்று திடுக்கிட்டவன் அவள் முகம் காண, “உங்களுக்குத்தான் பின்னால் திரும்பி பேசுறது கஷ்டமா இருக்கும் அதான்..” அவனுக்கு விளக்கம் கொடுக்க, அதை ஏற்றுகொள்ள முடிந்தாலும், ஏதோ ஒரு தயக்கம்.

அவன் தயக்கம் உணர்ந்து, அவள் கோபமாக முகத்தை வெளியே திருப்பிக் கொள்ள, அவள் செய்கையைப் பார்த்து அவனுக்கு சிரிப்புதான் வந்தது. ஆனாலும், மறுக்காமல் அவள் அருகில் ஏறி அமர்ந்தவன், எதுவும் பேசாமல் அவளையே பார்த்திருந்தான்.

காரின் அசைவை வைத்து அவன் தன் அருகில் அமர்வது தெரிந்தாலும், எதுவும் பேசவில்லை. சீட்டின் மேல் இருந்த அவளது வலக் கரத்தை மெதுவாக பற்றிக்கொள்ள உள்ளம் பரபரக்க, அதை அடக்கியவாறு, கட்டு போட்டிருந்த இடத்தை மென்மையாக வருடினான்.

‘எனக்காகவா இது..? அப்படி என்ன நடந்திருக்கும்?’ தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்கு கோழையாக அவளை நினைக்க முடியவில்லை. மாறாக.., இப்படிச்

செய்ய எது தூண்டியது என்பதே அவனது கேள்வியாக இருந்தது.

அவள் கரத்தை பற்றி, தன் கைகளுக்குள் பொதிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல்.., அதை அடக்கி, ஒற்றை விரலால் மென்மையாக வருடினான். அவன் தன்னை தொட்டு அழைப்பான், என எதிர்பார்த்தவள், அது நடக்காமல் போகவே, மெதுவாக, ஓர விழியாய் அவனைப் பார்த்தாள்.

அவன் பார்வை முழுவதும் சீட்டில் இருக்க, ‘என்ன?’ என்பதுபோல் பார்க்க, அவன் செய்கையை கண்டு கொண்டவளுக்கு, என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அவன் கண்களில் தெரிந்த கவலை, அவளை வருத்தியது.

சீட்டில் இருந்த தன் கரத்தை எடுத்தவள், அவன் பக்கம் பாராமல், கையை மட்டும் அவன் பக்கம் நீட்டினாள். அவள் முகம் பார்த்தவனுக்கு தன் கவலை மறைந்து புன்னகை அரும்பியது.

மென்மையாக அவள் கரத்தை பற்றிக் கொண்டவன், அவள் இங்கே பார்க்கவில்லை என்பதை உறுதிபடுத்திக் கொண்டு, அந்த கட்டின்மேல் பட்டென இதழ் பதித்தவன், வேகமாக நிமிர்ந்து அமர்ந்தான். அவனுக்குத் தெரியாதே.., அவளுக்கு புலன்கள் அனைத்தும் பல மடங்கு உன்னிப்பாக செயல்படும் என்று.

அவன் செய்கையை, அவள் பாராமலேயே அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ‘ஏன்.., இதை எனக்குத் தெரிய கொடுத்தால் என்னவாம்?’ காதல் மனம் மெல்லமாய் சிணுங்கியது.

அவள் கரத்தை மெல்லியதாய் அழுத்த, அவள் தன்னைப் பார்க்கவே, கைகளால், காது நுனியை பற்றிக் கொண்டவன், “சாரி.., இனிமேல் நீ சொன்ன உடனே கேட்டுக்கறேன்..” வார்த்தையால் மட்டுமல்ல,

பார்வையாலும் கெஞ்ச, சட்டென சிரித்தவள், அவன் கரத்தை விலக்கி விட்டாள்.

“காந்தாரி..” அவன் முனக, முதல் முறையாக அந்த அழைப்பின் பின்னால் இருந்த காரணத்தை அறிய விரும்பினாள்.

“அன்பு, அதென்ன அடிக்கடி காந்தாரின்னு சொல்றீங்க. அப்படின்னா என்ன?” அவனிடம் கேட்க, விழித்தான்.

‘அடப்பாவி.., நான் இதழசைவில் முனகுறது கூட இவளுக்கு புரியும்னு நினைக்காமலே போயிட்டேனே..’ மனதுக்குள் எண்ணியவன், “ஊருக்கு போயிட்டு சொல்றேன்..” அப்போதைக்கு ஜகா வாங்கினான்.

சரித்திரத்தில், திருதிராஷ்டிரர் மனைவி காந்தாரி என்று இருந்தாலும், அவன் அழைக்கும் காந்தாரிக்கு பின்னால் ஒரு மிளகாய் வகை இருந்தது. பிறந்த குழந்தையின் குட்டி விரலில் பாதியளவு கூட இருக்காத சிறிய வகை, ஆனால் அதன் காரம்.., சுள்ளென இருக்கும்.

சாதாரண பச்சை மிளகாயை விட, பல மடங்கு காரம் உடையது. கீர்த்தியை முதலில் பார்த்து, அவளது கோபத்தை பார்த்தவுடன், அவனுக்கு ஏனோ அந்த மிளகாயின் நினைவுதான் வந்தது. எனவேதான் தன்னை மீறி அவ்வாறு அழைத்துவிட்டான். இதை எப்படி அவளிடம் சொல்லுவான்? எனவே அமைதியானான்.

டீ குடித்துவிட்டு வந்த டிரைவர் மோகன், அன்பு பின்னிருக்கையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து கேள்வியாக புருவம் உயர்த்தினான். ஏற்கனவே சற்று அரசல் புரசலாக அன்பு விஷயம் அவனுக்கும் தெரியுமாகையால் பெரிதாக அதிர்ந்து போகவெல்லாம் இல்லை.

ஆனால், கீர்த்தியால் அதிக நேரம் காலை தொங்கப் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்க முடியாது. பொதுவாகவே

அவர்கள் குடும்பமாக வெளியே செல்வதாக இருந்தால் இனோவா கார்தான் உபயோகப் படுத்துவார்கள். நடு இருக்கை முழுவதும் கீர்த்தி கால் நீட்டி அமர்ந்திருப்பாள்.

பின்னால் வாசனும் சாந்தியும் இருக்க, டிரைவர் இருக்கைக்கு பக்கம் மாணிக்கம் அமர்ந்து கொள்வார். இப்பொழுது இதை எப்படி அவனிடம் சொல்வது? சொன்னால் கீர்த்தி அதை எப்படி எடுத்துக் கொள்வாள் என்பதுதான் அவனது பெரும் கவலையாக போயிற்று.

அவன் பார்வையில் இருந்தே, அவன் நினைப்பதை யூகித்தவள், “மோகன்.., காரை எடுங்க..” அவள் அழுத்தமாக உரைக்க மறு பேச்சின்றி காரை கிளப்பினார்.

மேலும் சற்று நேரம் அன்புவோடு உரையாட, அவளை அறியாமலே கண்கள் செருகியது. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தூக்கம். அவளும் எவ்வளவோ முயன்று பார்த்தாள்.., ஆனால் முடியவில்லை.

முந்தினநாள் மருத்துவமனையில் இருந்தவள், கொஞ்ச நேரம்தான் உறங்கியிருந்தாள். அதற்குமேல் அவளால் உறங்க முடியவில்லை. மனதின் அலைப்புறுதலில் உறக்கம் எப்படி வரும்? ஆனால் இன்று, அவன் அருகாமையை ரசிக்க மனம் விரும்பினாலும், உடல் ஒத்துழைக்க மறுத்தது.

“கீர்த்தி.., தூங்கு..” இதழசைவில் அவன் முணுமுணுக்க, அரை உறக்கத்தில், ‘சரி..’ என்பதாக தலை அசைத்தவள், இருக்கையில் நன்றாக சாய்ந்து கொண்டாள். அப்பொழுது, வலது கால் வலிக்கவே, முயன்று அதை தவிர்த்தவள், சாய்ந்து உறங்க முயன்றாள்.

உறக்கமும் அவளைத் தழுவிக் கொள்ள, உறக்கத்திலேயே அவளது கரம், காலை அழுத்தமாக பிடித்துவிட, கூடவே புருவம் சற்று சுருங்கி, அவள் வலியை பறைசாற்ற, சற்றும் யோசிக்காமல், அவள் காலை தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டான்.

இப்பொழுது இன்னும் சற்று வசதியாக அவள் சாய, இரு கால்களும் அவன் மடியில் இடம் பிடித்தது. கொஞ்சம் கூட தயங்காமல் அவன் செய்த செய்கையை, மோகனும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

அன்புவின் கைகள், அவள் காலை மென்மையாக வருடி அழுத்தமாக ஒரு நொடி பற்றியவன், அடுத்த நிமிடம், தானும் வசதியாக சாய்ந்து, அவள் கால்மேல் தன் கரங்களை வைத்துக் கொண்டான்.

“அண்ணே.., பேச்சுத் துணைக்கு ஆள் வேணுமா? முன்னாடி வரவா?” அன்பு கேட்க,

“இல்ல தம்பி.., நீங்க தூங்குங்க.., நான் நிதானமாகவே வண்டி ஓட்டுறேன். எனக்கு இதுதானே வேலையே.., அதனால் கஷ்டமில்லை..” அவன் குரலில் அப்படி ஒரு சந்தோசம்.

ஒரு ஆள் சுய நினைவில் இருக்கும்பொழுது செய்யும் உதவிக்கும், அவர்கள் உறக்கத்தில் இருக்கும் வேளையில், அவர்களுக்கு தேவையானதை நிறைவாக செய்வதற்கும் வித்தியாசம் உண்டே.

அன்புவின் செய்கையில் ஒரு சதவீதம் கூட எதிர்பார்ப்போ, பிரதிபலனோ இருக்கவில்லை. மாறாக, கீர்த்தியின்மேல் அவன் கொண்ட பாசம் மட்டுமே தெரிந்தது. எனவேதான் அவருக்கு அவ்வளவு சந்தோசம்.

“சரிண்ணே.., தூக்கம் வந்தால் ஒரு குரல் கொடுங்க..” சொல்லிவிட்டே விழி மூடினான். தாங்கள் பேசுவது அவளுக்கு கேட்காது என்பதால், சாதாரணமாகவே அவர்கள் உரையாடினார்கள்.

அன்பு ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, “தம்பி.., தம்பி..” மோகனின் குரல் அவனைக் கலைக்க, வேகமாக விழி திறந்தான்.

“சொல்லுங்கண்ணே.., தூக்கம் வருதா? நான் வேண்ணா காரை ஓட்டவா?” கைகளால் முகத்தை அழுந்த தேய்ந்து, தூக்கத்தை விரட்டினான்.

“அதெல்லாம் இல்ல தம்பி.., இங்கே இருந்து எந்த பக்கம் போகணும்னு தெரியலை அதான் கூப்ட்டேன்..” கார் அப்பொழுது நிதானமாக ஊர்ந்துகொண்டிருந்தது.

“அண்ணே இங்கே வந்துட்டீங்களா? இங்கே இருந்து ரெண்டாவது லெப்ட்ல திரும்புங்க..” அப்படியே அவன் பாதை சொல்ல, அப்பொழுதும் கீர்த்தியின் காலை கீழே விட மனமில்லை. அதையும் மோகன் கவனித்தான்.

இறுதியில் ஊர் வர, கார் சற்று மேடு பள்ளமான இடத்தில் அதிகமாக குலுங்க, அந்த குலுங்கலில் கண் விழித்தாள் கீர்த்தி. முதலில் அவள் கவனத்தில் பதிந்ததே.., தான் படுத்திருக்கும் விதம்தான். கிட்டத்தட்ட முழுதாக கால் நீட்டி படுத்திருந்தாள்.

கால்கள் இரண்டும் அவன் மடியில் இருப்பதை அவளால் தெளிவாக உணர முடிந்தது. சற்று திடுக்கிட்டு எழுந்து அமர முயல, “குட்மார்னிங்.., காரோட குலுங்கலில் எழுந்துட்டியா..? தூங்கு.., இன்னும் கால்மணி நேரமாகும்” வெகு சாதாரணமாக அவன் உரைக்க, அவளுக்குத்தான் என்ன சொல்வது, செய்வது என்றே தெரியவில்லை.

*****

# பகுதி – 20.

கார் அந்த ஒற்றையடிப் பாதையில் செல்லாமல், சற்று சுற்றி, அவர்கள் வீட்டு முன்னால் நிற்க, அதற்கு முன்பாக எழுந்து அமர்ந்திருந்தாள் கீர்த்தி. அந்த இடத்தின் அழகு, ரம்மியம்.., அந்த மண் வாசனை என அனைத்தும் அவளுக்கு அவ்வளவு பிடித்தது.

“இங்கேதான்.., நிப்பாட்டுங்க..” அவன் உரைக்கவே, அவன் வீட்டின் முன்னால் கார் நின்றது.

அதற்குள் காரைப் பார்த்துவிட்டு, அதன் பின்னாலேயே வந்துவிட்டார்கள் அவனது அத்தையும் அத்தை பெண்களும். அவன் காரில் இருந்து இறங்க, அவளும் சற்று தயக்கமாக இறங்கி நின்றாள்.

கீர்த்தியைப் பார்த்த பெண்கள் அனைவரும் மூக்கின்மேல் விரல் வைக்காத குறையாக அதிசயித்துப் போனார்கள். இப்படி ஒரு அழகையும், கலரையும் உடைய பெண்ணை அவர்கள் படத்தில் மட்டுமே பார்த்திருகிறார்கள்.

“ஏய்.., என்ன.., எல்லாரும் அப்படி பாக்கறீங்க..? இதுதான் கீர்த்தி..” “கீர்த்தி, இது என்னோட அத்தை, இது அத்தை பொண்ணுங்க.., சங்கரி, வாணி, கவிதா” அனைவருக்கும் பரஸ்பரம் அறிமுகப்படுத்தினான்.

என்ன சொல்வது எனத் தெரியாமல் சற்று தடுமாறி.., “ஹல்லோ.., வ.வ..வணக்கம்மா” பாரிஜாதத்திடம் சிறு வணக்கத்தை தடுமாறி உரைக்க, அப்போழுதுமே அவர்கள் கலையவில்லை.

“ஏய்.., என்னங்கடி.., ஏதாவது பேசுங்க..” அத்தை மகள்களை அதட்டல் போட்டான்.

“அம்மாடி.., அப்படியே தங்க விக்ரகமாட்டம் இருக்கியே.., எங்கண்ணே பட்டுடும் போல..” அவள் அருகில் வந்து நெட்டி

முறிக்க, விழி விரிய அவர் செய்கையைப் பார்த்தவள், சற்று அன்புவின் பக்கம் ஒடுங்கிக் கொண்டாள்.

“மாமா.., நெசமாவே இதுதான் கீர்த்தியா..? எங்களால் நம்பவே முடியலை” கவிதாதான் வாய் திறந்தாள்.

“மாமா.., உனக்கு இவங்க கொஞ்சம் அதிகம்தான்..” வாணி தன் பங்குக்கு உரைக்க,

“செல்வம்.., புள்ளையை ஏமாத்தி கூட்டி வரலையே..” சங்கரி நம்ப முடியாமல் கேட்க, அவர்களை ஆனமட்டும் முறைத்தான்.

“உங்க எல்லோருக்கும் என்னைப் பாத்தா எப்படி இருக்கு? போங்கடி.., கருவாச்சிங்களா. சுத்தி நின்னு சதியா பண்றீங்க..” போலியாக மிரட்டினாலும், அவர்கள் பேச்சுக்காக அவன் அலட்டிக் கொண்டதாகவே இல்லை.

“செல்வத்துக்கு என்னடி குறை.., இப்போ கூட பண்ணையாரே பொண்ணு கொடுக்க காத்துகிட்டு கிடக்காரு.., வந்துட்டாளுங்க..” பாரிஜாதம் பேச, நல்ல வேளையாக கீர்த்தி அதை கவனிக்கவே இல்லை. அவள்தான் இவர்கள் மூவரிடமும் லயித்திருந்தாளே.

அவர்கள் அவளை கவனிக்க, அவளும் அவர்களைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். கருப்பாக இருந்தாலும் லட்சணமாக, இயற்கை வனப்போடு, இயற்கை அழகோடு, சட்டென ஒட்டிக்கொள்ளும் வெள்ளை மனிதர்களாகவே அவர்கள் இருந்தார்கள்.

மூன்று பெண்களும் அவனிடம் பேசும் அழகு, அந்த உரிமை சற்று பொறாமையாகக் கூட இருந்தது.

கூடவே, கவிதாவின் கையில் இருந்த குழந்தை அவள் கவனத்தை வெகுவாய் கவர்ந்தது. குழந்தையைப் பார்த்தவள், “உங்க குழந்தையா..?” கேட்டவள் மெதுவாக அதன் கன்னம் தொட்டு பார்த்தாள்.

அதற்குள் பாரிஜாதம்.., "அம்மாடி.., முதல்ல வீட்டுக்குள்ள வா.., வந்த புள்ளைக்கு ஒரு காபித்தண்ணி கொடுக்காமல் பேசுறாளுக.." கீர்த்தியின் கை பிடித்து அழைத்துச் சென்றார்.

அவளை வீட்டுக்குள் அழைத்துச் சென்றவர், அங்கே இருந்த சேரைக் காட்டி அமரச் சொல்ல, தயக்கமாக அமர்ந்துகொண்டாள். சுற்றி நின்று அவர்கள் எதையோ பேச, நால்வரின் முகங்களையும் கலவையான உணர்வோடு பார்த்துக் கொண்டிருந்தவள், இடை இடையே அன்பு எங்கே என பார்வையால் துழாவினாள்.

நான்கு பெண்களுக்கு நடுவில் அவள் திணறுவதை சற்று ரசித்தவாறே நின்றிருந்தான்.

சற்று நேரம் பொறுத்தவன், அவர்கள் அவளை விடாமல் சூழ்ந்துகொள்ள, "எல்லாரும் வந்த உடனேயே அவளை ஊருக்கு விரட்டிடுவீங்க போல. பாருங்க எப்படி முழிக்கறான்னு. கொஞ்சம் அவளை பிரீயா விடுங்க.." சற்று குரல் உயர்த்த, அதன் பிறகே கலைந்து சென்றார்கள்.

"செல்வம்.., நான் காபியை இங்கனயே கொடுத்து அனுப்பறேன். அம்மாடி, நீ முகம் கைகால் கழுவு.., இப்போ வர்றேன்.." அவர்களிடம் விடை பெற்று திரும்பினார்.

ஒரு அலையடித்து ஓய்ந்ததுபோல் இருந்தது. 'ஹப்பா.., எப்படி பேசுறாங்க..?' இமை கொட்டி, சற்று வாய் பிளந்து, அவர்கள் சென்ற திக்கிலே அவள் பார்த்துக் கொண்டிருக்க,

"கீர்த்தி, என்ன பயந்துட்டியா? கொஞ்சம் அதிகமா பேசுவாங்க அவ்வளவுதான். மத்தபடி ரொம்ப நல்லவங்க.." அவள் தோள் தட்டி கனிவாக உரைத்தான்.

"ம்ச், அதெல்லாம் எதுவும் இல்லை. என்னை இப்போதான் ஃபஸ்ட் டைம் பாக்கறாங்க. ஆனா கூட, எவ்வளவு இயல்பா பேசுறாங்கன்னு யோசிச்சிட்டு இருக்கேன்.." உண்மையாக உரைத்தாள்.

“சரி.., பேஸ் வாஷ் பண்றியா? அந்த பானையில் தண்ணி இருக்கு.., இப்படியே முகம் கழுவிக்கோ. அந்த ரூம்ல ரெஸ்ட் ரூம் இருக்கு. இல்லன்னாலும், வீட்டுக்கு வெளியிலேயும் இருக்கு.., ஆனா அது இண்டியன் டாய்லெட்..” உரைத்தவன், அவளை அழைத்துச் சென்றான்.

“வாவ்.., அன்பு.., இந்த வீடு பிரம்மாதம். இப்படி வீட்டை நான் பாக்குறது இதுதான் முதல் முறை. இப்படியெல்லாம் கூட இன்னும் வீடுங்க இருக்கா? படியெல்லாம் கூட மரத்திலேயே செஞ்சிருக்கீங்க. மாடியிலும் ரூம் இருக்கா?” வீட்டை ஆவலாக சுற்றிப் பார்த்தாள்.

அவளுக்கு தன் வீடு பிடிக்குமா என்ற சந்தேகம் இருக்க, அவள் கண்களில் வழிந்த ஆச்சரியம், பிரமிப்பு, குரலில் தெரிந்த உற்சாகம்.., அனைத்தும் அவனையும் தொற்றிக் கொண்டது.

“மாடியில் கூட ரெண்டு ரூம் இருக்கு. பாக்கறியா?” அவன் கேட்க, வேகமாக தலை அசைத்தாள்.

படி சற்று சின்னதாக இருக்கவே, “பாத்து வா கீர்த்தி..” உரைத்தவன், மேலே ஏறுகையில் அவள் கரத்தை பிடித்துக் கொண்டான்.

மேலே வந்தவுடன், “அந்தப்பக்கம் பரண்.., இங்கேதான் ரூம்..” அழைத்துச் சென்றவன் இரு அறைகளையும் காட்டினான். இரண்டு அறைகளிலும் அட்டாச்ட் பாத்ரூம், டாய்லெட் இருக்க, அந்த அறையில் இருந்த ஜன்னல் வழியாகப் பார்க்கையில் வயல்க்காடு, தோப்பு என காட்சி அவ்வரவு ரம்மியமாக இருந்தது.

“அன்பு.., சூப்பர்.., எனக்கு இந்த வியூ ரொம்ப புடிச்சிருக்கு. இந்த ரூமும்” அவள் உரைக்க, அவனிடம் பதில் இல்லாமல் போகவே வேகமாக அவன் முகம் பார்த்தாள்.

அவன் முகம் உள்ளடங்கிய சிரிப்பில் திளைத்திருக்க, பார்வை அவளை ஒரு மாதிரி மொய்த்தது. ‘ஏன் இப்படிப்

பார்க்கிறான்..?' வேகமாக விழிகளைச் சுழற்ற, அங்கே.., ஹேங்கரில் அவனது சட்டை தொங்கிக் கொண்டிருக்க, அப்பொழுதுதான் அது அவனது அறை என்பதையே உணர்ந்து கொண்டாள்.

முகம் முழுவதும் குப்பென சூடான ரத்தம் பாய, காதுமடல்கள் சூடாகி முகமே சற்று சிவந்து போனது. 'ஆண்டவா.., என்ன இப்படி சொதப்பி வச்சுட்டேன்' வேகமாக அவனுக்கு முதுகுகாட்டி திரும்பியவள், ஜன்னல் வழியே வெளியே வேடிக்கை பார்த்தாள்.

இதயம் படபடவென அடித்துக் கொள்ள, கைகளால் ஜன்னல் கம்பியை அழுத்தமாக பற்றிக் கொண்டாள். 'என்னைப் பார்த்து சிரிக்கிறானோ? நெருங்கி வருகிறானோ?' தாங்க முடியாத ஒரு அவஸ்த்தையான உணர்வு.

அதற்குள்ளாக கீழே கவிதாவின் குரல் கேட்க, வேகமாக அறையில் இருந்து வெளியேறியவன், "கவிதா.., நீ அங்கேயே வை.., இதோ இப்போ வர்றோம்" குரல் கொடுத்துக் கொண்டிருக்க, அவனிடம் எந்த எதிர்வினையும் காணவில்லையே என மெதுவாக திரும்பிப் பார்த்தாள்.

அங்கே அவன் இல்லாதது பெரும் ஆசுவாசமாக இருக்க, வேகமாக அந்த அறையில் இருந்து வெளியேறினாள். அப்பொழுது அவன் வராண்டாவில் இருப்பதைப் பார்த்து அவனிடம் செல்ல, கவிதாவோ.., அவளைப் பார்த்தவுடன், "சாப்பிட வாங்க.." உரக்க குரல் கொடுத்தாள்.

"அட.., இங்கே இருந்தும் கீழே இருப்பவங்களை பாக்கலாமா?" அந்த இடத்தையே ஒரு சுற்று சுற்றி வந்தாள்.

அவள் செய்கையை சின்ன சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் அருகில் வரவே, "இன்னும் நாள் இருக்கு. நிதானமா சுற்றிப் பாக்கலாம். இப்போ கீழே போகலாமா..?" அவன் கேட்க சம்மதமாக தலை அசைத்தாள்.

முன்னால் நடக்கப் போனவளின் கை தொட்டு தடுக்க,வேகமாக அவன் முகம் பார்த்தாள். இங்கே வர முடிவு செய்தது முதல், உரிமையாக தன் கை தொட்டு, தோள் தொட்டு அழைப்பதை விரும்பி ரசிக்கவே செய்தது அந்த பேதை மனம்.

“இங்கே இந்த ரூம் வேணுமா..?” இப்பொழுது அவன் கண்களில் மருந்துக்கும் கேலியோ, சிரிப்போ இருக்கவில்லை.

அவன் முகம் பார்க்க மறுத்தவள், போலியாக அவன் நெஞ்சில் குத்தியவள், “ஒண்ணும் வேண்டாம்..” குரல் அவளுக்கே கேட்கவில்லை.

அவள் கையை மென்மையாக தடுத்தவன், அழைக்கும் விதமாக அழுத்த, அவன் முகம் பார்த்தாள். “நான் கீழே இருந்துக்கறேன்..” அவன் முகம் அவ்வளவு சீரியசாக இருக்க, மறுப்பாக தலை அசைத்தவள்,

‘உரிமையா உன்னோடவே இருக்கணும்னு நான் ஆசைப்படறேன்..’ விழிகள் அவனிடம் உரைக்க, அவள் விழி பேசும் வார்த்தைகள் அவனுக்கு புரியவில்லை என்றாலும், அதில் இருக்கும் தவிப்பு புரிகிறது தானே.

அவள் கரத்தை பிடித்தவன், வலக்கரத்தில் இருந்த சிறிய கட்டில் பார்வையைப் பதிக்க, வேகமாக கரத்தை பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். அவள் அதற்கு விளக்கம் சொல்லப் போவதில்லை என்பதை உணர்ந்தவன்,

“சரி, கீழே போகலாம்..” படிகளில் சற்று கவனமாக அவள் கரம் பிடித்து அழைத்து வந்தான். மரப்படிகள் புதிதாக ஏறும் யாருக்கும் சற்று சிரமமாகத்தான் இருக்கும். பழகியவர்களுக்கு அது சுலபம்.

முகம் கழுவி, காலைக்கடன்கள் முடித்தவள், அவசரமாக ஒரு குளியல் போட்டு வந்தாள். அவள் அணிந்த அந்த

சுடிதார், அவள் அழகை இன்னும் எடுத்துக் காட்டியது. கவிதா காபி கொடுக்க, அதை வாங்கிக் குடித்து முடித்தாள்.

கிச்சன் பக்கத்தில்.., ஒரு பெஞ்ச் போட்டிருக்க, இரண்டு மூன்று இருக்கைகள் அதற்கு முன்னர் போடப் பட்டிருந்தது. அவளோடு அங்கே அமர, கவிதா இருவருக்கும் பரிமாறினாள்.

“உங்க குழந்தை எங்கே..?” அவள் கேட்க, “அக்கா வச்சிருக்கா..?” உரைத்தவள், இட்லியை பரிமாறினாள்.

“கவிதா, மாமா எங்கே..?” அவன் கேட்க, “களத்துமேட்டை ஒதுங்க வைக்கணும், அங்கே ஏதோ வேலை இருக்குன்னு போயிருக்கார்.., இப்போ வந்துடுவார்” அவள் உரைக்க, அதன் பிறகு அங்கே பேச்சுக்கள் இருக்கவில்லை.

கவிதா செல்லவே.., “கீர்த்தி.., இந்த ரூம்ல படுத்து ரெஸ்ட் எடு.., நான் வயலுக்கு போயிட்டு நொடியில் வந்துடுறேன்..” அவளிடம் உரைக்க, சற்று கலக்கமாகவே அவனை ஏறிட்டாள்.

புதிய இடம், அங்கே அவளுக்கு அவனை மட்டுமே தெரியும். அப்படி இருக்கையில் அவன் தன்னை விட்டுச் செல்கிறேன் எனச் சொல்லவே, சற்று பயந்துதான் போனாள்.

அதை உணர்ந்தவன், “இங்கே எந்த பயமும் இல்லை..” உரைத்தவன், ஒரு நொடி சிந்தித்துவிட்டு, “என்னோட வா..” அவளை அழைத்துக் கொண்டு வீட்டின் பின்னால் சென்றான்.

“கருப்பா..” குரல் கொடுக்க, அடுத்த நிமிடம், சீறிக்கொண்டு வந்தது அந்த காளை. அது வந்த வேகத்தில் முழுதாக மிரண்டு, அவன் முதுகோடு பச்சக்கென ஒட்டிக் கொண்டவள், “அன்பு.., பயமா இருக்கு..” அவன் தோள் இரண்டையும் அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

அவளுக்கு இருந்த பயத்தில், அவன் முதுகில் அழுத்தமாக ஒட்டிக் கொள்ள, அவன்தான் ஒரு நொடி தடுமாறிப் போனான். அவள் வேண்டாம் என்று மேலோட்டமாக மறுத்தாலும், அடிமனதில் உறைந்திருக்கும் அவளது நெருக்கம், அவனை சோதிக்காமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

முயன்று தன்னை மீட்டவன், “கீர்த்தி, இவன் என் தம்பி மாதிரி.., பயப்படாதே..” அவள் கரம் பிடித்து தனக்கு அருகில் நிறுத்தியவன், அதை காண வைத்தான்.

படிகளில் நின்றவளுக்கு பயம் சற்றும் தெளியவில்லை. கண்களை கூட முழுதாக திறந்து அதைப் பார்க்க அஞ்சியவளாய் அவள் நிற்க, “எலேய் கருப்பா, இதுதான் உன் அண்ணி.., என்ன புரியுதா..?” காளையிடம் அவன் வினவ, சலங்கை சப்திக்க தலையை வேகமாக அசைத்தது.

“இவளை நீதான் பாத்துக்கணும். உன் அண்ணனை விட ஒரு படி மேலே பாத்துக்கணும் புரியுதா?” அதற்கும் அதனிடம் பெரிய தலையசைப்பே பதிலாக கிடைத்தது.

“கீர்த்தி.., இங்கே பார்..” தன் முகம் காண வைத்தவன், “பட்டணத்தில் நாய் மாதிரி இங்கே காளைங்கதான். நமக்கு வேண்டி உயிரையும் கொடுக்கும். என்னைவிட பலமடங்கு நீ இவனை நம்பலாம். கொஞ்சம் அவனோட கழுத்தை மட்டும் தடவிக் கொடு..” அவன் உரைக்க, பயத்தில் மறுப்பாக தலை அசைத்தாள்.

சட்டென நினைவுக்கு வந்தவனாக, “உனக்கு மாடுன்னா புடிக்காதா..?” நிச்சயம் அவன் குரலில் இப்பொழுது பயம் இருந்தது. அது அவன் முகத்திலும் பளிச்சிட்டது.

அதைக் கண்டவள், “எனக்கு பயமா மட்டும்தான் இருக்கு அன்பு..” வேகமாக உரைக்க, அவன் முகத்தில் புன்னகை. அதைப் பார்க்க அவள் மனதில் அவ்வளவு நிறைவு.

“என்மேல் நம்பிக்கை இருக்கா..?” அவன் கேட்க, “இப்போ நான் என்ன செய்யணும்?” சற்று கோபமாக அவளது பதில் இதுவாகத்தான் இருந்தது. அவன்மேல் நம்பிக்கை இல்லாமலா இத்தனை கிலோமீட்டர் கடந்து, தனிமையில் அவனோடு வந்திருக்கிறாள்?

அவளது கோபம் புரிந்தாலும் அதை விட்டவன், அவள் கரத்தை பற்றி, அதன் கழுத்தை மெதுவாக வருட வைத்தான். சற்று முரட்டுத் தோல்.., இதுவரை தான் உணர்ந்து அறியாத ஒரு முரட்டுத்தனம் அதன் தோலில் இருந்தது.

ஓடிபோய் கொஞ்சம் வைக்கோல் எடுத்து வந்தவன், “இதைக் கொடு.., அப்படியே கொஞ்சம் அதை தடவு.., கருப்பான்னு கூப்பிடு..” காளையோடு பழகும் விதத்தை அவளுக்கு கற்றுக் கொடுத்தான்.

காளை முரட்டு விலங்குதான்.., அதோடு பழகியவருக்கு மட்டுமே தெரியும் அதன் பாசம். அன்பு சொல்லியவாறே செய்தவள், “கருப்பா.., கருப்பா..” மென்மையாக அழைத்தாள்.

அவளது அழைப்பில், தன் வயிற்றுப் பக்கம் நின்றவளின் பக்கம் வேகமாக முகத்தைக் கொண்டுவர, “ஆ.., ஆ..” பயத்தில் சற்று அலறி, நகர முயன்று விழப் போனாள்.

“கீர்த்தி.., அது ஒண்ணும் பண்ணாது..” சட்டென அவளைத் தாங்கி, அவளுக்கு தைரியம் கொடுத்தவன், “கருப்பா.., பயங்காட்டாதேடா..” மென்மையாக அதை கடிந்தான்.

“கருப்பா.., அண்ணி கூப்ட்டா எங்கே இருந்தாலும் வரணும் புரியுதா..?” அதன் காதுக்குள் உரைக்க, மேல் உதடையும், கீழ் உதட்டையும் ஒரு மாதிரி பிரித்து, பற்களை காட்டி ‘எனக்குத் தெரியும் போ..’ என்பதுபோல் அது செய்கை செய்ய,

“எலேய்.., என்கிட்டேயேவா..?” அதை மெல்லியதாக அடித்தான்.

“அன்பு.., என்ன இது கிட்டே பேசறீங்க..? அதுக்கும் புரியுது?” அவளுக்கு அவ்வளவு ஆச்சரியம்.

“கீர்த்தி.., அதான் இவன் என் தம்பி மாதிரின்னு சொன்னேனே.., நாம பேசுறது எல்லாமே இவனுக்கும் புரியும்.., அப்படித்தானே கருப்பா..?” அவன் கேட்க, தலை அசைத்து ஒத்துக் கொண்டது.

“சூப்பர்.., அப்போ நான் பேசினாலும் புரியுமா?” அவள் ஆர்வமாக, “பேசித்தான் பாரேன்..” ஊக்கப்படுத்தினான்.

“கருப்பா.., என்னோட சென்னைக்கு வர்றியா..?” அவள் கேட்க, “ம்மா..” என கத்தியவன், அன்புவைப் பார்த்தது.

“என்ன சொல்றான்..?” அவளுக்கு புரியாமல் கேட்க,

“என்னை விட்டு வர மாட்டானாம்..” உரைத்தவன், தன் தோளால் அதை இடிக்க, அதுவும் போலியாக தன் முகத்தை வைத்து அவனை இடித்தது.

அங்கே சட்டென ஒரு விளையாட்டு நடக்க, “அன்பு.., போதும்.., விடுங்க..” அவள் சொல்லச் சொல்ல, காளையோடு அவன் மல்லுக்கு நின்றான்.

“என்கிட்டே சொல்லுற.., இவன்கிட்டே சொல்லு.., நான் பெரியவன் தானே.., விட்டுக் கொடுக்கச் சொல்லு..” விடாமல் போராடினான்.

சற்று திடுகிட்டவள், ‘சொல்லித்தான் பார்ப்போமே..’ என எண்ணி, “கருப்பா.., அவரை விடு.., சும்மா இரு..” அதனை அதட்ட, சற்று நெம்பி அவனை தள்ளிவிட்டு, சட்டென அடங்கியது.

அவளுக்கு தாள முடியாத ஆச்சரியம். “அன்பு.., என்ன இது..?” அவள் வினவ, “இவன் அப்படித்தான்.., என்னை மாதிரி.., கொஞ்சம் கலர் கம்மினாலும், மனசு வெள்ளை..” அதை பாசமாக வருட, அவளுக்கு அப்படி ஒரு கோபம்.

“கலர்ல என்ன இருக்கு..? இதை நீங்க விடவே மாட்டீங்களா? அன்னைக்கும் அப்படித்தான்.., என்னைத் தொட்டால் கருப்பெல்லாம் ஒட்டிக்காதுன்னு சொன்னீங்க.., இனிமேல் இப்படி பேசினால் நான் உங்ககிட்டே பேசவே மாட்டேன் ஆமா..” சற்று கோபமாகவே இரைந்தாள்.

“கீர்த்தி.., ஓகே.., இனிமேல் பேசலை போதுமா..?” அவள் முகத்திலும் குரலிலும் இருந்த கோபத்தில், சட்டென அமைதியாகிவிட்டான். மனமோ, அப்படியே அவள் இடையோடு கட்டிக்கொண்டு, அவள் நெற்றியில் செல்லமாக முட்டிக்கொள்ள போராடியது.

கவிதாவையோ, வாணியையோ அவளது துணைக்கு இருக்கச் சொல்லலாம்தான். ஆனால்.., அதை கீர்த்தி விரும்புவாளா என்பது அவனுக்குத் தெரியவில்லை. எனவேதான் கருப்பனை அறிமுகப்படுத்தினான்.

“கீர்த்தி.., நீ எங்கே போணும்னு சொன்னாலும் கருப்பன் உன்னை கூட்டி போவான். இந்த ஊருக்குள் அவனுக்கு தெரியாத இடமே கிடையாது. அதே மாதிரி பக்கா பாடிகாட்.., பத்துபேர் சேர்ந்தால் கூட இவன் கிட்டே நெருங்க முடியாது..” அவன் உரைக்க, இப்பொழுது அவளது கரம் தயக்கமின்றி காளையை வருடியது.

*****

# பகுதி – 21.

கிராமத்தில் முதல் நாள்.., மிகவும் அழகாகவே கழிந்தது. டிரைவர் கூட மாலைவரை அங்கேயே இருந்துவிட்டு, அதன் பிறகுதான் சென்னைக்கு கிளம்பிச் சென்றிருந்தான்.

செல்லும் முன்னர் அவளிடம், “தங்கமான தம்பி..” உரைத்துச் செல்ல மறக்கவில்லை. வந்தவுடன் அவனுக்குத் தேவையானது அனைத்தையும் கவனித்துக் கொண்ட அந்த குடும்பத்தை அவனுக்கு அவ்வளவு பிடித்தது.

“அப்பாகிட்டே ஏதாவது சொல்லணுமாம்மா..” அவன் கேட்க, “நான் சந்தோஷமா இருக்கேன்னு சொல்லுங்க..” சொல்லி அனுப்பினாள்.

கீர்த்தியை தைரியமாக கூட்டி வந்துவிட்டாலும், சென்னையில் இருக்கும் வசதியில் பாதி கூட இங்கே வராது என்பது அவனுக்குத் தெரியும். அவசரத்துக்கு என்றால், மருந்து வாங்க கூட இரண்டு கிலோமீட்டர் போக வேண்டும்.

பெரிய கடை, ஷாப்பிங் செய்ய வேண்டும் என்றால், அங்கே இருந்து பன்னிரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் தஞ்சை மாநகருக்கு அவர்கள் வந்தாக வேண்டும். சினிமா தியேட்டருக்கு என்றால், அது அருகிலேயே ஒன்று இருக்கிறதுதான்.., ஆனால்.., ஓடி முடிந்த படங்கள் மட்டுமே அங்கே திரையிடப்படும்.

கீர்த்தியின் வசதிக்கு ஏற்றவாறு பக்கா சீட் வசதியோ, சுத்தமோ அங்கே எதிர்பார்க்க முடியாது. சும்மா சுத்திப்பாக்க வேண்டும் என்றாலே தூரம் செல்ல வேண்டும். அப்படி இருக்கையில், அவளால் எத்தனை நாள் இங்கே இருக்க முடியும் என்பது அவனுக்கு பெரும் கேள்விக்குறியே.

முதல்நாள் முடிவிலேயே கீர்த்தியின் நடையில் இருந்த வித்தியாசத்தை அவர்கள் உணர்ந்திருக்க, அது சிறு அதிர்ச்சிதான். ஆனால், அவளது அழகுக்கு முன்னால் அந்த குறையை அவர்கள் பெரிதாக எண்ணவில்லை.

ஒரு பக்கம் பாரிஜாதத்துக்கு சற்று கவலையாகக் கூட போயிற்று. “ராஜாவாட்டம் இருக்கான்.., அவனுக்கு..” எதையோ சொல்லத் துவங்க,

“பாரி.., அவனுக்கு அவளைப் பிடிச்சிருக்குன்னா உங்க அண்ணனும் அண்ணியும் என்ன செய்திருப்பாங்கன்னு யோசிச்சு வார்த்தையை விடு..” மாரிமுத்து சட்டென கோபமாக உரைக்க, கப்பென வாயை மூடிக் கொண்டார்.

கங்கம்மாவுக்கு அன்புவின் சந்தோசம் மட்டுமே முக்கியம். அவன் நன்றாக இருக்க வேண்டும், அவன் எந்த துன்பத்தையும் அனுபவிக்கக் கூடாது என்பதற்காகத்தானே அவ்வளவு கஷ்டத்திலும் அவனிடம் வயலில் இறங்கு என ஒரு வார்த்தை சொல்லவில்லை.

அதை நினைத்து அவர்கள்மேல் தாள முடியாத வருத்தம் பாரிஜாதத்துக்கும் இருந்ததுதான். அப்படி இருக்கையில், எனக்கு இவளை பிடித்திருக்கிறது என ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், மறு வார்த்தை பேசாமல் அவன் விருப்பத்தை அவர்கள் நிறைவேற்றியிருப்பார்கள் என்பது அவள் அறியாததா?

கணவன் தன்னை அவனது பெற்றவர்கள் இடத்தில் வைத்து முடிவெடுக்கச் சொல்ல, அதற்குமேல் அவளது குறையை அவர்கள் ஆராயவோ, பெரிதாக நினைக்கவோ இல்லை.

கூடவே.., ‘இப்படி ஒருத்தியை வாழ்க்கை துணையாக ஏற்பது என்றால், அவள்மேல் அவன் எவ்வளவு நேசம் வைத்திருக்க வேண்டும்?’ அதுவே அவர் நினைப்பாக இருந்தது.

“அவனுக்கு புடிச்சிருக்குன்னா எனக்கு மறுப்பே கிடையாதுங்க..” உடனே ஒத்துக் கொண்டார். அவர்களுக்கு இன்னுமே அவளுக்கு கேட்கும் சக்தி கிடையாது என்பது தெரியவில்லை.

அதை தெரிந்துகொள்ளும் வேளையும் வந்தது. அன்று காலையில் அவள் எழுந்து, வீட்டின் பின்னால், கருப்பனோடு இருக்க, அங்கே வந்தாள் கவிதா.

“செல்வம் இவனை உங்ககிட்டேயும் பழக்கி விட்டுட்டானா? பரவாயில்லையே உங்களை எதுவும் செய்யலை.., என்னையெல்லாம் முட்ட வரும். மாமன் இவன்கிட்டே என்ன சொல்லி வச்சானோ.., என்னைப் பாத்தாலே இவனுக்கு புடிக்காது..” அவளுக்கு பின்னால் இருந்து பேச, அது கீர்த்தியை எட்டவே இல்லை.

தான் பேசியவுடன் கொஞ்சமாவது திரும்பிப் பார்ப்பாள் என எதிர்பார்க்க, கீர்த்தியின் செய்கை அவளை அதிரச் செய்தது.

‘நான் பேசிட்டே இருக்கேன்.., என்னன்னு கேக்கறாங்களா பார்..?’ மனதுக்குள் சிறு கோபம்.

அதை அடக்கியவள், “சின்னவனை கேட்டீங்களே.., கூட்டி வந்திருக்கேன்.., வச்சுக்கிடுதியளா?” அந்த கேள்விக்கும் அவள் அசையவில்லை.

அதே நேரம்.., தன் உள்ளுணர்வு உந்த, சட்டென திரும்பிப் பார்த்தவள், “கவிதா, வாங்க.., அடடே.., குட்டியும் வந்திருக்கானா? கொடுங்க..” கை நீட்டப் போனவள், “ஒரு நிமிஷம்.., கை வாஷ் பண்ணிட்டு வந்துடுறேன்” உரைத்தவள் கை கழுவப் போனாள்.

மற்ற நேரமாக இருந்தால், “இதெல்லாம் அவனுக்கு பழக்கம்தான்..” எனச் சொல்லியிருப்பாள். ஆனால்.., இப்பொழுது குழம்பிப்போய் நின்றாளே.

‘என்ன இவங்க.., இவ்வளவு நேரம் நான் பேசுனதுக்கு பதிலே சொல்லலை. என்னைப் பாத்த உடனே பேசுறாங்க..?’ குழம்பிப் போனாள்.

அதே நேரம்.., மேஜைமேல் இருந்த கீர்த்தியின் போன் அதிர, அதை கவிதா உணர்ந்துகொள்ள, கீர்த்தியோ அதை கண்டுகொள்ளாமல், குழந்தையை வந்து வாங்கிக் கொண்டாள்.

கவிதா புருவத்தின் மத்தியில் முடிச்சுவிழ, அவளையே கூர்மையாக அலச, ‘இவங்க எப்பவுமே இப்படியா?’ சிந்தை தறிகெட்டு ஓட, அவளையே பார்த்திருந்தாள்.

அவள் குழந்தையோடு கொஞ்சி விளையாடுவதைப் பார்க்கையில், அவன் சிரிப்புக்கும், அவளது சிரிப்புக்கும் கூட வித்தியாசமே தெரியவில்லை. அவ்வளவு வெள்ளை சிரிப்பு.., ‘இவங்களா அப்படி நடந்துக்கறாங்க?’ கேள்விகள் படையெடுக்க நின்றிருந்தாள்.

அவளது அலைபேசி மீண்டும் அதிர, கூடவே.., வெளியே வேணியின் குரல் கேட்க, அப்பொழுதும் கீர்த்தியிடம் சலனமின்றி போகவே, இதயம் படபடத்தது.

“குட்டியை பாருங்களேன்.., அப்படியே உங்களை மாதிரியே சிரிக்கறான்..?” கேட்டவள், அவள் முகம் பார்க்க, அவளது பார்வை வெளியே நிலைப்பதைப் பார்த்தவள், தானும் அப்பொழுதுதான் வெளியே பார்த்தாள்.

“ஏய் கவி.., பையனை விட்டுட்டு உடனே வரவளா நீ..? அங்கே உன் போன் விடாமல் அடிக்குது..., போ.., போய் பேசு..” அவளை விரட்டினாள்.

கவிதா அப்பொழுதும் அசையாமல் போகவே, “கவி, ஏய்.., உன்னைத்தாண்டி, என்ன நின்னுட்டே கனா காங்கற..” அவள் தோள் தொட்டு உலுக்கினாள்.

“ஹாங்.., போறேன்..” கீர்த்தியை திரும்பிப் பார்த்தவாறே விரைந்தாள். வேணி போன் என சொன்னபொழுதாவது தன் போனைப் பற்றி நினைப்பாள் என அவள் எதிர்பார்க்க, ஏமாந்துதான் போனாள்.

வீட்டுக்கு வந்தவளுக்கு, ஏனென்றே தெரியாமல் அழுகை பொங்கியது. ‘இல்ல, என் நினைப்பு பொய்யா இருக்கணும்..’ மனம் விடாமல் புலம்பியது.

கணவனுக்கு போன் பேசியவள், எதையோ பேசி வைத்துவிட்டு, வீட்டுக்குள் சென்று அமர்ந்துகொண்டாள். அவள் அப்படி இருப்பதைப் பார்த்த சங்கரி.., கேள்வியாக அவள் அருகில் வந்தாள்.

“கவி.., ஏண்டி இப்படி இருக்க? சின்ன மாமா திட்டிட்டாரா?” அவர் அப்படி செய்வார் என்பதை நம்ப முடியாத தன்மையில் கேட்டாள்.

“சங்கரி.., நீ கவனிச்சியா..?” மொட்டையாக கேட்க, “எதை..” புரியாமல் கேட்டாள்.

அப்பொழுது வேணியும் வர, அவள் முகத்திலும் பெரும் குழப்பம். அவளைப் பார்த்த சங்கரி, “வேணி.., என்ன நீயும் பேயடிச்சாப்புல இருக்க. இவளும் அப்படித்தான் இருக்கா.., என்னங்கடி ஆச்சு..?” அவளது சத்தத்தில் பாரிஜாதம் வீட்டுக்குள் இருந்து வந்துவிட்டார்.

“கவி.., உனக்கும் அதே சந்தேகம் தானா?” வேணி கேட்க, “உனக்கும் சந்தேகம் வந்துச்சா?” கவிதா அவளிடம் திருப்பிக் கேட்க, கேட்டுக் கொண்டிருந்த மற்றவருக்கு எதுவும் புரியவில்லை.

“புரியிறாப்புல சொல்லுங்கடி.., மனுஷனுவள கிறுக்காக்கிருவாளுக போல” கோபமாக கத்தினாள் சங்கரி.

சற்று எச்சில் கூட்டி விழுங்கியவள், “அம்மா.., கீர்த்திக்கு.., அவங்களுக்கு..” எப்படிச் சொல்லவென தெரியாமல் தடுமாறினாள்.

“சொல்லுடி..” “சங்கரி.., நாம பேசுறது கீர்த்திக்கு கேக்காது போல..” வேணி பட்டென போட்டுடைக்க, சற்று நொடிகள் யாருக்கும் எதுவும் புரியவில்லை. அந்த நிலையிலும் அவளை செவிடு எனச் சொல்ல அவர்களால் முடியவில்லை. செல்வத்தின்மேல் அவர்களுக்கு இருக்கும் அன்பு, அவனுக்கு பிடித்தவள் மீதும் இருந்ததே அதன் காரணம்.

“கோட்டி கணக்கா பேசாதிய..” பாரிஜாதம் கிட்டத்தட்ட கத்தினார்.

அதே நேரம்.., வாசலில் குழந்தையின் அழுகுரல் கேட்க, குழந்தையோடு உள்ளே வந்தாள் கீர்த்தி. அமைதியென்றால் அப்படி ஒரு அமைதி. வெளியே சில சருகுகளின் ஓசை தவிர, குழந்தையின் மெல்லிய சிணுங்கல் மட்டுமே அங்கே கேட்டது.

அனைவரின் முகங்களை ஒரு பார்வை பார்த்தவள், குழந்தை கவியிடம் செல்லத் தவிக்கவே, அவள் கரத்தில் கொடுத்தாள். “எனக்கு நீங்க பேசுறது எதுவும் கேக்காது. ஆனா.., உங்க உதட்டசைவு வைத்து என்னால் நீங்க பேசுறதை புரிஞ்சுக்க முடியும்.

“கூடவே.., சத்தமா பேசினால் எனக்கு காது நல்லா கேட்கும். ஒரு விபத்தில், இப்படி ஆகிடுச்சு..” தன் காலையும் காதையும் கைகளால் வருடியவள், “அன்பு இதைப்பற்றி உங்ககிட்டே சொல்லியிருப்பார்ன்னு நினைத்தேன்.., மற்றபடி உங்ககிட்டே மறைக்கணும்னு எல்லாம் நினைக்கலை” தைரியமாகவே உரைத்தாள்.

ஆனால், மனமோ புழுவாய் துடிக்க, சட்டென அழுகை முட்டிக்கொண்டு வந்தது. ‘அவன்மேல் ஆசைப்பட எனக்கு என்ன தகுதி இருக்கிறது? என் குறையை நான் எப்படி

மறக்கலாம்? அவனுக்கு என் குறை ஒரு பொருட்டு இல்லை என்றாலும், அவனைச் சார்ந்தவர்களுக்கும் அப்படியே இருக்க வேண்டும் என என்ன கட்டாயம்..?' நெஞ்சு முட்டிக்கொண்டு வந்தது.

அத்தோடு.., 'என் குறையை இவர்களிடம் மறைத்திருக்கிறார் என்றால்.., அவருக்கும் இதைப்பற்றி சொல்ல அவ்வளவு தயக்கம் அப்படித்தானே' நினைக்கையிலேயே கண்ணீர் வழியாவா என பயமுறுத்த, வேகமாக திரும்பி நடந்துவிட்டாள்.

அங்கே இருந்த பெண்களுக்கு அதிர்ச்சியில் என்ன பேசுவது என்றே தெரியாமல் நின்றுவிட்டார்கள். அன்புவின் வீட்டுக்கு வந்தவள், தன் அறையில் போய் அமர்ந்துகொண்டு விம்மி அழுதாள்.

'பெற்றவர்களிடம் தைரியமாக இருப்பேன் எனச் சொல்லிவிட்டு, இங்கே அழுவது அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. இந்த அழுகை, அவர்கள் தன்னைப் பற்றி அறிந்து அதிர்ந்ததால் இல்லை. மாறாக, அன்பு ஏன் இதை அவர்களிடம் சொல்லவில்லை என்பதால் வந்தது.

'அவனும் என்னை மற்றவர்களிடம் இருந்து மறைக்கப் பார்த்தானா? எனக்கு இப்படி எனச் சொல்வது அவனுக்கு கௌரவக் குறைச்சலா?' அதுதான் முக்கியம் என்பதுபோல் விம்மி அழுதாள். ஆறுதல் சொல்ல யாருமற்ற தனிமை.., அவ்வளவு பயமாகக் கூட இருந்தது.

அதே நேரம்.., அன்புவின் அலைபேசிக்கு அழைத்த கவிதா விஷயத்தைச் சொல்ல, அடுத்த பத்தாவது நிமிடம் வீட்டில் இருந்தான். முற்றத்தில் பெண்கள் அனைவரும் கைகளைப் பிசைந்தவாறு நிற்க, "என்னத்த இது..?" கேட்டவன் அதற்குமேல் அங்கே நிற்காமல் வீட்டுக்குள் பாய்ந்தான்.

அவள் இருக்கும் அறைக்கதவு சாற்றி வைக்கப் பட்டிருக்க, கொஞ்சம் கூட யோசிக்காமல் அறைக்கதவை

தள்ளிக்கொண்டு உள்ளே வந்தான். அவள் படுக்கையில் விழுந்து அழுதுகொண்டிருக்க, அவனால் தாங்க முடியவில்லை.

பாய்ந்து அவள் அருகில் சென்றவன், அவள் தோள் தொட்டு தூக்கி, கட்டிலில் அமர வைத்தான். விமலும் வெடிப்புமாக.., அவன் முகம் காண மறுத்தவள், அவன் நெஞ்சில் கை வைத்து தள்ளி விட்டாள்.

“எனக்கு இப்படின்னு சொல்றது உனக்கு அவமானமா போச்சுல்ல.., அதான் அவங்க கிட்டே சொல்லலையா? நான் இதுதான்.., இப்படித்தான்.., நான் மாற முடியாது.., நான் போறேன்.., சென்னைக்கே போறேன்.., என்னால் யாரும் இங்கே அவமானப் பட வேண்டாம்..” உள்ளடக்கிய கோபத்தில், வார்த்தைகளால் அவனை வதைத்தாள்.

அவன் எவ்வளவோ சமாதானமாக பேச முயல, அவள் கை பற்ற முயல, அனைத்திலும் அவள் பிடிவாதமான விலக்கத்தையே காண்பித்தாள். தன் முகம் பார்க்க மறுத்து அவள் பேசிக்கொண்டே செல்ல, சற்று முரட்டுத்தனமாக அவள் தோள் தொட்டு உலுக்கியவன், பிடிவாதமாக தன் முகம் காண வைத்தான்.

தன்னை எப்பொழுதும் காதல் பார்வை பார்க்கும் கண்கள், இப்பொழுது கண்ணீரால் நிறைந்திருக்க, அவள் இரு கன்னம் தாங்கி, கண்ணீரை அழுத்தமாக துடைத்தவன், “ஏன் சொல்லணும்..? எதுக்குச் சொல்லணும்? என்னைப் பொறுத்தமட்டில் நீ எங்களைப்போல் ஒரு இயல்பான சாதாரண மனுஷி அவ்வளவுதான்.

“எனக்கு உன் நெகட்டிவ் எல்லாம் எப்பொழுதும் ஞாபகம் இருப்பதில்லை, புரியுதா? அதேபோல்.., யார் என்ன சொன்னாலும்.., என்ன நினைத்தாலும், நான் அதே அன்புதான்...” முகம் இறுக சற்று கோபமாக அவளிடம் பேசினான்.

விழி விரிய அவனைப் பார்த்துக் கொண்டிருந்தவள், அவன் கோபத்தால் கொஞ்சம் பயந்துதான் போனாள். அவளிடம் யாரும் இதுவரை கோபமாக பேசியது கிடையாதே. அதை அவளது பார்வையும் வெளிப்படுத்தியது.

அதை உணர்ந்தவனது பார்வை சிறு மென்மையாக.., “இப்போ என்ன சென்னைக்கு போகணுமா? இந்த ஊர்ல ஒரு பத்து நாள் கூட இருக்க முடியலைல்ல.., சரி.., நானே கூட்டி போய் விடறேன்..” அவளை விட்டு சற்று விலகி அமர்ந்தான்.

அவன் முகத்தில் அவ்வளவு கவலை அப்பிக் கொண்டது. கூடவே, அவள் முகம் பார்த்தவன், “எனக்குத் தெரியும்.., இந்த பட்டிக் காட்டில் உன்னை பிடித்து வைக்கும் அளவுக்கு எதுவும் கிடையாதுதான்..” அவன் எழுந்து செல்ல, விக்கித்துப் போனாள்.

‘நான் எப்போ இங்கே இருக்க முடியாதுன்னு சொன்னேன்..?’ அவள் மனம் கேள்வியெழுப்ப, விடைதான் அவளிடம் இல்லை.

‘நீ இருக்கும் இடம் தாண்டா எனக்கு சொர்க்கம்..’ மனம் அரற்றியது. கூடவே, உன் குறைகள் எனக்குத் தெரிவதில்லை என்ற பேச்சு.., அவனை இறுக கட்டிக்கொள்ள வேண்டும்போல் இருந்தது.

வழக்கம்போல்.., அவளால் நினைக்க மட்டுமே முடியும். சற்று நேரத்துக்கு முன்னர் கூட, வெகு இயல்பாக தன் தோள் தொட்டு, கன்னம் வருடி, கண்ணீர் துடைத்து என அவனது அன்பை வெளிப்படுத்தியிருக்க, அவளால் ஆறுதலுக்கு கூட அவன் தோள் சாய முடியவில்லையே.

அவனுக்கோ.., ஏற்கனவே மனதுக்குள் இருந்த பயம் விஸ்வரூபம் எடுக்கத் துவங்கிவிட்டது. சிட்டியில் இருந்த அவளால், இந்த கிராமத்தில் இருக்க முடியாது என பயந்து கொண்டிருந்தான். அதை மெய்ப்பிப்பதுபோல், நான்

சென்னைக்குப் போக வேண்டும் என்ற அவளது அழுகை.., அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவளை ஊருக்கு தானே அழைத்துச் செல்வதாக உறுதி கொடுத்து விட்டான்தான். ஆனால், அதை அவனால் எப்படி செய்ய முடியும்? இந்த வீட்டில் ஒரே நாளில் அவள் செய்திருக்கும் மாயம்.., அவளை தன் மனைவியாகவே எண்ணத் துவங்கிவிட்டான்.

அந்த வீட்டில் எப்பொழுதும் நிறைந்திருக்கும் அவளது வாசனை.., மெல்லிய கொலுசொலி.., தான் எங்கே இருந்தாலும் தொடரும் அவள் பார்வை.., எப்படி இதை விட்டு அவனால் இருக்க முடியும்?

உயிரையே பிய்த்து எடுத்து சென்னையில் விட்டு வர முடியுமா? அவனுக்குப் புரியவில்லை. அவளோ.., இதைவிட அதிகமாக தவித்துப் போனாள். அவன் இல்லாத வாழ்வை அவளால் கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை.

அவ்வளவு ஆசையாக கிளம்பி வந்தவள்.., ஒரே நாளில் அந்த ஊரோடு, காற்றோடு, சூழலோடு ஒன்றிப் போனவள், அவன் சுவாசம் பரவிய இடத்தில் இருப்பதே பரவசமாக இருக்கையில் அவன் இல்லாத ஊரில் அவளால் எப்படி இருக்க முடியும்?

‘இங்கே என்னை பிடித்து வைக்கும் அளவுக்கு எதுவும் இல்லையா? யார் சொன்னது? அந்த சக்தி உன் ஒருவனுக்கு மட்டுமே இருக்கிறது என்பதை நீ எப்பொழுது புரிந்து கொள்வாய்..?’ எண்ணியவள், வெளியே வர, நடு முற்றத்தில் இருந்த தூணில் சாய்ந்தவாறு நின்றிருந்தான்.

மெதுவாக அவனை நெருங்கியவள், “அன்பு..” மென்மையாக அழைக்க, அவளைப் பார்த்து திரும்பியவனின் கண்கள் அதிகமாக சிவந்துபோய் இருந்தது. அதுவே அவனது உள்ளக் குமுறலை எடுத்துக் காட்ட, வேகமாக அவனை நெருங்கினாள்.

‘நான் போகிறேன் எனச் சொன்னவுடன் உனக்கு இவ்வளவு வருத்தமாடா?’ தனக்குள் கேட்டுக் கொண்டவள்,

“நான் போறேன்னு சொன்னால் உடனே கூட்டி போய் விட்டுடுவியா..?” கோபமாக கேட்டவள், அவனை மென்மையாக அடிக்க வர, போலியாகக் கூட அவன் தடுக்கவில்லை.

“உன்னை எதுக்கும் என்னால் கட்டாயப்படுத்த முடியாது கீர்த்தி.., அந்த உரிமை..” சட்டென பேச்சை நிறுத்தியவன், அவளுக்கு முதுகு காட்டி திரும்பிக் கொண்டான்.

“அது.., என்னன்னா..?” தடுமாறியவன், தலையை அழுத்தமாக கோதிக் கொள்ள, பாய்ந்து சென்று அவன் முதுகில் ஒட்டிக் கொண்டாள். அவள் கரங்கள் இரண்டும் அவன் நெஞ்சுக்கு குறுக்காக பாய்ந்திருக்க, கைகளால் அப்படி ஒரு அழுத்தமாக அணைத்துக் கொண்டாள். கைகள் இரண்டும் முன் சட்டையை கசக்க, கூடவே சேர்ந்துகொண்ட அவன் நெஞ்சின் ரோமங்கள் ஏற்படுத்திய வலியை சுகமாய் தாங்கிக் கொண்டான்.

*****

# பகுதி – 22.

சங்கரியும் வேணியும் கவிதாவும் தங்கள் வீட்டுக்குச் சென்றிருக்க, அங்கே இருந்தது பாரிஜாதமும் மாரிமுத்துவும் மட்டுமே. ஒரு வழியாக அவர்களை சமாதானம் செய்துவிட்டான்தான். ஆனாலும், பாரிஜாதத்துக்கு இன்னும் மனம் ஆறவில்லை.

“இப்படி ஒரு புள்ளைக்கா இப்படி ஒரு குறை..” சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார்.

“அத்த.., நீ வாய் அசைச்சதை பார்த்தாலே எங்கே இருந்து வேண்ணாலும் அவ கண்டு புடிச்சிடுவா. முதல்ல இப்படி பேசுறதை நிப்பாட்டு..” கடிந்தும் சொல்லிவிட்டான், கோபமாகவும் சொல்லிவிட்டான், இறுதியாக கெஞ்சலில் இறங்கிவிட்டான்.

“காலம் முழுக்க எப்படி செல்வம் சம்மாளிப்ப?” அவர் கவலை இதுதான்.

“இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை அத்த. அவ ரொம்ப தைரியமான பொண்ணு. அவங்க பிஸ்னசையே அவதான் நடத்துறா. எத்தனை லட்சம், கோடி தெரியுமா?” தன்மேல் இருக்கும் பாசத்தால்தான் இப்படி பேசுகிறார் என்பதால் அவனால் அதிகமாக கோபப்படவும் முடியவில்லை.

“ஏதாவது ஒரு காலத்தில், மனசில் சின்ன நெருடல் வந்துட்டாலும், உங்க வாழ்க்கை..” செல்வத்தைப் பற்றி முழுதாக அறிந்தவர் என்பதால் அவனது இந்த பக்குவத்தை அவரால் ஏற்க முடியவில்லை.

“அத்த.., நான் மனசு மாறிடுவேன்னு நினைக்கறியா? அவளை கை விட்டிருவேன்னு பயப்படுறியா அத்த..?” வேதனையாக கேட்டான்.

அவரது அமைதியே.., அப்படித்தான் என அவனுக்கு உணர்த்த, “யாருமே இல்லாத அனாதையா நின்னப்போதான் எனக்கு அவ கிடைத்தா அத்த. நான் ஒண்ணுமே இல்லாம இருந்தப்போ.., உனக்கு நான் இருக்கேன்னு வந்தா. அவளை எப்படி நான் விடுவேன்..?” அத்தையின் அருகில் அமர்ந்துகொள்ள, அவனை இறுக அணைத்துக் கொண்டார்.

“செல்வம்.., உன்னை நான் நம்பறேன்..” கண்ணீர் வடித்தவர், “அண்ணனும், அண்ணியும் இருந்திருந்தா ரொம்ப சந்தோசப் பட்டிருப்பாங்க..” அவர் உரைக்க, ‘தான் அப்படி இருந்திருந்தால் அவளை சந்தித்தே இருக்க மாட்டோம்’ என எண்ணியதை அவரிடம் சொல்லவில்லை.

கடந்த இரண்டு நாட்களாக கவிதா அவளோடு இருக்க, பொழுது போவதில் அவளுக்கு சிரமம் இருக்கவில்லை. அன்று காலையில் எல்லோரும் கிளம்பியிருக்க, கவிதாவை மட்டும் மீண்டும் வரச் சொல்லியிருந்தாள் கீர்த்தி.

மறுநாளே வருவதாகத்தான் சொல்லிச் சென்றாள். அங்கே ஊரில் முக்கியமானவர்களின் திருமணம் என்பதால் மட்டுமே அவள் சென்றிருந்தாள்.

அன்பு வயலுக்கு கிளம்புவதாகச் சொல்லவே.., “நானும் வர்றேன் அன்பு. வீட்டிலேயே இருக்க போர் அடிக்குது..” அவள் மெல்லியதாக சிணுங்க, அப்பொழுதும் சற்று தயங்கினான்.

அவன் தயக்கத்தைப் பார்த்தவள், “ஏன் என்னை வயலுக்கு அழைச்சுட்டு போக மாட்டேங்கற? அங்கே நான் வரக் கூடாதா?” முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்.

“ம்ச்.., அப்படியெல்லாம் இல்லை. வயல் வரப்பில் நடக்க கொஞ்சம் கஷ்டமா இருக்கும் அதான்..” தன் தயக்கத்தை உரைக்க,

“அதெல்லாம் நான் பாத்துக்கறேன்..” அவனோடு கிளம்பிவிட்டாள்.

“கருப்பா..” அவள் குரல் கொடுக்க, அடுத்த நொடி அவள் அருகில் வந்தது அந்த காளை.

‘பிரம்மாதம்..’ அவன் பார்வையால் மெச்ச, இல்லாத காலரை தூக்கி விட்டுக் கொண்டாள்.

“உன் புல்லட் எங்கே அன்பு..?” அவள் கேட்க, ஒரு நொடி அவன் முகம் சுருங்கி சரியானது. அதைப் பார்த்தவள், “என்ன ஆச்சு..?” அவனிடம் கேட்க, “பிறகு சொல்றேன்..” புன்னகைத்து அதை சரி செய்து கொண்டான்.

நினைவோ.., அவனது புல்லட்டை சுற்றி வந்தது. ஊருக்கு வந்த இரண்டாம் நாளே வயலை மீட்க, மீதம் இருந்த மூன்று லட்சம் ரூபாயை பிறகு தருவதாக சொன்னவன், அங்கிருந்து கிளம்ப, அவனது புல்லட்டை கொண்டுவந்து விடச் சொன்னான் பண்ணையாரின் மகன் பூமணி.

சட்டென கோபம் எழுந்தாலும், தன் நிலை அவனைத் தேக்க, மறுநாள் அவனது மாமா மாரிமுத்து அதை அவர்கள் வீட்டில் விட்டு வந்தார். அதன் பிறகு ஆறு மாதத்தில் பணத்தை கொடுத்துவிட்டாலும், பண்ணையாரின் மகன், புல்லட்டை மட்டும் கொடுக்க மறுத்தான்.

ஆறு மாதம் கழித்து தருவதாக அவன் சொல்ல.., பண்ணையார் மகன் என்பதால் யாராலும் எதுவும் சொல்ல முடியவில்லை. அத்தோடு.., அவன் ஊரிலும் இல்லை. அந்த புல்லட்டை எடுத்துக் கொண்டு அவன் வேலை செய்யும் பெங்களூருக்கு சென்று விட்டதாகச் சொன்னார்கள்.

அதென்னவோ பண்ணையார் மகனான தனக்கு இல்லாத புல்லட், அன்புவிடம் இருப்பதில் அப்பொழுதே அவனுக்கு அவ்வளவு பொறாமை. இப்பொழுது இதை சாக்காக வைத்து பிடுங்கிக் கொண்டான்.

அதை எண்ணியவன் அமைதியாக வர, வயல் வரப்பு என்பதால், சற்று கவனமாகவே நடந்து வந்தாள் கீர்த்தி. சாதாரண ஆட்களுக்கே கவனம் பிசகினால் கால் வழுக்கி வாய்க்காலிலோ, இல்லையென்றால் வயலிலோ சரிந்து விடுவார்கள். அப்படி இருக்கையில், கீர்த்தி அதிக கவனம் எடுத்துக் கொண்டாள்.

ஆனாலும், சுற்றிலும் பச்சைப் பசேல் என்ற வயலைப் பார்க்கையில் அள்ளிக்கொண்டு போனது.

வயலில் நெல்கதிர் இருப்பதை இப்பொழுதுதான் முதல் முறையாகப் பார்க்கிறாள். வேகமாக தன் கேமராவில் அனைத்தையும் படம் பிடிக்க, ஒவ்வொரு பகுதியாக கேமரா கண் வழியாக பார்த்துக் கொண்டே வந்தவள், ஒரு இடத்தில் ஆணியடித்தாற்போல் நின்றுவிட்டாள்.

கேமரா வழியே பார்த்ததை விட்டு, வேகமாக நிமிர்ந்து பார்க்க, அங்கே.., தன் சட்டை, பேண்ட் இல்லாமல், ஒரு அரைக்கால் சாட்ஸ் மட்டும் போட்டுகொண்டு வயலுக்கு நடுவில் நின்றிருந்தான் அன்பு. கையில் ஏதோ புல்.., வயலில் இருந்த களையை பிடுங்கி கையில் வைத்திருந்தான்.

‘இவன் எப்போ இப்படி மாறினான்..?’ எண்ணியவளால் அவனை நேரடியாக பார்க்கவும் முடியவில்லை, பார்வையை திருப்பவும் முடியவில்லை.

ஜிம்மில் நாள் முழுவதும் ஒர்கவுட் செய்பவன் சிக்ஸ் பேக் வைக்க திணற, இவனுக்கோ இயற்கையாகவே அது கைவரப் பெற்றிருந்தது. அகன்ற தோள், வயிற்றில் படிக்கட்டுபோல் முறுக்கேறிய தசை, கை புஜங்களிலோ அவ்வளவு முறுக்கு.., இமை கொட்டி விழித்தாள்.

அவனோ.., இவளைப் பார்த்து கையசைத்தவன், ‘இங்கே வா..” என்பதாக அழைத்தான்.

அவன் அழைக்கவே.., ‘பாவி.., தூரத்தில் இருந்தே உன்னை என்னால் நேருக்கு நேராக பார்க்க முடியலடா.., நீ என்னன்னா.., கிட்ட கூப்பிடுற..?’ துடிக்கும் இதயத்தோடு, படபடக்கும் இமைகளோடு அவனை நெருங்கினாள்.

ஏற்கனவே இரண்டு நாட்களுக்கு முன்னர் அவன் நெஞ்சோடு கட்டிக்கொண்ட உணர்வே இன்னும் அடங்க மறுக்க, இதில் இதில் வேறா? சற்று தவித்துதான் போனாள்.

அவள் நெருங்கி வரவே.., அவனை ஏறிட்டு பார்க்கவும் வெகுவாய் தயங்கினாள். அவள் முன்னால் வெற்று உடம்போடு இருப்பது அவனுக்கு ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. பொதுவாகவே வயலில் உழைக்க இந்த உடைதான் வசதி.

பெரும்பாலான ஆட்கள் கோமணத்தோடுதான் இன்றும் வயலில் பாடுபடுகிறார்கள். அவன் முகம் பார்க்க தயங்கி, அவன் கால் பார்க்க, சேற்றில் புதைந்து, கணுக்கால் தெரிய, அவன் நின்ற கோலம், அதைவிட மூச்சடைக்க வைத்தது.

அவனிடம் சட்டென ஒரு பரபரப்பு தெரிய, வேகமாக அவன் அசைவது தெரிந்தது. ‘ஏன் இப்படி..? ஏதாவது என்னிடம் சொல்கிறானா?’ எண்ணியவள் அவன் முகம் பார்க்க, நிஜமாகவே ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

“கீர்த்தி.., கொஞ்சம் சீக்கிரம் வா..” அவன் அழைப்பது புரிய வேகமாக அவனை நெருங்கினாள்.

“கீர்த்தி.., தேனீ கொட்டிடுச்சு.., அதோட கொடுக்கு இருக்கு பார்.., சீக்கிரம் எடு. கை முழுக்க சேறா இருக்கு.., என்னால் எடுக்க முடியலை.., கூடவே என் விரல்ல நகமும் இல்லை..” அவன் படபடத்தான்.

“என்ன.., தேனீ கொட்டிடுச்சா?” பதைத்தவள், தன் மொபைல் கேமராவை வேகமாக அங்கே இருந்த வரப்பில் வைத்துவிட்டு விரைந்தாள்.

அவளது கால் சற்று வழுக்க, “கீர்த்தி பாத்து வா..,
விழுந்துடாதே..” அப்பொழுதும் அவளது பாதுகாப்பே
பிரதானமாக இருந்தது.

அதோடு.., மேலும் அவனைச் சுற்றி இரண்டு மூன்று தேனீ
வட்டமிட, அவற்றை கைகளால் விரட்டிக் கொண்டிருந்தான்.

“இதுங்க எங்கே இருந்து வந்ததுன்னு தெரியலையே..”
வாய் அதன் போக்கில் புலம்ப, அவனை நெருங்கிய கீர்த்தி,
தன் ஷாலால் அவற்றை விரட்டியவள், அதையும் கீழே
வைத்துவிட்டு, போனாள்.

“எங்கே..? எங்கே கொட்டிவிட்டது..?” அவள் கண்கள்
அவனை வேகமாக அலசியது.

“இங்கே..” அவன் இடதுபக்க நெஞ்சின் அருகே அவன்
சுட்டிக் காட்ட, ஏற்கனவே அவன் அதை எடுக்க முயற்சி
செய்ததால் ஏற்பட்ட சேறு அவன் நெஞ்சின் முடியில் சற்று
ஒட்டியிருந்தது.

இத்தனை வருடங்களில், அவனாக அவளை
தொட்டிருக்கிறானே தவிர, அவளாக அவனைத் தொட்டது
இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்ததுதான்
முதல் முறை. அதுவும் ஒரு நொடிதான். அப்பொழுதுதான்
அவள் செய்த காரியம் புத்திக்குள் உறைக்க,

“நான் சென்னை போகலை..” உரைத்துவிட்டு ஓடியே
போயிருந்தாள்.

இன்று.., அவனது அருகாமையும், வெற்று நெஞ்சும்..,
அவளை படபடக்க வைக்க, அவனைத் தொடவே சற்று
நடுங்கிப் போனாள்.

“கீர்த்தி சீக்கிரம்.., அதை உடனே எடுக்கலன்னா இன்னும்
வலி அதிகமாகும்” அவன் புலம்ப, அப்பொழுதும் அவள்
தயக்கம் பார்த்தவன், “ஓ.., சேறா இருக்கா..” பதட்டத்திலும்
அவன் முகத்திலேயே பார்வையை பதித்திருந்தவள்,

“எதையாவது உளறாதீங்க..” அவனை கடிந்து கொண்டு, சற்று நடுங்கும் வலக்கரத்தால் முதலில் சேற்றை துடைத்தவள், இடக்கை நகத்தின் உதவியால் அந்த கொடுக்கை பிடுங்கி எடுத்தாள்.

அவள் பிடுங்கி எடுக்கும் வரைக்கும் வேறு கவனமின்றி இருந்தவன், அவள் எடுத்த பிறகு, அவ்வளவு நெருக்கத்தில் தெரிந்த அவளது மதி முகத்தில் வீழ்ந்து போனான்.

அவளை அப்படியே இழுத்து கட்டிக்கொள்ள கைகள் இரண்டும் பரபரக்க, முயன்று தன்னை கட்டுப்படுத்தினான். அவளுக்கோ.., வியர்வையில் குளித்திருந்த அவன் தேகமும், அவனது அந்த முரட்டுத் தோற்றமும், அவளை தடுமாறச் செய்தாலும், தேனீ கொட்டிய இடத்தில் ஏற்பட்ட மெல்லிய வீக்கம்.., அவளை பெரும் கவலை கொள்ளச் செய்தது.

“அன்பு.., கொஞ்சம் வீங்கிடுச்சே.., ரொம்ப வலிக்குதா? வாங்க ஹாஸ்பிடல் போகலாம்..” படபடத்தாள்.

“கீர்த்தி..” அவன் சற்று உரக்க அழைக்க, அப்பொழுதுதான் அவன் முகம் பார்த்தவள், அதில் தெரிந்த பாவனையில் ஒரு நொடி தடுமாறிப் போனாள்.

அவனோ.., “அந்த மோட்டார் ரூமுக்குள்ளே சுண்ணாம்பு டப்பா இருக்கும் எடுத்துட்டு வா..” அவன் உரைக்கவே அவள் உள்ளே சென்று எடுத்து வந்தாள்.

அவன் வயலை விட்டு வெளியே வர முயல, “இதை என்ன செய்யணும்?” புரியாமல் கேட்டாள்.

“பக்கத்திலேயே வெற்றிலை இல்ல..” அவன் கேலியாக கேட்க, “ஓ.., நான் கவனிக்கலை” அவள் திரும்பிச் செல்ல முயல, சட்டென அவளுக்கு முன்னால் கை நீட்டி தடுக்க, வேகமாக அவன் முகம் பார்த்தாள்.

சிரிப்பில் விரிந்த அவன் இதழைப் பார்த்த பிறகுதான், அவன் கேலி செய்கிறான் என்பது புரிய, அவனை முறைத்தாள். அவள் முறைக்கவே இன்னும் அதிகமாக சிரித்தவன், “கொஞ்சம்போல எடுத்து போட்டு விடு..” அவன் உரைக்க, மீண்டும் அவளுக்குள் சிறு பிரளயம்.

“பத்திரமா இருக்க மாட்டியா அன்பு..?” மெல்லிய கவலை அவளிடம்.

அதை கவனித்தவன், “இனிமேல் நான் பத்திரமா இருக்கணும்னா என் அளவுக்கு பீரோ கூட இருக்காதே என்ன செய்யலாம்?” அவன் கேலியாக வினவ, அவன் கேலியில் சிரித்துவிட்டாள்.

“இங்கே வந்த உடனே ரொம்ப குறும்பாயிடுச்சு உனக்கு..” அவனை அவ்வளவு சந்தோஷமாக இதற்குமுன் பார்த்ததாக நினைவே இல்லை. சென்னையில் கூட ஒரு சிறு தயக்கம் அவன் முகத்தில் இருக்கும். இங்கே.., சந்தோசம் மட்டுமே நிறைந்திருந்தது.

“சுண்ணாம்பை போடு..” அவன் உரைக்க, “எரியாது..?” முகத்தில் கவலையும் பயமும் போட்டிபோட வினவினாள்.

‘ஸ்...சப்பா.., முடியலை..’ மனதுக்குள் எண்ணியவன், “நாக்கில் பட்டால்தான் எரியும், உடம்பில் போட்டால் எரியாது..” அவளுக்கு புரிய வைக்க, அதன் பிறகே விரலில் மெதுவாக எடுத்து.., அந்த வீக்கத்தில் வைத்து விட்டாள்.

நிச்சயம் அவள் விரல்கள் சற்று நடுங்கித்தான் போனது. அந்த நெருக்கம்.., முகத்தை அழுத்தமாக அவன் நெஞ்சில் புதைத்துக் கொள்ளும் வேகம்.., பார்வையை அவன் முகத்துக்கு திருப்பவே இல்லை. எங்கே, கண் வழியாக தன் நினைப்பை கண்டுகொள்வானோ என்ற அச்சம்.

அவனோ.., இமைக்காமல் அவள் செய்கையை பார்த்துக் கொண்டிருக்க, ‘பார்வையாலேயே முழுங்கிடுவான் போல..’

எண்ணியவளால் அந்த நேரத்தின் கனத்தை தாங்க முடியவில்லை.

பின்னர் ஒரு வழியாக அது முடிய, “இப்படியெல்லாம் ஆகுமா?” அந்த நேரத்தில் எதையோ பேசி தப்பிக்க முயன்றாலும், அவள் குரலில் இருந்தது கவலை மட்டுமே.

“கீர்த்தி.., இதெல்லாம் எதுவுமே இல்லை. பூச்சி கடிக்கிறது, தேனீ கொட்டுறது, பாம்பு கடிக்கிறது எல்லாம் இங்கே சகஜம்” அவன் உரைக்க, அதிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவள் கண்களில் பயத்தை பார்த்தவன், “ரிஸ்க் இல்லாத வேலை என்று எதுவுமே கிடையாது கீர்த்தி. இங்கே இருக்கும் பாம்புகளுக்கு விஷம் கூட கிடையாது. அப்படியே கடித்தாலும் அது இரைக் கடியாகத்தான் இருக்கும். பயப்பட எதுவும் கிடையாது..” பொறுமையாக சொல்லி அவள் பயத்தை போக்கினான்.

அவன் சொல்வதை அமைதியாகக் கேட்டவள், “நம்மளோட வந்த கருப்பனை எங்கே..?” மரத்தடியில் பார்வையை செலுத்தினாள்.

“விளைந்த காட்டுக்குள்ளே வரக் கூடாதுன்னு சொல்லி வச்சிருக்கேன். பக்கத்து தோப்புக்குள் போயிருக்கும். நீயும் வேண்ணா போ.., நான் இங்கே இருக்கும் களையை பாத்து பதமா பிடுங்கிட்டு வர்றேன்..” அவன் உரைக்க, அவன் வயலில் வேலை செய்ய, எவ்வளவு நேரம்தான் அவளும் ஒரே இடத்தில் இருப்பது? வரப்பில் நடந்து வெளியேறினாள்.

வயலுக்கு சற்று தள்ளி ஒரு வாழைத்தோப்பு இருக்க, அதன் அருகில் கருப்பன் மேய்வது தெரிந்தது.

‘நீ அங்கே இருக்கியா..?’ கேட்டவள், அதைத் தொடர்ந்து செல்ல, அதுவோ, மேலும் முன்னேறியது.

அதைப் பிடிக்கப் போகையில்.., சட்டென அவளுக்கு எதிரில் ஒரு புல்லட் வந்து நின்றது. திடுக்கிட்டுப் போனாள். சற்று கோபமாக வண்டியில் இருந்தவனை முறைக்க, அவனோ அதை கண்டுகொள்ளாமல், “செல்வம் வீட்டுக்கு பட்டணத்து புள்ள வந்திருக்குன்னு சொன்னாக. நான் இம்புட்டு அழகா ஒரு புள்ளையை எதிர்பார்க்கலையே” அவன் கண்கள் சற்று விஷமமாக அவளைத் தீண்டியது.

“ஹல்லோ.., யார் நீ..? புதுசா பாக்குற பொண்ணுகிட்டே இப்படித்தான் பேசுவாங்களா?” கோபமாக கேட்டவளின் பார்வை, அவன் அமர்ந்திருந்த பைக்கில் நிலைத்தது.

‘ஒருவேளை.., இது அவரோடதா?’ தன் சிந்தையின் போக்கு அவளுக்கே தெரியவில்லை.

அவள் பார்வை பைக்கில் பதியவே.., “புல்லட் புடிச்சிருக்கா? ஒரு ரவுண்ட் வர்றியா?” அவள் கையைப் பிடிப்பதுபோல் வர,

“கருப்பா..” வீறிட்டாள். கருப்பன் பாய்ந்து வர, அதே நேரம்.. அங்கே வந்தான் அன்பு. அவன் எப்படி வந்திருப்பான் என்பதை அறிய பிரம்மாதமான மூளை எதுவும் தேவையில்லை. புல்லட் சத்தம் கேட்ட உடனே அவன் கீர்த்தியைத் தேடித்தான் ஓடினான்.

ஓடிவந்த கருப்பனைப் பார்த்து ‘நில்’ என கை காட்டியவன், “என் புல்லட் அவளுக்கு பிடிக்காமல் போகுமா பூமணி..?” கேட்டவன், அவனையும் காளையையும் ஒரு பார்வை பார்த்தான்.

அவள் கருப்பனை அழைத்தபொழுதே திடுகிட்டவன், அது வந்த வேகத்தில் மிரண்டே போனான்.

அதைக் கண்டுகொள்ளாமல், “உனக்கு கவிதா விஷயத்தில் ஏற்கனவே சொல்லியிருக்கேன்.., என் வீட்டு பொண்ணுங்க கிட்டே வாலாட்டினால்.., நான் பேச மாட்டேன்.., என்

காளைதான் பேசும்னு. நீ கேக்க மாட்டேங்கறியே..” கேட்டவனது கரம், அழுத்தமாக அவன் தோள்மேல் பதிந்தது.

“ஒரு விஷயம் தெரியுமா..? மாடு முட்டி செத்தா கேஸ் கூட கிடையாது. மாட்டை அரஸ் பண்ணவும் முடியாது..” சற்று சிரித்த முகமாக இருந்தாலும், அன்புவின் கண்களில் தெரிந்த கனல்.., கீர்த்தியையே அச்சப்படுத்தியது.

கூடவே அவனது பேச்சும் சேர்ந்துகொள்ள, இதை எப்படி எடுக்கவென்றே அவளுக்குத் தெரியவில்லை. ஏதோ தன் பாதுகாப்புக்காகத்தான் கருப்பனை அழைத்தாள். அதுவும் அன்பைக் கூப்பிட்டு, எதுவும் பிரச்சனை ஆகிவிடக் கூடாது என்பதாலேயே அவ்வாறு செய்தாள்.

‘பார்த்தால்.., இவர்களுக்குள் ஏற்கனவே பிரச்சனை இருந்திருக்கும் போல..’ எண்ணியவள் அவர்களையே பார்த்தாள்.

“ஏய் என்ன மிரட்டுறியா?” கீர்த்தியின் முன்னால் தலையிறக்கம் கொள்ளாமல் சிலிர்த்தான் பூமணி.

“மாப்ள.., என்ன மிரட்டுறதா..? ஹா..ஹா.., இப்போ ம் ன்னு சொல்லு.., கருப்பன் ரெடியாத்தான் இருக்கான். இன்னொரு விஷயம் தெரியுமா? கருப்பன் கிட்டே சொல்லித்தான் வச்சிருக்கேன்.., உன்னை எங்கே பாத்தாலும், சான்ஸ் கிடைச்சா..”, அவன் கண்களில் தெரிந்த விபரீத ஒளியில், அவன் என்ன சொல்லி வைத்திருக்கிறான் என்பதை அவனால் தெளிவாக உணர முடிந்தது.

“என்ன கருப்பா..?” காளையிடம் கேட்க, அதுவோ புல்லட்டை சுற்றி வந்தது.

கருப்பனைப் பற்றி அவனுக்கு முன்பே தெரியும் என்பதால், நிச்சயம் பயந்தே போனான். அதுவுமில்லாமல், ஒருமுறை லேசான கைகலப்பு அன்புவோடு வந்தபொழுது, கருப்பன்

அவனை முட்டித் தள்ளியதை அவன் இன்னும் மறக்கவில்லையே.

“வேண்டாம் செல்வம்.., எங்க அப்பாகிட்டே சொன்னால் என்ன நடக்கும்னு தெரியுமா?” பயத்தோடு பின்வாங்கினான்.

“அவர்கிட்டேயே சொல்லுவோம் வா..” அன்பு அசால்ட்டாக உரைக்க, தன் தந்தையிடம் போனால் என்ன தீர்ப்பு கிடைக்கும் என்பதை உணர்ந்தவன், அதற்கு தயாராக இருக்கவில்லை.

“நான் உன்னை பிறகு பாத்துக்கறேன்..” அவன் உறும,

“உன்னை நான் இனிமேல் என் கண்ணு முன்னாடி பாக்கவே கூடாது. அது மட்டுமில்லை..”, அவன் சட்டையைப் பிடித்து புல்லட்டில் இருந்து இறக்கியவன், “எனக்கு என் புல்லட் வேணும்.., நீ பொடிநடையா போ.., துணைக்கு வேண்ணா கருப்பனை அனுப்பவா?” அவன் கேட்க, அங்கிருந்து வேகமாக அகன்றிருந்தான்.

அவன் செல்லவே.., சற்று பயத்தில் நின்றிருந்த கீர்த்தியைப் பார்த்தவன், “அவன் எல்லாம் ஒரு ஆளே கிடையாது விடு.., அவனால் ஒண்ணும் பண்ணவும் முடியாது. இதுக்கெல்லாம் நீ பயப்படாதே..” அசால்ட்டாக உரைக்க, அப்பொழுதுதான் சற்று தெளிந்தாள்.

“நீங்க கருப்பனை தடுக்கலைன்னா என்ன ஆகியிருக்கும்?” அவள் கேட்க,

“சும்மா லேசா காட்டியிருப்பான் வேற என்ன..? அப்படித்தானே கருப்பா..?” அவன் கேள்விக்கு, பல்லைக் காட்டி பயங்கரமாக சிரித்தது.

‘எல்லாரும் சரியான கேடிங்க.., சிரிப்பை பார்..’ கருப்பனை ஆசையாக வருடினாள். அதுவும் அவளிடம் குழைந்தது. அதைப் பார்த்தவனது முகத்தில் அவ்வளவு நிம்மதி.

‘நிச்சயம் இந்த இடம் அவளுக்கு பழகிவிடும்’ எண்ணிக் கொண்டவன், அதன் பிறகுதான் தன் புல்லட் பக்கம் பார்வையை திருப்பியவன், அதை ஆசையாக வருடினான்.

பூமணி தன் வண்டியை நன்றாகவே வைத்திருக்கிறான் என எண்ணமிட்டுக் கொண்டான். அவன் செய்கையை உணர்ந்தவள், மெதுவாய் அவன் தோள் தொட, “எங்க அம்மா வாங்கிக் கொடுத்தாங்க” அவன் குரல் கரகரத்தது.

“சரி வா.., அப்படியே நம்ம தென்னந்தோப்பு பக்கம் போயிட்டு வரலாம்..” உரைத்தவன் புல்லட்டில் ஏறி அமர்ந்தான். அவனை அதில் பார்க்க அப்படி ஒரு பொருத்தமாக இருந்தது.

“ஏறு..” அவன் உரைக்க, அவனோடு ஏறிக்கொள்ள கொள்ளை ஆர்வம் இருந்தாலும், அரைக்கால் சட்டையும், உள் பனியனும் மட்டும் போட்டிருந்த அவன் தோற்றம் சற்று தடுமாறச் செய்ய, அதை அவனிடம் மறைத்தவள் ஏறி அமர்ந்தாள்.

அவளை தோப்புக்கு அழைத்துச் சென்றான். அங்கே வேலை செய்த அனைவரும் அவர்களை ஆர்வமாகப் பார்க்க, கயிறு திரிக்கும் வேலையை எப்படி என ஒவ்வொன்றாய் விளக்கினான்.

அன்று ஒரு நாள் முழுவதும் அவனோடு இருக்க, இரவில், அவள் கொடுத்த ஐடியாவை கேட்டவன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

*****

# பகுதி – 23.

கீர்த்தியை அழைத்துக் கொண்டு அவன் ஊரை சுற்றிக் காட்ட, அவனது தோட்டம், தோப்பு, வயல், மாட்டுப் பண்ணை, பால் வியாபாரம் என அனைத்தையும் பார்த்தவளுக்கு அடக்க முடியாத ஆச்சரியம்.

அவை அனைத்தையும் ஒற்றை ஆளாக அவன் நிர்வகித்த விதம், அவனிடம் ஒட்டிக் கொண்டிருந்த கம்பீரம்.., அவளது வியப்பு எல்லை கூடிக் கொண்டே சென்றது.

அனைத்தையும் அவன் பார்த்துக் கொண்டாலும், வரவு செலவைக் கவனிக்க சற்று சிரமப் பட்டான். பாரிஜாதமும் சரி, மாரிமுத்துவும் சரி, வந்தால் லாபம், வரவில்லை என்றால் நஷ்டம் என்ற அளவிலேயே விவசாயம் செய்து வந்தார்கள்.

அவனால் அவ்வாறு இருக்க முடியவில்லை. தோட்டம், தோப்பு, வயல், பண்ணை என ஒவ்வொன்றுக்கும் செலவழிக்கும் பணம் முதல், வரவு வரும் அனைத்தையும் சற்று குறித்து வைத்தான்.

ஆனால், அனைத்தையும் ஒரு ஆடராக இல்லாமல், சற்று குழப்பி, ஒரே நோட்டில் எழுதி வைக்க, அதைப் பார்த்தவள், அன்று கடைக்குப் போகவேண்டும் என உரைக்க, அங்கே வந்த நான்கு நாட்களில், அவளுக்கு எதுவும் வேண்டுமா என்று கூட கேட்கவில்லையே என வருத்தப்பட்டான்.

“சாரி.., சென்னையில் எல்லா இடமும் நீயாகவே போய் பழக்கம்.., இங்கே..” அவனுக்கு சற்று கவலையாகப் போயிற்று.

“அன்பு, சென்னையில் கூட என் உலகம் ரொம்ப சின்னதுதான். என்னோட ரூம், படிப்பு.., அவ்வளவுதான். ஆன்லைன் ப்ரண்ட்ஸ், ப்ரண்ட்ஸ்.., இப்படி யாரும் எனக்குக்

கிடையாது. ஷாப்பிங், சினிமா.., இப்படி விரும்பி எங்கேயும் போனது கிடையாது.

“அப்படியிருக்கும்போது நீ எதுக்கு இவ்வளவு பீல் பண்றன்னே எனக்குத் தெரியலை. எப்பவுமே என்னால் தனியா எங்கேயும் போக முடியாது. கார் எடுக்க டிரைவர் வேணும்.., புரியுதா?” தன்னால் இந்த கிராமத்தில் இருக்க முடியாது என அன்பு தவிப்பதை நன்றாகவே உணர்ந்து கொண்டாள்.

எனவே, அவனுக்கு தன் நினைப்பை தெளிவாக்கிவிடும் பொருட்டே அவ்வாறு செய்தாள். கூடவே.., “இங்கே கூட நான் தனியா போக முடியுது. அதுவும் கருப்பன் இருந்தால் வேற கவலையே வேண்டாம். அவனால் பேச முடியாது, என்னால் கேட்க முடியாது. பட்.., ரெண்டுபேரும் அவ்வளவு பேசிக்கறோம். அது தெரியுதா?” உள் முற்ற படிக்கட்டில் இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

இப்பொழுது உழும் வேலை இல்லை என்பதால், கருப்பன் வீட்டில் சும்மாதான் இருந்தான். அன்பு வெளியே செல்லும் வேளைகளில் அதோடு உரையாடுவதுதான் அவளது வேலையே.

அன்றைக்கு அப்படித்தான்.., அதற்கு வைக்கோல் கொடுத்தவள், “கருப்பா, உங்க அண்ணாவை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு. உனக்கு அண்ணியா நான் இங்கேயே வந்துடவா..?” அவள் கேட்க, “ம்மா..” என குரல் கொடுக்க, அதைக் கேட்டவளுக்கு அவ்வளவு குஷி.

மாடு பொதுவாக உரக்கவே குரல் கொடுக்கும் என்பதால், அவளுக்கு அது தெளிவாகவே கேட்டது.

“உங்க அண்ணாவுக்கு என்னை புடிக்குமா? உன்கிட்டே சொன்னாங்களா?” அவள் கேட்க, அது வேகமாக தலையசைக்க, உற்சாகம் குமிழியிட்டது.

தாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சொல்லிகொள்ளவில்லை என்றாலும், இருவர் மனதிலும் மற்றவர் இருப்பதை அறிந்துதான் இருந்தார்கள். அவளுக்கு தான் எப்படி சொல்வது என்ற தயக்கமென்றால், அவனுக்கோ, தான் ஒரு விவசாயி.., அவளோ பெரும் நிலையில் இருப்பவள்.

அவளால் தன்னோடு இங்கே வந்துவிட முடியுமா? வாழ முடியுமா? எனும் மிகப்பெரும் வினா. கூடவே.., அவளது பெற்றவர்கள் இதற்கு எப்படி ஒத்துக் கொள்வார்கள் என்ற தயக்கம்.., அவள் இல்லாமல் முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டாலும், முடிவெடுக்க முடியாமல் திணறிப் போனான்.

அவள் கேட்டுக் கொண்டதுக்கு இணங்க.., பக்கத்து ஊரில் சந்தை கூடும் இடத்துக்கு அழைத்துச் செல்ல, சில லாங்சைஸ் நோட்டுக்களை வாங்கியவள், வீட்டு நடு முற்றத்தில் வைக்க ஒரு அழகான பெரிய கிண்டி வாங்க, புரியாமல் அவளைப் பார்த்தாலும் அவளைத் தடுக்கவில்லை.

கருப்பனுக்கு கூட கழுத்தில் கட்ட, சலங்கையோடு கூடிய கழுத்துப் பட்டை வாங்க, மனதுக்கு அவ்வளவு நிறைவாக இருந்தது. சந்தையில் அவனைப் பார்த்த சிலர், “செல்வம் தானே.., என்னப்பா ஆளே அடையாளம் தெரியாம மாறிப் போய்ட்ட. இது யாரு பொஞ்சாதியா? பத்திரிகை வைக்கவே இல்லையேப்பு..” ஒருவர் மாற்றி மற்றவர், இதையே வேறு விதத்தில் கேட்க, திணறித்தான் போனான்.

சிலரிடம்.., “உங்களுக்கு சொல்லாமையா..?” என மையமாக இழுத்துவிட்டு அவ்விடம் விட்டு அகன்றான். பைக்கில் ஒரு பெண்ணை உடன் அழைத்து வந்தால், ஊருக்குள் என்ன பேசிக் கொள்வார்கள் என்று அவனுக்குத் தெரியாதா என்ன?

தெரிந்து தானே அவளை கூட்டிக்கொண்டு ஊர் சுற்றுகிறான். அவள் இல்லை என்றால், அவன் வாழ்வில் வேறு பெண்ணுக்கு இடமில்லை என்பது அவன் முடிவு செய்த விஷயமாயிற்றே.

வீட்டுக்கு வந்தவர்கள் அனைத்தையும் செட் செய்ய, அந்த நோட்டு புத்தங்கங்களை வைத்துக் கொண்டு, அவன் எழுதி வைத்திருந்த நோட்டையும் எடுத்துக் கொண்டு எழுத உட்கார்ந்துவிட்டள். அவள் செய்வது என்னவென்று புரிந்தும் புரியாமல் விலகிச் சென்றான்.

ஒவ்வொரு நிலத்துக்கும், ஒரு வரவு நோட்டு, செலவு நோட்டு எனப் போட்டு, அனைத்தையும் முடிக்கையில் மாலையாகி விட்டது.

“அன்பு.., இதைப் பாருங்க..” அவனிடம் அவற்றை கொடுக்க, அதை வாங்கிப் பார்த்தவனுக்கு அவ்வளவு சந்தோசம்.

“கீர்த்தி, நான் இப்படித்தான் நினைத்தேன்.., ஆனாடைம் கிடைக்கலை. பட், உன்னோட வொர்க் சூப்பர்..” ஒரு நொடி அவளை இழுத்து அணைத்து விடுவித்தவன்,

“மாமா.., அத்த..” அழைத்தவாறு அங்கிருந்து வெளியேறினான். அவன் செய்கையில் செயலற்றுபோய் நின்றது என்னவோ அவள்தான்.

அவர்களும் அவளது வேலையைப் பாராட்ட, “உனக்கு ஏத்தவ செல்வம்.., இடமறிஞ்சு வேலை செய்யிறா..” பாராட்டவும் தயங்கவில்லை.

அத்தோடு.., தேங்காய் வியாபாரத்தோடு.., தேங்காய் எண்ணெய் அவர்களே தயாரித்து விற்கலாம் என உரைத்தவள், கூடவே.., வாழை இலையை அவர்களே நேரடியாக சில ஹோட்டல், மண்டபம் இவைகளுக்கு சப்ளை செய்ய முடியுமா எனவும் கேட்க, அவற்றைப் பற்றி யோசிப்பதாக முடிவெடுத்தான்.

அந்த இடத்துக்குள்ளாக அவள் பொருந்திப் போகும் இந்த செய்கை.., அவளை இன்னும் அதிகம் அவனுக்குப் பிடித்தது. அவளது வலக்கரத்தில் இருந்த கட்டு இப்பொழுது இல்லாமல் இருக்க, மெல்லிய கீறலோடு காய்ந்துபோய் அது காட்சியளித்தது.

அவள் கரத்தை பிடித்து, மென்மையாக அதை வருடியவன், "ஏன் கீர்த்தி இப்படி..?" அவனால் அவளது அந்த செய்கையை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. அப்பொழுதும் அவளது பதில் மௌனமாக இருக்கவே, ஒரு பெருமூச்சை வெளியேற்றியவன், இரவு உணவை அவளோடு சேர்த்து உண்டான்.

இரவு நெருங்கவே.., "அத்த.., கவிதா சாயங்காலம் வந்துடுவேன்னு சொன்னா, ஆளையே காணோம்..?" கவலையாகக் கேட்டான்.

"எனக்கும் அதான் தெரியலை, போன் போட்டா எடுக்கவே இல்லையே" மீண்டும் அவளுக்கு அழைக்க, அலைபேசியை எடுக்கச் சென்றார்.

இரவு கவிழ, தன் வீட்டுக்கு வந்தவன், "கீர்த்தி.., தனியா இருந்துப்பியா? கவிதா இன்னைக்கு இன்னும் வரலை.., இல்லன்னா.., அத்தை வீட்டில்.." அவன் கேட்க, வேகமாக மறுப்பாக தலை அசைத்தாள்.

"சரி.., அப்போ நான் வெளியே கதவை தாழ் போட்டுக்கறேன். நீ வெளியே வரணும்னா பின்னாடி கதவை யூஸ் பண்ணிக்கோ.." அவள் அறைக்குச் சென்றதை உறுதிபடுத்திக் கொண்டு வெளியே கதவை பூட்டினான்.

"அத்த.., இந்தா.., சாவியை நீ வச்சுக்கோ.., நான் பம்புசெட்டுக்கு போறேன்.." தோளில் டவ்வலை போட்டவாறு கிளம்பிவிட்டான்.

“செல்வம்.., இங்கன திண்ணையிலாவது படுப்பா..” வாடைக்காற்று அவனுக்கு ஒத்துக்கொள்ளாதே என்ற கவலை அவரிடம்.

“அது சரி வராது அத்த.., யாராவது ஏதாவது சொல்லிட்டா.., ஒரு பேச்சு வந்துடக் கூடாது. நான் அங்கே போறதுதான் சரி..” அழுத்தமாக உரைத்துவிட்டு புல்லட்டை கிளப்பிக்கொண்டு போய்விட்டான்.

ஒரு பெருமூச்சை வெளியேற்றியவர், தானும் வீட்டுக்குள் செல்ல, அப்பொழுதுதான் கவிதா தன் கணவனோடு வந்தாள்.

“பொழுதோட வர மாட்டியா? இப்படி இருட்டுக்குள்ள வர்ற.., வாங்க மாப்ள” அவர்களை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். கவிதாவின் கணவர் உடனே கிளம்பிவிட, பொதுவாக அவன் அங்கே தங்குவது இல்லை என்பதால் அவர்களும் அனுமதித்தார்கள்.

“அம்மா, கீர்த்தி..” வந்தவுடன் அவளைத்தான் கேட்டாள்.

“வீட்ல தனியா இருக்கா. நீ போ..” கீயை கொடுத்து அனுப்ப, கதவைத் திறந்து, வீட்டுக்குள் சென்றாள்.

கீர்த்தியின் அறைக்குச் செல்ல, ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தோளைத் தொட்டவள், “இன்னும் தூங்கலையா?” கேட்டவள், கீழே அமர்ந்து, சிணுங்கும் குழந்தைக்கு பசியாற்றத் துவங்கினாள்.

“தூக்கம் வரலை.., இரு தண்ணி குடிச்சுட்டு வர்றேன்..” உரைத்தவள் வெளியே வர, முன் கதவு திறந்திருக்க, எதிரில் கிடந்த கயிற்றுக் கட்டில் வெறுமையாய் இருப்பதைப் பார்த்தவள், வெளியே வந்து திண்ணையில் எட்டிப் பார்த்தாள்.

அங்கும் அன்பு இல்லாமல் போகவே.., புருவம் சுருக்கியவள், தண்ணீர் குடித்துவிட்டு, வாசல் படியிலேயே அமர்ந்துகொண்டாள். சற்று நேரமாக அவளைக் காணாமல் போகவே, கவிதா வெளியே வந்தவள், அவள் அருகில் அமர்ந்து, “என்ன இங்கேயே உக்காந்துட்டீங்க..?” கேள்வியாக கேட்டாள்.

“அன்புவைக் காணோம்.., அதான்..” அவள் உரைக்க, ‘செல்வம் இங்கே வீட்டில் தூங்க மாட்டார் என்பது இவங்களுக்குத் தெரியாதா?’ திடுக்கிட்டவள் அவளிடம் அதைக் கேட்டாள்.

“என்ன சொல்ற..? அப்போ.., அவரை எங்கே..?” பதை பதைத்தாள். அன்புவை தனிமையில், ஒருமையில் அழைத்து பேசுபவள், மற்றவர்களிடம் பன்மையில் பேசுவதை தன்னை அறியாமலே செய்தாள்.

“மாமா மோட்டார் ரூம்ல.., இல்லன்னா வெளியே படுத்துக்கும்..” கவிதா உரைக்க,

“வயல்லையா..? ஐயோ.., அங்கே பகல்லயே பாம்பு வரும்னு சொன்னாங்க. இப்போ நைட்.., இல்ல.., அவங்களை வரச் சொல்..” அவள் குரலில் அவ்வளவு பிடிவாதம்.

கவிதா பாரிஜாதத்திடம் உரைக்க, அவரும் சமாதானம் செய்ய.., எதையும் அவள் கண்டுகொள்ளவே இல்லை. வேறு வழியின்றி.., அவனது அலைபேசிக்கு அழைக்க, அதுவோ அணைத்து வைக்கப்பட்டிருப்பதாக உரைக்க, சற்று நடுங்கித்தான் போனாள்.

“அம்மாடி.., நாலு நாளா அங்கன தானே படுக்கான்.., இப்போ மட்டும் என்ன?” பாரிஜாதம் கேட்க, “அப்போ, இங்கே.., வெளியே படுத்துக்கலையா?” அதிர்ந்தாள்.

பாரிஜாதம் ஊர் ஜனங்களைப் பற்றி உரைக்க, அதையெல்லாம் அவள் கண்டுகொள்ளவே இல்லை. “நான் வயலுக்குப் போறேன்..” அவள் கிளம்பிவிட, கூடவே..,

“கருப்பா..” அவள் குரலுக்கு அப்பொழுதும் அது தாவி வந்தது.

“கீர்த்தி.., அங்கே ரொம்ப இருடா இருக்கும். வரப்பு எங்கே இருக்கு என்னன்னே தெரியாது. வேண்டாம்..” அவளைத் தடுத்துப் பார்த்தாள்.

“நீ வர வேண்டாம்.., நான் போறேன்..” அவளை விலக்கிவிட்டு நடக்க, அவளை தனியாக அனுப்ப மனமின்றி தானும் அவள் பின்னால் ஓடினாள்.

“மாமாவுக்கு ரொம்ப பழக்கமான இடங்க இது.., அவர் சம்மாளிச்சுப்பார்” என்ன என்னவோ சொல்ல, ஏதாவது அவள் காதில் விழுந்தால் தானே.

“மாமாகிட்டே இன்னைக்கு எனக்கு அடி உறுதி..” வாய்விட்டே புலம்பி அவள் பின்னால் ஓடினாள்.

அன்று நிலவின் ஒளி கூட வெகு குறைவாக இருக்க, கவிதாவே திணறிப் போனாள். கீர்த்தியோ.., பல இடங்களில் விழப் பார்த்து, சம்மாளித்து நடக்க, ஒரு இடத்தில் வழுக்கி விழுந்தே விட்டாள்.

அங்கே இருந்த குத்துக் கல்லில் முழங்கால் இடிக்க.., “அம்மா..” வலியில் சற்று அலறியே விட்டாள்.

“ஐயோ.., இதுக்குதான் சொன்னேன்.., கேட்டீங்களா..?” உரைத்தவள் அவளை தூக்கி நிறுத்த, வலி உயிர் போனாலும், “ஸ்..” பல்லைக் கடித்து பொறுத்துக் கொண்டவள், “போகலாம்..” நடக்க முயல, அது அவளுக்கு பெரும் வலியைக் கொடுத்தது.

“கீர்த்தி.., கால் சுழுக்கிஇருக்கும் போல.., நீங்க உக்காருங்க..?” அவள் யாரிடம் சொல்ல..., கருப்பனின் கழுத்தில் இருந்த கயிற்றைப் பிடித்தவள், தன் எடையை முழுதாக் அதனிடம் சாய்த்து நடக்கத் துவங்கிவிட்டாள்.

“சொன்னா கேக்க மாட்டேன்னு அடம் பிடிக்கறாங்களே.., நான் என்னத்த செய்ய?” அவளுக்கு பயம் பிடித்துக் கொண்டது.

அவள் விழுந்துவிடவே.., கருப்பன்.., “ம்மா.., ம்மா..” என விடாமல் கத்த, அது கொடுத்த ஒலி, அந்த பிரதேசத்தில் எதிரொலிக்க, அதைக் கேட்ட அன்பு கயிற்றிக் கட்டிலில் இருந்து எழுந்தே விட்டான்.

‘கருப்பன் சத்தம் மாதிரி இருக்கு..’ தன் சட்டையை மாட்டிக்கொண்டு கிட்டத்தட்ட பாதையில் ஓடினான்.

இருளில், மசமசப்பாக அங்கே இவர்கள் இருப்பது தெரிய, “கருப்பா.., கவிதா, கீர்த்தி..” அழைத்தவன் விரைந்தான்.

“ஏய்.., இந்த இருட்டுக்குள் இங்கே என்ன பண்ற..? கவிதாவிடம் கத்தினான்.

“மாமா.., என்ன பொறவு வையலாம்.., கீர்த்தி கீழே விழுந்துட்டாங்க.., அவங்களைப் பாரு..” தன்மேல் இருந்த கவனத்தை அவள்மேல் திருப்பினாள்.

“என்ன.., விழுந்துட்டாளா..? நீ எதுக்குடி அவளை இந்த நேரம் இங்கே கூட்டி வந்த..?” அதற்கும் அவளிடமே எரிந்து விழுந்தான்.

“ஆமா.., நான் கூட்டி வரப்போறேன்.., என் வாயில நல்லா வந்துடும்.., சொல்லச் சொல்ல கேக்காமல் அவங்க கிளம்பி வந்தா அதுக்கு நான் பழியா?” அவளும் கத்தினாள்.

“இந்த வாய் மட்டும் உனக்கு இல்லன்னா..” அவர்கள் வழக்காடுவது இருட்டில் கீர்த்திக்கு முழுதாக புரியவில்லை என்றாலும், அந்த மயான அமைதியில் அவர்கள் பேசுவது அவளுக்கும் கேட்கவே செய்தது.

“அன்பு.., அவளை திட்டாதீங்க.., நான்தான் வந்தேன்..” பல்லைக் கடித்துக் கொண்டு அவள் உரைக்க, சட்டென

அவளை கைகளில் அள்ளிக் கொண்டான்.

அதிர்ச்சி என்பது வெகு சாதாரண வார்த்தையாகத் தெரிந்தது கீர்த்திக்கு. அவன் இப்படிச் செய்வான் என்பதை ஒரு சதவீதம் கூட எண்ணியிராதவள், அதிர்ச்சியில், இரு கைகளால் அவன் கழுத்தை வளைத்தவள், அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

“கவிதா.., வீட்டுக்குத்தான் போகணும். பம்பு செட் லைட் வேற பீஸ் போய்டுச்சு. புல்லட் வேற தோப்புக்குள் நிக்கிது.., இப்போ அங்கேயும் போக முடியாது. முதல்ல இவளை கவனிக்கணும்..” உரைத்தவன் பாதையில் கிட்டத்தட்ட ஓடினான்.

அவன் செல்லும் வேகத்தில் எங்கே விழுந்து விடுவானோ என்பது ஒருபக்கம் பயமென்றால், கீழே போட்டு விடுவானோ என மறு பக்கம் இன்னும் பயமாக இருக்கவே, முழுதாக அவன்மேல் அப்படியே ஒட்டிக் கொண்டாள்.

அப்பொழுதுதான் தான் இரவு உடையில் இருப்பது வேறு அவளுக்கு தெரிந்தது. வரும் அவசரத்தில் உடை மாற்றக் கூட அவள் நினைக்கவில்லையே. தன் மடத்தனத்தை தானே நொந்து கொண்டாள்.

எவ்வளவு முடியுமோ.., அவ்வளவு அவனோடு ஒட்டிக் கொண்டாள். கால் வலி வேறு ஒரு பக்கம் உயிர் போனது. ஐந்தே நிமிடங்களில் வீட்டுக்கு வந்தவன், ஹாலில் இருந்த பெஞ்சில் அவளை அமர வைத்து, வேகமாக அவளது உடையை மேலேற்றி அவள் காலை ஆராய்ந்தான்.

கீர்த்தியின் இதயம் அவள் கழுத்தில் துடித்தது. இடது காலின் முட்டிக்கு மேலே உடை சென்றிருக்க, இமைகளை இறுக்கமாக மூடிக் கொண்டாள். அவள் நிலை உணர்ந்த கவிதா, சட்டென அங்கிருந்து விலகிச் சென்றவள், கிச்சனுக்குள் சென்று வெந்நீர் வைக்க முயன்றாள்.

அன்புவின் கரங்கள், அவள் கால் மொத்தமும் சோதிக்க, அவனைத் தடுக்கவும் முடியாமல், அவன் சிகிச்சையை ஏற்கவும் முடியாமல் திணறிப் போனாள்.

அவள் கணுக்காலில் சுழுக்கும், வீக்கத்தையும் பார்த்தவன், கால் முட்டி கல்லில் இடித்ததால் ரத்தம் கட்டிபோய் இருப்பதைப் பார்த்தான்.

“கவி.., கால்ல சுளுக்கு இருக்குபார்.., வந்து எடு..” அங்கிருந்தே குரல் கொடுக்க,

“மாமா.., நீயும் சுளுக்கு எடுப்ப தானே.., நீயே எடு.., நான் சூடு தண்ணி வைக்கிறேன்” உள்ளிருந்தே குரல் கொடுக்க, அவனுக்கோ, கீர்த்தியின் வலியைப் போக்குவது என்றே முக்கியமாக இருந்தது.

அவள் தோள் தொட்டு உலுக்கியவன், அவள் விழி திறக்கவே, “கொஞ்சம் வலிக்கும், பொறுத்துக்கோ..” உரைத்தவன், அவள் காலுக்கு அருகில் மண்டியிட, ‘அவன் என்ன செய்யப் போகிறான்..?’ என்பதுபோல் பார்த்திருந்தாள்.

கொஞ்சம் விளக்கெண்ணையை எடுத்து வந்தவன், அவள் காலில் அழுத்தமாக பூசித் தடவ, அதற்கே அவள் கண்களில் கண்ணீர் திரண்டது. அதன் பிறகு, கால் பாதத்தை மெதுவாக சுழற்றி அசைத்தவன், சட்டென இழுக்க, “ஆ.., அம்மா..” அவள் வீறிட்டாள்.

அடுத்த நிமிடம் அவள் அருகில் சென்றவன், அவள் முகத்தை இழுத்து, தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டான். வலி பொறுக்க முடியாமல், அவள் பற்கள் அவன் நெஞ்சை பதம் பார்க்க, கொஞ்சம் கூட அவன் அசையவில்லை.

முழுதாக ஒரு நிமிடம் கடந்த பிறகே அவள் உணர்வுக்கு வர, “ஐயோ.., அன்பு.., சாரி..” தன் கரத்தால் அவன் நெஞ்சை தடவினாள்.

அதை கண்டுகொள்ளாதவன், “இப்போ வலி பரவாயில்லையா..?” கேட்டவன், கவிதா தண்ணீர் கொண்டு வரவே, அதில் கொஞ்சம் உப்பு போட்டு, துணியை முக்கிப் பிழிந்து வெந்நீர் ஒத்தடம் கொடுக்கத் துவங்கினான்.

“அன்பு.., ரொம்ப சுடுது..” குழந்தையாக அவள் புகார் அளிக்க, “இப்போ ஒத்தடம் கொடுக்கலன்னா காலையில் நடக்கவே முடியாது கீர்த்தி.., கொஞ்சம் பொறுத்துக்கோ..” குழந்தைக்கு சொல்வதுபோல் சொல்லி, ஒத்தடம் கொடுத்தான்.

மூட்டிலும் ஏற்பட்ட காயத்துக்கும் ஒத்தடம் கொடுத்தவன், வீட்டில் இருந்த மருந்தை எடுத்து கால் மூட்டில் நன்றாக தேய்த்தவன், காலில் எண்ணெய் போட்டுவிட்டு, அவனது அப்பாவின் ஒரு வேஷ்டியை எடுத்து கிழித்து, அவள் காலுக்கு இறுக்கமாக ஒரு கட்டு போட்டு விட்டான்.

அவளை அப்படியே கைகளில் அள்ளிக் கொண்டவன், அவள் படுக்கையில் விட்டுவிட்டு, “என்னால் தானே இப்படி ஆயிடுச்சு. இந்த இடம்.., உன்னை ரொம்ப காயப்படுத்துதுல்ல..” அவளுக்கு பட்ட அடியை சாதாரணமாக அவனால் எடுக்க முடியவில்லை.

நிச்சயம் அவன் அந்த வார்த்தைகளை முழு மனதோடு சொல்லவில்லை என்று அவளுக்குத் தெரிந்தது. அவன் சொல்லும் அந்த பொய் அவளுக்கு பிடித்தது.

அவன் அப்படிச் சொல்லவே.., அவன் முன்னால் தான் இருக்கும் கோலத்தை கண்களால் சுட்டியவள், ‘எத்தனை நாள் உன்னை நீயே ஏமாற்றிக் கொள்வாய்ன்னு நானும் பாக்கறேன்..’ எண்ணியவள் இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டாள்.

*****

# பகுதி – 24.

ஒரே நாளில் அன்புவின் வீடு அழகாகிப் போன உணர்வு. காலையில் எழும்பொழுதே தன் தேவதையின் தரிசனம். "குட்மார்னிங்.." அவள் உரைக்கையில் நிச்சயம் அது இனிய காலைதான்.

"கீர்த்தி.., ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந்துட்ட? இன்னும் கொஞ்ச நேரம் தூங்கியிருக்கலாமே? கால்வலி எப்படி இருக்கு..?" கேட்டவன் வேகமாக எழுந்து அமர்ந்தான்.

"கால்வலி கொஞ்சம் பரவாயில்லை, நடக்க முடியுது. மூட்டுதான் கொஞ்சம் வலிக்குது.., அதை விடு.., இன்னைக்கு காலையிலேயே தேங்காய் வெட்ட போகணும்னு சொன்னியே.., போகலையா? நானும் வர்றேன்" தன் உடல்நிலையை மீறிய உற்சாகம் அவளிடம்.

அவ்வளவு காலையிலேயே முகம் கழுவி, உடை மாற்றி அவள் தயாராக இருந்தது தெரிந்தது.

"ரெண்டு நாளைக்கு முன்னாடி சொன்னது.., இன்னுமா அதை ஞாபகம் வச்சிருக்க?" ஆச்சரியமானான்.

"இதை ஞாபகம் வைக்கிறதை விட வேற என்ன வேலை? எப்போ போகணும்?" அவள் அதிலேயே இருந்தாள். அவள் வார்த்தைகளில் ஒரு நொடி தடுமாறிப் போனான். இங்கே இருக்கும் வழக்கத்துக்கு அவள் தன்னை வெகு இயல்பாக பொருத்திக் கொள்வதை காண, ஒரு பக்கம் உற்சாகம் குமிழியிட்டது.

"கீர்த்தி, அதான் கால் வலிக்குதுல்ல.., நீ வீட்ல ரெஸ்ட் எடு.., நான் போயிட்டு வர்றேன்.." திண்ணையில் இருந்து எழுந்தான்.

"நான் பெர்மிஷன் கேக்கவே இல்லை.., வர்றேன்னு சொன்னேன்.." நீ அழைத்து செல்லவில்லை என்றாலும்,

நானும் உடன் வருவேன் என்பதுபோல் நின்றாள்.

“மாப்ள.., என்ன காலையிலேயே பஞ்சாயத்து..? தாயி.., நீ என்ன வெள்ளனே எழுந்துட்ட..?” அங்கே வந்த மாரிமுத்து கேட்டார்.

“மாமா.., நீங்களே கேளுங்க. நைட் என்னை தேடி வந்து, வரப்பில் விழுந்து கால்ல சுளுக்கெடுத்திருக்கு. இப்போ என்னன்னா தோப்புக்கு வர்றேன்னு நிக்கறா. நான் என்ன செய்யட்டும்..?” அவரிடமே கேட்டான்.

“என்ன மாப்ள சொல்ற..? விழுந்துட்டாளா? இந்த கவிதா சொல்லவே இல்ல. அமுக்குணி மாதிரி வந்து படுத்துட்டா போல. அடி ரொம்ப பலமா? இப்போ வலி பரவாயில்லையா? பாரியை வேண்ணா தேய்ச்சு விட வரச் சொல்லவா?” வீட்டுக்கு செல்ல திரும்பினார்.

“ஐயோ.., மாமா.., இப்போ வலியெல்லாம் இல்லை.. எனக்கு தோப்பில் தேங்காய் வெட்டுறதை பாக்கணும். நீங்களாச்சும் கூட்டி போங்க..” அன்புவிடம் கண்களால் சிரித்தவள், அவரிடம் கேட்டாள்.

“நான் உனக்கு முறைக்கு சித்தப்பா தாயி..” அவர் திருத்த, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான் அன்பு.

அவன் செய்கையை புரியாமல் பார்த்தவர், “என்னாச்சு மாப்ள..? ஏன்?”.

“மாமா.., இப்போ இந்த விளக்கம் ரொம்ப முக்கியம். போ மாமா.., தோப்புக்கு போகலாம்..” சற்று கடுப்பானான்.

“ஏன் மாப்ள.., இப்போ என்னத்த தப்பா சொல்லிப்போட்டேன்னு விரட்டுற..?” அவர் சிலிர்த்துக் கொள்ள,

“உன்னைய இப்போ யார் சரியா சொல்லச் சொன்னா? சரி.., உன்னை யார் இங்கே பஞ்சாயத்துக்கு கூப்ட்டா..? போ..,

போ..” விரட்டினான்.

அதைப் பார்த்தவள் வாய்விட்டு சிரிக்க, “மாப்ள, நீதானா..” அவர் துவங்கும் முன்னர், அவளது சிரிப்பு அவரை எட்ட, ‘நீ வாடா மாப்ள..’ செய்கையால் காட்டிவிட்டு முன்னால் நடந்தார்.

பாரிஜாதம் கையில் இரண்டு கப்புகளோடு வர, இருவரும் வாங்கிக் கொள்ள, கருப்பனும் அங்கே வந்தது. “அம்மாடி.., கால்ல ஏதோ அடி பட்டுடுச்சுன்னு கவிதா அப்பா சொன்னார். எங்கம்மா..?” கேட்டவர் அவள் காலை ஆராய்ந்தார்.

“கட்டு நல்ல பலமாத்தான் போட்டிருக்கான். அதான் இப்போ நடக்க முடியுது..” அவர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே.., தன் முட்டைக்கண்ணை உருட்டிப் பார்த்த கருப்பன், “ம்மா..” என கத்தியது.

“உனக்கு என்னன்னு கேக்கான் பாரு.., பதில் சொல்லு..” அவர் கீர்த்தியிடம் சொல்ல,

“கருப்பா.., ஒண்ணுமில்லை.., சின்ன அடிதான்.., இங்கே பார்..” கட்டை அதனிடம் காட்ட, தன் மூக்கால் அவள் காலை முகர்ந்து பார்த்துவிட்டு, அவளை உரசிக்கொண்டு நின்றுகொண்டது.

“செல்வம்.., இந்த கருப்பன் கீர்த்தி கிட்டே அப்படி ஒட்டிகிட்டான் பாரு. எங்கே போனாலும் அவ பின்னாடியே ஒட்டுப்புல்லு கணக்கா ஒட்டிகிட்டு போறான். காளையா இருக்கவன்.., பசுமாடு கணக்கா போறாம்டா.., ஊருக்கே ஆச்சரியம்..” இப்பொழுது அவரை மெதுவாக இடித்தது கருப்பன்.

“பாத்தியா.., அதப்பத்தி பேசப்பிடாதாம்.., கோவத்தை பாரேன்..” அதன் முதுகில் ஒரு அடி போட்டார்.

“அம்மாடி.., இந்த காலை வச்சுகிட்டு தோப்புக்கு போய்த்தான் ஆகணுமா? இன்னொரு முறை போகலாமே..” அவளை தடுக்க முயன்றார்.

“இன்னும் ஆறு நாள்தான் இருப்பேன்.., பிறகு எப்படி இதையெல்லாம் நான் தெரிஞ்சுக்கிறது அதான்..” பதில் அவருக்கானது என்றாலும், பார்வை அன்புவிடமே இருந்தது.

‘நைட் நீ மட்டும் அப்படி பேசலாமா..?’ மனதுக்குள் முறுக்கிக் கொண்டாள்.

அவள் அவ்வாறு சொல்லவே, திடுக்கிட்டு அன்புவின் முகம் பார்க்க, அவனோ, அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை. அவனுக்கு அவளைப்பற்றி தெரியாதா என்ன? இதழ் சொல்லும் பொய்க்கெல்லாம் அவன் கவலைப்பட தேவையில்லையே.

“சரி அத்த.., நாங்க கிளம்பறோம்.., எட்டுமணிக்கெல்லாம் வந்துடுவேன்னு நினைக்கறேன்..” உரைத்தவன், கீர்த்தியை அழைத்துக் கொண்டு சென்றான்.

அந்த இருள் விலகாத வேளையில், அவளோடு செல்வது உலகத்தையே வென்ற மகிழ்வைக் கொடுத்தது. அன்பு, கீர்த்தி, அவள் அருகில் கருப்பன்.., என அந்த பாதையில் பயணித்தார்கள்.

மென்மையாக அவள் கரம் பற்றி நடக்க அவன் மனம் தவிக்க, அந்த ஏகாந்தத்தை கலைக்காமல் நடந்தான். கருப்பனோ.., அதிகமாக கீர்த்தியை உரச முயல, அவள் அன்புவின் பக்கம் இடைவெளியின்றி உரசியவாறு நடக்க வேண்டி வந்தது.

‘இந்த கருப்பனுக்கு இருக்க கொழுப்பை பாரேன்..’ அவன் மனதுக்குள் எண்ண, அப்படியொன்றும் விலகிவிடவெல்லாம் அவன் விரும்பவில்லை.

‘இப்படியே வாழ்க்கை முழுவதும் இவனோடு பயணிக்க வேண்டும்..’ அவள் மனம் வேகமாய் வேண்டுதல் வைத்தது.

மெதுவாகவே நடந்தாலும் தோப்பு வந்துவிட, அவர்களுக்கு முன்பாகவே மரம் ஏறும் முனியன் நின்றிருந்தான்.

“முனியா.., ஏறு..” அவனைப் பணித்தவன், அவனோடு இருந்த மற்றவனைப் பார்க்க, அவளுக்கு ஒரு மரச்சேரை எடுத்து வந்து போட்டான்.

“நீ உக்காந்துக்கோ.., நாங்க வேலையைப் பாக்கறோம்..” முனியன் மரத்தில் சரசரவென ஏற, மட்டை, ஓலை, தேங்காய் என ஒவ்வொன்றாக வெட்டத் துவங்கினான். அன்பு சட்டையை கழட்டிவிட்டு, உள் பனியனோடு வந்து நின்றான்.

“மாமா.., நீ ஓலை, மட்டை எல்லாம் எடு.., தேங்காயை நாங்க பாத்துக்கறோம்” அடுத்த நிமிடம், அன்புவும் மற்றவனும் சுறுசுறுப்பாக, அனைத்தும் தனித்தனியாக இடம் சேரத் துவங்கியது. நிற்க கூட முடியாத நிலை. ஒரு மூலையில் துவங்கி.., மறு மூலை வரைக்கும் நடக்க, மற்றவன் தலைச்சுமையாக தேங்காயை கொண்டு வந்து சேர்க்கத் துவங்கினான்.

அன்பு வியர்வையால் குளிக்கத் துவங்க, அவன் உழைப்பை பார்த்தவளுக்கு, கஷ்டமாகப் போயிற்று. பொதுவாகவே வேலை வாங்கியே பழக்கப்பட்டவள் அவள்.., அப்படியிருக்க, அன்பு தானே இறங்கி வேலை செய்வது.., கொஞ்சம் மனதுக்கு பாரமாக உணர்ந்தாள்.

தேங்காய்கள் ஒரு பக்கம் மலைபோல் குவிய, ஓலை, மட்டை என மறு பக்கம் குவியத் துவங்கியது. அவனது வரவு செலவு கணக்கை நேற்றுதான் அவள் எழுதியிருக்க, நிச்சயம் அவன் உழைப்புக்கு அதிக லாபம் அங்கே கிடைக்கவே செய்தது.

அப்படியிருக்கையில்.., அவனே வயலில் இறங்கி வேலை செய்வது.., இந்த வேலையும் சேர, யோசனையாகவே அவனைப் பார்த்திருந்தாள். அதே நேரம், அவனது மாமாவும் அந்த வயதிலும் அலுக்காமல் வேலை செய்ய, எப்படி இவர்களால் முடிகிறது என்பதே யோசனையாக இருந்தது.

அவள் எண்ணம் புரிந்தவர் போல, அவளை நெருங்கினார் மாரிமுத்து. “என்ன தாயி.., ஏதோ யோசனையில் இருக்காப்ல இருக்கு..” தன் தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து முகத்தை துடைத்துக் கொண்டு, அவள் அருகில் சற்று அமர்ந்தார்.

“உங்களுக்கு கஷ்டமா இல்லையா..?” அவள் எதைச் சொல்கிறாள் என ஒரு நொடி சிந்தித்தவர், வாய்விட்டு சிரித்தாள்.

“உங்களுக்கெல்லாம் அந்த கம்பியூட்டர் பொட்டியில தட்டுறது கஷ்டமா இருக்குமா?” அவர் திருப்பிக் கேட்க, அவள் தலை மறுப்பாக அசைந்தது.

“சாகுற வரைக்கும் இந்த கட்டை வேலை செய்யும். சும்மா உக்காந்தா தான் உடம்பு துருப்பிடிச்சு போய்டும். மாப்ள இப்போ வேலை செய்யிறானே, கஷ்டபடுறானேன்னு யோசிக்காதே. இந்த கஷ்டத்தை எல்லாம் தாண்டி வர்றதுதான் வாழ்க்கை.

“இன்னும் ஒரு ரெண்டு வருஷம் அவன் உழைக்க வேண்டி இருக்கும். அதுக்குப் பிறகு.., அவன் மேற்ப்பார்வை பார்த்தா போதும். அதை இப்பவே செய்யலாம், ஆனா.., உழைப்போட அருமையும், பணத்தோட மதிப்பும் அவனுக்கு தெரியாமலே போய்டும்.

“அதான்.., களத்துல இறங்கி, ஒரு மனுஷனா அவனை வேலை பாக்க விட்டிருக்கேன். அப்பத்தான் வேலை வாங்குறப்போ, உழைக்கிறவன் கஷ்டம் தெரியும். கூலி கொடுக்கும்போது அதில் இருக்க நிறைவு தெரியும்.

“இல்லன்னா.., என்னவோ அவன் பணத்தை மத்தவன் கொள்ளையடிச்சுட்டு போறான்னு நினைப்பான். இப்போ அப்படி நினைக்க மாட்டான்.., அவன் உழைப்புக்கேத்த கூலியை நான் கொடுக்கணும்ம்னு யோசிப்பான்..” வாழ்க்கையின் அடி நாதத்தை அவ்வளவு எளிதாகச் சொல்லிவிட, அந்த வில்லேஜ் விஞ்ஞானியிடம் பாடம் படித்தாள் கீர்த்தி.

“அதே மாதிரி.., இந்த மண்ணுல உக்கார, அழுக்குபட்டுடும்னு யோசிக்க கூடாது. நம்ம தாங்குற தாய் இவ.., நாம என்னதான் பாடுபடுத்தினாலும், நமக்கு செல்வத்தை மட்டுமே அள்ளித் தரவ.., சேறு, சகதி.., எல்லாம் பழகணும்.., அப்போதான் இந்த தாயோட அருமை நமக்கு புரியும்..”

“இந்த ஊர்ல இப்போ விவசாயம் செய்யும் தலைமுறை ரொம்ப குறைஞ்சு போச்சு. அதை மீட்கணும்னா, என் மாப்ள ஒரு முன்னுதாரணமா இருப்பான். எனக்கு அந்த நம்பிக்கை இப்போ நிறைய இருக்கு. நிலத்தில் ஒழுங்கா, பாடுபட்டா.., கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்கும்.

“அந்த வித்தை என் மாப்ளைக்கு இருக்கு.., அவனைப் புரிஞ்சு நடந்துக்கற ஒரு துணை, அவனோட உழைப்புக்கு ஈடு கொடுக்குற ஒருத்தி அவனுக்கு துணையா கிடைக்கணும் அவ்வளவுதான்..” தன் கடமை முடிந்தது என எழுந்து வேலை பார்க்க சென்றுவிட்டார்.

இப்பொழுது அன்பு உழைப்பது அவளுக்கு கஷ்டமாக தெரியவில்லை. மாறாக, உழைக்கும் பாடம் படிக்கும் ஒரு மாணவனாகத்தான் தெரிந்தான்.

ஒரு விவசாயத்துக்குப் பின்னர் இருக்கும் ஆட்களின் உழைப்பு. ஒரு தேங்காய் நமக்கு கிடைக்கவே, நாலு ஆட்களின் உழைப்பு தேவையாக இருக்கிறது என்கையில், ஒட்டுமொத்த விவசாயிகளின் உழைப்பை இன்றுதான் நினைவுக்கு வந்தது.

அங்கே அனைத்து வேலைகளும் முடிய, “மாப்ள.., நான் வீட்டுக்கு கிளம்பறேன்.., நீங்க..?” அவனது மாமா கேட்க,

“நான் பண்ணைக்கு போய், பாலை கொடுத்துட்டு வர்றேன் மாமா.., அங்கே ஒரு கண்ணு எப்பவும் இருக்கணும்..” உரைத்தவன், அடுத்ததாக மாட்டுத்தீவன காட்டுக்கு சென்று, அங்கே புல் வெட்டி எடுத்து விட்டு, மாட்டுப் பண்ணைக்குச் சென்றான்.

“சுப்பா.., மாட்டுக்கு புல்லை போடு..” அவன் குரல் கொடுக்க, சுப்பு வேகமாக முன்னால் வந்தான்.

அங்கே மாடுகளை குளிப்பாட்ட, கொட்டகையை சுத்தம் செய்ய, பால் கறக்க என ஆட்கள் இருக்க, அவற்றை பார்வையிட்டவன், தானே பாலை அளந்து சொசைட்டி ஆட்களிடம் கொடுத்தான். கணக்கை அவன் உரைக்க, மறக்காமல், அதை நினைவு வைத்து, நோட்டில் குறிக்க வேண்டும் என குறித்துக் கொண்டாள்.

அங்கே விழும் மாட்டுச் சாணியுரம்.., அதன் உபயோகம் என ஒவ்வொன்றையும் அவன் விளக்க, கவனமாக கேட்டுக் கொண்டாள். அப்பொழுது கவிதா காலை உணவைக் கொண்டுவர,

“நாங்க வீட்டுக்கே வந்திருப்போமே.., நீ எதுக்கு இவ்வளவு தூரம் அலையிற?” அவளிடம் கேட்டவன், அவள் கொண்டுவந்த வாளியை வாங்கிக் கொண்டான்.

“நீங்க வழக்கமா வர்ற நேரம் தாண்டிப் போச்சேன்னு அம்மா கொடுத்து அனுப்பிச்சாங்க. நீங்க சாப்பிடுங்க..” வயலுக்கு வந்தவர்கள், அங்கே இருந்த வேப்பமரத்தின் அடியில் அமர்ந்தார்கள்.

“கவி.., நீயும் வா..” கீர்த்தி அழைக்க,

“நான் வீட்டிலேயே சாப்ட்டேன். பையன் தேடுவான்.., நான் கிளம்பறேன்..” அவள் கிளம்பிவிட்டாள்.

ஒரு வாழை இலையை வெட்டி, வாய்க்காலில் கழுவியவன், மரத்தடியில் அமர்ந்து, அவள் முன்பாக இலையை வைத்தவன் பரிமாறப் போக, அவனைத் தடுத்துவிட்டு, அவனுக்கும் தானே பரிமாறினாள்.

வாளியில் இருந்த இட்டிலிகள் அனைத்தும் நொடியில் மாயமாக, அவன் உண்ணும் அழகை கண் கொட்டாமல் ரசித்துக் கொண்டிருந்தாள். இதழ்களில் மெல்லிய புன்னகை ஒட்டிக் கொண்டது.

கூடவே.., 'சமைக்க கத்துக்கணும்..' மனம் வேகமாக எண்ணியது. அவன் கையில் இருக்கும் இட்டிலி, நொடியில் மாயமாவது.., ஒரு குழந்தை சாப்பிடும் அழகை ஒரு தாய் ரசிப்பாளே.., அப்படி இருந்தது அவள் பார்வை.

பொதுவாக வீட்டில் கவிதாவோ, பாரிஜாதமோதான் உணவைப் பரிமாறுவார்கள் என்பதால், அவளால் அவனை கவனிக்க முடிந்தது இல்லை.

இன்றைக்குத்தான் முதல் முறையாக அவனுக்கு தன் கையால் பரிமாறுகிறாள். இளம் காலை வெயில், அது தெரியாத அளவுக்கு குளுமை, சுற்றிலும் பசுமை வயல்.., அவனோடான தனிமை.., அந்த நொடிகள் அப்படியே நீளாதா என ஏங்கிப் போனாள்.

வாளியில் இருந்த இட்டிலிகள் அனைத்தும் காலியாக, "போதுமா அன்பு.., இல்ல.." தன் இலையில் இருந்த இட்டிலிகளைக் காட்ட,

"நீ வச்சுகிட்டதே மூணுதான். இதில் வேணுமான்னு கேக்கற.., சாப்பிடு. இன்னைக்கு காலையில் பழங்கஞ்சி குடிக்கலையா.., அதான்.., ரொம்ப பசி.." வாய்க்காலில் கை கழுவி வந்தவன், அவள் எதிரில் அமர்ந்தான்.

மரத்தில் சாய்ந்து அமர்ந்தவன், சற்று கால்களை நீட்டிக் கொண்டு, கண்களை மூடிக் கொண்டான். "ரொம்ப டயடா இருக்கா அன்பு.." கனிவாய் கேட்டாள்.

“டயட் எல்லாம் இல்லை.., இப்படி மரத்தடியில், சாப்ட்டு முடித்த பிறகு, அம்மா மடியில் படுத்த ஞாபகம்.., ஜஸ்ட் ஒரு பத்து நிமிஷம், படுத்து எழுந்தால் அவ்வளவு சொகமா இருக்கும் தெரியுமா..?” அவன் குரலில் முதல் முறையாக கவலையைக் காண்கிறாள்.

அவன் அப்பொழுதும் விழி திறக்காமல் இருக்க, அவனுக்குத் தாயாக தான் மாற வேண்டும் என்ற எண்ணம் கிளர்ந்து எழுந்தது. ஒரு பெண்ணுக்குள் இருக்கும் தாய்மையையும், ஒரு ஆணுக்குள் இருக்கும் குழந்தையையும் கண்டு கொள்பவர்களே உண்மையான கணவன் மனைவி.., யாரோ சொன்னது அவள் நினைவிலாடியது.

சற்று தன்னை தேற்றிக் கொண்டவன் இமை திறக்க, தன்னையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்து ‘என்னவென்று..’ தலை அசைக்க,

“உங்க அம்மாவை ரொம்ப மிஸ் பண்றியா..?” கேட்டவளுக்கு சாப்பாடு ஏனோ இறங்கவில்லை.

“ரொம்ப..” உரைத்தவனது கண்கள் மெல்லியதாக கலங்கி விட்டது. ஒரு பெண்ணால் தான் எவ்வளவு அழுதாலும் அதை தாங்கிக்கொள்ள முடியும். ஆனால், மனதுக்குப் பிடித்தவன் கண் கலங்கினாலே அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியாது. அதற்கு கீர்த்தியும் விதி விலக்கில்லை.

“அன்பு.., என்ன இது.., குழந்தை மாதிரி..?” கேட்டவள், வேகமாக எழுந்து அவன் அருகில் சென்றாள்.

“சென்னையில் இருந்த வரைக்கும்.., என் பூர்வீகத்தை மீட்கணும், எங்க அம்மா கனவை நினைவாக்கணும்னு ரொம்ப தைரியமா இருந்துட்டேன். ஆனா, இங்கே வந்த பிறகு.., அவங்க வாழ்ந்த இடம், நின்ன பூமி, உழைத்த காடு..,

“எந்தப்பக்கம் திரும்பினாலும், அவங்க இருக்குற மாதிரியே இருக்கு. ஆனா, அவங்க இல்லை. ஒரு மாதிரி வெறுமையா.., எப்படிச் சொல்லன்னு தெரியலை. என் அத்தை மாமாகிட்டே கூட என்னால் சொல்ல முடியலை. ஏன்னா.., இது எல்லாம் என்னால் தானே..” குழந்தை மாதிரி தன் கண்ணீரை புறங்கையால் அவன் துடைக்க அப்படியே உருகிற்று.

“அன்பு..” அழைத்தவள், அவன் அருகில் மண்டியிட்டு அமர்ந்து, அவன் தலையை மென்மையாக தன் தோளில் சாய்க்க, அவள் இடையை கட்டிக்கொண்டு அழுதே விட்டான்.

தாய் இறந்தபொழுது கூட அவ்வளவு அழவில்லை.., அந்த அழுகை அனைத்தையும் சேர்த்து வைத்து இப்பொழுது அழுதான். வந்த அன்றைக்கு கூட, அனைவரும் அழுதபொழுதும், வைராக்கியமாக இருந்தவன்தான். இப்பொழுது, தனக்கானவள் என்பதால் உள்ளம் திறந்தானா எனத் தெரியவில்லை.

தன் மன பாரம் சற்று இறங்கிவிட அழுதுவிட்டான். “அன்பு.., அவங்க இங்கேதான்.., உங்களோட இருக்காங்க.., அழாதீங்க..” இடக்கரத்தால் மென்மையாக அவன் தலை கோதியவள், தானும் கண்ணீர் வடித்தாள்.

ஒருவர் அணைப்பில் மற்றவர்..., ஒரு சதவீதம் கூட காமம் இல்லாமல், காதல் மட்டுமே.., அன்பு மட்டுமே.., ஆறுதல் மட்டுமே அந்த அணைப்பில் இருந்தது.

எவ்வளவு நேரமோ.., கீர்த்தியின் இட்டிலியை ஒரு காக்கா கொத்திவிட்டு, மற்ற சகாக்களை அழைக்க குரல் கொடுக்க, அப்பொழுதுதான் கலைந்தார்கள்.

இருவரும் பெரிதாக அலட்டிகொள்ளவோ.., சங்கடப்படவோ இல்லை. கீர்த்தி மெதுவாக விலகிக் கொள்ள, தன் சட்டைக் காலரைப் பிடித்து தூக்கி, தன் கண்ணீரை துடைத்துக்

கொண்டான். அப்பொழுது அவனைப் பார்க்க, பள்ளிச் செல்லும் சிறுவனது செய்கை போலவே இருந்தது.

“போச்சு.., உன் இட்லியை காக்கா வாய் வச்சுடுச்சு..” அவன் அதை விரட்ட, “விடுங்க.., எனக்குப் போதும்..” கை கழுவிக் கொண்டாள்.

அன்று முழுவதும் அவனோடு இருந்தவள், காய்கறி தோட்டத்தில் காய் பறிப்பது, அதை எப்படி பறிப்பது.., பறிக்க வேண்டிய காயை கண்டு பிடிப்பது எப்படி.., என அனைத்தையும் ஆர்வமாகவே கற்றுக் கொண்டாள்.

வீட்டுக்கு போய்விட்டு வந்த மாரிமுத்து அவளது செய்கையைப் பார்த்து நிம்மதி கொண்டார். ‘மாப்ள நல்ல புள்ளையைத்தான் தேர்ந்தேடுத்திருக்கான்’ மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

அவள் ஆர்வத்தையும், வேலை செய்யும் விதத்தையும் பார்த்தவன், “கீர்த்தி.., உடம்புக்கு ஒத்துக்காமல் போய்டப் போகுது.., வா..” அவன் அழைத்ததை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

கீர்த்தியின் குறை பரவலாக அங்கே இருப்பவர்களுக்கு தெரிந்த போதிலும், “இம்புட்டு அழகான புள்ளைக்கா இப்படி..?” என்னும் அனுதாப அலையைத்தான் அது அங்கே கிளப்பியது.

அதையும் கீர்த்தியின் அணுகுமுறை விரட்ட, அவள் முகம் பார்த்து அனைவரும் பழகத் துவங்கி விட்டார்கள். சென்னையில் ஒற்றை அறைக்குள் முடங்கிக் கிடந்தவளுக்கு, இந்த வேலை, சூழல், மனிதர்கள், இயற்கை என அனைத்தும் அப்படி பிடித்துப் போனது.

*****

# பகுதி – 25.

கீர்த்திக்கு இதுதான் தனக்கான இடம் என மனம் அடித்துச் சொன்னது. நாட்கள் விடிவதும், ஓடி மறைவதும்.., பெரும் கவலையை அளித்தது. அன்புவை விட்டு சென்னை செல்லவேண்டும் என நினைத்தாலே மனம் அடித்துக் கொண்டது.

அதைவிட, அவர்கள் அன்று கோவிலுக்குச் சென்றிருக்க, அங்கே ஒரு பெண் அன்புவை வைத்த கண் வாங்காமல் பார்க்க சற்று திடுக்கிட்டுத்தான் போனாள். கீர்த்தியின் பார்வை தன் அருகில் இருந்த அன்புவை ஏறிட, அவன் விழி மூடி நின்றிருந்தான்.

தன் அருகில் இருந்த கவிதாவிடம், ‘அவள் யார்..?’ என கேட்கலாம் எனப் பார்க்கையில், கவிதாவும் மற்றவளும் ஜாடையில் ஏதோ பேசிக் கொண்டார்கள்.

‘கவிதாவுக்கு இவளைத் தெரியுமா?’ எண்ணியவளுக்கு, ஒரே ஊரில் இருந்துகொண்டு அவளை எப்படி தெரியாமல் இருக்கும் எனத் தெரியவில்லை.

தீபாராதனை முடிந்து, திருநீர், குங்குமம் பெற்றுக் கொண்டவர்கள், கோவிலை சுற்றிவரத் துவங்கவே, கவிதாவும் அவளும் இணைந்து கொண்டார்கள்.

அது மட்டுமின்றி.., “எப்படி இருக்கீங்க செல்வம்..?” கண்களில் சிறு ஆர்வம் தொற்றிக்கொள்ள அவனிடம் கேட்க, கீர்த்தியால் தாங்கவே முடியவில்லை.

“ரொம்ப நல்லா இருக்கேன் சந்தியா.., நீ? காலேஜ் முடிஞ்சதா? மேலே படிக்கலையா?” வெகு சாதாரணமாகவே உரையாடினான். ஆனாலும், கீர்த்திக்கு உள்ளுக்குள் கோபம் கனன்றது.

அது அவன் பேசினான் என்பதற்காக என்பதை விட, அந்த சந்தியாவின் பார்வையில் தெரிந்த சுவாரசியம், அதைக் கண்டு அங்கிருந்து விலகிச் செல்லாமல், அன்பு நின்றதே அதற்குக் காரணம்.

‘அவன் எப்படி அவளோடு பேசலாம்..?’ அடிமனதில் ஒரு முணுமுணுப்பு.

“அப்பா பிஜி படிக்கதான் சொல்றாங்க.., எனக்குதான் படிக்க விருப்பமில்லை. எப்படியும் கல்யாணம் பண்ணிட்டு, விவசாயத்தை தான் பாக்கப் போறேன்.., அதுக்கு இந்த படிப்பே போதும்..” மென்மையாக சிரித்தவள், அவனைத் தவிர எதையும், யாரையும் கவனிக்கவில்லை.

கவிதா மெதுவாக அவள் கரத்தை அழுத்த, அப்பொழுதுதான் அவள் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

“சந்தியா.., இது கீர்த்தி..” அவளை அறிமுகப் படுத்தி வைத்தாள். அருகில் கீர்த்தி இருக்கையில், அவள் அன்புவிடம் மட்டுமே உரையாடுவது கவிதாவுக்கே ஒரு மாதிரியாக இருந்தது.

“ம்.., தெரியும்.., ஊருக்குள் சொன்னாக..” ‘எனக்கு நீ நிகரா..?’ என்னும் பார்வையை அவளை நோக்கி வீசினாள்.

கீர்த்தியை ஒப்பிடும்பொழுது, அவள் அசரடிக்கும் நிறமென்றால், சந்தியா கொஞ்சம் நிறம் குறைவு அவ்வளவே. மற்றபடி திருத்தமான முகம்.., இடைதொடும் கூந்தல்.., அவன் உயரத்துக்கு சற்று ஈடுகொடுக்கும் விதத்தில் இருந்தாள்.

கீர்த்தியிடம் காணப்பட்ட மென்மையும், நாகரிகமும் அவளிடம் சற்று மிஸ்ஸிங்.., மற்றபடி போட்டிக்கு வா.., என்னும்படியான தோற்றமே.

கீர்த்தியின் பார்வை கவிதாவை நோக்க, “கீர்த்தி.., இது சந்தியா, பண்ணையார் மக, என்னோட ப்ரண்ட்.., நானும் இவளும் பன்னிரண்டாம் வகுப்பு வரைக்கும் சேர்ந்தேதான் படிச்சோம்..” அறிமுகப்படுத்தியவளிடம் சிறு சங்கடம் இழையோடியது.

சந்தியா இப்படி பேசுவாள் என்பதை அவளும் எதிர்பார்க்கவில்லையே. காதல் என்று வந்துவிட்டால், அதைக் காக்க என்ன வேண்டுமானாலும் செய்ய காதலர்கள் தயாராகி விடுவார்களோ.

“ஓ..” கேட்டவள் அன்புவின் பக்கம் நகர்ந்து நின்றுகொண்டாள். ‘உன்னைவிட எனக்குதான் உரிமை அதிகம்’ என்பதுபோல் இருந்தது அவளது செய்கை.

கீர்த்தியின் செய்கையையும், சந்தியாவின் கோப முகத்தையும் பார்த்தவன், உள்ளுக்குள் எழுந்த சந்தோஷத்தை மறைத்துக் கொண்டான். கூடவே, கோவிலுக்குள் எந்த அசம்பாவிதமும் நேர்வதை விரும்பாதவனாக, “சரி சந்தியா, பிறகு பாக்கலாம்..” அவளிடம் உரைத்தவள், கீர்த்தியின் கரத்தை மெல்லியதாக பற்றியவன், “வா..” அழைத்துவிட்டு முன்னால் நடந்தான்.

அவன் செய்கையால் கீர்த்தியின் முகம் மலர, சந்தியாவின் முகம் சற்று சுருங்கித்தான் போயிற்று.

சந்தியா கவிதாவியம் திரும்ப, “என்னடி இது..?” சற்று கோபமாகவே கேட்டாள்.

“மாமா அவங்களை விரும்புறாங்க..” ஒருதலைக் காதல் என்றாலும் அது கொடுக்கும் வலியை அவளும் உணர்ந்தவள் தானே.

“உன்னால் இதை ஏத்துக்க முடியுதா?” அவள் கோபமாக வினவ, ‘திருமணம் முடிந்து, ஒரு குழந்தைக்கு தாயாகிவிட்ட தன்னிடம் இப்படி கேட்கிறாளே என்று இருந்தது அவளுக்கு.

“சந்தியா.., நீயே யோசிச்சு பார்.., மாமா என்னைக்காவது நம்மகிட்டே ஒரு பார்வையாலயாவது வேற மாதிரி பார்த்து இருக்காங்களா? இல்ல, நம்மகிட்டே பேசித்தான் இருக்காங்களா? நாமளா ஆசைப்பட்டோம்.., அப்போ கூட, ‘எனக்கு அப்படி ஒரு நினைப்பே இல்லன்னு’ அவ்வளவு தெளிவாத்தான் சொன்னார்..” தோழிக்கு புரிய வைக்க முயன்றாள்.

“என்னடி இப்படி பேசுற..? அவளுக்குத்தான் இவ்வளவு பெரிய குறை இருக்கே.., பிறகு எப்படி..? அவரோட குணத்துக்கு பத்து நாள் கூட அவளோட வாழ மாட்டார்..” அடித்துச் சொன்னாள்.

ஏனென்றால் முன்னர் இருந்த அன்பு அப்படிப்பட்டவன். தன் நலம், தனக்கு, தான்.., இது மட்டுமே அவனுக்குத் தெரியும். ஆடம்பரம், சொகுசு, ஊர் சுற்றுவது இது மட்டுமே பிரதானம். ஆனால்.. அவனிடம் இருந்த பெரும் நல்ல விஷயமே.., பெண்கள் பக்கம் நிமிர்ந்தும் பார்க்க மாட்டான்.

கருப்பனோடு சேர்ந்து, அவனுக்குப் போட்டியாக புல்லட் ஓட்டுவது, முட்டிக் கொள்வது, சண்டை போடுவது என அவனும் ஒரு அடங்காத காளையாகத்தான் இருந்தான்.

பள்ளியில் படிக்கும்பொழுதும் சரி, கல்லூரியில் படிக்கும்பொழுதும் சரி, நண்பர்கள் தோழிகளை கேலி செய்தால், உடனே கோபம் கொள்வான். தானும் அவர்களை கேலி செய்ய மாட்டான்.

பத்து பெண்கள் இருந்தாலும், வெட்கப்பட்டோ ஒதுங்கியோ போக மாட்டான், மாறாக.., நீ உன்பாட்டுக்கு போ.., நான் என் வேலையைப் பாக்கறேன். இப்படித்தான் அவனது நடவடிக்கை இருக்கும்,

அவர்களாக அவனிடம் பேசினால், அவர்களுக்கு பதில் கொடுப்பானே தவிர, கேலி செய்தால், சிலிர்த்து எழவும் செய்வான். அவனாக எந்த பேச்சுக்கும் போக மாட்டான்.

அவனது அடாவடி அனைத்தும் அரங்கேறுவது அவனது அத்தை பெண்களிடம் மட்டுமே. சங்கரி அவனுக்கு மூத்தவளாகிவிட, மற்ற இருவரிடமும் சரிக்கு சரி சண்டை போடுவான். அப்படி பழகியதாலோ என்னவோ, அவர்கள்மேல் உடன் பிறப்பின் பாசமே அவனுக்கு எழுந்தது.

கவிதா அவனை விரும்புவதை உணர்ந்த சந்தியா, அவன் அதற்கு சொன்ன காரணம் அனைத்தையும் அறிந்து அவன்மேல் முதலில் கோபம்தான் கொண்டிருந்தாள். என்று கல்லூரிக்குச் சென்றாளோ, அதன் பிறகுதான், அன்புவைப் பற்றி நினைக்கவே துவங்கினாள்.

நாளடைவில் அதுவே அவன்மேல் காதலாக உரு மாறியது. அதை அவனிடம் தெரிவிக்க நினைக்கையில், அவன் குடும்பம் சிதைந்து போக, அனைத்தும் ஒரு நிலைக்கு வந்துவிட்டது. இப்பொழுது அவனைப் பார்க்கவே, முடிந்துவிட்டது என அவள் நினைத்த விஷயத்தை, தொடர் கதையாக்கத் துடித்தாள்.

சந்தியாவின் பேச்சைக் கேட்ட கவிதாவுக்கு சிறு கோபம் எழுந்தாலும், தோழி என்பதால் அதை மறைத்துக் கொண்டாள். “செல்வம் மாமா இப்போ நீ நினைக்கிற மாதிரி கிடையாது. ரொம்ப மாறிட்டாங்க..” அவள் உரைக்க,

“அதுதான் எனக்கு தெரியுமே..” வேகமாக இடையிட்டாள்.

“உன் மனசில் இப்படி ஒரு நினைப்பு வேண்டாம் சந்தியா. மாமா எப்பவுமே ஒரு முடிவு பண்ணிட்டா, அதில் இருந்து மாற மாட்டாங்கன்னு உனக்கே தெரியுமே. வேண்டாம்.., விட்டுடு.., அவ்வளவுதான் நான் சொல்வேன்..” உரைத்தவள், தானும் கிளம்பி விட்டாள்.

“எனக்கு எங்க அப்பா இருக்கார்..” அவளது குரல் கவிதாவைத் தீண்ட, நின்று திரும்பிப் பார்த்தவள், ஒரு தோள் குலுக்கலோடு கிளம்பிவிட்டாள்.

அவளுக்கு செல்வத்தைப் பற்றி நன்றாகவே தெரியும்.., ஒரு முடிவெடுத்தால், அதிலேயே நிலைத்து நிற்பவன். அதைவிட, கீர்த்தியின் பாசமும், செல்வத்தின் நேசத்தையும் ஐந்து நாள் என்றாலும் உடன் இருந்து பார்க்கிறாளே.

அவள் விழுந்த அன்று, அவளுக்காக அவன் துடித்ததை பார்த்த பொழுது, அவள்மேல் அவன் கொண்ட நேசத்தின் அளவை உணர்ந்து கொண்டாளே. அதே நேரம், தன் கணவன் தன்னைத் தாங்கும் விதம், இப்பொழுது கூட அவள் கேட்டுக் கொண்டாள் என்பதற்காகத்தானே, இரவென்றும் பாராமல் தாய் வீட்டில் விட்டுச் செல்கிறான்.

இப்படி ஒரு நேசமான கணவன் கிடைக்கையில் சந்தியாவும் மாறுவாள் என்பதில் அவளுக்கு ஐயமில்லை.

கீர்த்திக்குத்தான் அன்று முழுவதும் இருப்பே கொள்ளவில்லை. கவிதாவிடம் அவளைப் பற்றி கேட்க எண்ணினாலும், என்னவென்று கேட்பது? உள்ளம் முரண்டியது.

கோயிலில் இருந்து வீட்டுக்குள் வரும் முன்பாகவே.., அன்புவிடம் அவ்வளவு காய்ந்துவிட்டாள்.

“காந்தாரி.., நான் என்ன பண்ணேன்..? அவ பேசினால் பதில் பேசாமல் இருப்பாங்களா?” அவள் பொறாமை குணம் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

“அப்போ.., யார் பேசினாலும் பேசுவீங்களா?” அவள் சிலிர்த்துக் கொள்ள,

“இப்போ உன்கிட்டே பேசலையா..?”

“அவளும் நானும் ஒண்ணா..?” அவள் குரலில் அவ்வளவு ஆத்திரம் கோபம்.

அதை ரசித்தவாறே.., “நீ மட்டும் அப்படி என்ன ஸ்பெஷலாம்..?” வார்த்தைகள் சீண்டினாலும், கண்களில்

நேசம் வழிய, அவள்தான் தடுமாறிப் போனாள்.

‘பொய் சொல்றான்..’ உள்ளம் கூத்தாட, ‘ஸ்பெஷல் இல்லையா..?’ அவன் சட்டையை பிடித்துக் கேட்கும் ஆவலை அடக்கினாள்.

அன்றைக்கெல்லாம்.., அவன் சொன்னது பொய் எனத் தெரிந்த பிறகும், அவனை சற்று வதைக்கவே செய்தாள். அவன் முகம் பாராமல் முழுவதும் தவிர்த்தாள், தவிக்க விட்டாள்.

தோட்டத்தில் வேலை செய்கையில்.., அத்தனைபேர் முன்னால், அவள் கரம் பற்றி தடுத்து எதையும் கேட்கவும் முடியாமல், அவள் பாராமுகம் வதைக்க, ‘நான் பேசியதை உண்மைன்னு நம்பிட்டாளா?’ அவன் மனம் கேள்வி கேட்க, நிஜமாகவே தவித்துப் போனான்.

கடலைக் காட்டில் அன்று அறுவடை வேறு நடக்க, கடலையை பறித்துக் கொண்டிருந்த பாட்டி, “கடலைக்காட்டில் பெருச்சாளி பிராண்டும்.., காளை என்னத்துக்குலே குறுக்கால பாயுது..?” அவன் அங்கேயும் இங்கேயும் நடப்பதைப் பார்த்து குரல் கொடுக்க, அங்கே இருந்த பெண்கள் கொல்லென சிரித்துவிட்டார்கள்.

அதில் ஒரு குறும்புக்காரி.., “பசுமாட்டுக்கு போக்கு காட்டுதுத்தா.., எங்கே.., மசியக் காணோம்..” கீர்த்தியை ஜாடையாய் காட்ட, அங்கே பெரும் சிரிப்பலை.

அவர்கள் பேசுவது புரிந்தாலும், உள்பொருள் புரியாமல் அவள் விழிக்க, வேகமாக அன்புவின் முகம் பார்த்தாள்.

அவள் பார்வையை கவனித்த அதே குறும்புக்காரி.., “ஆத்தா.., பசுமாடு சிக்னல் கொடுக்குது..” அதற்கும் சொல்ல, அன்பு அவளைப் பார்க்கவே இல்லை. வேகமாக அங்கிருந்து அகன்றான்.

“கடலைய பறிக்கச் சொன்னா.., என்ன பகடி பேசிகிட்டு.., வேலையைப் பாருங்க” பாரிஜாதம் அதட்டல் போட அனைவரும் அடங்கி விட்டார்கள்.

கீர்த்தியின் அருகில் வந்தவர், “அவக பேச்சை காதில் வாங்கிக்காத.., அப்படியே, இவகளை பேச விட்டா வேல நடக்காது.., அதட்டல் போடணும்., இப்படி பாக்கப்பிடாது..” அவர் உரைக்க, ‘அப்படியா..?’ என்பதுபோல் பார்த்துக் கொண்டாள்.

கடலைச் செடிகள் எல்லாம் சேர, அதில் இருந்து கடலையைப் பறிக்க, அவர்களோடு இணைந்தாள் கீர்த்தி. அங்கே இருந்தவர்களின் கேலி, கிண்டல், கூடவே.., துரிதமாக செயல்பட்ட அவர்கள் கை என ஆச்சரியப் பட்டுப் போனாள்.

சில மூட்டை கடலைகள் பச்சையாகவே சந்தைக்குப் போக, சிலவற்றை முற்றத்தில் காயப் போட்டார்கள். பழக்கமில்லாத வேலை என்றாலும், அதில் இருந்த நுணுக்கங்களை கற்றுக்கொள்ள விரும்பினாள்.

லோட் அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தவன், வெயிலில் கீர்த்தி கடலையை போடுவதைப் பார்த்தவன், கை பிடித்து இழுத்துபோய் திண்ணையில் அமர வைத்தான்.

“நீ வேலை வாங்கு.., ஆனா செய்யக் கூடாது..” அவன் குரலில் அப்படி ஒரு கண்டிப்பு. பாசமாக, கெஞ்சலாக சொல்லி அவள் கண்டுகொள்ளவில்லை என்பதால், கோபம் காட்டினான்.

“நீ மட்டும் செய்யிற..?” அவனை குற்றம் சொல்ல,

“ம்ச்.., ஆம்பளை வேலை செஞ்சா.., இவன் இவ்வளவு வேலை செய்யறான், நாமளும் அதைவிட அதிகமா செய்யணும்னு நினைப்பான்.., நீ.., உழைக்க வேண்டாம்.., வேலை வாங்கு.., அதுதான் எனக்கு பெருமை..” அவன் கண்கள் அவளையே துளைத்தது.

“ஏன் அப்படி..?” கேட்டவளது குரல் மெலிந்து, இமைகள் படபடக்க, ஆயிரம் பட்டாம்பூச்சி பறந்தது. ‘நீ வேலை வாங்குவதுதான் எனக்குப் பெருமை’ என அவன் சொன்ன வார்த்தை.., உள்ளுக்குள் புகுந்து இம்சித்தது.

“ஏன்னா..?” இழுத்தவன்.., “நீ கெஸ்ட்.., இதெல்லாம் செய்யக்கூடாது..” இதைச் சொல்கையில் அவன் முகம் அவள் மூக்கோடு மூக்குரசும் தூரத்தில் இருந்தான்.

‘உங்க ஊர்ல கெஸ்ட் கிட்டே இப்படித்தான் பேசுவீங்களா..?’ உள்ளுக்குள் உருகியவள்,

“ஓ.., அப்போ சரி..” வெடுக்கென அவனைத் தள்ளிவிட்டு வீட்டுக்குள் சென்றுவிட்டாள். அவன்மேல் இருந்த கோபம் இன்னும் முழுதாக சரியாகவில்லையே. ஆனாலும்.., இந்த சின்ன சின்ன ஊடல், உரசல் பிடித்தது.

“ச்சே.., மறுபடியும் கோவமா போறாளே..” அவன்தான் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

கீர்த்திக்கோ.., தேகத்தில் ஏற்பட்ட மெல்லிய நடுக்கம் அடங்க மறுத்தது. அவனது நெருக்கத்தில், அவன் கழுத்தை கட்டிக்கொள்ள எழுந்த வேகத்தை அடக்கவே பெரும்பாடு பட்டாள். எனவேதான் உள்ளே விரைந்துவிட்டாள்.

அவள் அறைக்குள் ஒரு மாதிரி பிரம்மை பிடித்து நிற்க, அவளது அலைபேசி ஒளிர்வதைக் கண்டவள், வேகமாக அதை செவிமடுத்தாள். தன் ஹியரிங் மெஷினை காதில் பொருத்தியவள் உரையாடத் துவங்கினாள்.

“அம்மா.., எப்படி இருக்கீங்க..?” உற்சாகம் பொங்கி வழிந்தது.

“கீர்த்தி.., நாங்க எல்லோரும் ரொம்ப நல்லா இருக்கோம். நீ எப்படிம்மா இருக்க?” அவளைப் பிரிந்த ஏக்கம் அவர் குரலில் இழையோடியது.

“நீங்களே சொல்லுங்க.., நான் எப்படி இருக்கேன்னு..?” அவள் திருப்பிக் கேட்க, மகள் அங்கே சந்தோஷமாக இருக்கிறாள் என்றாலும், தாய்வீட்டை பிரிந்த ஏக்கம் இல்லையே.., என்பதை நினைக்கையில் ஒரு சின்ன வருத்தம் தோன்றி, அது நொடியில் மறைந்தது.

“உன் குரல் ரொம்ப சந்தோஷத்தில் இருக்கன்னு சொல்லுது..” அவளிடம் உரைக்க, கலகலத்து சிரித்தாள். அதைக் கேட்டவரின் கண்கள் கலங்கியே விட்டது.

மகள் இப்படி வாய்விட்டு சிரித்து எத்தனை காலங்கள் ஆயிற்று.., எண்ணியவர், “தம்பி எப்படிம்மா இருக்கு? அங்கே இடமெல்லாம் ஓகேயா? கால்வலி இப்போ சரியாயிடுச்சா?” அக்கறையாகக் கேட்டார்.

“தினமும் இதைத்தாம்மா கேக்கறீங்க. ஒரே நாள்ல அப்படி என்ன மாறிடும்? கால்வலி இப்போ இல்லை.., போதுமா..? உரைத்தவள், ஐ மிஸ் யூம்மா..” இப்பொழுது சந்தோஷத்தில் இன்னும் அதிகமாக கண் கலங்கியது.

“ஏன்ம்மா.., தம்பி ஏதாவது சொல்லுச்சா..?” சட்டென ஒரு கவலை அவரை தொற்றிக் கொண்டது.

“ம்ச்.., அதெல்லாம் இல்லை. ஃபஸ்ட் டைம்.., உங்க எல்லோரையும் விட்டு இருக்கறேன். உங்களையெல்லாம் பாக்கணும் போல இருக்கும்மா..” உரைத்தவாறே திரும்ப, அவள் பேசுவதைக் கேட்டுவிட்டு, ஆழமாக அவளைப் பார்த்தவன், வேகமாக அங்கிருந்து விலகிச் சென்றான்.

அவன் முகத்தில், சட்டென விழுந்த திரையைப் பார்த்தவள் தவித்துப் போனாள். ‘ஹையோ.., என்ன நினைச்சுகிட்டான்னு தெரியலையே..’ ஒரு நொடி தாயின் பேச்சில் கவனமின்றி போனாள்.

“அப்போ கிளம்பி வர்றியா..?” அவர் கேட்டது அவளுக்கு கேட்கவே இல்லை. “அம்மாடி.., கீர்த்தி.., லைன்ல

இருக்கியா..? தாய் உரக்க குரல் கொடுக்கவே சட்டென தெளிந்தாள்.

“ஹாங்.., அம்மா.., கேட்டுட்டுதான் இருக்கேன்.., சொல்லுங்க..” முயன்று பேச்சுக்கு திரும்பினாள்.

“தம்பி ஏதாவது சொன்னாரா? அதாவது.., கல்யாணத்தைப் பற்றி.., நாலு நாள் இருக்க முடியலன்னு சொல்ற.., எப்படிம்மா?” தான் கேட்பது அபத்தம் என்பது அவருக்கே புரிந்து போனது.

“அம்மா.., இது வேற.., நீங்களும் கல்யாணம் முடிச்சு வந்த உடனே அப்படியே அப்பா வீட்டில் உக்காந்துட்டீங்களா? உங்களுக்கு அம்மா வீட்டுக்கு போகணும்னு தோணவே இல்லையா?” சற்று சிணுங்கினாள்.

“அப்போ நாங்க கிளம்பி வந்து பேசவா..?” ஆர்வம் கொப்பளித்தது.

“ம்ஹும்.., நாலு நாள்ல நாங்களே வருவோம்..” அவள் குரலில் இருந்த நம்பிக்கையில் அதற்குமேல் அவளிடம் எதையும் கேட்கவில்லை. தன் தம்பி, அப்பா, என அனைவரிடமும் உரையாடிவிட்டு வைத்து விட்டு அவனைத் தேடி வந்தாள்.

வீட்டுக்குப் பின்னால்.., வைக்கோல்போர் பக்கம் அமர்ந்து, தூரத்தில் எதையோ வெறித்துக் கொண்டிருந்தான். மனமோ.., ‘அவ.., அவங்க வீட்டுக்கு போகணும்னு நினைக்கறாளா? அப்போ இங்கே.., என்னோடு இருப்பது அவளுக்கு பிடிக்கவில்லையா?’ விடாமல் புலம்பியது.

உள்ளுக்குள் சிறு பயம் கூட எட்டிப் பார்த்தது. கூடவே.., ‘இப்படியே எத்தனை நாள் அவளை உடன் வைத்திருக்க முடியும்? அனுப்பித்தானே ஆக வேண்டும்.., அனுப்பிவிட முடியுமா?’ மனம் தவித்தது.

அவன் தன் நினைவிலேயே இருக்க, அருகில் வந்து அமர்ந்த அவளைக் கவனிக்கவே இல்லை. “அன்பு..” அவள் மெதுவாக அழைக்க, தன்னைப் பார்த்த அவன் கண்களில் என்ன இருந்தது என அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஆனால், அதில் இருந்த தவிப்பு.., அதைக் கண்டுகொண்டவளுக்கு ‘உனக்கு என்மேல் அவ்வளவுதான் நம்பிக்கையா..?’ கேட்கத் தோன்றியது. ஆனால் அதைச் செய்யவில்லை.

“வீட்டை மிஸ் பண்றியா கீர்த்தி..?” உணர்வுகளைத் துடைத்து வெளிவந்த அவன் குரல்.., இதுவரை அவள் கேட்டறியாதது.

“ஆமா..” அவள் உரைக்க, எத்தனையோ முறை தித்தித்த சில பொய்கள் இருக்கையில், இந்த உண்மை அவனை வெகுவாய் துவளச் செய்தது.

அடுத்து என்ன கேட்கவென்றே அவனுக்குத் தெரியவில்லை. ‘ஊருக்குப் போகணுமா?’ அதைத்தான் அவன் நியாயப்படி கேட்க வேண்டும். ஆனால், அதைச் செய்ய முடியவில்லையே.

“இன்னும் ஒரு மூணு நாள்..” அவள் பார்வையை சந்திக்க மறுத்து அவன் தடுமாற,

“லூசு.., லூசு..” அருகில் இருந்த வைக்கோலை அள்ளி அவன் தலையில் போட்டவள், வீட்டுக்குள் சென்று மறைந்தாள்.

“கேக்கறான் பார் கேள்வி.., வீட்டை மிஸ் பண்ணாம இருக்க முடியுமா? அதுக்கு.., இவனை விட்டு போகணும்னு சொல்றேன்னு நினைச்சுப்பானா? அப்போ கூட.., நாளைக்கே போகலாம்னு சொல்ல முடியலை தானே..’ அவனைக் கண்டு கொண்டவளாக, மனதுக்குள்ளேயே அவனை வசை பாடினாள்.

ஏற்கனவே சந்தியாவின் விஷயத்தில் அவன்மேல் இருக்கும் கோபம் அப்படியே இருக்க, இதுவும் சேர்ந்து கொள்ள, அவனை ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற ஆத்திரம். அப்படியே அவன் முடியைப் பிடித்து ஆட்டி, அவனை குத்தி.., இன்னும்.., அவளால் நினைக்க மட்டுமே முடிந்தது.

அவள் கோபமாக வீட்டுக்குள் உலாவ.., கை நிறைய எதையோ எடுத்துக்கொண்டு குறுக்காக சென்று கொண்டிருந்த கவிதாவைப் பார்த்தவள், குரல் கொடுத்து அழைத்தாள்.

சிறு அவசரமாக சென்றுகொண்டிருந்தவள், கீர்த்தி அழைக்கவே அவள் அருகில் வந்தாள். “என்ன கீர்த்தி..?” சிநேகமாகவே கேட்டாள். அவர்களுக்குள் ஒரு அழகான நட்பே உருவாகி இருந்தது.

“அது..” சற்று தடுமாறியவள், அவள் கையில் இருந்ததைப் பார்த்துவிட்டு, “இது என்ன..?” கேட்டவள் ஒன்றை எடுத்து பார்த்தாள்.

“இது உங்களுக்குத் தெரியாதா? காந்தாரி.., அதாவது காந்தாரி மிளகாய். சைசுக்கும், அதோட காரத்துக்கும் சம்பந்தமே கிடையாது. ஒண்ணு சாப்ட்டாலே சும்மா உச்சிமுடி நட்டுக்கும்.., அவ்வளவு காரம். எங்க அப்பாவுக்கு இது ரொம்ப புடிக்கும், அதான்.., தோட்டத்தில் இருந்து பறிச்சுட்டு வர்றேன்..” அவள் உரைக்க, கீர்த்தியின் கண்களில் கலவையான ஒரு கோபம்.

“எனக்கு ஒரு பத்து மிளகாய் கொடேன்..” அவள் கேட்க, உடனே கொடுத்தாள்.

“கீர்த்தி.., அசால்ட்டா வாயில் போட்டுடாதீங்க.., காரம் உங்களால் தாங்க முடியாது. கையில் வச்சு நசுக்கிட்டீங்கன்னா கூட கையை நல்லா வாஷ் பண்ணனும். இல்லன்னா காரம் போகாது..” எச்சரித்துவிட்டே சென்றாள்.

கையில் இருந்த மிளகாய் பழங்களைப் பார்த்தவள், “அடப்பாவி.., என்னைப் பார்த்தால் இந்த காந்தாரி மிளகாய் மாதிரியா இருக்கு? இல்ல.., அவ்வளவு கோபமா பேசுறேனா? இரு உன்ன..” கருவியவள், பத்து மிளகாயையும் மொத்தமாக கையில் வைத்து நசுக்கினாள்.

அதை முதுகின் பின்னால் மறைத்தவள், அன்பைத் தேடிச் சென்றாள். அவனை நெருங்கியவள், “அன்பு.., கொஞ்சம் கண்ணை மூடிட்டு வாயைத் தொற?” அவள் சொல்ல, மறுக்காமல் அதைச் செய்தான்.

மொத்தமாக அவன் வாயில் திணித்தவள், சற்று விலக, வேகமாய் கடித்தவன் அடுத்த நொடி, அலறினான்.

“இதுதான் காந்தாரி.., நான் இல்லை.., இப்போ தெரியுதா?” அவள் கேட்க, அவனோ,

“ஸ்.., ஆ.., மொளகா.., ஆ.., தூ.., தூ.., ஆ..” அவ்வளவுதான்.., இருக்கையில் இருந்து துள்ளி எழுந்தவன், வாயில் இருந்ததை வேகமாக துப்பினான்.

“அம்மா.., ஸ்.., கீர்த்தி..” அலறியவன், தண்ணீரை எடுத்து வாயை கொப்பளித்தான். காரம் அடங்காமல்.., அவன் கண்களில் இருந்தும் தண்ணீர் கொட்டத் துவங்கியது.

காரம் தாங்காமல்.., காதுகளைக் கூட பொத்திக் கொண்டவன்.., “ஆ.., ஆண்டவா..” வாய் முழுவதும் நீரால் அடித்தும் காரம் அடங்க மறுத்தது.

கவிதா சொன்னபொழுது கூட இவ்வளவு காரம் இருக்குமென்று கீர்த்தி நினைக்கவில்லை. ஏதோ சும்மா பில்ட்டப் கொடுக்கிறாள் என்றே நினைத்தாள். ஆனால்.., அன்பு இப்பொழுது புழுவாய் துடிக்க, தவித்துப் போனாள்.

ஒரு இடத்தில் நிற்காமல் அவன் நடக்க.., கை, காலை உதறி, தண்ணீர் குடித்து, கூடவே அவன் கண்களில் வழிந்த

கண்ணீர்.., அதன் காரத்தின் அளவை உணர்த்த, செய்வதறியாமல் திகைத்தாள்.

அவன் கத்துவது அவளுக்கே கேட்க, நிச்சயம் அவனது அத்தையோ, கவிதாவோ இல்லையென்றால் அனைவருமோ எந்த நொடியும் வந்துவிடலாம் என தவித்துப் போனாள்.

“அன்பு.., சாரி.., அன்பு..” அவன் பின்னால் சுற்றிக் கொண்டிருக்க, அவனை எதுவும் எட்டவில்லை.

“ஆ.., ஆ..” அவன் கத்திக் கொண்டிருக்க, கவிதாவின் வீட்டு பின்வாசல் கதவு திறப்பதுபோல் இருக்க, சட்டென அவனை இழுத்து அணைத்தவள், அவன் இதழோடு தன் இதழை பூட்டிக் கொண்டாள்.

அவள் இழுப்பாள் என எதிர்பாராத அன்பு அவள்மேல் சரியா, பேலன்ஸ் இல்லாமல் இருவரும் வைக்கோல் போரில் விழுந்தார்கள்.

“கீ..ர்..த்..தி.., கா..ரம்..” அவன் விலக முயல.., அவளோ, அழுத்தமாக அவனைப் பற்றிக் கொண்டாள்.

அவள் தொண்டைக்குள் காரம் இறங்க, அவனுக்கோ.., தித்திப்பாய் சுவை இறங்கியது. அவன் கண்ணீர்த்துளி அவள் கன்னங்களில் துளித்துளியாய் விழ, அவளுக்கு தாங்கவே முடியவில்லை. ‘எவ்வளவு காரமிருந்தால் அவன் கண்களில் கண்ணீர் வழியும்..’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டவள், அவனுக்கு தன் இதழ்களை விட்டுக்கொடுக்க, அவள் இதழ் தேனில் மூழ்கிக் கொண்டிருந்தான் அன்பு.

முத்தத்தை ரசிக்கும் மனநிலையை விட, ஒரு மருத்துவம் பார்க்கும் உணர்வே அவளுக்கு மிகுந்து இருந்தது. அவன் தன்னை அறியாமலே அவள் இதழ் தேனோடு அவள் இதழ்களையும் விழுங்க முயன்றுகொண்டிருந்தான்.

அவன் பாரம் முழுவதும் தன்மேல் இருக்க, மூச்சு முட்ட முட்ட, அவன் இதழ்களில் மூழ்கினாள். அவளது செய்கையை எப்பொழுது அவனது முற்றுகையாக மாற்றினான் எனத் தெரியவில்லை.., அவள் முதுகில் கை கோர்த்தவன், தன்னோடு இறுக்கி.., அவள் இதழ்களை மென்று தின்ன முயன்றான்.

இதழ் வலித்தாலும், ஒரு சதவீதம் கூட அவனை விலக்கவில்லை. ‘எடுத்துக்கொள்..’ என்பதுபோல், மூச்சடக்கி காத்திருந்தாள்.

முதல் முறையாக அவன் கரங்கள் இரண்டும் அவள் இடை வளைவை அளக்க, அவன் முதுகில் கைகளால் அழுத்தியவள், அவன் மூச்சுக்காற்றில் சுவாசிக்கத் துவங்கியபொழுதும் அவன் அவளைவிட்டு விலகவில்லை.

எங்கே அவளைவிட்டுப் பிரிந்தால் எழுந்து சென்றுவிடுவாளோ, இங்கே இருந்து போய்விடுவாளோ என பயந்தவன் போல, அவளை தன்னோடு மேலும் நெருக்கினான்.

எலும்புகள் அனைத்தும் நொறுங்கிப் போகும் படியான அணைப்பில், அவள்தான் திணறிப் போனாள். எதிர்ப்புகளற்ற செய்கையில், அவன் கைகளுக்குள் ஒடுங்கிக் கொண்டாள். ஒரு கட்டத்தில், எங்கே தன் இதழ்களை பிய்த்து எடுத்து விடுவானோ என அவள் அஞ்ச, வெகு நிதானமாக அவள் இதழை விடுவித்தவனது கன்னம், அவள் கன்னத்தில் விழுந்த தன் கண்ணீரை துடைத்தது.

*****

# பகுதி – 26.

வைக்கோல் போருக்குள் சிறு காதல் யுத்தமே நடந்தது. கீர்த்திக்கு இதழ்கள் இரண்டும் மரத்துப் போன உணர்வு. அவனை விலக்க நினைத்தாலோ, ஒரு இன்ச் கூட அவனை நகர்த்த முடியவில்லை.

அவன் இதழ்கள் மட்டுமே முற்றுகையிட, இடையை வளைத்த அவன் கரங்கள் அங்கே இருந்து அகலவில்லை. அவன் முழுதாக அவளை உணர முயன்றிருந்தால் என்ன செய்திருப்பாளோ.., ஆனால்.., அவன் முன்னேற மாட்டான் என்னும் நம்பிக்கை, அது கொடுத்த தைரியம், சுகமாய் அவன் பாரம் தாங்கினாள்.

ஒரு கட்டத்தில் அவனே அவளை விட்டு விலக, அவன் பார்வை அவள் மேனியில் சற்று தடுமாறி மீள, சுடிதார் துப்பட்டாவை வேகமாக எடுத்து தன்மேல் போட்டுக் கொண்டவள், அவனை நிமிர்ந்து பார்க்க தயங்கினாள்.

அவனோ.., அவள் கன்னம் தாங்கியவன், சற்று தடித்திருந்த அவள் இதழ்களைப் பார்த்தவன், பெருவிரலால் வருட, வேகமாக அவன் கரத்தை விலக்கி விட்டாள்.

‘இரண்டாம் முறையாக அதே தவறை செய்திருக்கிறான்..’ மனசாட்சி சாட, அதற்கு பதில் கொடுக்கவே அவனால் முடியவில்லை.

அவன் எதையோ சொல்லத் துவங்கவே.., அதைக் கண்டுகொள்ளாமல் எழுந்து வீட்டுக்குள் சென்றுவிட்டாள். ஏனோ அவன் மன்னிப்பு வேண்டினால் அதை தன்னால் தாங்கிக்கொள்ள முடியும் என்றே தோன்றவில்லை.

அவனுக்கு முழு உடமையானவள் தான்.., என்ற எண்ணம் வேரூன்றி இருக்கையில், அவன் செய்கைகளை அவள் எப்படி வெறுப்பதாம்? அதற்காக அவனோடு எல்லை மீறிவிடும் எண்ணமோ, தைரியமோ இருக்கவில்லை.

மாறாக, தான் நெகிழ்ந்தாலும் தன்னை அவன் எடுத்துக் கொள்ளமாட்டான் என்ற நம்பிக்கை அதிகமிருந்தது.

மிளகாய் விஷயம் இருவருக்கும் சுத்தமாக மறந்து போனது. தன் தலையை அழுத்தமாக கோதியவன், வீட்டுக்குள் வந்தான். மாலையிலும் பால் பண்ணைக்கு சென்று வந்தவன், அதன் பிறகு எங்கேயும் செல்லவில்லை.

அடுத்த இரண்டு நாட்களும் அவனோடே இருந்தாலும், ஒருவித மோன நிலையிலேயே கழிந்தது. அவனுக்கோ.., தன் நேசத்தை இதற்குமேல் பொத்திவைக்க முடியாது என்னும் நிலை.

இன்னும் முழுதாக கையில் இருப்பது ஒரு நாள்தான். நேரம் நெருங்க நெருங்க, அவள் இங்கே இருந்து சென்றுவிடுவாள் என்ற நினைவே அவனை நிலையிழக்கச் செய்தது.

கீர்த்தியோ மிகவும் அமைதியாகவே இருந்தாள். நிச்சயம் அவன் தன்னை அப்படியே விட்டுவிட மாட்டான் என்னும் நம்பிக்கை அதிகமிருந்தது. அந்த இரண்டு நாட்களும் கூட, அங்கே இருக்கும் நடவடிக்கைகளை அதிகம் கவனித்தாள்.

லோட் ஏற்ற வரும் ஆட்கள், தரகர்களிடம் சந்தை நிலவரம் கேட்கும் அளவுக்கு முன்னேறிவிட்டாள். பொதுவாக கிராமத்து பெண்கள் அவற்றில் தலையிடுவது கிடையாது.., ஆனால், கீர்த்தி அவற்றையும் கேட்க, பெரியவர்கள் வியக்க, அன்புவுக்கோ பிடிபடாத பெருமை.

வண்டி அங்கிருந்து செல்ல.., “இவளை விட்டுராத மாப்ள.., பணம் இன்னைக்கு வரும் நாளைக்கு போகும்.., அவ அப்பா சம்மதிக்கலைன்னா, தைரியமா கூட்டி வா மாப்ள.., நாம பாத்துக்கலாம்..” மாரிமுத்து முடிவே செய்துவிட்டார்.

அவர் அளித்த தைரியம் அளப்பறியதாகவே இருந்தது. கீர்த்தி தன்மேல் வைத்திருக்கும் நேசம் அவனுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், தான் அழைத்தால்

பெற்றவர்களை மீறி அவள் வருவாளா? மிகப்பெரும் வினா. அப்படியில்லை என்றாலும்.., அவள் சம்மதித்தால், அவர்கள் சம்மதத்துக்காக காத்திருக்கலாம் என முடிவெடுத்தான். அதன் பிறகே அவனால் நிம்மதியாக இருக்க முடிந்தது.

புதிதாக வாழைத்தோட்டம் போட்டிருந்த இடத்தில் வாழைகளை கயிறு கட்டும் வேலை அன்றைக்கு நடப்பதாக இருந்தது. அதற்கு கீர்த்தியை வர வேண்டாம் என்றால், பிடிவாதமாக அவனோடு வந்தாள்.

“அங்கே உனக்கு மொட்டு மொட்டுன்னு இருக்கும் கீர்த்தி..” எவ்வளவு நேரம்தான் அவளும் வேடிக்கை பார்ப்பாள் என்ற எண்ணம் அவனுக்கு.

“அப்படியெல்லாம் இருக்காது.., எனக்கு புடிச்சிருக்கு..” அவள் பிடிவாதம் பிடிக்கையில், ஒரு பக்கம் அவன் மனம் சுருண்டு அவள் காலடியில் விழவே செய்தது. வேலை நடக்க அதை ஆர்வமாகவே பார்த்திருந்தாள்.

இன்னும் கையில் இருப்பது இந்த ஒரு நாள்தான். மறுநாள் அவள் கிளம்ப வேண்டும். இருக்கும் நேரத்தில் அவனோடு இருந்துகொள்ளவே மனம் விரும்பியது.

அன்புவோடு சேர்த்து நால்வர் வேலை செய்ய.., காலையில் துவங்கிய வேலை முடியவே மதியம் கடந்துவிட்டது. இடை இடையே பாரிஜாதம் கொண்டுவந்த டீ.., சிற்றுண்டி என வேலை இடைவிடாமல் நடந்தது.

மதிய சாப்பாட்டுக்கு முன்னர் முடியும் எனப் பார்க்க, முடியவில்லை. வேறு வழியின்றி, மதியம் மூன்று மணிக்கே வேலை முடிந்தது. முழுதாக களைத்துப் போனான்.

மற்ற மூவருக்கும் கூலி கொடுக்க, “கீர்த்தி.., சட்டை பையில் பணம் இருக்கு. ஆளுக்கு நானூறு ரூபாய் கொடு..” அவன் உரைக்க, சற்று தயங்கினாலும் அவன் சொன்னதைச் செய்தாள்.

அவர்கள் செல்லவே.., வரப்பில் அமர, “உனக்கு இங்கே புடிச்சிருக்கா கீர்த்தி..?” மெதுவாக பேச்சைத் துவங்கினான். அவன் களைத்த முகத்திலேயே கவனமாக இருந்தவளுக்கு, அவன் கேட்டது புரியவில்லை.

“ம்..?” ஆமோதிப்பா, கேள்வியா என்னும் விதத்தில் ஒலித்தது அவளது குரல். ஆனால்.., அவன் முகத்தில் ஒரு அளவிட முடியாத பிரகாசம்.

‘அப்படியென்ன கேட்டார்..? நான் என்ன சொன்னேன்..?’ அவன் பிரகாசம் கண்டு அவள் வியக்க, அவன் அடுத்த வார்த்தையை பேசத் துவங்கவே, அவன் முன்னால் வந்து நின்றார் மாரிமுத்து.

“மாப்ள.., இங்கன வேலை முடியலை.., நான் வாழைக்கு தண்ணி காட்டுறேன். நீ அந்த புடலங்கா தோட்டத்தில் ஏதோ பூச்சி விழுந்திருக்குன்னு சொன்னாக.., அதைக் கொஞ்சம் பார்..” கையில் ஒரு கிண்டியோடு இறங்கிவிட்டார்.

அதற்குமேல் அங்கே இருக்க முடியாமல் எழுந்தவன், “நீ வீட்டுக்கு போறியா?” அவளிடம் கேட்க, மறுத்தவள் அவனோடு நடந்தாள்.

இப்பொழுது ஊர் முழுக்கவே, அன்புச் செல்வன் அவளை ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து அழைத்து வந்திருப்பதாகத்தான் கிசுகிசுத்தது. உபயம் பூமணி.

அது தெரிந்தாலும் பெரிதாக அவன் அலட்டிக் கொள்ளவில்லை. கீர்த்திக்கு அந்தப் பேச்சு அவ்வளவாக தெரியாது.

“என்னவோ கேட்டீங்க..?” அவனிடம் கேட்க, “வீட்ல போய் பேசிக்கலாம்..” அங்கே இருக்கும் அத்தனைபேர் முன்னால் அவனால் பேச முடியவில்லை.

ஒவ்வொரு கொடி, அதன் இலை.., காய்கள் என ஆராய்ந்தவன், “கொஞ்சம் பூச்சி விழுது.., கவனிக்கணும்..”

உரைத்தவன், சிலவற்றை சேகரித்து அழித்தான்.

“தம்பி.., கொஞ்சம் காயெல்லாம் பறிச்சுட்டு மருந்து போடுங்க. பிறகு காயும் விஷமாயிடும்..” ஒரு பெண்மணி உரைக்க, மறுக்காமல் கேட்டுக் கொண்டான்.

“ரங்கம்.., மருந்து தெளிக்கவா.., இல்ல கொடியெல்லாம் அழிச்சுட்டு புதுசு போடலாமா?” அவரிடமே கேட்டான்.

“இல்ல தம்பி.., இன்னும் ரெண்டு மகசூல் எடுக்கலாம்.., கொடி எல்லாம் திடனாத்தான் இருக்கு. எதுக்கு தேவையில்லாமல் வரும்படியை இழக்கணும்..” தன்னையும் மதித்து அவன் கேட்டுவிட்டதில் அவருக்கு அவ்வளவு சந்தோசம்.

கீர்த்தி அவனைப் பார்க்க.., “இவங்கல்லாம் நாப்பது வருஷ அனுபவம் உள்ளவங்க.., அதான் கேட்டேன்.., நிறைய கத்துக்கணும்..” அனைவரிடமும் ஆலோசனை பெறும் அவனது தன்மை அவளைக் கவரவே செய்தது.

“நாளைக்கு மருந்தடிக்க முடியாது.., ரெண்டு நாள் போகட்டும்..” ஏனென்று அவளும் கேட்கவில்லை அவனும் சொல்லவில்லை.

நேரம் அந்தி சாய.., வேலையாட்கள் எல்லாரும் செல்லவே.., மோட்டார் ரூமுக்கு வந்தவன், “அப்படியே ஒரு குளியல் போடறேன். நீயும் குளிக்கறியா? பம்பு செட்டில் குளிச்சிருக்க மாட்டியே..” அவன் கேட்க, விழி விரித்து அவனைப் பார்த்தாள். அதில் சிறு அதிர்ச்சியும், ஆசையும் போட்டி போட்டது.

‘கூடவே.., ஒரு தொட்டிக்குள்ளா..?’ மனம் படபடக்க, அவள் பார்வையை உணர்ந்தவன்.., “நீ தொட்டிக்குள்ளே குளி.., நான் வெளியே குளிக்கறேன்..” சாதாரணமாக உரைக்க, அவளுக்குத்தான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

நான்கு சுவர்களுக்குள் மட்டுமே குளித்துப் பழகியவள் அவள். அங்கே ஊருக்குள், ஒரு குளத்தில், எதிரெதிர் கரையில் ஆணும் பெண்ணும் குளிப்பதும், அதுவும் பெண்கள் ஏற்றிக் கட்டிய பாவாடையோடு நிற்பதும், ஆண்கள் ஒற்றை டவ்வலோடு குளிப்பதும், பெரும் அதிர்ச்சியைத்தான் முதலில் கொடுத்தது.

அவள் பார்வையை உணர்ந்தவன், “இங்கே எல்லாம் இப்படித்தான். எல்லாம் அங்காளிங்க.., பங்காளிங்க.., மாமன், மச்சான்.., அத்த மாமா பிள்ளைங்க, சித்தப்பா பெரியப்பா புள்ளைங்க.., இப்படித்தான் இருப்பாங்க. கேலியும் பேசிப்பாங்க..., ஆசைபட்டா கட்டி வச்சுடுவாங்க.

“இங்கே இது ரொம்ப சாதாரணம்.., அதனால் இதையெல்லாம் நீ தப்பா நினைக்காதே. வேண்ணா நீயும் குளி.., எவனும் பாக்க மாட்டான். அதுக்கு நான் கேரண்டி..” அவன் இமை சிமிட்டி சொல்ல, அப்படியே அவனை அந்த குளத்துக்குள் தள்ளிவிட்டால் என்ன என்ற வேகம் எழுந்தது.

அவன் கண்களில் வழிந்த விஷமம் வேறு கதை உரைக்க, வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டாள். ‘திருடன்..’ மனதுக்குள் திட்டிக் கொண்டாலும், ஒரு பக்கம் இனித்தது.

அதை இப்பொழுது எண்ணியவள், தயக்கம் நீங்காமல் அவனைப் பார்த்தாள். “கீர்த்தி.., குளிகறியா இல்லையா..?” கேட்டவன்.., தன் சட்டையை கழட்டிவிட்டு, தலையில் கட்டியிருந்த டவ்வலையும் வைத்துவிட்டு, மோட்டார் போட்டு வந்தான்.

“இப்படியே எப்படி குளிக்கிறதாம்?” அவள் சின்னக் குரலில் கேட்க,

“ஹையோ.., நான் கைலி கூட கட்டலையே..” வாய்விட்டு யோசித்தவன், “இப்போ நீ குளிக்கிறன்னா சொல்லு.., மோட்டார் ரூம்ல போய் சுடி மாத்திட்டு என் சட்டையை போட்டுக்க.., சட்டை டார்க் கலர்தான் சோ..” வேகமாக அவன்

சொல்லிக்கொண்டே போக, அவளுக்குத்தான் மூச்சடைத்தது.

‘ஆண்டவா.., இவன் என்ன சொல்றான்..?’ அவள் பார்வை அதை வெளிப்படுத்தவும் செய்தது.

“குளிக்கலையா..? இல்ல.., இங்கே குளிக்க ரொம்ப நல்லா இருக்கும். ஃபால்ஸ் எல்லாம் போயிருக்கியா.., அப்படி இருக்கும்..” அவள் அதிர்ச்சி எதுவும் அவனுக்கு புரியவில்லையா.., இல்லையென்றால் அப்படி எந்த தவறான எண்ணமோ, சில்மிஷமோ அவன் மனதில் இல்லையா? அவள் யோசிக்க, இரண்டாவதுதான் சரி என அவளுக்குத் தோன்றியது.

“நான் ஃபால்ஸ் எல்லாம் போனது கிடையாது..” அவள் தன் காலை நினைத்து சொல்ல, அதைக் கண்டுகொள்ளாதவன்,

“அப்போ இது உனக்கு ரொம்ப புடிக்கும்.., ட்ரை பண்ணேன்.., நான் இருக்குறது சங்கடமா இருந்தால், நான் தூரமா வெயிட் பண்றேன். இது நம்ம வயல்.., இங்கே யாரும் வர மாட்டாங்க..” அவளுக்கு தைரியமளித்தான்.

அவன் சில வேளைகளில் இங்கே குளிக்கையில், அவள் கண்களில் பெரும் ஏக்கத்தை கண்டிருக்கிறான், எனவேதான் அவ்வளவு சொன்னான்.

“இல்ல.., நீ இங்கேயே இரு.., நான் ட்ரெஸ் மாத்திட்டு வர்றேன்..” அவனது அடர் பச்சை வர்ண காட்டன் சட்டையை பெற்றுக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

டாப்பை கழட்டிவிட்டு, சட்டையை அணிந்துகொள்ள, அவன் சட்டையில் இருந்து வந்த அவனது வியர்வை கலந்த ஆண்மை வாசனை.., ஒரு நொடி ஆழ்ந்து அனுபவித்தாள்.

அந்த சட்டையில் இருப்பது.., அவனே தன்னை அங்கம் அங்கமாக தழுவி இருப்பது போன்ற பிரம்மை. ஒரு மாதிரி மெல்லிய கதகதப்பு.., காலரைப் பற்றி தன் கன்னத்தில்

வைத்துக் கொண்டாள். இமைகளை மூடிக் கொண்டவளுக்கு, அந்த ஆடையாக அவன் இருக்கும் உணர்வு.

‘ஹையோ..’ பட்டென விழி திறந்தவளுக்கு, வெளியேறவே முடியவில்லை. கதவில் சாய்ந்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டாள்.

எவ்வளவு நேரம்தான் அங்கேயே இருப்பது.., தயக்கமாக அவள் வெளியே வர, ஒரு நொடி, தன் பார்வையை அவள் அறியாமல் நிலைக்க விட்டவன், சட்டென பார்வையை திருப்பிக் கொண்டான்.

ஏற்கனவே தயக்கத்தில் இருப்பவளை, மேலும் சங்கடப்படுத்த அவன் விரும்பவில்லை. ‘வா..’ செய்கையில் அழைத்தவன், ஏற்கனவே தொட்டிக்கு வெளியே வழிந்த நீரில் குளித்துக் கொண்டிருந்தான். அந்த நீர்தான், வாய்க்கால் வழியாக ஓடி, வயல், வாழை என அனைத்து நிலங்களுக்கும் பாயும்.

தயங்கி அவன் முகம் பார்த்தவள், அவன் போக்கில் அவன் குளிக்கவே, தொட்டியின் ஓரத்தில் அமர்ந்தவள், கால்களை முதலில் தண்ணீரில் நனைத்தாள்.

சில்லென குளிர் தாக்க.., சற்று நேரம் கால்களால் அலைந்தவள், தொட்டிக்குள் குதிக்க, அவள் மார்பளவு இருந்தது தண்ணீர். “ஸ்..” தண்ணீரின் குளிரை ஒரு நொடி அனுபவித்தவள், கூந்தலை விரித்துவிட்டு, பைப்பில் தலை வைத்தாள்.

அவளை அப்படியே தொட்டிக்குள் முக்கிவிடும் அளவுக்கு வேகம்.., சற்று தடுமாறி, விழுந்து, எழுந்து, கொஞ்சம் தண்ணீர் குடித்து, பக்..பக்கென அவள் இரும, வேகமாக தொட்டியில் ஏறி எட்டிப் பார்த்தான் அன்பு.

“கீர்த்தி.., என்ன ஆச்சு..? தண்ணி குடிச்சுடியா..? தண்ணி நிலைக்கலையா?” வேகமாக அவள் தோள் தொட்டு தன்

அருகே இழுத்துக் கொண்டவன், வேகமாக அவள் முகத்தில் வழிந்த தண்ணீரை வழித்தான்.

‘லொக்.., லொக்..’ என இருமி.., கண்களில் நீர் வர, சற்று திணறி, “தண்ணி ரொம்ப போர்ஸா இருக்கு.., தெரியாமல் போயிட்டேன்.., அதான்..” இருமலுக்கு இடையில் ஒரு வழியாக சொல்லி முடித்தாள்.

கை நிறைய நீரை அள்ளி அவள் முகம் கழுவியவன், “தண்ணி பாஸ்ட்டா வரும்னு சொல்ல மறந்துட்டேன்.., சாரி.., ஒண்ணும் இல்லை.., கொஞ்சம் தூரமா தலை வைத்து பழகிட்டு, பிறகு நேரடியா குளிம்மா..” ஒரு குழந்தைக்கு சொல்வதுபோல் சொல்லி புரிய வைத்தான்.

கீர்த்தி சற்று பயந்துதான் போய்விட்டாள். அதில் இருந்து தெளிய அவளுக்கு சற்று அவகாசம் வேண்டி இருந்தது. அவள் பயத்தை பார்த்தவன், “சரி., அப்போ இந்த தொட்டிக்குள்ளேயே சைட்ல முங்கி குளிக்கறியா?” அவன் கேட்க மறுப்பாக தலை அசைத்தாள்.

முதல்கட்ட பயம் போயிருக்க, அவன் கையில் இருந்து விடுபட்டவள்.., பைப்பின் அருகில் சென்று, மெதுவாக தலை காட்டினாள். நடுவில் காட்டாமல், கொஞ்சம் ஓரமாக இருக்கவே, இப்பொழுது அது உள்ளே தள்ளவில்லை.

“கீர்த்தி.., ஓகே..” கை ஆட்டியவன், கட்டைவிரலைக் காட்டி கேட்க, “அன்பு, நிஜமாவே ரொம்ப நல்லா இருக்கு..” கத்தியவள், அதன் பிறகு விளையாட்டில் மூழ்கிப் போனாள்.

கிட்டத்தட்ட அரைமணி நேரம் அவள் தண்ணீரில் ஆட்டம் போட, அன்பு அவள் குரலுக்காக காத்திருந்தான். குளிர் வாட்டி.., கீழ்த்தாடை கிடுகிடுவென ஆடத் துவங்கிய பிறகே, தண்ணீரில் இருந்து வெளியே வர முடிவெடுத்தாள்.

அப்பொழுதுதான் பார்த்தாள். தொட்டி கிட்டத்தட்ட அவள் தலை உயரம் இருந்தது. அவள் மார்பளவு தண்ணீர் இருந்தது. வெளியே இருந்து அமரும் அளவு உயரம்

என்பதால், சுலபமாக உள்ளே வந்துவிட்டாள். இப்பொழுது பெரிதாக ஒரு ஜம்ப் செய்தால் மட்டுமே தொட்டியின் சுவரில் அமர முடியும்.

அவளுக்கு அது பழக்கமாக இருந்தால் அதைச் செய்திருக்க முடியும். இதுவோ பழகாத செயல், சற்று திகைத்துப் போனாள். தொட்டிக்கு வெளியே.., அன்பு குளித்துக் கொண்டிருந்த இடத்தில் எட்டிப் பார்க்க, அவனோ.., நீர் வடியும் வாய்க்கால் ஓரம் அமர்ந்திருந்தான்.

“அன்பு..” தயக்கமாக அழைக்க, வேகமாக எழுந்து வந்தான்.

“என்ன.., குளிச்சது போதுமா? கிணத்தில் இருந்த தண்ணியே வத்தியிருக்கும் போல.., இரு மோட்டாரை நிறுத்திட்டு வர்றேன்..” சொன்னவன் அதை நிறுத்திவிட்டு வந்த பிறகும் அவள் வெளியே வரும் வழியைக் காணோம்.

பக்கச் சுவற்றின் வழியாக வந்தவன், “வெளியே வர மனசே இல்லையா? வேண்ணா மோட்டார் போடவா..?” கேட்டவன் நகர முயன்றான்.

“அன்பு..” கீழ்த்தாடை துடிக்க அவனை அழைத்தவள் தயங்க,

“என்ன இப்படி நடுங்கற.., முதல்ல வெளியே வா..” அவன்தான் படபடத்தான்.

“வெளியே வரத் தெரியலை” அவள் உரைக்க, சத்தியமாக இப்படி ஒரு சூழலை அவன் எதிர்பார்க்கவில்லை.

“என்ன..?” சற்று அதிர்ந்துபோய் கேட்டவன், தன்னை சுதாரித்து.., “சரி, என் கையைப் புடிச்சு மேலே வா..” தன் கையை நீட்டினான்.

அதைப் பற்றிக் கொண்டவளுக்கு.., ஏறும் வழிதான் தெரியவில்லை. இரண்டு மூன்றுமுறை முயன்றும் முடியாமல் போக, அவனை பரிதாபமாக ஏறிட்டாள்.

அவனுக்கோ.., தன் சட்டையில் இருக்கும் அவளைக் காண்கையில் உணர்வுகள் மேலெழுந்தது. அதிலும் முதல் பட்டன் போட்டிருந்தாலும், அதன் இறக்கம்.., அபாயகரமாகவே இருந்தது. அதைவிட, அவள் உடலோடு ஒட்டிக்கொண்ட அவனது சட்டை.., அவளுக்கு துரோகம் செய்ய.., அவள் வடிவங்கள் அவன் கண்களில் இருந்து தப்பவில்லை.

இன்று வரை அவள் கழுத்தை தாண்டி அவன் பார்வை ஒரு வினாடி கூட பயணித்தது இல்லை. முதல் முறையாக.., ஒரு பெண்ணின் பரிமாணம்.., அவ்வளவு நெருக்கத்தில்.., மூச்சடைக்கும் உணர்வை முதல் முறையாக அனுபவித்தான். அவளை இருமுறை முத்தமிட்டிருக்கிறான்தான்.., அப்பொழுதெல்லாம் அவன் உணர்வுகள் தலை காட்டியதில்லை. முதல் முறையாக.., அவன் இளமை அவளைக் கேட்டது.

பார்வையை அவள் முகத்தில் நிலைக்கவிட முயன்றாலும், நழுவும் பார்வை, அவள் அழகிடங்களில் நிலைத்து தடுமாறியது. தான் சொன்னதற்கு அவனிடம் பதில் இல்லாமல் போகவே.., அவன் முகம் காண, அவன் பார்வை பதிந்த விதத்தில் கீர்த்தியின் முகம் ரத்தமென சிவந்து போனது.

அவனிடம் மறைக்க அவளுக்கு எதுவும் இல்லைதான்.., ஆனால்.., அது உரிமையாய் உணரும் வேளையில் மட்டுமே. இப்பொழுது.., கால் ஊன்றி நின்றவள், தண்ணீருக்குள் அமிழ்ந்து கொள்ள, வேகமாக அவள் முகத்தில் பார்வையை திருப்பினான்.

“அது.., நான்..” அவன் திணற.., அவனுக்கு முதுகு காட்டி நின்றுகொண்டாள். அந்த நேரத்தில் கூட, அவனோடு ஒட்டிக்கொள்ள எழும் வேகத்தை அவனுக்கு எப்படி வெளிப்படுத்துவதாம்? ஈரத் தலையை அழுத்தமாக கோதியவன், தன்னை நிலைப்படுத்திக் கொண்டு, தொட்டிக்குள் குதித்தான்.

அதை உணர்ந்தவள் வேகமாகத் திரும்ப, அவள் கண்களில் சிறு கலவரத்தை பார்த்தவன், “கீர்த்தி.., உன் நம்பிக்கைக்கு ஒரு சதவீதம் கூட துரோகம் செய்ய மாட்டேன்..” இரண்டு சந்தர்ப்பங்களில் தன்னிடம் ஒட்டிக்கொண்ட அவளை அவனுக்குத் தெரியாதா என்ன?

அவளுக்கு அவனிடம் பயமா? மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். அவள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே.., அவள் இடையில் கை கொடுத்து, ஒரே தூக்கில் தூக்கி திண்டில் அமர வைக்க, கால்களை வெளியே தொங்கப்போட்டுக் கொண்டு.., மோட்டார் அறைக்குச் சென்றாள்.

தன் டவ்வலை நீரில் அலசிப் பிழிந்தவன், மோட்டார் கதவை வேகமாக தட்ட, அதன் அசைவில் கதவைத் திறந்தவள், கேள்வியாக அவனைப் பார்க்க, “டவ்வல்..” அவள் பக்கம் நீட்டினான்.

மறுக்காமல் வாங்கிக் கொண்டவளுக்கு.., அதில் முகம் துடைக்க, அவன் நெஞ்சில் முகம் பதிக்கும் உணர்வு. ஒரு வழியாக அவன் சட்டையை கழட்டிவிட்டு, தன் சுடிதார் டாப்பை அணிந்து கொண்டவள், சுடிதார் பேன்ட்டை கழட்டி பிழிந்துவிட்டு மீண்டும் அணிந்து கொண்டாள்.

அவள் வெளியே வர, அவளை அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டான். இருள் லேசாக கவிழ்ந்திருக்க, அவன் கை கோர்க்கத் துடித்த மனதை அடக்கி, ஓர விழியில் அவனை ரசித்தவாறே நடந்தாள்.

அவன் முகமோ தீவிர சிந்தையில் இருக்க, கூடவே கவலையும் தென்பட, அவளுக்கு அப்படியெல்லாம் கவலை எதுவும் இல்லை. அவளைப் பொறுத்த வரைக்கும் அவன்தான் தனக்கு கணவன்..., அந்த முடிவு எந்த காலத்திலும் மாறாது.

இப்போதைய அவனது யோசனை கூட, அதைப் பற்றியதாகவே இருக்கும் என்பதால், அவனோடான

தனிமையை ரசித்தாள். வீட்டுக்கு வந்தவர்களுக்கு, பாரிஜாதம் காபி கொடுக்க, அவர்களோடு சற்று நேரம் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தாள்.

கவிதா குழந்தையைக் கொண்டு வர, அவனை கைகளில் வாங்கியவள், அவனோடு ஐக்கியமாகி விட்டாள். அன்புவின் முகத்தில் இருந்த கவலையைப் பார்த்த கவிதா, “ஏன் மாமா கவலையா இருக்க? கீர்த்தி போகப் போகுதுன்னா? நீயும் கூடவே போய் அவங்க அப்பாகிட்டே பேசு மாமா.., அதுவும் உன் மேலே ஆசைப்படுது..” அவளது கவனம் இங்கே இல்லை என்பதால் தைரியமாக உரையாடினர்.

“அவ மனசில் நான் இருக்கேன்னு எனக்குத் தெரியும். அவங்க அப்பா ஏதாவது கேள்வி கேட்டால்.., என்னால் அவளை நல்லா பாத்துக்க முடியும் என்பது வேறு விஷயம்.., இது..?” அவனுக்கு ஒரு பெருமூச்சு எழுந்தது.

“கீர்த்திகிட்டே சொல்லிட்டியா மாமா..?” அவள் கேட்க, “இப்போ சொல்லணும்.., அவ இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லன்னு..” அவன் குரல் நெகிழ்ந்து கிடந்தது.

இரவு உணவை எடுத்துவர கவிதா செல்ல, குழந்தையை பாரிஜாதம் வாங்கிச் சென்றார். அந்த நேரம் அன்புவின் வீட்டுக்கு பண்ணையார் வந்தார். அவர் வரவைப் பார்த்தவன், வீட்டுக்குள் அழைத்துச் சென்று இருக்கையைக் காட்ட, அவர் அமரவே.., கீர்த்தி தன் அறையில் சென்று அமர்ந்தாள்.

பார்வையில் அவர்கள் விழும்படியாகவே அமர்ந்து கொண்டாள். வழக்கமான பேச்சு முடிந்து, சந்தியாவின் பேச்சை அவர் துவங்கவே, அவர் முகத்துக்கு நேராக எப்படி மறுப்பது என ஒரு நொடி அவன் தயங்க, அந்த ஒரு நொடியில் சற்று நொறுங்கிப் போனாள் கீர்த்தி.

ஒரு வழியாக அவரிடம் தன் மறுப்பை உரைத்தவன், கீர்த்திதான் தன் மனைவி என்பதையும் தெளிவாக்கியே அனுப்பினான்.

“ஊருக்குள்ள இருக்குற பேச்சை வைத்து நானும் சொல்லிப் பார்த்தேன். அது பிடிவாதமா இருக்கவே.., உன்கிட்டே நேர்லயே ஒரு வார்த்தை கேட்டுடுவோம்னு வந்தேன்.., நான் வர்றேப்பா..” விடை பெற்றுச் செல்ல, அவர் எதிரில் திகைப்பாய் உள்ளே வந்தாள் கவிதா.

அதே நேரம்.., கீர்த்தியும் அறைக்குள் இருந்து கோபமாக வரவே.., அதைப் பார்த்தவள், “மாமா, நான் பிறகு வர்றேன்..” சாப்பாட்டை அங்கே ஓரமாக வைத்துவிட்டு விலகிவிட்டாள்.

அவன் எதிரில் கோபமாக நின்ற கீர்த்தி.., சுடும் விழிகளால் அவனை நோக்கினாள். “இதுக்கு என்ன அர்த்தம்..?” அவள் கேட்க, அவளை எப்படி சமாதானம் செய்வது என்றே தெரியவில்லை.

ஒரு நொடி அவளையே கூர்மையாக பார்த்தவன், “என்னை கல்யாணம் பண்ணிக்கறியா கீர்த்தி..? இங்கே என்னோடவே வாழ வர்றியா..? என்னால் நீ இல்லாமல் வாழவே முடியாது. நீ நாளைக்கு போய்ட்டா.., யோசிச்சு யோசிச்சே நான் இல்லாமல் போய்டுவேன்..” தயங்காமல், தெளிவாக, அவள் முகம் பார்த்து கேட்க, ஆனந்த அதிர்ச்சியில் உறைந்திருந்தாள்.

அது ஒரு நொடிதான்.., அடுத்த நிமிடம்.., அவனை சரமாரியாக அடித்தவள், “இதைக் கேக்க உனக்கு ரெண்டு வருஷமாடா..? மாட்டேன்.., உன்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். இங்கே வரவும் மாட்டேன்..” இதையே சொல்லிக் கொண்டிருந்தவள், அவனை அடிப்பதை மட்டும் நிறுத்தவே இல்லை.

அவள் அடிகள் அனைத்தையும் சுகமாய் தாங்கிக் கொண்டவன், அவளை தடுக்கவும் முயலவில்லை. கவிதா சொல்லி.., அங்கே வந்த பாரிஜாதமும், மாரிமுத்துவும் கூட

அந்த காட்சியைப் பார்த்து ஆனந்தத்தில் திளைத்தார்கள். ஒரு பொய் அங்கே தித்திப்பாய் பாய்ந்தது.

*****

# பகுதி – 27.

நிலவின் ஒளியில், முற்றத்தில்.., அவன் கட்டிலில் அமர்ந்திருக்க, திண்ணையில் அவன் முகம் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் கீர்த்தி. இருவர் மனமும் நிம்மதியிலும், சந்தோஷத்திலும் திளைத்துக் கிடந்தது.

ஓடிப்போய் அவளை கட்டிக்கொண்டு அவளோடு ஐக்கியமாகிவிட அவன் உணர்வுகள் தவித்தாலும், தூரத்தில் அமர்ந்தே அவளை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் காதலைச் சொன்ன பிறகும், அவளிடம் வரம்பு மீறிவிட அவன் துணியவில்லை. அதற்கு அவன் வளர்ப்பும், பாரம்பரியமும் அனுமதிக்கவில்லை. இரவு ஏறிக் கொண்டிருக்க, அவளும் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் கைகளுக்குள் அடங்கிகொள்ள அவளுக்கும் கொள்ளை ஆசை இருக்கிறது. ஆனால்.., நினைவுகளில் அதைச் செய்யும் அளவுக்கு நிஜத்தில் செய்ய தைரியமில்லை.

அவளது அடிகளை பெற்றுக்கொண்டு, அவளது பொய்களைத் தாண்டி, அவள் கரம் பிடித்து தடுத்தவன், “என்னைப் பார்த்து சொல் கீர்த்தி.., என்னை உனக்கு பிடிச்சிருக்கா?” அவன் கேட்க,

“உன்னை மட்டும்தான் பிடிச்சிருக்கு..” அவள் உரைத்தபொழுது, அவளை ஒரு நொடி இறுக அணைத்தவன், நெற்றியில் இதழ் ஒற்றி பிரிந்தவன்தான். அதற்குமேல்.., அவளை வருடும் பார்வையோடு விலகி இருக்கிறான்.

விடிந்தால் சென்னை செல்ல வேண்டும்.., அங்கே என்ன நடக்கும் என்று தெரியாத அவனது சிறு பயம்.., அவனை உறங்க விடவில்லை. அவளுக்கோ, அவள் பெற்றவர்கள்

திருமணத்துக்கு சம்மதித்த பிறகு, எப்படியும் இரண்டு மூன்று மாதங்கள் அவனைச் சந்திக்க முடியாது என்பதால், அந்த இரவை தவிர்க்க அவள் விரும்பவில்லை.

“எல்லாத்தையும் பேக் பண்ணிட்டியா கீர்த்தி..” அவன் கேட்க, மௌனமாக தலை அசைத்தாள்.

“அப்படியே கொஞ்ச தூரம் நடந்துட்டு வரலாமா?” கேட்டவன் எழுந்துகொள்ள, அவளும் அவனோடு நடந்தாள். அவள் கரத்தை கோர்த்துக் கொண்டவன், மௌனமாகவே இருந்தான். ஒரு வழியாக விடியல் துவங்கும் நேரம்.., “கொஞ்ச நேரம் படுத்து எந்திரி.., நான் பண்ணைக்கு போயிட்டு வர்றேன்..” அவன் சொல்ல, காலை பத்து மணி வரைக்கும் உறங்கிவிட்டாள்.

அவள் உறங்கி எழவே.., கார் தயாராக இருக்க, அவளை அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டான். அவள் வீட்டுக்கு வந்து சேர்ந்த பிறகும் இருவரும் எதையும் பேசிக் கொள்ளவில்லை. கீர்த்தி தன் அறைக்குச் செல்ல, அவளது பெற்றவர்களோடு தனித்திருந்தான் அன்பு.

அவனுக்கு அவர்களிடம் எப்படித் துவங்க என்ற சிறு தயக்கம் இருந்தாலும், அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் கொடுத்துக் கொண்டிருந்தான்.

காபி வர, அதைக் குடித்தவன், அவர்களோடு பேசத் துவங்க, வீட்டுக்குள் வந்த வாசன்.., “ஐ.., அக்கா வந்துட்டாளா..?” கூக்குரலோடு ஓடி வந்தான்.

அன்புவைப் பார்த்து சிநேகமாக சிரித்தவன், அவன் அருகில் அமர்ந்தான். சிறு அமைதி நிலவ, “ஐயா.., எனக்கு கீர்த்தியை பிடிச்சிருக்கு. கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படுறேன். எனக்கு அவளை கல்யாணம் பண்ணிக் கொடுக்கறீங்களா? அவளை நான் கண்கலங்காமல் பார்த்துப்பேன்..” கேட்டுவிட்டு அவர்கள் முகம் பார்க்க, அதில் எந்த சலனமும் இருக்கவில்லை.

“இங்கே இருக்கும் எல்லா வசதியும் என்னால் அவளுக்கு செய்து கொடுக்க முடியும். விவசாயம்தான் என் தொழில் என்றாலும், அதில் லாபம் சம்பாதிக்கத் தெரியும். இன்னும் ஒரு வருஷம்.., டைம் கொடுத்தால், என்னோட நிலையை நான் நிரூபிப்பேன்..” அவர்களது அமைதியைக் கண்டு வேகமாக உரைத்தான்.

அப்பொழுதும் அவர்கள் அமைதியாக இருக்க, “அவளை கண்ணுக்குள் வைத்து பாத்துப்பேன். பணம்தான் உங்களுக்கு பிரச்சனை என்றால், அதை நிச்சயம் என்னால் சம்பாதிக்க முடியும். இந்த ஜென்மத்தில் உங்க பொண்ணுதான் என் மனைவி.

“உங்களோட சம்மதத்துக்கு வேண்டி எத்தனை வருஷம் வேண்டுமென்றாலும் நாங்க காத்திருப்போம்..” அங்கே அவன் மட்டுமே பேசிக் கொண்டிருந்தான்.

அனைவரும் அமைதியாக இருக்க, இருக்கையில் இருந்து எழுந்தவன், “நீங்க யோசிச்சுட்டு நல்ல முடிவா சொல்லுங்க. உங்களோட பதிலுக்காக நான் காத்துட்டு இருப்பேன்..” உரைத்தவனது பார்வை, மாடியில் நிலைத்து இருந்தது.

அவளையும் காணும் வழியின்றி.., கனத்த மனதோடு திரும்ப முயன்றான். சண்டை போடுபவரிடம் எதிர்க்கலாம்.., அமைதியாக இருக்கையில் அவன் என்ன செய்ய? அடுத்த நிமிடம்.., அவனைத் தாவி அணைத்த வாசன், “மாமா.., சூப்பர்.., எங்க அக்கா அன்னைக்கு சொன்ன மாதிரியே நடந்துடுச்சு. நான் அக்காவை பாத்துட்டு வர்றேன்..” படிகளில் அவன் ஓடி மறைய, திகைப்பாய் திரும்பினான்.

“தம்பி.., கிட்டத்தட்ட ரெண்டு வருஷமா நாங்க இந்த வார்த்தைகாகத்தான் காத்துட்டு இருக்கோம்..” சாந்தி பேச, அவனால் நம்பவே முடியவில்லை.

“என் பொண்ணு அவ வாழ்க்கையில் ஒரு ஆம்பளை இருந்தா அது நீங்கதான்னு அப்போவே சொல்லிட்டா. அவ

ஆசையை மீறி இந்த வீட்டில் எதுவும் நடக்காது. உங்களுக்கு உடம்பு சரியில்லன்னு அவ வந்த பொழுதே சொல்லிட்டா.

“அப்படி இல்லன்னா.., நாங்க அதுக்கு எப்படி சம்மதித்திருப்போம்? இப்போ கூட, உங்களோட கிராமத்துக்கு அனுப்பினது எப்படியாம்? நீங்க அதையெல்லாம் யோசிக்கவே இல்லையா..?” அவர் கேட்க, இருக்கையில் அப்படியே அமர்ந்து விட்டான்.

‘அப்பொழுதே தன் காதலுக்காக, தன்மேல் கொண்ட நேசத்துக்காக பெற்றவர்களிடம் போராடி இருக்கிறாள்..’ அவனுக்கு உள்ளுக்குள் பெருமையும், தன்னை நினைத்தே சிறுமையுமாய் உணர்ந்தான்.

“கொஞ்ச நாள் முன்னாடி கூட.., அவங்க அப்பா ஏதோ பேச்சுக்கு சொல்லிட்டாருன்னு, கையையே..” சாந்தி விசும்ப, சோபாவில் இருந்து எழுந்துவிட்டான்.

“அத்த.., நான் கீர்த்தியை பாத்துட்டு வர்றேன்..” அவர்கள் பதிலை எதிர்பாராமல் படிகளில் ஓடினான். அவள் அறையை திறந்துகொண்டு உள்ளே செல்ல, அவனைப் பார்த்த வாசன் வெளியேறினான்.

அவன் பார்வை இரண்டும் அவளை வருட, அதில் இருந்த கரை காணாத காதலில் சிக்குண்டு போனாள். தன் கைகளை விரித்து அவளை அழைக்க, மறுப்பாய் தலை அசைத்தவள், நின்ற இடத்தில் இருந்து அசையவில்லை.

அதைப் பார்த்தவன், “கிராமத்தில் என்னோட பத்து நாள் இருந்துமா என்னைப் பார்த்து பயப்படுற..?” அவள் தன் கைகளுக்குள் அடைக்கலாமாகாதது அவனை வருத்தியது.

“உங்களைப் பாத்து இல்லை.., என்னைப் பாத்துதான் பயப்படுறேன்..” விழிகளை அவனிடமிருந்து பிரித்து வெளியே பார்க்க, ஒரே எட்டில் அவளை அணுகினான்.

“பரவாயில்லை.., ஒரு முறையாவது உன் மூளைக்குள் ஓடும் உணர்வுக்கு உருவம் கொடேன்.., தெரிஞ்சுக்க ஆசையா இருக்கு..” சீண்டும் குரல்தான்.., ஆனாலும் அவள் முகம் பற்றி திருப்பி, அவள் விழிகளுக்குள் பார்த்து உரைக்க, அவள் முகத்தில் பெரும் வியப்பு.

“அப்படியெல்லாம் எதுவும் இல்லை..” இதழ்கள் உரைத்தாலும், கண்கள் அவனிடம் மொழிபெயர்க்கும் விஷயத்தை எப்படி தடுக்கவாம்?

“பொய்.., பொய்.., எனக்கு தெரியணும்..” அவன் பிடிவாதம் கண்டு சற்று நடுங்கித்தான் போனாள்.

“அன்பு..” திணறி, திண்டாடிப் போக,

“உன் அன்புதான் கேக்கறேன்..” அவள் கன்னத்தில் இருந்த கரத்தை விலக்கிக் கொள்ளவே இல்லை.

அவன் கரத்தை விலக்கியவள், அவன் நெஞ்சில் அழுத்தமாக புதைந்து போனாள். அவள் கரங்கள் இரண்டும் அவன் இடையை வளைத்துக் கொள்ள, முகத்தை புதைத்து, அழுத்தமாக உரசினாள்.

கற்பனையில் கூட அவன் கன்னத்தில் இதழ் பதிக்கும் அளவுக்குத்தான் முடியும், நிஜத்தில் என்ன செய்யவாம்? வெட்கம் மீறி, அவன் விழிகளையே சந்திக்க முடியாத பொழுது, வேறு எல்லாம்?????

அதே நேரம்.., விழிகள் தாமாக கசிய.., அதன் ஈரம் உணர்ந்தவன் தவித்துப் போனான். “ஏன் என்கிட்டே சொல்லவே இல்லை..? இப்படி வேற செய்து வச்சிருக்க?” அவள் வலக்கரத்தில் காயம் இருந்த இடத்தில் இதழ் பதித்தவன், “எனக்குதான் உன் பேரன்ஸ் பாத்து தயக்கம்.., உனக்கு ஏன்..?” அவனால் தாங்க முடியவில்லை.

அவன் கேள்விகள் எதற்கும் பதில் சொல்லவே இல்லை. தன் குறைகளை அவன் பெரிதாக நினைக்கவில்லை

என்றாலும், அவளுக்குத் தெரியும் தானே. நூறில் ஒன்றாக, தன் நேசத்தை அவன் மறுத்துவிட்டால், அது கொடுக்கும் காயத்தை அந்த ஜென்மம் முழுவதும் அவளால் மறக்க முடியாதே.

அவள் சொல்லாமலே அதை உணர்ந்தவன், “உன் காதலுக்கு முன்னால் நான் தோற்றுப் போகிறேன் கீர்த்தி..” உணர்ச்சிவசப்பட்டு உரைத்தவன், அவள் தாடையை மெதுவாக நிமிர்த்தி,

“என்மேல் இவ்வளவு அன்பு வைக்க.., அப்படி நான் என்ன செய்தேன் கீர்த்தி? உன் அழகுக்கு முன்னால், நான் கால் வாசிதான் இருப்பேன். என் கிராமத்தில் வசதிகள் கூட அவ்வளவு இல்லை.., சாதாரண சூப்பர் மார்க்கெட்டுக்கு கூட, சில கிலோமீட்டர் போகணும்” அவனால் நம்பவே முடியவில்லை.

“அழகுன்னு நீ எதைச் சொல்ற அன்பு.., புற அழகையா? அது இன்னும் பத்து வருஷம் போனால் காணாம போய்டும்.., ஆனா.., என் அன்புவோட அக அழகு போகவே செய்யாது. அதேபோல்.., எந்த ஒரு பொண்ணுக்கும் அழகான கணவன் வேணும் என்பதை விட, இந்த உலகத்தை அழகாக காட்டும் ஒருத்தன் தான் கணவனா வேணும்.

அந்த விதத்தில் நான் கொடுத்து வைத்தவள். அதேபோல்.., இந்த ஊர், இதன் ஆடம்பரம், ஓட்டம் எதிலும் நான் கலந்துகொண்டதே கிடையாது. என்னோட உலகம் இந்த அறை மட்டும்தான். அப்படிப் பார்த்தால், இந்த அறைக்கு வெளியே இருக்கும் அழகை எனக்கு அறிமுகப் படுத்தியது நீதான்.

“நான் கலந்து பழகிய ஆட்கள் உன் உறவுகளும், ஊர் ஆட்களும் தான். அது எனக்கு வேணும். நான் அங்கேதான் உயிர்ப்போட இருப்பேன். அதைவிட, என்னை கல்யாணம் செஞ்சுக்க கேட்டவங்க எல்லாம், ஏதோ தியாகம் செய்யிற ரேஞ்சுக்கு பேசினாங்க..,

“எனக்கு தியாகிகள் வேண்டாம்.., சக மனுஷியா பாக்குற மனுஷன் போதும்., நீ மனுஷன் அன்பு. ஒரு நொடி கூட உன் கண்ணில் என் குறையை பார்க்கும் விதத்தை பார்க்கலை, அனுதாபத்தை பாக்கலை.., ஆனா.., மறந்து கூட என்னை காயப்படுத்தாத உன் அக்கறையை பாத்திருக்கேன்.

“அது இந்த ஜென்மம் முழுக்க எனக்கு வேணும். அப்படியே உன்னை..” எதையோ சொல்லத் துவங்கியவள், வேகமாக இதழ் கடித்துக் கொண்டாள்.

கண்கள் மின்ன அவளை ஏறிட்டவன், “உன் மூளைக்குள் இவ்வளவுதான் ஓடுதா? இதுக்கா பயப்பட்ட..? அப்போ.., என் மூளைக்குள் ஓடுவதை நான் செய்தால் என்ன செய்வியாம்..?” அவள் நெற்றியில் முட்டினான்.

அவள் பேச்சை அழகாக உள்வாங்கி, தன்மையாய் கடக்க, அதை உணர்ந்தவள், “அதை அப்போ பாத்துக்கலாம்..” முகம் மொத்தமும் சிவந்து போனாலும், அவனுக்கு பதில் சொல்ல தயங்கவில்லை. கண்களில் ஈரம் வழிந்தாலும், உள்ளம் இனித்துக் கிடந்தது.

அவள் காதல் கதையை பிடிவாதமாக கேட்டு, அவளை கை வளைவுக்குள் இருந்து பிரியாமல் காத்து.., ஒரு வழியாக அவர்கள் இறங்கி வருகையில் ஒருமணி நேரத்துக்குமேல் கடந்திருந்தது.

அதன் பிறகு.., முதல் அறுவடை முடிந்த பிறகு திருமணம் என முடிவெடுத்து, மூன்று மாதங்களில், கிராமத்தில், வெகு விமரிசையாக திருமணமும் நடைபெற்றது. சென்னையில் ஒரு வாரத்துக்குப் பிறகு திருமண வரவேற்பு என முடிவெடுத்தார்கள்.

****காலைமுதல் திருமண சடங்குகள், குலதெய்வ கோவிலுக்கு சென்று வந்தது, கிராமத்து மக்களில் செல்லக் குசும்பு, சீண்டல்கள்.., என அனைத்திலும் கலந்து சற்று களைத்துப் போயிருந்தாள் கீர்த்தி.

களைப்பையும் மீறி.., அவளது செவிகள் இரண்டும் அன்புவின் காலடி சத்தத்துக்காய் காத்திருந்தன. காலைமுதல் காதில் வைத்திருக்கும் ஹியரிங்மெஷினால் சிறு வலி இருந்தாலும், அதை ஏனோ இப்பொழுது கழட்டி வைக்க மனமின்றி நின்றிருந்தாள்.

கழுத்தில் மின்னிய பொன் மஞ்சள் தாலி.., அவளுக்கு மேலும் பொலிவைக் கொடுக்க, அவளுக்கோ, அதைப் பார்க்கையில் பெருமையும் பூரிப்புமாய் இருந்தது.

அவள் விரும்பிய அன்புவின் அறை. அவள் அங்கே அவனுக்காக காத்திருக்க, அவளது பெற்றவர்களிடம் பேசி, அவர்களுக்கான அறையை காட்டிவிட்டு, அனைத்தையும் ஒழுங்குபடுத்திய பிறகே அறைக்கு வந்தான்.

ஜன்னல் வழியாக அவள் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, அவள் முதுகில் சாய்ந்து.., இடையோடு கட்டிக் கொண்டவன், "ஏசியை போட்டிருக்க வேண்டியது தானே.." அவள் காதுக்குள் ரகசியம் பேசினான்.

அப்பொழுது அவள் செவியில் ஹியரிங் மெஷின் இருக்க, அவனுக்கு அது வசதியாகப் போயிற்று. திருமண சடங்கு தொடர்ந்த நிகழ்வு அனைத்திலும் பங்குபெற அவளுக்கு அது அவசியம் தேவைப் பட்டது.

அவர்களுக்கு வேண்டியே வீட்டில் நிறைய மாற்றங்கள் செய்திருந்தான். கீழே இருந்த எல்லா அறைகளுக்கும் அட்டாச்டு பாத்ரூம் டாய்லெட்.., ஏசி வசதி, புது கட்டில் மெத்தை என வாங்கிப் போட்டான். அங்கே அவர்களுக்கு எந்த குறையும் இருக்கக் கூடாது என விரும்பினான்.

அதை கீர்த்தி தடுக்க முயன்றாலும் அவன் கேட்கவில்லை. அவளது பெற்றவர்களுக்கோ நிரம்ப சந்தோசம்.., மகனாக இருக்கும் மருமகன் கிடைத்தால் அவர்களுக்கு கசக்குமா என்ன?

“இல்ல.., எனக்கு இந்த இயற்கை காற்றுதான் பிடிச்சிருக்கு..” அவனோடு ஒட்டிக் கொண்டவள்.., அவன் கன்னத்தோடு இழைந்தாள்.

அவள் சேலை மறைக்காத வெற்றிடையில் அவன் கரம் பதிந்து அழுத்த, அது ஏற்படுத்திய உணர்வால் சற்று தடுமாறிப் போனாள். அவன் கரத்தின்மேல் தன் கரம் வைத்தவள், அவன் தாடை ரோமம் கொடுத்த மெல்லிய எரிச்சலை ரசித்தவள், அவன் இதழ்கள் அவள் காதில் முத்தமிட, சற்று சிலிர்த்தது அவள் தேகம்.

அதை உணர்ந்தவன்.., “ஜன்னல் பக்கம் ரொம்ப குளிரா இருக்கா..?” கேட்டவனுக்கு, அங்கே இருந்து நகரும் எண்ணமே இருக்கவில்லை. மாறாக, இடையில் இருந்த அவன் கரம், மெதுவாக இடம் மாற, வேகமாக அவன் பக்கம் திரும்பியவள், அவன் நெஞ்சில் புதைந்து கொண்டாள்.

“கீர்த்தி.., என் மூளைக்குள் ஓடும் விஷயம் உனக்குத் தெரிய வேண்டாமா?” அவன் இதழ் அவள் காதுக்குள் அழுந்திக் கொள்ள, மறுப்பாக தலை அசைத்தாள்.

அவன் இதழ் அவள் கன்னத்தில் அழுந்தி.., நெற்றியில் பயணித்தும், மறு கன்னம் வழியாக அவள் கழுத்தில் இறங்க, அவன் சிகைக்குள் கரம் கோர்த்து, அவன் உணர்வுகளை உள் வாங்கினாள். அவனுக்கோ.., அவளை முழுதாக அறிந்துகொள்ளும் வேகம்.

அவன் முகம் அவள் மேனியில் புதைந்துகொள்ளத் தவிக்க, அவளுக்கோ கால் ஊன்றி நிற்க முடியாமல் கால்கள் இரண்டும் தள்ளாடியது. அவன் அறிமுகப்படுத்தும் உணர்வுகளை தாங்க முடியவில்லை.

“ம்.., ம்ஹும்.., அன்பு..” அவனை தன்னிடமிருந்து விலக்க முயல, அவள் கரங்களோ அவனை மேலும் தன்னோடு இறுக்கிக் கொள்ளவே செய்தது.

“கீர்த்தி.., சத்தியமா பயித்தியமே புடிச்சிடும்..” உளறினான்.

‘உனக்கா.., என்னைய கொல்றடா..’ கீழுதட்டை மென்மையாக கடித்துக் கொண்டவள், அவன்மேல் முழுதாக சாய்ந்து கொண்டாள்.

சட்டென அவளை கைகளில் அள்ளிக் கொண்டவன், அவளை படுக்கையில் விட, இமைகளை அழுந்த மூடிக் கொண்டவள் மறந்தும் அதைத் திறக்கவில்லை.

அறையின் வெளிச்சம் நிறுத்தப்பட, அதை உணர்ந்தவள் விழி திறக்க, மெல்லிய விடி விளக்கின் ஒளியில் அவன் முகம் தெளிவாகவே தெரிந்தது. அதில் தெரிந்த வேட்கை அவளை திணறச் செய்ய, பார்வையை வேகமாக திருப்பிக் கொண்டாள்.

இதுவரை அவன் கண்கள் சொல்லியிராத சேதி.., அவன் வேட்கையை வெளிப்படுத்த இதயம் தடதடத்தது.

மீண்டும் ஒரு முத்தப் பயணம்.., இந்த முறை அவன் இதழ்கள் அவள் இதழ்களில் புதைந்து போக, அவன் கரங்கள் தன்னவளை மெதுவாய் உணரத் துவங்கியது. அவன் முத்த வேட்கையிலே திணறியவள், அவன் கரங்கள் பயணித்த விதத்தில் சற்று விதிர்த்துதான் போனாள்.

“அ..ன்..பு..” அவன் மூச்சுக் காற்றுக்கு இடைவேளை கொடுக்க, அவன் கரத்தை தடுக்க முயன்று முடியாமல் துவண்டாள்.

அவளது ஹியரிங் மெஷினை அவன் அகற்ற, அவ்வளவு நேரமாக அவன் முகம் காண மறுத்தவள், வேகமாக அவன் முகம் நோக்கினாள். மெல்லிய இரவின் ஒளியில், அவன் கண்கள் பளபளக்க, “இது தேவையில்லை..” அவன் பார்வை பயணித்த விதத்தில் அவன் எதைச் சொல்கிறான் எனப் புரிய, சிவந்து போனாள்.

“ச்சீ..” வெட்கச் சிணுங்கல் அவள் சிணுங்க, அவள் இதழ்கள் அதற்கான தண்டனையை உடனே பெற்றுக் கொண்டன.

“இதுக்கேவா..” அவள் இதழில் இருந்து நிமிர்ந்தவன் கேட்டுவிட்டு.., மீண்டுமாக தன் வேட்கையை கொட்ட, தன் மேனியில் நழுவும் அவன் கரத்தை தடுக்கவா, கரம் பயணித்த இடங்களில் பயணிக்கும் அவன் இதழ்களைத் தடுக்கவா.., திண்டாடிப் போனாள்.

கணவனாய் தன் உரிமையை நிலைநாட்ட அவன் தவிக்க, அவன் தடை கடக்கையில், தன் வெட்கம் கடக்க முடியாமல் திணறிப் போனாள். தன் இதழ் தூரிகையால் அவள் வெட்கம் கடக்கச் செய்தவன்.., அவளுக்கு ஆடையாக தான் மாற, அவள் கரங்களோ அவனை வளைத்துக் கொண்டது.

அவன் ஈர முத்தம் மேனியெங்கும் பாய, தன் தேவையை தீர்க்க முயலாமல், அவளை சிலிர்க்கச் செய்ய, அந்த உணர்வுகளின் கனம் தாளாமல் திண்டாடிப் போனாள்.

“அன்பு.., முடியலை..” அவன் முகம் பற்றி இழுத்தவள், அவன் இதழ்களை கவ்விக்கொள்ள, அவன் முகத்தில் பெரும் வெற்றிப் புன்னகை.

அவன் நிதானம் அற்றுப் போக, வேங்கையாய் மாற, அவன் நெருக்கம் ஏற்படுத்திய தகிப்பில், அவன் வேகத்தில் திணறி, அவள் கரங்கள் அவன் வெற்று முதுகில் நகக்கண்களை பதித்தது.

“அன்பு.., கொஞ்சம் மெதுவா..” அவள் சற்று திணற, அவளை கொள்ளை கொள்ளும் வரைக்கும் அவளை விட்டு நீங்க மறுத்தான் அந்த கள்வன். கொள்ளை கொண்டவன் களைத்துப் போக, கொள்ளை கொடுத்தவளோ, அவனை சுகமாய் தாங்கிக் கொண்டாள்.

அடங்காத முத்தமிட்டவன், அவள் அருகில் சரிந்து, அவளை தன்மேல் போட்டுக் கொண்டான். அவள் நாணம் கொண்டு விலக முயல, ஒற்றை போர்வைக்குள் அவளை அடைத்துக் கொண்டான்.

அவன் பிடிவாதம் உணர்ந்து அவன் நெஞ்சில் போலியாக அவள் குத்த, அவளைத் தடுத்தவன், அருகே இருந்த பாலை எடுத்து அவளுக்கு புகட்ட, அவளிடமிருந்து பிடிவாதமாக பெற்றுக் கொண்டான். அவன் சேட்டையில் சிலிர்த்தவள், போலியாக அவனை முறைக்க,

அவன் கண்கள் ஒளிர்ந்த விதத்தில், “ம்ஹும்.., அன்பு..” அவளது போலி மறுப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை. விடியும் வரைக்கும் அவளை கொள்ளையிட்டவன், இறுதியாக விழி மூடுகையில் கிழக்கு வெளுக்கவா என கேட்டது.

காலையில் கண் விழித்தவன், அருகில் தேட, அவள் இல்லாததைப் பார்த்தவன், ‘இவ எப்போ எழுந்தா..?’ தனக்குத் தானே கேட்டவன், வேகமாக குளித்து கீழே வந்தான்.

முதல் முறையாக அவன் வீட்டு கிச்சனுக்குள் சத்தம் கேட்க, அங்கே சென்று பார்க்க, இளம் சிவப்பு நிற, மெல்லிய பார்டர் வைத்த பட்டுச் சேலையில், முடியில் ஈரம் சொட்ட, பின் முதுகு ஈரத்தில் குளித்திருக்க, கேசில் பாலை வைத்துக் கொண்டு, அது காய்வதற்காக காத்திருந்தாள்.

இந்த மூன்று மாதங்களில் அவளது தாயிடம் முழு மூச்சாக சமையலை கற்றுக் கொண்டாள். அவனுக்கு பிடித்த விதத்தில், கறிக்குழம்பு, மீன், வறுவல் என அனைத்தையும் காரசாரமாக வைக்கத் துவங்கி இருந்தாள்.

அவளது உதவிக்கென வீட்டில் ஒரு பெண்மணியை ஏற்பாடு செய்திருக்க, கிளீனிங், துணி துவைக்க, வெளி வேலை என அனைத்தையும் அவள் பார்த்துக் கொண்டாள்.

கிச்சனுக்கு வந்தவன், பார்வையை வேகமாகச் சுழற்ற, அங்கே வேறு யாரும் இல்லாததைப் பார்த்து, “காந்தாரி.., இங்கே என்ன பண்ற..?” கேட்டவன், அவளை பின்னால் இருந்து அணைக்க, வேகமாக அவன் கரத்தில் இருந்து துள்ளி விலகினாள்.

அவள் இதழ்களோ.., “அம்மா..” பார்வையை செல்புக்கு பின்னால் நகர்த்த, சட்டென திரும்பியவன், சங்கடமாக அங்கே நின்றிருந்த சாந்தியைப் பார்த்து, ஒரு வெட்க சிரிப்போடு.., சின்ன வழிசலோடு, “இல்ல.., சும்மாதான்..” அவன் உரைக்க, கீர்த்தி போட்ட அடியில் வேகமாக அங்கிருந்து ஓடியே போனான்.

கீர்த்தி சங்கடமாக தாயைப் பார்க்க, அவள் முகம் வழித்து நெட்டி முறித்தவர், “என் பொண்ணை இப்படிப் பாக்கத்தான் நான் ஆசைப்பட்டேன்..” நெகிழ்வாய் உரைத்தவர், மகளை அணைத்துக் கொண்டார்.

அன்புவோ.., வெளியே வந்தவன், பட்பட்டென தன் தலையிலேயே உள்ளங்கையால் மெதுவாக அடித்துக் கொள்ள, அவனை ஒரு மாதிரியாக பார்த்தவாறே வந்தான் வாசன்.

“என்ன மாமா..? உள்ளே கசமுசாவா..? யார்கிட்டேயாவது சிக்கிட்டீன்களா?” அவன் நின்ற கோலமே அப்படித்தான் என்பதால் அவன் வினவ, “வாசா..” தாயின் குரலில், “அம்மா, நான் இல்லை..” உரைத்தவன் ஓடியே போனான்.

அதைப் பார்த்த அன்பு வாய்விட்டே சிரித்தான், மாமியார் வெளியே வரும் முன்பு, அவனும் நல்ல பிள்ளையாக திண்ணையில் சென்று அமர்ந்து கொண்டான்.

அவனைத் தேடி, காபியை எடுத்து வந்த கீர்த்தி, அவன் முகத்தைப் பார்த்து கிளுக்கிச் சிரிக்க, “என் அவஸ்த்தை உனக்கு சிரிப்பா இருக்கா..? நீ ரூமுக்கு வா..” இதழசைவில் உரைக்க, ‘நான் ரெடி..’ அவள் பார்வை விட்ட சவாலில் அவன்தான் பின்வாங்க வேண்டி இருந்தது.

மாணிக்கமும், மாரிமுத்துவும் அப்பொழுது வர, “இந்த நேரம் எங்க மாமா போயிருந்த..? கேட்டவன், “வாங்க மாமா..” இருவரையும் அழைத்தான்.

“மாப்ள.., அதான் வயல் உழதுக்கு கிடக்குல்ல.., அதைப் பாத்துட்டு வர்றோம்..” உரைத்தவர் அடுத்த திண்ணையில் அமர, இருவருக்கும் காபி கொண்டுவந்தாள் கீர்த்தி.

“சித்தப்பா.., வயலை என்னைக்கு உழுறீங்க..?” அவள் கேட்க,

“செல்வம்தான் சொல்லணும்.., விளைஞ்ச காட்டை அப்படியே போடவும் முடியாது. கிழங்கு வேற பிடுங்கணும்..” அவர் உரைக்க, அன்புவை அவள் பார்த்தாள்.

“ஒரு வாரம் கழிச்சு பண்ணலாம்னு இருக்கேன்..” அவன் உரைக்க,

“ஒரு வாரத்தில் கிழங்கு வேராயிடும்.., முதல்ல அதை பிடுங்கச் சொல்லுங்க. வயலை நாளை மறுநாள் ஒரு ஓட்டு ஓட்டலாம்..” அவள் உரைக்க, அவளை சற்று பரிதாபமாகப் பார்த்தான்.

அதைப் பார்த்தவர்கள் அனைவரும் சிரிக்க, வேகமாக உள்ளே சென்று மறைந்தாள். அனைவரிடமும் குளிக்கப் போவதாகச் சொல்லி அவன் அறைக்குச் செல்ல, அவளை கடிந்துகொண்டார் சாந்தி.

“மாப்பிளையை இன்னைக்கே போகச் சொல்லணுமா? ரெண்டு நாள் போகட்டும்” அவர் சாட,

“ம்ச் அம்மா.., புரியாமல் பேசாதீங்க. கிழங்கு வேர் வச்சுட்டா விலை போகாது. அதான்..” அவள் பதில் கொடுக்க, “கீர்த்தி..” அவன் அழைக்கும் குரலைக் கேட்டவர், “மாப்பிளை கூப்பிடுறார் என்னனு கேளு..” அவளை அனுப்ப, அவள் முகத்தில் வெட்கப் புன்னகை.

அறைக்குள் நுழைந்தவளை, கதவைச் சாற்றிவிட்டு, அலேக்காக தூக்கி படுக்கையில் போட்டவன்.., “இன்னைக்கே என்னை விரட்டுற.., போக மாட்டேன் போ..” அவன் முறுக்கிக் கொண்டான்.

அவன் கன்னத்தில் இதழ் பதித்தவள், “சமத்தா போவீங்களாம்.., நான் எங்கேயும் போக மாட்டேன்.., இங்கேதான் இருப்பேன்..” அழும் குழந்தைக்கு மிட்டாய் கொடுத்து ஏமாற்றுவதுபோல் இருந்தது அவள் செய்கை.

அவள் பேசிக் கொண்டிருக்க.., அவள் கழுத்தில் அவன் முகம் புதைக்க, அவன் தேவை உணர்ந்தாலும், செய்யும் வேலை முக்கியம் என்பதால், முயன்று அவனை விலக்கியவள், “ப்ளீஸ் அன்பு..” மீண்டும் அவன் இதழ்களுக்கு ஒரு மெல்லிய முத்தம்.

“அப்போ நீயும் வா..” அவன் சிணுங்க.., தன் தலையிலேயே மெல்லியதாக தட்டியவள், “நான் அங்கே வந்தால் இன்னைக்கு ரொம்ப நல்லா வேலை பாப்பீங்க எனக்குத் தெரியும். முதல்ல எழுந்திரிங்க..” பிடிவாதமாக எழுந்துவிட்டாள்.

“குளிக்கணும்னு சொன்னீங்கல்ல குளிச்சுட்டு வாங்க..”.

“நான் ஏற்கனவே குளிச்சுட்டேன்..”.

“அப்போ மறுபடியும் குளிங்க..”

“நான் ரெடி..” உரைத்தவன், அவளோடு யுத்தம் செய்யத் துவங்க, “எனக்குத் தெரியும்.., இப்படித்தான் செய்வீங்கன்னு.., முடியாது..” அவள் உறுதியில் அவன்தான் எழுந்து சென்றுவிட்டான்.

அவனது வாடிய முகம் ஒரு நொடி கவலையை அளித்தாலும், இதுதான் உழைக்கும் நேரம் என்பதால் அவனை தடுக்கவில்லை. ஒரு வருடம் அவன் பிடிவாதமாக உழைத்தே ஆக வேண்டும்.., அது அவளுக்குத் தெரியும்.

அவன் இப்பொழுது திருமணம் முடித்ததே தன் காதலுக்காகத்தான் என்பதால், தன் உடனிருப்பு அவனை தேக்கிவிடக் கூடாது என்பதில் அதிக கவனம் கொண்டாள்.

தோட்டத்தில் வேலை செய்தவனை, அங்கே வேலை செய்தவர்கள் கேலி செய்து ஒரு வழி ஆக்கினாலும், அதை அவன் கண்டுகொள்ளவில்லை. வீட்டுக்கு விரையத் துடித்த கால்களை அடக்கி வேலை செய்தான்.

அது அவனுக்கு சற்று சிரமமாகத்தான் இருந்தது. ஆனாலும்.., கீர்த்தி சொன்னால் அதில் நியாயம் இருக்கும் என்பதால் வேலையை முடித்துவிட்டு, மாலையே வீட்டுக்கு கிளம்பினான்.

அறைக்குள் நுழைந்தவனை தாவி அணைத்துக் கொள்ள, “கீர்த்தி.., உடம்பெல்லாம் சேறு.., வியர்வை..” அவளை விலக்க முயன்றான்.

“இது.., இதுதான் எனக்கு புடிச்சிருக்கு..” உள் பனியன் மட்டும் அணிந்திருந்த அவன் உரமேறிய நெஞ்சில் முகம் புதைத்தவள், அவன் ஆண்மை வாசனையை ஆழ்ந்து சுவாசித்தாள்.

அவள் செய்கை அவன் உணர்வுகளைத் தூண்ட, “கொல்ற..” முனகியவன்.., அவள் கன்னம் தாங்கி, இதழ்களை சிறை செய்தான். அவன் கரங்களுக்குள் ஒடுங்கிக் கொண்டவள், அவன் தேடலுக்கு அனுமதிக்க, அவள் இதழ்களுக்குள் தொலைந்தவனது கரங்களோ.., அவள் இடை வளைவை அளந்து முன்னேறியது.

“ம்ஹும்..” எதிர்ப்பில்லாமல், பலவீனமாக மறுத்தவள், அவன் கரத்தை தடுக்க, தன் செய்கைக்கு அவள் கரத்தையும் துனைக்கழைத்தான் அந்த கள்வன். பட்டென தன் கரத்தை விலக்கிக் கொண்டவள், “அ..ன்..பு..” உணர்வுகளின் தாக்கத்தில் அவன் இதழ்களுக்குள் முனகினாள்.

கரம் பயணித்த இடங்களில் அவன் இதழ்கள் பயணிக்கத் துவங்க, “அன்பு.., கீழே எல்லாரும் இருக்காங்க.., இப்போ வேண்டாம்..” அவன் முகத்தை தன்னோடு இறுக்கியவள்,

சொல் ஒன்றாகவும், செயல் ஒன்றாகவும் தடுமாறி நின்றிருந்தாள்.

காலையில் தன்னை விட்டு நீங்க முடியாமல் அவன் தவித்த தவிப்பும், தன் வார்த்தைகளை மதித்து அவன் சென்றதும் அவளுக்குத் தெரியும் தானே..

அவளை விட்டு விலகியவன், “சும்மா இருந்தவனை சீண்டி விட்டுட்டு..” இதழசைவில் அவன் உரைக்க, அவன் நெஞ்சில் போலியாக குத்தினாள்.

“சரி.., நீ போய் காபி எடுத்துட்டு வா.., நான் குளிச்சுட்டு வர்றேன்..” அவளை அனுப்பியவன் குளிக்கச் செல்ல, கீழே இறங்கி வந்தாள்.

மகளது வெட்கம் சுமந்த முகத்தை பார்த்த சாந்தி, “அம்மாடி.., சாயங்காலம் ஆயிடுச்சு.., பூஜை ரூமில் விளக்கேத்து போ..” தாய் உரைத்ததை செய்தவளுக்கு, இப்பொழுது மேலே போக முடியாது என்றே தோன்றியது.

சற்று நேரம் மனைவிக்காய் காத்திருந்தவன் கீழே இறங்கி வர, அவன் கண்கள் அவள்மேல் படிந்து மீள.., விளக்கு வைக்கும் நேரத்தில் அவனோடான தனிமையை தவிர்த்தவள், பெற்றவர்களோடு அளவளாவிக் கொண்டு இருந்தாள்.

இரவு உணவை முடித்த பிறகே அறைக்கு வர, சற்று கோபமாகத்தான் அமர்ந்திருந்தான் அன்பு. கதவை தாழ் போட்டவள், அவனை பின்னால் இருந்து அணைத்தவள், அவன் முதுகில் இதழ் பதிக்க, “முத்தத்தை இப்படியா வேஸ்ட் பண்ணுவாங்க..?” கேட்டவன் அவளைக் கையாள, அவன் கேட்ட எதையும் இப்பொழுது அவள் மறுக்கவில்லை.

அதை உணர்ந்தவன் கள்ளுண்ட வண்டாக மாற.., அவனை தனக்குள் மூழ்கடித்தாள் கீர்த்தி. அந்த ஒரு வாரமும், கீர்த்தியின் குடும்பம் அங்கே இருக்க, அவனது விவசாயம்,

உழைப்பு அனைத்தையும் பார்த்தவர்களுக்கு அவ்வளவு நிறைவு.

அதைவிட, கீர்த்தியின் முகத்தில் தெரிந்த சந்தோசம்.., அவள் வேலை வாங்குவதில் தெரிந்த சிறு ஆளுமை.., தங்கள் மகள் உரைத்தது எவ்வளவு சரி என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

“சந்தோஷமா இருக்கியாம்மா..?” தந்தை அவளிடம் கேட்க, அவர் தோளில் ஆதரவாக சாய்ந்து கொண்டாள்.

“ரொம்ப சந்தோஷமா இருகேம்ப்பா.., தேங்க்ஸ்ப்பா..” அவள் உணர்ந்து உரைக்க, நெகிழ்ந்து போனார்.

“உன் சந்தோசம் தாம்மா எனக்கு முக்கியம்..” பாசமாய் அவள் தலை வருடினார்.

“எனக்குத் தெரியும்ப்பா.., ஆனாலும்.., எனக்கு இப்படி ஒரு அப்பா கிடைத்தது பெரிய வரம். எத்தனையோ அப்பாக்கள், மகளுக்கு பிடித்த எல்லாம் செய்வாங்க.., ஆனா திருமணம் என வரப்போ.., தங்களோட ஸ்டேட்டஸ்.., பணம்.., இதுக்குதான் முக்கியத்துவம் கொடுப்பாங்க.., ஆனா நீங்க..” அவள் கண்கள் மெல்லியதாக கலங்கியது.

“என்னம்மா பெரிய ஸ்டேட்டஸ்.., என் பொண்ணு இந்த ஊருக்கே மகாராணி மாதிரி இருக்கா. பட்டணத்து பரபரப்பை விட, கிராமத்து காத்தும், சூழலும், மனிதர்களும் அவளை அவங்கள்ள ஒருத்தரா பாக்கறாங்க. என் பொண்ணு அவங்கள்ள ஒருத்தியா, சந்தோஷமா இருக்கறா.., இதைவிட எனக்கு வேற என்ன வேணும்..” அந்த ஊரில் அவளது செயல்பாடு அவரை அவ்வாறு பேசத் தூண்டியது.

“அக்கா.., இங்கே வந்ததுக்கு பிறகு நீ ரொம்ப அழகாயிட்டே.., அப்படியே சிரிச்ச முகமா.., எனக்கே உன்னைப் பாத்தா ஆச்சரியமா இருக்கு..” தானும் அவள் அருகில் அமர்ந்து கொண்டான்.

அவரது கண்கள் மனைவியை நோக்க.., ‘நான் சொன்னேன் தானே..’ அவருக்கு பதில் கொடுக்க.., அங்கே அவ்வளவு நிம்மதி நிறைந்தது.

“உங்களுக்கு எதுவும் வருத்தம் இல்லையே..” தந்தையிடம் அவள் கேட்க,

“எதுக்கும்மா.., சென்னைக்கும் இங்கேயும் இருக்கும் தூரத்தை நினைச்சாதான் வருத்தமா இருக்கு. அது பரவாயில்லை.., நம்ம தொழிலை இங்கேயும் ஆரம்பிச்சுட்டா போச்சு..” அவர் இயல்பாக உரைத்தார்.

“எது.., அந்த கட்டடத்தை எல்லாம் வயல்ல கட்டுறதா..? உங்க புத்தி உங்களை விட்டு போகுமா..?” சாந்தி நொடித்துக் கொள்ள, மனைவியை பரிதாபமாக ஏறிட்டவர்,

“நீ என் தொழிலை கேவலமா பேசினால் நான் சும்மா இருக்க மாட்டேன் பாத்துக்கோ..” .

“என்ன செய்வீங்களாம்..?” சாந்தி எகிற,

“என்ன செய்யிறது.., எப்பவும் போல வாயை மூடி கேட்டுக்க வேண்டியதுதான்..” அவர் சரண்டர் ஆக, அக்காவும் தம்பியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

“அப்பா.., அதான் எப்பவும் அம்மாதான் ஸ்கோர் பண்றாங்கன்னு தெரியுதுல்ல, பிறகு எதுக்கு இந்த ஜம்பம்..” அவன் கேட்க, அவனை முறைத்தார்.

“ம்கும்.., அம்மாகிட்டே வேலைக்கு ஆகலன்னு என்னை முறைக்கறார் பார்..” தன்னிடம் ரகசியம் பேசும் தம்பியை திரும்பிப் பார்த்தவள், நிறைவாய் புன்னகைத்தாள்.

“அக்கா.., அந்த கருப்பன் கிட்டே என்னை இன்ட்ரோ பண்ணி விடறியா..? எனக்கு அவனை ரொம்ப புடிச்சிருக்கு..” தம்பி கேட்க, அவனை அழைத்துக் கொண்டு சென்றாள்.

அவன் தன் முகம் பார்த்து சாதாரணமாக உரையாட.., இந்த மாற்றங்கள் அனைத்தும் தன் கணவனால் என்பதை உணர்ந்தவளுக்கு அவன்மேல் அன்பு பெருகியது.

அவர்கள் செல்லவே.., “சாந்தி.., நீ சொன்னது ரொம்ப சரி.., அன்புவைத் தவிர வேற யாராலேயும் நம்ம பொண்ணை இப்படி பாத்துக்கவே முடியாது. எனக்கு ரொம்ப நிம்மதியா இருக்கு..” .

“அவளை தினமும் பாக்க முடியாது.., அது ஒண்ணுதான் குறை..” சிறு கவலை அவரிடம்.

“அட, இதுக்கு கவலைப் பட்டால் எப்படி.., ஆறுமணிநேர தூரம் அவ்வளவு தானே.., நினைச்ச நேரம் வரலாம் பாக்கலாம்.., விடுங்க..” கணவனுக்கு ஆறுதல் அளித்தார்.

இதுதான் அவளுக்கான களம்.., இங்கேதான் அவள் உயிர்ப்போடு இருப்பாள் என்பது புரிய, தங்கள் கவலையை ஒற்றி வைத்தார்கள்.

சென்னையில் ரிசப்ஷன் முடிவு பெற, அவர்களோடு இரண்டு நாள் தங்கியவன், கிளம்பும் நேரம் கீர்த்தி கலங்கவே சற்று தவித்துதான் போனான்.

“நீ வேண்ணா ரெண்டு நாள் இருந்துட்டு வர்றியா..?” அவள் மனநிலை உணர்ந்து அக்கறையாக வினவ,

“நான் இல்லாமல் நீங்க இருந்துடுவீங்களா..?” அவள் திருப்பிக் கேட்க,

“சம்மாளிச்சுடுவேன்..”

“அப்போ போங்க.., நான் இங்கேயே இருக்கேன்..” அவள் உரைக்க, நிஜமாகவே அரண்டுதான் போனான். அவள் முகம் பார்க்க, அதில் இருந்த புன்னகையைப் பார்த்தவன், அவள் உரைத்த பொய்யில் சிக்குண்டான். இப்பொழுது

பொய்சொன்ன அவள் இதழ்கள் அவன் செயலால் தித்தித்தது.

இருவரும் கிராமத்துக்கு பயணப்பட, தன் கணவனின் தோளில் சுகமாய் சாய்ந்து கொண்டாள். வாழ்க்கை அவர்கள் முன்னால் கைநீட்டி காத்திருந்தது.

நன்றி.

(முற்றும்)